# கன்னிநிலம்

**அந்திவரை வாழப்போகும்**

**பூவின் மடியில்**

**அந்த காலைப்பொழுதிலேயே**

**மடிந்துவிடப்போகும்**

**பனித்துளிதான்**

**எத்தனை அழகு!**

**–தேவதேவன்**

*1*

நெல்லையில் இருந்து பஸ்ஸில் நாகர்கோயில். கௌகாத்தி எக்ஸ்பிரஸில் மூன்று இரவுகளும் நான்கு பகல்களும் தாண்டி கௌகாத்தி .அங்கிருந்து ராணுவ டிரக்கில் நான்கு நாள் விட்டு விட்டு குலுங்கி குலுங்கி மழையினூடாகப் பயணம் செய்து இம்பால். புகையும் பனியும் மூடிய மேடுபள்ளமான தெருக்கள் கொண்ட நகரத்தை விட்டு இடுங்கிய தார்ச்சாலைகளில் சுழன்று சுழன்று ஏறி இறங்கி , சேற்று உளை பொங்கிய செம்மண் சாலைகளில் சக்கரங்கள் புதையப் புதைய புகை கக்கி முன்னேறி, யுதங்களை பூட்டு விடுவித்து தயாராக பிடித்தபடி கேன்வாஸ் கூரையில் மழை அறைவதைக் கேட்டபடி முறைவைத்து விழித்திருந்து , பதினெட்டு மணிநேரம் பயணம் செய்தால் பர்மா எல்லையோரமாக மோரே பகுதியில் சந்தேல் மாவட்டத்தில் காங் டால் கிராமத்தில் காவல் கோபுரங்களாலும் சுற்றுமதில்களாலும் யந்திரத்துப்பாக்கிகளாலும் கடுமையாக பாதுகாக்கப்படும் எங்கள் ராணுவ முகாம். அங்கிருந்து பயனெட் நுனி கூர்மை ஒளிர நீட்டிய •ரைபிள்களுடன் படகுகளில் பயணம் செய்து தௌபால் என்ற காட்டாற்றின் எதிர் ஓட்டத்தை டீசல் கக்கி முனகிக்கடந்து பத்தொன்பது கிலோமீட்டர் அடர்ந்த காட்டுக்குள் சென்று எட்டு கிலோமீட்டர் தூரத்தை

செங்குத்தான மலைச்சரிவில் ஏறிசென்றால் மலையிடுக்கு ஒன்றில் புல்வெளியில் பிளாஸ்டிக்காலும் கம்பிகளாலும் கட்டி எழுப்பப்பட்ட எட்டு கூடாரங்கள் கொண்ட எங்கள் யூனிட் முகாம். வெகுதூரம்தான். ஆனால் அப்போது மென்மூங்கிலும் காட்டுசேம்பும் பலவகையான சேற்றுத்தாவரங்களும் மண்டிய பாதையில்லா அடர்காட்டுக்குள் பூட்ஸ¤ கள் முழங்காலளவு சேற்றில் அழுந்தி அழுந்தி நீர் ஊறும் ஒலியெழுப்ப நடக்கையில் அதிகபட்சம் று கிலோமீட்டர் அப்பால் இருந்த யூனிட் முகாம் வெகுதொலைவில்,இருந்தது.இருபதடி தள்ளி நடந்த என் சகா செகண்ட் லெ•ப்டினெண்ட் நாயர் கூட தொலைவாகத் தெரிந்தான். மூச்சு இரைக்க உடல் வலியில் தெறிக்க நாற்பது எட்டுகள் எடுத்து வைத்தால்தான் அவனை நான் அடைய முடியும்.

எங்கள் ஊர் காடுகளைப் போலத்தான் இருந்தன மணிப்பூர் காடுகளும். முக்கியமாக அட்டைகள் இல்லை. பசுமை மாறாக்காடுகள் தான் இவையும். திரும்பதிரும்ப மழை. மழைநீர் ஓங்கிய மரங்களில் இருந்து புதர்ச்செடிகளின் அகன்ற இலைகள் மீது விழும் ஒலிதான் அந்தக்காட்டின் குரல். விலங்குகள் அதிகமில்லை. அல்லது நாங்கள் விலங்குகளை எங்கள் பூட்ஸ் ஒலிகளால் விரட்டியபடித்தான் காட்டுக்குள் நுழைகிறோம். தவளைகள் மிக அதிகம். பச்சைத்தவளைகள். பெரிய கண்கொண்ட சாம்பல்தவளைகள். துள்ளிப்பறந்து இலைகளில் அமர்ந்து ஊசலாடும் சிறிய தேரைகள்... பாம்புகள் உண்டு. புதர்களின் அடியையும் சருகுக்குவியல்களையும் மிதிக்கக் கூடாது. கனத்த கம் பூட்டுகள் இன்றி உள்ளே நுழைந்தால் விஷக்கடி உறுதி. அதிகமும் கண்ணாடிவிரியன்கள்...எப்போதாவது காட்டுபன்றி ஒன்று சேறு பூசிய கொழுத்த உடலுடன் தாடை தொங்கித் ததும்ப புதர்களை ஊடுருவிச்செல்லும், தலைமுடிக்கு நடுவே பேன் செல்வதுபோல. புதர்க்கோழிகள் எங்கள் காலடிக்கு அஞ்சி மேலும் புதராழத்துக்குச்செல்லும். தலைக்குமேல் பலவகையான பறவைகளின் கூட்ட இரைச்சல் மழை ஒலியுடன் சேர்ந்தே ஒலிக்கும். இந்தக்காட்டின் ஓயாத மழையிலும் பறவைகள் எப்படி தாக்குப்பிடித்து வாழ்கின்றன என்று தெரியவில்லை.

நான்காண்டுகளில் நான் தாக்குப்பிடிக்க பழகிவிட்டேன். எங்கும் உயிர்கள் தங்கி வாழும். எங்கும் மூச்சுவிட சிறிதளவு ஆ க்ஸிஜனையும் ருசிக்க சற்று இனிமைகளையும் அவை கண்டுகொள்ளும். ஓயாத மழை கூடாரத்தின் கித்தான்கூரை மீது மீண்டும் மீண்டும் ஒலிக்க உள்ளேயே தூங்கி எழுந்து அமர்ந்து படுத்து வாழும் பெருஞ்சலிப்பு இல்லாவிட்டால் என் வானொலி எனக்கு இத்தனை அரியதாகியிருக்காது. யிரம் கரகரப்புகளும் பல்லாயிரம் சீறல்களும் கலந்து ஒலிக்கும் தமிழ் சினிமாப்பாடல்கள்ஆ த்மாவில் தேனை பெய்திருக்காது. எப்போதாவது சுசீலாவின் மணிக்குரல் 'ஆலய மணியின் ஓசையை நான் கேட்டேன்' என்று எழும்போது உடல்நரம்புகளிலெல்லாம் இசை அதிர கண்பனிக்க நினைவழிந்து படுத்திருக்க முடியாது. நெல்லை தெருக்களின் வெயிலும் புழுதியும் சாக்கடை வியாகும் வீச்சமும் ரத்னா பாப்புலர் திரையரங்கு முகப்பின் போஸ்டர்களும் நினைவில் மீள மீள இனிய கனவென ஓடியிருக்காது.

சினிமாப்பாட்டுதான் எங்கள் முகாமின் மூச்சு. முகாமில் பதிநான்குபேர் தமிழர்கள். மூன்று மலையாளிகள். நான்கு கன்னடர்கள். எட்டு தெலுங்கர்கள். இரவுகளில் சிறிய முட்டை மின்விளக்கு பூச்சிகள் சூழ்ந்து சுடர்ந்து பறக்க எரியும். பெரிய மடக்குமேஜைமீது ரம் பாட்டில்கள். தண்ணீர். பொரித்த கோழி. பெரும்பாலும் காட்டுகோழி . பல சமயம் பிற காட்டுப்பறவைகள். டப்பாவில் அடைக்கப்பட்ட மீன். பாக்கெட் சிப்ஸ். நாயர்தான் முதலில் பாடுவான். போதையில் அவனுக்கு வயலார் ராமவர்மாவின் பாட்டுகள் நினைவின் ஆழத்திலிருந்து பரல்மீன்கள் போல ஒளியுடன் எழுந்து வரும். " மந்த ஸ்மீரனில்ல்ல்.... ஒழுகி ஒழுகியெத்தும் ...இந்த்ர சாபம் நீ..." நாயருக்கு நல்ல குரல். ஜேஸ¤ தாஸை நினைவூட்டும். நான் டி.எம்சௌந்தரராஜன் பாட்டுகளைத்தான் எப்போதும் பாடுவேன் "நான் மலரோடு தனியாக ஏனிங்கு வந்தேன்..." கிருஷ்ணமராஜு பழைய கண்டசாலா பாட்டுகள். எப்போதுமே பழைய பாட்டுகளைத்தான் பாடுவோம். அவற்றில்தான் ஏக்கம் நிறைந்திருக்கிறது. இழந்தவை விட்டுவந்தவை எட்டமுடியாதவை அனைத்துக்கும் அவை கைநீட்டுகின்றன. உருகி உருகி மறைகின்றன. நேரமே இல்லை. இரவு ஒருமணி இரண்டுமணி... மாறி மாறிப்

பாடிக்கொண்டே இருப்போம்.ஒரு பாட்டு ஒன்பது பாட்டுகளை நினைவில் கிளத்தும். காப்டன் சௌகான் பியூகிளை ஊதியபடி அவரே வந்து ”கம்பெனி வைன்ட் அப்!”என்று கூவுவார். விளக்கை அணைத்து காம்ப் கட்டில்களில் படுத்து கம்பிளியால் போர்த்திக் கொள்வோம். இதமான சூட்டுக்குள் பாடப்படாத பாட்டுகளாக மனம் ரீங்கரிக்கும். நாயர் போர்வையைத் தாழ்த்தி மெல்லிய குரலில் ”பிள்ளைவாள் இதைக் கேட்டிருக்கிங்களா? – ‘சாம்யமகந்நோர் உத்யானமே…கல்ப கோத்யானமே…” என்று பாடுவான். பாட்டு தேய்ந்து ஒரு கட்டத்தில் குரல் உடைய இருளில் அவனது சிறு விம்மல்கேட்கும்.நான் அதை விசாரிக்க மாட்டேன். இரவில் இருளில் ததும்பிவரும் அழுகை மிக தூயது. மிக மென்மையானது. மிக மிக இனியதும்கூட…

என் எண்ணங்களை கட்டுப்படுத்திக் கொண்டேன். காட்டுக்குள் தேடலுக்குச் செல்லும்போது மிக மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டியது இது என்று அழுத்திக் அழுத்திக் கற்பிப்பார்கள் ராணுவத்தில். காட்டு விலங்குகள் போல ஐம்புலன்களும் கூர்மை கொண்டிருக்கவேண்டும். அவற்றை தொகுத்து பகுத்து ஆராயும் புத்தி எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டும். அதற்கு முக்கியமான தடையாக ஆகின்றவை இரண்டு விஷயங்கள். ஒன்று, நம்மையறியாமலேயே நம் மனம் நம்முள் நுரைக்கவைத்துக் கொள்ளும் பகற்கனவுகள். காலத்தில் முன்னும் பின்னும் ஓடி நம் அகம் அள்ளிக் கொள்ளும் நினைவுகள். இந்த சூழலின் கடுமையை தாங்கிக் கொள்ள மனம் கண்டுபிடிக்கும் இயல்பான வழிமுறை அதுவே. இரண்டு, கண்ணிலோ காதிலோ படும் ஏதேனும் ஒன்றில் கவனம் ஆழமாகச் சென்று பிறவற்றை கவனிக்காமலாகிவிடுதல்.

”காடு ஒரு குறிப்பேடு. அதன் தாள்களில் அங்கு நடந்தவை அனைத்துமே எழுதப்பட்டுள்ளன. அந்த எழுத்துக்களை கவனிக்கும் கூர்மை நமக்கு வேண்டும் .அந்த மொழி நமக்குத் தெரிந்திருக்கவேண்டும். ” பயிற்சிநிலையத்தில் மேஜர் தாராவாலா சொல்வார். ” வடகிழக்கு காடுகள் இந்திய ராணுவம் சிக்கிக் கொண்ட

புதைகுழி என்று சொல்லலாம். ஒவ்வொரு வருடமும் இங்கு நாம் சிலஆயிரம் பேரை பலி கொடுக்கிறோம். பெரும்பாலும் கவனக்குறைவுக்கு பரிசாகவே அம்மரணங்கள் அமைகின்றன. காட்டுக்குள் இருக்கையில் காட்டுவிலங்காக இருங்கள். நினைவுகள் இல்லாத விலங்கு. கடந்த காலமோ எதிர்காலமே இல்லாத எளிய உயிர். போதும்....”

என் கையின் சிக்னல் பேஜர் மெல்ல அதிர்ந்தது. அதில் எனக்கான கட்டளை இருந்தது. விரிந்து பரந்த எங்கள் வட்டம் முழுமையடைந்துவிட்டது. ஒவ்வொருவரும் இன்னொருவருடன் சேர்ந்து இணைந்து மீண்டும் குழுவாகத்திரள வேண்டும். உறையிடப்பட்ட சுட்டுவிரலால் பேஜரில் நெருடி செய்திபெற்றுக்கொண்டமைக்கான குறியீடை அனுப்பினேன்.

என் முன் கையில் எம்9 மல்டி பர்பஸ் பயனெட்டால் புதர்களை வெட்டியபடி இன்னொரு கையில் பூட்டு விடுவிக்கப்பட்ட எம்16 ஏ 2 ரை•பிளுடன் சென்ற சுபேதார் மேஜர் திம்மையாவின் முதுகு தெரிந்தபடியே இருந்தது. சற்று கீழே மூங்கில் இலைப்பரப்புக்கு அப்பால் செகண்ட் லெ•ப்டினெண்ட் நாயர் என் முதுகைப்பார்த்து நடந்துகொண்டிருப்பான். காட்டுச் சோதனையின்போது ஒருவரை ஒருவர் காண முடியாதபடி விலகிச்செல்லுதல் இங்கு மிக அபாயம். சில அடிதொலைவிலேயே எல்லா அடையாளங்களையும் மறைத்து முற்றாக மூடிக்கொள்ளும் அடர்காடு. பயிற்சியின்போது வழிதவறிச்சென்று அலைப்புற்று மீண்டது எல்லாருக்கும் நினைவில் இருக்கும். பயனெட்டால் புதர்களை வெட்டி கால்வைக்கும் இடத்தை ஒருகணம்பார்த்து சேற்றில் அழுந்திய பூட்ஸை சளக் ஒலியுடன் தூக்கி அங்கே வைத்து உடலை உந்தி தூக்கி முன்னெடுத்தால் ஒரு அடி வைத்தாகிவிட்டது. அப்படி அடிகள் அடிகளாக காலைமுதல் இப்போதுவரை. இப்போது மதியம் ஒன்றரை. ஆனால் அது கடிகாரத்தில் . இந்தக்காட்டுக்குள் பகலென்பதே மங்கலான ஒருவகை பச்சை வெளிச்சம்தான். அதை நேரடியாக நோக்க முடியாது. மேலே இலைக்கூரையிலிருந்து கசிந்து கீழே இலைகளை சுடர வைக்கிறது

அவ்வொளி. இலையிலிருந்து என் முகத்தில் குதித்து அப்பால் சென்றது ஒரு பச்சைத்தவளை. அதன் கால் வாயில் பட்டது. மெல்லத் துப்பிக் கொண்டு அசப்பில் திரும்பியபோது—

உலகின் மகத்தான அதிர்ஷ்டசாலிகளில் நானும் ஒருவன் என்று உணர்ந்தேன் . என் பிடரி சிலிர்த்து விட்டது.சேற்றில் அந்த காலடித்தடத்தைக் கண்டேன். உயிர்வாழும் ஆசை உருவாக்கும் ஆற்றலுக்கு எல்லையே இல்லை. சட்டென்று அந்தக்காலடியின் திசையை ஊகித்து என் கையிலிருந்த எம்4 கார்பைன் துப்பாக்கியுடன் சட்டென்று திரும்பி மரப்பொந்துக்குள் மூங்கில் இலைஅடர்த்திக்குள் இருந்த சிறு பெண்ணை நோக்கி குறிவைத்து விட்டேன். அதே கணம் அவளும் தன் கத்தியை என்னை நோக்கி குறிவைத்திருந்தாள். ஒரே கணம். அதற்கு முந்தைய கணத்தில் அவள் குறிவைத்திருந்தால் அப்போது நான் இறந்திருப்பேன். அவர்கள் பாரம்பரிய முறையில் விஷம் தீட்டப்பட்ட குக்கி என்று சொல்லப்படும் கத்திகளை பயன்படுத்துகிறார்கள்.

ஓங்கிய கரத்துடன் அவள் சிலைபோல நின்றாள். என் துப்பாக்கி விசையில் விரலுடன் நானும் . என் கார்பைன் கோல்ட் 5.56 எம் எம் காலிபர் கொண்டது. 600 மீட்டர்தூரம் குண்டுகளை சீறியடிக்கும். எந்தச் சிந்தனையும் இல்லாது விசையை அழுத்த எட்டுவருடம் பயிற்சி பெற்றபின்னரே லெ•ப்டினெண்ட் காப்டன் ஆகியிருந்தேன். னால் அப்போது என் மனம் விரல் நுனியைச் சென்றடையவில்லை. கார்பைன் குளிர்ந்த இரும்புத்துண்டாக கனத்து அமர்ந்திருந்தது. ஒலி எழுப்ப முடியவில்லை. என் உதடுகள் மொழியிலிருந்து வெகுதொலைவில் இறுகி நின்றிருந்தன. ஒரு கணமோ ஒரு வாழ்நாள் முழுக்கவுமோ அப்படியே நின்றிருப்போம். நாயர் என்னைக் கண்டு கணத்தில் ஊகித்து பேஜர் செய்தியனுப்பிவிட்டு தன் எம்16 ரை•பிளை நீட்டியபடி முன்னகர்ந்தான். சில கணங்களுக்குள் திம்மையாவும் குறிபார்த்துவிட்டான். கார்பைன் கணம் கணமாக எடைகூடி வந்து தோள்களை அழுத்துவதுபோலிருந்தது. தசைநார்கள் கடுத்தன.

இலகுவானபோது என் தாடையும் கழுத்துச்சதைகளும்தான் மிக இறுகியிருந்தன என்று உணர்ந்தேன். கண்களிலும் காதுமடல்களிலும் வெப்பமான ரத்தம் பரவ மெல்ல விழிப்படைந்தபோது காமிராவில் •போகஸ் பொருந்தி சித்திரம் துலங்குவது போல எண்ணங்கள் உருவம் கொண்டன. அவளைச் சூழ்ந்துகொண்டோம்.

அவள் இளம்பெண். பதினெட்டு பத்தொன்பது வயதிருக்கும். மணிப்பூரிலும் பர்மாவிலும் பரவி வாழும் அங்கமி இனக்குழுவைச் சேர்ந்தவள். அடர்பச்சை நிறத்தில் கவுன் அணிந்து ண்பிள்ளைகளுக்கான சட்டையை உள்ளே செருகி இரட்டைப்பின்னலை மடித்து கட்டியிருந்தாள். பச்சைநிறத்தாலான பிளாஸ்டிக் துணியை முக்கோணமாக மடித்து  தலையில் மழைக்காகப் போட்டிருந்தாள். சிறிய மங்கோலியக் கண்கள் இலேசான நீலநிறத்தில் இருந்தன.கருமையில் நீலம் ஊடுருவிய பொன்வண்டுகள் போல. துல்லியமான இளமையான குழந்தைக் கண்கள்.

சட்டென்று அவள் கத்தியை தன் கழுத்துக்குக் கொண்டு போவதை, அந்நினைப்பு அவளில் எழுந்தபோதே முகமாற்றம் மூலமும் உதடுகளின் அசைவு மூலமும் ஊகித்து ,நான் கத்தினேன். ”நில். வேண்டாம். வேண்டாம். ” .

காப்டன் சௌகான் உரத்தகுரலில் மணிப்புரி மொழியில்  ” உன்னை ஒன்றும் செய்யப்போவதில்லை.உன் ஊர்த்தலைவரிடம் சான்றுகேட்டு சரிபார்த்ததுமே விட்டுவிடுவோம். ”என்றார்.

அவள் நம்பாத கண்களுடன் எங்களையே பார்த்தாள்.

காப்டன் மீண்டும் திடமான குரலில் ”நாங்கள் சட்டத்துக்கு உட்பட்டுதான்

செயல்படுவோம். உன்னை விசாரணை செய்து நீ சாதாரண பெண்தான் என்று தெரிந்தால் விட்டுவிடுவோம்” என்றார்.

அவள் மெல்ல கத்தியை தழைத்தாள்.

திம்மையா அவளை நோக்கி ஒரடி எடுத்து வைத்ததும் ” ம் ” என்ற எச்சரிக்கை ஒலியுடன் கத்தியை மீண்டும் தன் கழுத்தை நோக்கி தூக்கினாள். காப்டன் திம்மையாவை கையசைவால் நிறுத்தினார். அவளிடம் ”நீ உன் கத்தியுடனேயே இருக்கலாம். உன் ஆட்கள் வந்து உன்னை கூட்டிப்போவது வரை உன் கத்தியை நீ விடவேண்டியதில்லை ”என்றார்.

அவள் முகத்தின் தசைகளில் மெல்லிய இலகுவாதலை கண்டென். பிறகு மெல்லிய சிவந்த சிறிய உதடுகளை அழுத்தியபடி பெருமூச்சுவிட்டாள்.

நான் ஆங்கிலத்தில் ”இங்கே வேறு ட்கள் ஒளிந்திருக்கக் கூடும்” என்றேன் .

காப்டன்”இல்லை. இவள் கண்களின் அசைவைப் பார்த்தேன். தனியாகத்தான் வந்திருக்கிறாள். அனேகமாக ஒரு தூதுசொல்லி....பார்ப்போம்” என்றார். அவளிடம் ”நட”என்று மணிப்புரியில் சொன்னார்

அவள் தன் கவுனை ஒரு கையால் இலேசாக ஒதுக்கிவிட்டு தரையை ஒருகணம் கூர்ந்து நோக்கி சரிந்துகிடந்த ஒரு மரத்தடியை தாண்டிக்குதித்து இப்பால் வந்தாள். அந்த அசைவில் ஒரு சிறிய

காட்டுபறவை போலிருந்தாள். அவ்வளவு இலகுவாக, அவ்வளவு எச்சரிக்கையாக. எங்காவது ஒரு நகரத்தில் பிறந்திருந்தால் இந்நேரம் சுடிதார் துப்பட்டா பறக்க சைக்கிளைத்தள்ளிக் கொண்டு, ஜிமிக்கி கன்னங்களில் மோத தலையைத் தலையை ட்டியபடி ஓயாது பேசிக்கொண்டு, கல்லூரிக்குச் போய்க்கொண்டிருப்பாள்.

ஒரு கணம் பாவம் என்ற எண்ணம் ஏற்பட்டது.ஆ னால் மறுகணம் கோபம் எழுந்தது. இவர்களை நம்ப முடியாது. இவர்கள் கண்ணில் இந்திய ராணுவ ஜவான்கள் மனிதர்களல்ல. இயந்திரங்கள். எத்தனை மரணங்கள்! ஆபத்திலிருப்பதுபோல கதறி அருகே வந்தும் சுட்டிருக்கிறார்கள். இளநீருக்குள் சயனைட் விஷத்தை ஊசி மூலம் செலுத்தி உபசரித்திருக்கிறார்கள். கள்ளமற்ற முகத்துடன் அருகே வந்து கையெறிக்குண்டுகளை வீசியிருக்கிறார்கள். ‘ஒவ்வொரு முகமும் ஒரு கண்ணிவெடி நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்’ என்பதே ராணுவம் அளித்த முதல் பாடம். சென்றவாரம்கூட ஒரு ராணுவ ஜீப் மீது கையெறிக்குண்டு வீசப்பட்டு எட்டுபேர் இறந்திருக்கின்றனர். எறிந்தது ஒரு சிறுவன். பதினாறுவயதானவன்.. எங்கள் தேடுதலே அதன்பொருட்டுத்தான்....இவர்களுக்குள் வெறுப்பு கொந்தளிக்கிறது. எங்கோ எவரோ உருவாக்கிய வெறுப்பு. எல்லைக்கு அப்பால் பர்மாவில், கடலுக்கு அப்பால் மிஷனரிகளின் தலைமையகங்களில் வெறுப்பு நாற்றங்கால்களில் விதைத்து வளர்க்கப்படுகிறது. இங்கே பிடுங்கி நடப்படுகிறது. இந்தப்போர் தொடங்கி இருபத்தைந்து வருடங்களாகின்றன. இன்னும் பல தலைமுறைக்கு முடியவும் போவதில்லை. எதற்காக? யாருடைய நன்மைக்காக?

மீண்டும் பாவம் என்றுதான் தோன்றியது.

முகாமுக்குத் திரும்பும் வழியில் மழை வலுத்துக் கொட்டியது. காட்டின் பச்சைக்கிளைச்செறிவுக்குள் நீராவி நிறைந்து மூச்சுத்திணறிக்கியபோதே மழைக்கான அறிகுறி என்று அறிந்து நடையை வேகப்படுத்தினோம். அவளை நடுவே விட்டு முன்னால் நீட்டிய பயனெட்களுடன் நால்வர் செல்ல நானும் திம்மய்யாவும் நாயரும் காப்டனும் பின்னால் நடந்தோம். பாயின்ட் 801/A என்ற செம்மண் குன்றை ஏறி மறுபக்கம் இறங்க வேண்டும். சரிவில் மேலும் ஒரு கிலோமீட்டர் சென்றால் எங்கள் முகாம் தெரியும். மலைகளின் மடிப்பில்  பொத்திய கைகளை சற்றே விரித்து ஒளித்துவைத்திருப்பதைக் காட்டியது போல. எங்கள் முகாமுக்கு இருபக்கங்களில் பச்சை எழுச்சியாக செங்குத்தாக எழுந்த மலைச்சரிவுகள். மறுபக்கங்களில் அதேயளவுக்குச் செங்குத்தாகச் சரிந்து அதல பாதாளத்தில் ஓடும் தௌபால் ஆறு கண்ணாடிச்சிதறல்கள் போல வெண்ணிற நுரை ததும்பி பாசிப்பாறைகளினூடாகச் செல்வதைக் காணலாம். அதற்கு அருகே உள்ள படகுத்துறையை மேலிருந்து பார்த்தால் காண முடியாது. பசுந்தழைக்குள் முற்றாக மூடப்பட்டிருக்கும். தழைகள் மூடிய நதிவழியாகவே படகுகள் வரும்போகும்.

செம்மண் குன்றில் ஏறத்தொடங்கும்போதே தூரத்தில் பெரும் அருவி ஒன்று நெருங்கிவருவது போல மழை வருவதைக் கேட்டோம். சற்று நேரத்தில் எங்கள் கைகளையே நாங்கள் காணமுடியாதபடி மழை மேலிருந்து இறங்கி மூடியது. மழை நல்லதுதான். இவளைக் கொண்டு செல்வதை இவளது ஆட்கள் காணாமல் இருக்க அதிக வாய்ப்பு. இந்தக்காட்டில் அவர்களுக்குத்தான் வசதிகள் அதிகம். இலைகளின் வழியாக அவர்களால் நீண்ட தூரம் பார்க்க முடியும். இது அவர்களின் காடு. மழையில் அந்த செம்மண் குன்றே கரைந்து சரிவதுபோல நீரோடைகளில் செம்மண்நீர் சுழித்து சீறி ஓடிவந்து எங்கள் பூட்ஸ்களை இழுத்து நிலைகுலையச்செய்தது. மலைக்கு கீழே எங்கெங்கோ சரிவுகளில் அருவிகள் போல அவ்வோடைகள் கொட்டுவதைக் கேட்டோம். புதர்களின் அடர்த்தியினால் மட்டுமே அக்குன்றில் ஏறமுடிந்தது. திடமான புதர் வேரால் மண்ணைக்கவ்வியிருக்கும்

மேட்டில் கால் வைத்து நடந்தால் வழுக்காது. தவறினால்கூட புதர்களைப்பற்றிக் கொள்ளலாம்.நல்லவேளையாக இங்கே புதர்களில் முட்கள் மிகவும் குறைவு. நீர் நிற்காதபடி நுண்ணிய பூனைமுட்கள் கொண்ட ரம்ப நுனியுள்ள இலைகள்தான் அதிகம். வெறுங்கைகளை அரித்து ரத்தக் களரியாக்கிவிடும்.

‘யாரோ தொடர்கிறார்கள் ‘ என்று காப்டன் சுருக்கமாக மைக்ரோவேவ் ஷாட் ரேஞ்ச் பேஜரில் சொன்னார்.

மழையின் ஆவேசத்துக்குள் எனக்கும் அப்படி பல பிரமைகள் மனதைக் கவ்விக் கொண்டுதான் இருந்தன.

”?” என்றேன்.

”மனிதக்குரல்” காப்டன் எழுதினார் ” ஒரு சொல் ”

”பிரமை?”

“நம்பலாம்”

குன்றைத்தாண்டி மறுசரிவை அடைந்தோம். மழை மெல்ல வெளிறத் தொடங்கியது. சரிவாக குவிந்து ஓலமிட்டு அதிர்ந்து கொண்டிருந்த மரங்கள் உதறிச்சிலுப்பிக் கொண்டு நிமிர்ந்தன. இலைகளை ஊடுருவி காற்று செல்லும் ஊளை மட்டும் கேட்டது.

”வேகம்” என்றார் காப்டன்.

சட்டென்று டுய்ய் என்று விசில் ஒலியைக் கேட்டேன். குண்டுதான். களம் கண்ட ராணுவ வீரனுக்கு ஐயமே இருக்காது. விசில் ஒலி கேட்டதென்றால் குண்டு நம்மைக் கடந்துசென்றுவிட்டது என்று பொருள். யாரை? குப்பென்று உள்ளே பொங்கிய வெப்பமான ஆவியை மூச்சு வழியாக வெளிவிட்டேன்.

எங்கள் பேஜர்கள் சிவப்புப் புள்ளிச்சுடருடன் அதிர்ந்தன.”அலெர்ட்”. எங்கள் குழுவில் பாதிப்பேர் பின்பக்கமாகத் திரும்ப குழுவின் கண்கள் நான்குதிசைக்குமாக பங்கிடப்பட்டன. அதற்குள் அடுத்த குண்டு திம்மப்பாவைத்தாக்கியது. ”ழக்” என்ற ஒலியுடன் அவன் வயிற்றில் உதை பட்டவன் போல எம்பி சரிந்து புதர்களுக்குள் முகம் புதைய சரிந்தான். ஒரே ஒரு பூட்ஸ்கால் மட்டும் விசித்திரமாகத்திரும்பிக் கொண்டு உதறியது. ரெயின்கோட் விலகியதில் அவனுடைய சிவந்த கழுத்தில் நீல நரம்புகள் புடைத்திருப்பது தெரிந்தது. அடுத்த குண்டில் ஹவல்தார் சரவணன்.. அவனைப்பிடிக்க முனைவது போல காப்டன் முன்னோக்கிச் சரிந்து புல்லில் கவிழ்ந்தார்.

இரண்டும் சில கணங்களுக்குள் நடந்துவிட்டன. அதற்குள் எத்தனை எண்ணங்கள். எத்தனை துல்லியமாக காட்சிகளை உள்வாங்குகிறது நெஞ்சு. இரு குண்டுகளுக்கும் இடையேயான கோண ஒற்றுமையை எப்படி ஒரே கணத்தில் கணித்தேன்! காப்டன் விழுந்தால் உடனடியான பொறுப்பாளன் லெ•ப்டினெண்ட் ஆகிய நான் என்று உணர்ந்து எப்படி அப்பதவியை அதேகணத்தில் எடுத்துக் கொண்டேன்! அதை அத்தனைபேருக்கும் சொல்லும் அதிகாரத்தொனி எப்படி எனக்கு கிடைத்தது….!

”’ … ஆங்கிள் டூ பார் த்ரீ பாயிண்ட் எயிட்– சார்ஜ்! ”என்று நான்

ஆணையிட்டதும் செகண்ட் லெ•ப்டினெண்ட் நாயர் சரசரவென்று  எம் 16 ரை•பிளால் சுடத் தொடங்கிவிட்டான். நெருப்புகள் மழைக்குள் மின்னி மின்னி அணைந்தன. குண்டுகள் மரங்களில் பட்டு தெறிக்கும் ஒலி. மழைக்கணைந்த பறவைகள் சடசடவென சிறகடித்து எழுந்து வானை அறையும் ஒலி. வெடிமருந்தின் வீச்சம்....

அமைதி.

” அவர்கள் சிலர் இறந்திருக்க வேண்டும் சார்” என்றான் நாயர். சார் போடுகிறான். என்னை கமாண்டராக ஏற்றுக் கொண்டுவிட்டான். நான் போட்ட கணக்கை அவனும் அதே கணத்தில் போட்டு மிகச்சரியாகவே சுட்டுவிட்டான். இதோ இதுவரை இருந்த அதிகார அமைப்பின் அனைத்துமே மாறி இன்னொரு காலகட்டம் தொடங்கிவிட்டது. முதல்விசில் கேட்டு இப்போது பத்து கணங்கள் தாண்டவில்லை. காலம் என்பது என்ன?

அவள் கண்களை திரும்பிப்பார்தேன். அதில் பயமே இல்லை. இடுங்கிய இமைகளுக்குள் கருவிழிகள் இரு நீலக்கற்கள் போலிருந்தன.. அவள் மிக முக்கியமானவள் . ஐயமே இல்லை. தற்செயலாக இவளை நாங்கள் கொண்டுபோவதை அவர்கள் பார்த்திருக்கலாம். சுட்டிருக்கலாம். தாக்குதல் இங்கு அன்றாட நிகழ்வு. ஆனால் இது அப்படி அல்ல. அவளைக் கொண்டுபோயாக வேண்டும். எப்படியாவது... ஆனால் காப்டன்...

” என்னை விட்டுவிடு. சிக்கிரம் செல் ” என்றார் காப்டன் சௌகான். தரையில்  ஒருக்களித்துச் சுருண்டு உதடுகளை ரத்தம் வரக் கடித்தபடி. அவரது தோள் துடித்தது

நான் ஒரு கணம் அமைதியாக இருந்தேன்

”உங்களுக்கு நேரமில்லை. கணங்கள் கூட முக்கியம் . எங்களை பணயக்கைதிகளாக்குவார்கள். கொல்லமாட்டார்கள். கொல்வதில் அவர்களுக்கு லாபமில்லை. அவளை விடாதே... ” காப்டன் வலியில் பல்லைக் கிட்டித்தபடி சொன்னார்.

“எஸ் சார்” என்றேன்

சரிவில் இறங்குவது என்பது மலைமீதிருப்பவர்களுக்கு சரியான இலக்கு ஆவதுதான். ஆனால் வேறு வழி இல்லை. நால்வர் பின்னால் திரும்பி இடைவெளியில்லாமல் சுட்டபடியே நடக்க நாங்கள் முடிந்தவரை தலைகுனிந்து புதர்களுக்குள் பன்றிகள் போல நகர்ந்தோம்.

திடீரென்று பக்கவாட்டில் இருந்து குண்டுகள் வந்தன. எம்3 வரிசை கார்பைன்கள் இரண்டு அவர்கள் தரப்பில் இருக்கக் கூடுமென ஊகித்தேன். ஏ.கே.47 கள் கூட ! எங்களுக்குத்தான் ஏ.கெவரிசைகள் அபூர்வமானவை. எங்கள் எதிரிகளுக்கெல்லாம் அவை எளிதாகக் கிடைக்கின்றன. மியான்மார் அரசால் அளிக்கபப்ட்டவை.

சீறி சீறிச்செல்லும் விசில்களை பற்களைக் கிட்டிக்கவைக்கும் பதற்றத்துடன் கேட்டேன். விலுக்கென மின்னதிர்ச்சி பட்டதுபோல உதறி குழறும் தொண்டை ஒலியுடன் கிருஷ்ணனும் முருகதாஸும் விழுந்தார்கள்.

அனிச்சையான வேகத்துடன் நாங்கள் புதர்களுக்குள் சரிந்து குப்புற விழுந்தோம். நாயரும் சிவநாராயணும் அச்சுதன் மடக்கப்பிள்ளியும்

நாரணப்பாவும் மரங்களுக்குப் பின் மறைந்து நின்று வெறியுடன் சுட்டார்கள். எதிரொலி கலந்தால் சிலசமயம் எம் 4 கார்பைன்  டாபர்மான் நாய் குரைப்பது போல ஒலியெழுப்பும்.

இன்னும் குறைந்தது இரண்டு கிலோமீட்டர் இருக்கிறது. ஒரே வழிதான். சில சமயம் மூடத்தனமானது. ஆனால்......

"அவளைத் தூக்குங்கள்...நம் தலைக்குமேல் அவள் உடல் இருக்கட்டும்" என்றேன்.

சேகரும் சிவப்பாவும் அவளை சட்டென்று பற்றினார்கள். அவள் திமிறி தன் கத்தியை நீட்டுவதை பொருட்படுத்தாமல் தங்கள்  இருகைகளையும் பற்றி அதன் மீது பல்லக்கு போல அவளை ஏற்றிக் கொண்டனர்.

"அவள் நன்றாகத்தெரியட்டும்....."  என்றேன்

அவளைச் சுமந்தபடி நடந்தோம். நெஞ்சின் ஒலியை உடல் எங்கும் கேட்டோம்.

டுய் டுய் என்று இரு குண்டுகள் பறந்தன. ஒன்று மரப்பட்டையை பிய்த்தது.

" நம்மை பயமுறுத்துகிறார்கள். குண்டுகள் அவ்வளவு தள்ளிச் செல்கின்றன. இவளைக் கொல்ல விரும்ப மாட்டார்கள். இவள் முக்கியமானவள்....சந்தேகமே இல்லை " என்றேன்.

குண்டுகள் வந்த திசையை நோக்கி நாயர் சந்தேகத்திற்கு மும்முறை சுட்டான்.

பிறகு குண்டுகள் வரவில்லை. நான் ”அவள் அருகேயே நடப்போம். விலகிச்செல்பவர்களை சுட்டுவிடுவார்கள்..” என்றேன்.

மழை நன்றாக விட்டுவிட்டது. மலைச்சரிவில் எங்கள் முகாம் தெரிந்தது. மேகம் புகைப்பொட்டலங்கள் போல அதைச்சூழ்ந்து கிடந்தது. இரும்புக்கம்பிகளை ஸ்க்ரூவால் இணைத்து எழுப்பப்பட்ட கோபுரம் மீது மைக்ரோ வேவ் அண்டனா வடமேற்கில் முப்பது டிகிரி கோணத்தில் திரும்பி ஒலிக்குச் செவிகூரும் பூனை போல கவனித்து நின்றது. அதன் கீழே  காவல் பரண் மீது எம்கெ 19-3 ,40 எம் எம் கிரெனெட் மெஷின் துப்பாக்கியின் சிலிண்டர் மங்கும் மாலை வெளிச்சத்தில் இனிய நீல நிறத்துடன் ஒளிவிட்டதைக் கண்டேன். அதன் திறந்த வாயைக் கண்டேன் .அதன் எல்லை 2200 மீட்டர். இந்த மண்ணில் அதுதான் இந்திய எல்லையும்.

நான் என் ரேடியோவில் எங்கள் வருகையை அறிவித்தேன். அங்கிருந்து பயனெட் ஒளிரும் 16 எம் எம் ரை•பிள்களுடன் எங்கள் கம்பெனி ஜவான்கள் பதினைந்துபேர் கம்பிவேலியின் வாயில் வழியாக ஈசல்கள் போல கிளம்பி வீசப்பட்ட மீன்வலையாக விரிந்து எங்களை நோக்கி வந்தார்கள்.

3

மூங்கில் தறி அறைந்து கட்டப்பட்ட  மெல்லிய முள்கம்பியாலான வேலிக்கு நடுவே முகாமின் நீலப்பச்சைநிறக் கூடாரங்கள் காற்றில் உப்பி உப்பி அழுந்திக் கொண்டிருந்தன. மணல்மூட்டைகள் அடுக்கப்பட்டு உருவான சுற்று மதிலுக்கு அப்பால் எம் 249 ஸ்க்வாட் ஆட்டமாட்டிக்  லைட் வெயிட் போர்ட்டபில் இயந்திரத்துப்பாக்கிகளின் மூக்குநுனிகள் தெரிந்தன. நிமிடத்துக்கு 750 ரவுண்ட் சுடக்கூடியவை. முகாமுக்குள் மரமேடைமீது எம் 203 கிரனேட் லாஞ்சர்கள் மூன்று நின்றன. ஒவ்வொன்றிலும் ஜவான்கள் தயாராக நின்றனர்.

நான்குபக்கமும் ரைபிள்கள் சூழ உள்ளே சென்றோம். வேலி மூடப்பட்டு வாயில் சாத்தப்பட்டது.

மெட்றாஸ் ஸாப்பர் ரெஜிமெண்டைச்சேர்ந்த இந்த பதினெட்டாவது ஹில்மேன் கம்பெனியின் சங்கேதப்பெயர் காட் •ப்ளை. ஈஸ்டர்ன் கமாண்டுக்கு கீழே சேவைக்கு வடக்கிலிருந்து அனுப்பபட்டது. அதிகாரபூர்வ தலைவர் கீழே ‘காங் டால்’லில் இருந்த மேஜர் திரிபாதி. ஆனால் மலையில் நான்கு தென் மாநிலங்களைச் சேர்ந்த ஐம்பது பேர் மட்டும் காப்டன் சௌகான் தலைமையில் இயங்கினோம்.  எட்டுபேர் சிக்னல் பிரிவைச்சேர்ந்தவர்கள். பத்துபேர் சமையல் செய்யும் சப்ராஸிகள். துப்புரவு மற்றும் பணிகள் செய்யும் டபேதார்கள். இயந்திரத்துப்பாக்கி இயக்குபவர்கள் பன்னிரண்டுபேர். பெரும்பாலும் அதிகாரிகள் வடமாநிலத்தவர்களாகவே அமைவது வழக்கம். சௌகான் வந்து எட்டு மாதமாகிறது.

நான் மூச்சுவிடாமல் உத்தரவுகளை சொல்லியபடியே சிக்னல் பிரிவை நோக்கி ஓட்டமும் நடையுமாகச் சென்றேன். அவளை அலுவலகத்துக்குக் கொண்டுசென்று பலத்த காவலில் வைக்கச்சொன்னேன். கம்பெனி

முகாமை முதற்கட்ட விழிப்பில் இருக்கும்படி ஆணையிட்டேன். அத்தனை பேரும் டியூட்டியில் இருக்கவேண்டும். முகாமைச்சுற்றியுள்ள நான்கு செர்ச் லைட்டுகளும் எரியட்டும். ஐந்துநிமிடங்களுக்கு ஒருமுறை ஒவ்வொரு இடமும் ஒளியால் தொடப்படவேண்டும்.

மழைக்கோட்டை கழட்டி வீசிவிட்டு ஈரமான பூட்ஸ்களுடன் நேராக சிக்னல் அறைக்குச் சென்றேன். வயர் நாற்காலியில் அமர்ந்தேன். அருகே  சுபேதார் மேஜர் சண்முகம் பச்சை நிற எல்சிடி திரை அவன் கண்ணாடிச்சில்லுகளில் ஒளிர ஹெட்செட் மீது கையை வைத்து அழுத்தியபடி கூர்ந்து கேட்க முயன்றான். உரக்க ” காட் •ப்ளை காலிங்... காட் •ப்ளை காலிங்... ஹலோ ஹலோ காட் •ப்ளை காலிங்...காலிங் காட் ப்ளை...” என்று கூவினான்.

சுபேதார் மாணிக்கம் ” குட் ஈவ்னிங் சார்” என்றான். ”சிக்னல் கிடைக்கவில்லை . ஒன்றரை மணிநேரமாக முயல்கிறோம்.”

“என்ன ஆச்சு?”

“கீழே ஒரு பெரிய புயல் கூடியிருக்கிறது. பாருங்கள்...”என்று ஸ்க்ரீனைக்காட்டினான். முற்றிலும் புகையால் மூடப்பட்டிருந்தது. ”ஒரே எலக்ட்ரான் கொந்தளிப்பு. ஹெட்போன் சீறுகிறது...”

நாயக் சுபேதார் ராமப்பா யூனி•பாமைப்போட்டபடி உள்ளே வந்தான். ”குட் மானிங் சார்” என்றான். சேரில் அமர்ந்தபடி மானிட்டரைப்பார்த்தான். ”மிகப்பெரிய மழை வரப்போகிறது... காற்றும் பயங்கரமாக இருக்கலாம்...”

”எப்போது சரியாகும்?”

” வடகிழக்கு மலைகளில் மேகத்தைப்பற்றி யாரும் எதுவும் சொல்ல முடியாது. ஒரே மணிநேரத்தில் திரை கிழிவது போல விலகலாம்.அல்லது கோட்டைச்சுவர் போல நான்குநாட்களுக்கு நிற்கவும் நிற்கலாம்”

நான் எழுந்தேன். ” இது செய்தி. ஐந்து நிமிடங்களுக்கு ஒரு முறை முயலுங்கள். எவ்வளவு முடியுமோ அவ்வளவு. இந்தச்செய்தியை அவர்களுக்குச் சொல்லிவிடவேண்டும். நாம் அபாயத்தில் இருக்கிறோம்” செய்தியை குறிப்புத்தாளில் எழுதி நீட்டிவிட்டு திரும்பினேன்.

சப்ராஸி சூடான டீ கொண்டுவந்தான். நான் ஒரு கோப்பையை எடுத்தேன். தொண்டைக்குழியும் மார்பும் வயிறும் மனமும் சூடான திரவத்தால் தீண்டப்பட்டன. ஒரு வகை தன்னம்பிக்கை உருவாயிற்று.

சண்முகம்”ஷிட் ” என்றபடி ஹெட்போனைக் கழற்றினான். ”வெறும் இரைச்சல். இந்த சிஸ்டமே முப்பதுவருஷம் பழசு…. ”

“இப்ப உள்ளது இன்னும் முப்பதுவருஷம் கழிச்சு நமக்கு வரும்”என்றான் ராமப்பா ” இங்க துப்பாக்கிகளே பழசு. ஏகே 57 வந்தாச்சு.நாம இன்னும் கார்பைன்கள வச்சுக்கிட்டு அலையறோம்”

“சார் , நாம் இந்தப்பெண்ணை இங்கே வைத்திருக்கத்தான் வேண்டுமா?”என்றான் மாணிக்கம்

“பின்னே?”

” அவளை தேடிவருவார்கள். அவள் மிக முக்கியமானவளாக இல்லாவிட்டால் சுடுவதை நிறுத்தியிருக்க மாட்டார்கள்…”

“ஆகவே?”

அவன் கண்களை தழைத்தான்.

“நம் காப்டன் அவர்களிடம் இருக்கிறான். காயம்பட்ட இரண்டுபேர் உயிருடன் அவர்களிடம் மாட்டியிருக்கலாம்…. இவள்தான் நமது பணயப்பொருள்..”

“நாம் ஒட்டுமொத்தமாக அவர்களுடைய கையில் பணயப்பொருளாக இருக்கிறோம் என்று நினைக்கிறேன்”என்றான் மாணிக்கம்

“ஷட் அப்” என்று அதட்டிவிட்டு வெளியே நடந்தேன்.

வெளியே கூரையிலிருந்து நீர் சொட்டிக்கொண்டிருந்தது. கூடாரங்களில் காற்றின் அசைவு. காடு அப்பால் ஊளையிட்டது. அலுவலகத்தில் அவள் தரையில் ஈர உடையுடன் அமர்ந்திருந்தாள். மடியில் அவளது கத்தி

“நாயர்..இவளுக்கு உடைகள் கொடுக்கவில்லையா?”

“கொடுத்தோம் சார்…. அவள் தனிமையில் உடைமாற்ற விரும்புகிறாள்.”

நான் அவளைப்பார்த்தேன். “சரி. நான் இவளைப் பார்த்துக் கொள்கிறேன். தேடலுக்குப் போனவர்கள் மட்டும் குளித்து ஓய்வெடுக்கட்டும். மற்றவர்கள் விழித்திருக்கட்டும்.”என்றேன்.

நாயர் “எஸ் சார்”என்றான். அவனும் பிற மூன்று ஜவான்களும் வெளியே சென்றார்கள்.

எம்௭ .45 பெரட்டா பிஸ்டலை உருவிய அக்கணத்தை நான் விரும்பினேன். அதன் கரிய கனத்தை வலக்கையில் உணர்ந்தபடி திடமான குரலில் அவளிடம்  ” எழுந்திரு” என்றேன். ஆயுதம் ஒருவனை ஆண்மையாக உணரச்செய்கிறதென்றால் அது ஓர் இழிவுதான். ஆனால் அது எப்போதுமே அப்படித்தான். ஆண்மை என்றால் ஒரு பாவனை. சிகரெட் அந்த பாவனையை அளிக்கிறது. சீருடை இன்னும். ஆயுதம் மேலும் பலமடங்கு.

அவள் எழுந்தாள். அருகே மேஜை மீதிருந்த உடைகளை எடுத்து அவள் மீது வீசினேன். ஆண்களுக்கான டி ஷர்ட். பேண்ட். அவள் அவற்றை கையில் வைத்தபடி நின்றாள்.

நான் நாடா நாற்காலியை இழுத்துப்போட்டு அமர்ந்தேன். கூடாரம் எழுந்தமர்ந்தது, மூச்சுவிடுவது போல. “நான் லெப்டினெண்ட் நெல்லையப்பன். இப்போது இந்த கம்பெனிக்குப் பொறுப்பு நான்தான். உன் பெயர் என்ன?” என்றேன் ஆங்கிலத்தில்

அவள் பதில் சொல்லவில்லை

“பேசு” என்றேன்

அவள் பேசாமல் நின்றாள்.

” பேசித்தான் ஆக வேண்டும். ஏனென்னறால் நீ இன்று என்னுடன் படுக்கப்போகிறாய்”என்றேன் புன்னகையுடன்.

அதிர்ந்து சட்டென்று கத்தியை தன் கழுத்தை நோக்கி தூக்கினாள்

“ஆகா...அப்படியானால் உனக்கு ஆங்கிலம் தெரியும்.....”சிரித்தபடி ” சரி, இனிமேல் தந்திரங்கள் வேண்டாம்...சொல்லு. உன் பெயரென்ன?” என்றேன்

” ஜ்வாலா ” கத்தியை தழைத்தாள். மெல்லிய குரல். பர்மிய மூங்கில் வாத்தியம் போன்ற குரல்.

“முழுப்பெயர்?”

“ஜ்வாலாமுகி. ”

”சர் நெய்ம்?”

”அதை நான் சொல்லப்போவதில்லை”

“ஓக்கே. ஜ்வாலா நீ புத்திசாலிப்பெண். படித்தவள். உன்னைப்பார்த்தாலே தெரிகிறது. இப்போது நீ பணயக்கைதி. நாளை உனக்காக பேரம்பேச உன் ஆட்கள் வரப்போகிறார்கள். பேசி முடிவுக்கு வந்து எங்கள் காப்டனையும் ஜவான்களையும் பெற்றுக்கொண்டு உன்னை கைமாறுவோம். அதுவரை நீ ஒழுங்காக இருந்தால் உனக்கும் நல்லது எனக்கும் நல்லது. சரியா?”

“சரி”

“உடைமாற்றிக் கொள்.நான் உன்னைப்பார்க்கமாட்டேன். இந்த நிழலைத்தான் பார்ப்பேன். ஏதாவது தவறான அசைவு தெரிந்தால் சுடுவேன். கொல்லமாட்டேன். ஆனால் கால் போய்விடும்..”

அவள் தலையசைத்தாள். நிழலில் அவள் உடைமாற்றுவதை பார்த்திருந்தேன். சட்டென்று என் மனம் படபடத்தது. அந்த மனக் கிளர்ச்சியை நான் எதிர்பார்க்கவேயில்லை. அதை நான் வெறுத்தேன்.

அவள் கனைத்தாள். நான் திரும்பிக் கொண்டேன். அவள் புதிதாக நின்றிருந்தாள்.

அந்த அலுவல் கூடாரத்தில் இரு அறைகள். ஒன்றில் சௌகான் தங்கியிருந்தார். இன்னொன்று அலுவலுக்கு. அதிகாரிகளுக்குரிய இரட்டைத்திரைச்சீலைக் கூடாரம் அது. இரண்டிலும் நாடாக்கட்டில்கள்

உண்டு.

”நீ அந்தக்கட்டிலில் படுத்துக் கொள்”என்றேன். அவள் சௌகானின் காம்ப் கட்டிலில் அமர்ந்து கத்தியை மடிமீதுவைத்துக் கொண்டாள்.

நான் வெளியே நின்ற ஜவானைக் கூப்பிட்டு பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டு என் கூடாரத்துக்கு திரும்பினேன். அதில் நானும் ஆறுபேரும் தங்கியிருந்தோம். உள்ளே சென்று டிரங்குப்பெட்டியை திறந்து உடைகளை எடுத்துக் கொண்டேன். நாயர் தூங்காமல் கண்கள் மீது பிளைண்டரைப் போட்டு படுத்திருந்தான்.

” நாயர், நான் சௌகான் கூடாரத்திலே தங்கிக்கறேன்” என்றேன்

“ஸெரி ”என்றான்.என்னிடம் எப்போதுமே மலையாளத்தமிழில் தான் பேசுவான்.

நான் வெளியே போகக் கிளம்பியபோது நாயர் ” பிள்ளைவாள்... அவள் முக்கியமானவள்னு ஊகிச்சது ஒரு பிரில்லியண்ட் ஐடியா. அதனாலதான் நாம தப்பினோம். தேங்க்யூ ”

“தேங்க் யூ டூ ” என்றேன். ”நீ கூட ரொம்பப் பிரமாதமா சுட்டே”

”அது தொழில்.... ”

”யூ ஆர் குட் அட் இட்” நான் சென்றேன்

பின்பக்கம் விறகடுப்பில் சப்ராஸி வெந்நீர் போட்டிருந்தான்., குளித்தேன். நீர் என் மீது பட்டபோது மெல்ல பாடல் ஒன்றை சீட்டியடித்தேன். ”ஒரு பெண்ணைப்பார்த்து நிலவைப்பார்த்தேன். நிலவில் ஒளியில்லை” . சப்ராஸி என்னைப்பார்ப்பதை உணர்ந்து திரும்பிக் கொண்டேன்.

மீண்டும் கூடாரத்துக்கு வந்து என் உடைகளை அணிந்தேன். “ஜ்வாலா”என்றேன் கண்ணாடியைப்பார்த்து

“எந்தா ?”

“ஜ்வாலா. அவ பேரு. ஜ்வாலாமுகி…” நான் தலைசீவியபடி ”நீ கூட பாடுவியே நீலகிரியுடெ சகிகளே ஜ்வாலாமுகிகளேன்னு..நீலமலைகளோட தோழி… இல்ல ?”

நாயர் அதை விரும்பவில்லை. ”ஷி இஸ் டேஞ்சரஸ்”என்றாள்

”ஹில்ஸ் ஆர் ஆல்வேய்ஸ் டேஞ்சரஸ்”

“பேசுறாளா?”

“ஒரு வார்த்தை மட்டும்தான் பேசினா. பாப்போம்”

நான் வெளியே நடந்தேன்”குட் நைட்”

” நாட் எ குட் நைட்.  பெரிய மழையும் காத்தும் வரப்போகுது”என்றான் நாயர். பெருமூச்சுடன் திரும்பிப்படுத்தபடி. ”இது திம்மன் படுத்த கட்டில். இதில வேற ஆளை படுக்க வைக்கணும். காலியா இருக்கிறது பாத்தா ரொம்ப கஷ்டமா இருக்கு”

“சரி…நாளைக்கு பாப்பம்”

“அவன் பாடியை நாம கேட்டு வாங்கிடலாம் இல்ல? ”என்றான் நாயர் ”அவன் அம்மாஅப்பாவுக்கு மூணு பொண்ணு. இவன் மட்டும்தான் ஆம்பிளை”

என் நெஞ்சை ஏதோ ஒன்று இறுக்கியது .ஒருகணம் நிண்றேன்

“ஸாரி” என்றான் நாயர்.

நான் தலையசைத்துவிட்டு வெளியேறினேன். வெளியே காற்று கூவியபடி சுழன்றது. காவல் ஏற்பாடுகளை சரி பார்த்தேன். டவர் மீதிருந்த நாயக் ரங்கராஜன் ” ராஜர் அலெர்ட் சர்” என்றான் .

தியாகராஜன் அவ்வழியாக வந்து நின்று மெல்ல சல்யூட் வைத்து ” புயல் வரும் சார்”

“ஆமா”

”எத்தனைபேர் சாவு?”

“மூணுபேர்னு நினைக்கறேன்”

”பேட் லக்”

நான் பேசாமல் நடந்தேன். கைவலிக்க பீரங்கிக் குண்டை தூக்குவது போல மனதைச் சுமந்தேன்.

கூடாரத்துக்குள் சென்று உள்ளே எட்டிப்பார்த்தேன். அவள் தூங்கிக் கொண்டிருந்தாள். மெல்ல ஒலியில்லாமல் உள்ளே நுழைந்தேன். காட்டு பூனைபோல விருட்டென்று எழுந்து அமர்ந்தாள், கையில் கத்தியுடன்.

“விழிப்பான தூக்கம்… அப்படியானால் நீ மிகவும் பயிற்சி பெற்றவள். ” என்றேன். என்னுள் வெறுப்பு கொந்தளிப்பதை உணர்ந்தேன்.
”கொல்வதற்கான பயிற்சி…”

அவள் மீண்டும் படுத்துக் கொண்டாள். முகத்தில் எந்த உணர்ச்சியுமில்லை

நான் அலுவலகத்திற்கு வந்து அங்கே கிடந்த காம்ப் கட்டிலில் படுத்து போர்த்திக் கொண்டேன். தூக்கம் வரவில்லை. சௌகானின் இல்லாத இருப்பு அந்த அறைக்குள் நிரம்பியிருந்தது. அவரது மனைவி தைத்த அலங்காரத்துணி மாட்டிய சுவர். நானக் படம். பொற்கோயில் படம். அவரது பெல்ட். உடைகள். பஞ்சாபி டர்பன் துணிகள். ஹிந்தி சினிமாப் பாட்டு காசெட்டுகள்

எழுந்து அவரது மேஜையை அடைந்து பெட்டியை திறந்தேன். சௌகான் தன் குடும்ப •போட்டோவை மேலாகவே வைத்திருந்தார். குடுமி வைத்த இரு பையன்கள் நடுவே அவரும் குண்டான சர்தாரிணியும் சிரித்தபடி காமிராவை உற்று பார்த்தனர்.

பெருமூச்சுடன் அவற்றை வைத்துவிட்டு மீண்டும் வந்து படுத்துக் கொண்டேன்.

நான் நள்ளிரவுதாண்டி எழுப்பபட்டேன். என்னைச்சுற்றி காற்றின் ஓலம் நிறைந்திருந்தது. கூடாரம் கிட்டத்தட்ட ஒருபக்கமாகச் சரிந்து பறந்தது. கைத்துப்பாக்கியுடன் எழுந்து அவளை நோக்கினேன். அவள் எழுந்து தன் கத்தியுடன் கட்டிலில் அமர்ந்திருந்தாள்.

வெளியே ஜவான் கார்பைனுடன் நின்றான். காற்று கூக்குரலிட்டபடி சுழன்றது.

”மழை வரப்போகிறது சார்”

நான் வெளியே ஓடி சிக்னல் அறைக்குச் சென்றேன்.

சண்முகம் என்னைப்பார்த்ததும் ”குட்மானிங் செர் ”என்றான்  ”அங்கே அண்டனா சாய்ந்திருக்கலாம். இப்போது சிக்னலே இல்லை”

”நம் லோக்கல் சிஸ்டம் எப்படி இருக்கிறது?”

“நம் அண்டனா இருக்கும்வரை அது வேலைசெய்யும்”

”அது இல்லை என்றே வைத்துக் கொள். வண்ண விளக்குகளை எல்லாருக்கும் கொடு.... ”

வெளியே மழை மண்ணை அறைந்தது. கூ என்று கூவியபடி சுழன்றடித்தது காற்று.

படீரென்று திரை அணைந்தது.

”ஷிட்”என்றான் மாணிக்கம்.

”என்ன?”

“நம் அண்டனாவும் போய்விட்டது”

மழையில் இறங்கி நேராக அலுவலக அறையை அடைந்தேன். அவளை ஹவல்தார் மேஜர் தியாகராஜன் புகைப்படங்கள் எடுத்துக் கொண்டிருந்தான். அவள் அசையாமல் சிலைத்த நோக்குடன் அமர்ந்திருக்க அவன்தான் சுற்றிச்சுற்றி வந்து கிளிக்கினான். நான் ரெயின் கோட்டை கழற்றிவிட்டு அவள் முன் வயர் நாற்காலியில் அமர்ந்தேன்.

”புயல் வருகிறது தியாகு ” என்றேன்

“ஆமாம்...பெரிய புயல்” என்றான் கிளிக்கியபடி. அவளது கை ரேகைக˜ ளையும் கால்ரேகைகளையும் பதிவுசெய்தான். அவள் கழுத்தருகே ஒரு சிறு மச்சம். உதடுமீது சிறிய வெட்டுக்காயத்தழும்பு. அவற்றை எழுதினான்.

சாட்சிக்காக என்னிடம் நீட்டியபடி ” இவள் உண்மையிலேயே அழகான பெண்” என்றாள்

”அவளுக்கு அதுதெரியும்” என்றேன் புன்னகைத்தபடி

“இப்படி காட்டில் சுற்றினால் இரண்டுவருடத்தில் சப்பிஉலர்ந்துவிடுவாள்”  ஆவணங்களை எனக்கு நீட்டினான். நான் தாள்களை புரட்டி கையெழுத்திட்டபடி அவளை நோக்கி புன்னகை செய்தேன்

”பேசாமல் கல்யானம் கட்டிக்கொண்டு வாழச்சொல்லுங்கள் சார்”

“என்ன ஜ்வாலா? கேட்டாயா?”என்றேன் ”கல்யாணம் செய்து குழந்தைகுட்டிகளோடு வாழச்சொல்கிறான்”

அவள் ஒன்றும் சொல்லவில்லை

தியகாராஜன் வெளியே சென்றான்

அவளது மௌனம் என்னை வெறுப்பேற்றியது.”காட்டுக்குள் உங்கள் ஆட்களில் எத்தனைபேர் நாளை மிஞ்சுவார்கள் என்று தெரியவில்லை” என்றேன்.

”இது எங்கள் மண் .எங்கள் காடு…” என்றாள் வெறுப்பு கண்களில் மின்ன

”இது என் நாடு, என் மண்” நான் அவளைக் கூர்ந்து நோக்கியபடிச் சொன்னேன் ” இந்தியா”

”புல் ஷிட்!” அவள் சீறினாள்.” இது மணிப்பூர். மணிப்புரிகளின் நாடு. நீங்கள் ஆக்ரமிப்பாளர்கள். ஒருநாள் உங்களை கூண்டோடு அழிப்போம். எங்கள் மண்ணை விடுவிப்போம்”

”எல்லாமே உனக்குக் கற்றுக்கொடுக்கப்பட்ட சொற்கள். யாரோ எங்கோ இவற்றை உருவாக்குகிறார்கள்…” நான் இகழ்ச்சியுடன் சொன்னேன் ” எல்லா மணிப்புரிகளும் இதையே திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள்”

”உன் ஏளனம் எனக்குக் குமட்டுகிறது…”

”ஏளனம்தான்.சாவதற்காக வந்து விழுகிறீர்களே அதைப்பார்த்து… விட்டில்கள்..”

” அமெரிக்காவில் குடியேறிய யாங்கிகள் குறிபழகுவதற்காக லட்சக்கணக்கில் யாக்குகளை சுட்டுக்கொன்றனர். நீங்கள் இந்தியர்கள் எங்களைப்பயன்படுத்துகிறீர்கள். உங்களுக்கு எங்களைப்பற்றி என்ன தெரியும்? சொல்லுங்கள்…”

”எங்களுக்கு ராணுவத்தில் தனி வகுப்புகளே எடுக்கிறார்கள்”

“வகுப்பு…… நான் யார் ?என்ன இனக்குழு? சொல்லுங்கள் பார்க்கலாம்”’

“நீ அனேகமாக குக்கி….”

அவள் ஏளனமாக உதட்டைச் சுழித்தாள்

”நாகா ? இல்லை. இப்பகுதியில் அவர்கள் இல்லை. லுஷாய்ஸ்? ”

”நாகா . குக்கி , மிஜோ, லுஷாய்ஸ் — இவ்வளவுதானே சொல்ல முடியும் உங்களால்? இதெல்லாம் வெளியே இருந்துவந்தவர்கள் போட்ட பொதுப்பெயர்கள். இதெல்லாம் வெறும் அரசியலடையாளங்கள்… நாங்கள் அந்த அடையாலங்கள் அல்ல…. 1956 டிரைப்ஸ் லிஸ்ட், பார்ட் 10 இங்கே முப்பது பழங்குடியினங்களை பட்டியலிட்டிருக்கிறது, தெரியுமா? அனிமோல், சீரு,கா பூய், காச்சா- நாகா, சுக்தே, கொய்ராவ், டாங்கூல், வாய்பேஹி …ஆனால் இன்னும் உங்களால் பெயரிடப்படாத பழங்குடிகள் ஒன்றரை லட்சம் பேர் இருக்கிறோம்…. எங்கள் அடையாளம் பாரம்பரியம் எங்கள் ஆசாபாசங்கள் ஏதாவது எங்களை ஆளும் உங்கள் அரசுக்குத்தெரியுமா? அரை நூற்றாண்டாக இங்கே ரத்தம் ஓடுகிறதே அப்போதாவது ஏன் இத்தனை பூசல்கள் என்று புரிந்துகொள்ள முயன்றீர்களா? கோடிக்கணக்கில் போருக்குச் செலவிடுகிறீர்களே பாதியை எங்களை புரிந்துகொள்ள செலவிடுவீர்களா?” அவள் உணர்ச்சிகளால் ஒரு நிமிடம் பேசாமலிருந்தாள் ”நாங்கள் இங்கே வாழ்வதாவது உங்களுக்குத்தெரியுமா? தெரியாது. நாங்கள் கண்ணுக்குத்தெரியாத உயிரினங்கள்….பூச்சிகள் …..புழுக்கள்.. யெஸ்… வி ஆர் இன்விசிபில் ”

நான் ”நாங்கள் முயற்சி செய்கிறோம்” என்றேன்

“எத்தனை காலமாக? 1949 லேயே நாங்கள் இந்திய யூனியனில் இணைக்கப்பட்டோம். 1972 முதல் இந்தியாவின் மாநிலம் நாங்கள்.

ஆனால் நாற்பதுவருடம் போராடிய பிறகு 1992ல் தான் மணிப்புரி மொழியை மட்டுமாவது தேசியமொழியாக அங்கீகரிக்கவைக்க எங்களால் முடிந்தது.... இன்னும் இருக்கின்றன எண்பத்தெட்டு மொழிகள் இங்கே.... நீங்கள் எங்களைப் புரிந்துகொள்ள இன்னும் நூற்றைம்பது வருடம் ஆகும். நாங்கள் சும்மா இருந்தால் எங்களையும் ஹிந்தி பேச வைப்பீர்கள்...”

”நான் ஹிந்தி பேசுபவன் அல்ல. தமிழன். உன்னைப்போலவே இந்தியாவின் இன்னொரு விளிம்பைச் சேர்ந்தவன் ”

“எல்லாரும் ஒன்றுதான்.... நீங்கள் துப்பாக்கியைத் தூக்கியபடி இங்கெ எங்களைக் கொல்ல வந்தவர்கள்”

“சரி நான் உன்னைக் கேட்கிறேன். புரிந்துகொள்ளவில்லை என்கிறாயே. உண்மையிலேயே புரியவில்லை. ஏன் உங்களுக்குள் இத்தனை சண்டைகள்? குக்கி நேஷனல் அசெம்ப்ளிக்கு முதல் எதிரி குல்மி நேஷனல் யூனியன் என்கிறார்கள் . நாகாக்கள் மிஜோக்களைக் கொல்கிறார்கள். மீய்த்திகள் மற்ற அத்தனைபேரையும் கொல்கிறார்கள்... இதற்கும் நாங்கள்தான் காரணமா?”

“எங்களுக்கும் இன்னும் அதிகாரச் சமநிலை உருவாகவில்லை . உருவாக நீங்கள் விடவில்லை. எங்களுக்கு அதிகாரமே இன்னும் கிடைக்கவில்லை. உங்கள் உளவுத்துறை எங்களுக்குள் சண்டை மூட்டிவிடுகிறது” அவள் சற்று வலு குறைந்த மொழியில் சொன்னாள். ”ஆனால் மணிப்புரிகள் ஒன்றுபடுவார்கள். ஒருங்கிணைந்த மணிப்புர் அமையும்.”

”ஒருங்கிணைந்த மணிப்பூர்? ”இகழ்ச்சியுடன் சிரித்தேன். என் கை

ஓங்குவதை உணர்ந்தேன். ” பர்மாவிலிருந்தும் உங்கள் பங்கை பெறப்போகிறீர்களா? அதற்காகத்தான் பர்மாவிலிருந்து ஆயுதமும் பணமும் பயிற்சியும் பெற்று போராடுகிறீர்கள் இல்லையா? ”

“எங்கள் முதல் எதிரி இந்தியா. முதலில் இங்கே எங்கள் மண் அமையட்டும். எதிரியை பிறகு பார்த்துக் கொள்வோம்” அவள் குரல் திடமாக இருந்தாலும் கண்கள் தாழ்ந்தன.

அது எனக்கு வேகமூட்டியது” நீ படித்தவள்தானே? இந்தமாதிரி கதைகளை நம்ப உனக்கு வெட்கமாக இல்லையா? இது நடக்கிற காரியமா? உங்களை அப்படி விடுவதற்கு பர்மா என்ன முட்டாள்களின் நாடா? யாருக்காக இந்தப்போர்? இத்தனை மரணங்கள்?”

“சுதந்திரத்திற்காக. உன்னைப்போன்ற ஆக்ரமிப்பாளர்களை கொன்று ஒழிப்பதற்காக. உங்கள் ரத்தம்தான் எங்கள் மண்ணுக்கு உரம்” அவளில் தெறித்த அந்த உண்மையான உக்கிரம் என்னை அச்சுறுத்தியது. அவள் உரத்த குரலில் கூவினாள் ”உன்னைப்போன்ற ஒவ்வொரு ஆக்ரமிப்பாளனையும் கொல்வதுவரை நாங்கள் போராடுவோம். எங்கள் சந்ததிகள் போராடும்…”

வெளியே புயல் ஊளையிட்டது. விளக்குகள் அணைந்து அணைந்து எரிந்தன.

மெல்ல என்னை சமாதானம்செய்துகொண்டேன். ”இதோ பார். நீயும் நானும் சாதாரண மனிதர்கள். இந்த அரசியல் ஆட்டத்தின் சூதுகள் எனக்கும் உனக்கும் கண்டிப்பாக புரியாது…. இந்த போர் தொடங்கி முப்பதுவருடம் ஆகிறது. எத்தனை உயிர் போய்விட்டது… இன்னும் எத்தனை பேர் சாகப்போகிறார்கள்.இதுவரை என்ன ஆயிற்று?

இரண்டுதலைமுறையே பாழாகியாயிற்று...இரண்டு தலைமுறை” அவள் கண்களை உற்றுப்பார்த்தேன்”...நீ ஒரு பெண். உன்னைப்போன்ற பெண்கள் எங்கள் ஊரில் மாசத்துக்கு ஒரு சுடிதார் எடுத்து அணிகிறார்கள். வாராவாரம் நெயில் பாலீஷ் மாற்றுகிறார்கள். செல் போனில் ராப்பகலாக பேசுகிறார்கள். ஐஸ்கிரீம் சாப்பிடுகிறார்கள்...’

”புல் ஷிட்”

” உண்மையைச் சொல். உனக்கு காதலிக்க கல்யாணம் செய்துகொள்ள பிள்ளைபெற்று வளர்க்க ஆசையில்லையா? ஒரு குடும்பம் பற்றிய கனவே இல்லையா?”

” டாமிட் . அந்ததுப்பாக்கிமட்டும் இல்லாவிட்டால் இந்நேரம் உன்னை கிழித்துப்போட்டிருப்பேன்....உன்னைப்போன்ற ஆட்களைக் கொல்வதுமட்டும்தான் என்னுடைய சந்தோஷம்....கெட் லாஸ்ட் ...”

நான் சட்டென்று அந்த விபரீத எண்ணத்தை அடைந்தேன். ”நீ பொய் சொல்கிறாய்”என்றேன் ”உன்னிடமிருந்தே பொய் சொல்கிறாய்...” என் துப்பாக்கியை தூர வீசினேன். ”கொல் பார்க்கலாம்”

அவள் துப்பாக்கியை ஒருகணம் பார்த்தாள். என்னை திரும்பிப் பார்த்தாள். சட்டென்று பாய்ந்து என் மார்பில் கத்தியால் குத்தினாள். என் பயிற்சி மட்டும் எனக்கு உதவாவிட்டால் நான் இறந்திருப்பேன்.ஏன் கை இயல்பாக அவளை மடக்கியது.கீழே விழுந்தேன். என் மேல் அவளும் விழுந்தாள்.என் முழங்கையும் விலாவும் கிழிந்து சூடான ரத்தம் பீச்சியது. அவளது கத்தி பிடித்த கையை நான் பற்றிக் கொண்டேன். நாங்கள் புரண்டு புரண்டு போராடினோம். அவளது குத்துகளில் தரையில்

விரிக்கப்பட்ட பிளாஸ்டிக் விரிப்பு கிழிபட்டது. நான் அவளை உதறி எழுந்து  ” தாமஸ்” என்று கூவினேன்

ஜவான் சட்டென்று உள்ளே வந்து சடவென்று சுட்டான். கூடாரத்துணி கிழிபட்டு நீரும் காற்றும் உள்ளே சீறின. அவள் எழுந்து தன் கத்தியுடன் கைதூக்கி நின்றாள். மூச்சிரைப்பில் அவளது சிறிய மார்பகங்கள் அதிர்ந்தன.

என் காயத்தை பற்றியபடி ” போதும்..சுடாதே” என்று ஆணையிட்டேன்.

காற்று சீறியடித்தது. கூடாரம் அதிர்ந்தது. ஜவான்கள் துப்பாக்கியுடன் பாய்ந்துவந்தனர். நான் அதிர்ந்து போயிருந்தேன்.

காலை எட்டரைக்கு மழைவிட்டு ஒளி வந்தது. என் காயங்களை கட்டுபோட்டு டெட்டனஸ் ஊசி போட்டு ஆண்டி பயாட்டிக் சாப்பிட்டிருந்தேன். ஒரு பெக் ரம்மும். பிரமைகள் வழியாக அலைந்தபடி அரைத்தூக்கத்தில் இருந்தேன்.

மாணிக்கம் என் முன் குனிந்து பார்த்து ”மழைவிட்டுவிட்டது”என்றான்

”அண்டனா எப்படி இருக்கிறது ?’என்றபடி எழுந்தேன்.

“சரிசெய்ய மதியம் ஆகும். கீழிருந்தும் சிக்னல் ஏதும் கிடைக்கவில்லை.”

”சரி ”என்றபடி நான் எழுந்தேன்.

“நீங்கள் வேண்டுமென்றால் ஓய்வெடுக்கலாம்…”

“பரவாயில்லை” என்றபடி அவசரமாக யூனி•பாமை அணிந்துகொண்டேன்.

வெளியே களேபரமாகக் கிடந்தது. எங்கும் சருகுகள், உடைந்த பச்சை மரக்கிளைகள். காட்டிலிருந்து அவ்வளவுதூரம் அவை பறந்துவந்திருக்கின்றன. செத்த பறவைகள் இறகு விரித்து கிடந்தன.

மூன்று கூடாரங்கள் சரிந்திருந்தன .அவற்றை கட்டிக் கொண்டிருந்தார்கள்.எனக்கு காலைவணக்கம் செய்தார்கள்.

என்னால் நடக்க முடியவில்லை. என் விலாக்காயம் நன்றாகவே வலித்தது. வலியைக் காட்டிக் கொள்ளமலிருக்க சிரமப்பட்டேன். அண்டனாவை கயிறு கட்டி மீண்டும் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். நான் சட்டென்று விலாவில் கடுமையான வலியை உணர்ந்தேன். உடனே தீவிரமான சினம் எழுந்தது

அவள் இருந்த அறைக்குள் சென்றேன். என் வேகம் எனக்கே வியப்பாக இருந்தது

அவள் என்னைக் கண்டதும் சீறி எழுந்து கத்தியை நீட்டியபடி நின்றாள்.

”யூ பிளடி பிச்”என்று சீறினேன். சரசரவென அவளை நெருங்கினேன்.அவள் கத்தியை வீச அதை ஒருகையால் மணிக்கட்டைப்பற்றி எளிதாக தடுத்து அவளை பற்றி தூணோடு சேர்த்து அழுத்தி அவள் உதடுகளில் அழுத்தமாக முத்தமிட்டேன். அவளது கத்தி விழுந்தது

பிறகு பின்னால் நகர்ந்து குனிந்து அந்தக் கத்தியை எடுத்துக் கொண்டேன்.

” இது என்ன சப் மெஷின் கன்னா? வெறும் பொம்மை… ” என்றேன் ”நீயும் வெறும் பொம்மைதான். பொம்மையை உடைக்க நாங்கள் விரும்புவதில்லை. அதைவைத்து விளையாடுவோம் ,அவ்வளவுதான்.”

அவள் நடுநடுங்கிக் கொண்டிருந்தாள் ”நீ நேற்று என்னை ஏன் தாக்கினாய் என்று பிறகுதான் தெரிந்தது. உன்னிடம் பதில்கள் இல்லை. நான் கேட்ட கேள்விகளில் இருந்த உண்மை உன்னை கோபம்கொள்ளச் செய்கிறது”

“கோ டு ஹெல்! யூ பாஸ்டர்ட்!”

“நல்லது. நீ நான் சொன்னதை ஒப்புக் கொள்கிறாய். இனி உனக்கு தூக்கம் வராது. நீ யோசிப்பாய். குட் டே”

அவளைத் திரும்பிப் பார்க்காமல் நடந்து வெளியே சென்றேன்.

இளவெயில் விரிந்த முற்றத்தில் ஆட்களின் வேலை நடந்து கொண்டிருந்தது. என் அறைக்குத் திரும்பி கட்டிலில் படுத்துக் கொண்டேன். வலித்தது. எழுந்து இன்னொரு ரம் விட்டு குடித்தேன்.

படுத்தபடி அந்தக் கத்தியை திருப்பி திருப்பிப் பார்த்தேன். கூர்மையான கத்திதான். துருவே இல்லை. அதை தூணை நோக்கி வீசினேன். குத்தி நின்று அதிர்ந்தது. அதன் அதிர்வையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஜவான் உள்ளே வந்தான். ”சர்”

எழுந்தேன்

“அவர்களின் ஆள் வருகிறான்”

நான் எழுந்து பெல்ட்டை இறுக்கியபடி வெளியே சென்றேன்.

டவர் மீது நின்ற ஜவான் ”ஒற்றை ஆள்”என்றான்.

”பின்புலங்களை தொடர்ந்து கவனி” என்றேன். ”ஒரு ஆள் அதிகமாகத்தெரிந்தாலும் சுடு”

மணல்மூட்டைகளுக்கு இப்பால் குந்தி அமர்ந்து பார்த்தேன். ஒரே ஒரு வயதான மணிப்பூரிக் கிழவன் கோவேறு கழுதைமீது வந்து கொண்டிருந்தான். கையில் ஒரு வெள்ளைக்கொடி வைத்திருந்தான்.

அவன் அணுகியதும் என்னிடம் அழைத்துவரச்சொல்லிவிட்டு அலுவலக அறைக்குச் சென்றேன். அவள் கட்டிலில் தலை குனிந்து அமர்ந்திருந்தாள். கண்களிலிருந்து கண்ணீர் கொட்டிக் கொண்டிருந்தது

”உன்னைத்தேடி ஆள் வந்தாகிவிட்டது”என்றேன்.

அவள் நிமிரவில்லை

‘நீ  முக்கியமானவள் என்று எனக்குத்தெரியும். உன்னைவைத்து பேரம் பேசுவேன்” என்றேன். ”அதற்கு நீ ஒத்துழைக்காவிட்டால் உனக்கு மோசமான நாட்கள் வரப்போகின்றன....”

நான் அலுவலக அறைக்குப்போய் என் அதிகாரபூர்வ மேஜையில் அமர்ந்து கொண்டேன். வெளியே ஓசை கேட்டது. அவனை இரு ஜவான்கள் இழுத்துவந்தனர். முன்னால் வந்த நாயர் என் மேஜை மீது அவன் கொண்டுவந்த சிறிய பொட்டலத்தை வைத்தான். சௌகான் மற்றும் மூன்று ஜவான்களின் தோள் பட்டைகள். மூன்று நட்சத்திரப்பட்டை ஒன்று. என்சிஓ பட்டைகள் மூன்று.

அவனை அமரும்படிச் சொன்னேன். அவன் அமராமல் ”நான் அவளைப்பார்க்கவேண்டும்” என்றான்.

கையசைவால் அவளைக் கூட்டிவரச்சொன்னேன்.

”நீ என்ன குழு?”

” ஏ.எல்.எ•ப்” என்றான்

”எல்லா இங்க்லீஷ் எழுத்துக்களிலும் இங்கே குழுக்கள் உள்ளன.” என்றேன் நக்கலாக ”என்ன இனக்குழு?”

“அங்கமி”

“முழுப்பெயர் நான் சொல்லவா? அங்கமி லிபரேஷன் •ப்ராண்ட். அங்கமிகளுக்கு தனி நாடு வேண்டும். பாதி நாடு பர்மாவில் மீதி மணிப்பூரில்...”

அவன் என்னை உதாசீனம் செய்தபடி ”அவளை நான் பார்க்கவேண்டும்” என்றான்

நான் நாயரை நோக்கி தலையசைத்தேன்.

நாயரின் பின்னால் அவள் நிமிர்ந்த தலையுடன் வந்தாள். அவளைக் கண்டதும் கிழவனின் கண்களில் ஒருகணம் பணிவு வந்து மறைவதைக் கண்டேன்.

”ம் ”என்றேன் கொண்டுசெல்லும்படி.

நாயர் அவளிடம் ” கம்” என்றான். அவள் திரும்பிச்சென்றாள்.

“அவளை நாங்கள் இருபத்திநான்குமணிநேரத்தில் கொல்வோம்” என்றேன். ”அதற்குள் எங்கள் காப்டனும் மூன்று ஜவான்களும் இங்கே வந்துசேர்ந்தால் அவளை நீங்கள் மீட்கலாம்”

“அவள் ஒரு சாதாரணமான தூதுப்பெண்.... எங்களிடம் இருப்பது ஒரு காப்டன் ”என்றான் கிழவன்

“அவள் யாரென்று எனக்குத்தெரியும்...அவளிடம் கேட்டு தெரிந்துகொண்டோம்....”அவன் கண்களையே பார்த்தேன். ” அவள் யார் என்று தெரியும்”

“அவள் ஒரு விவசாயப்பெண்...” அவன் கண்கள் பழுத்த

இலைபோலிருந்தன.

“அதை எங்கள் ராணுவ உளவுத்துறை முடிவுசெய்யட்டும்…”

அவன் எழுந்தான் ”நீங்கள் சிறிய படை. உங்கள் சிக்னல் சிஸ்டம் வேலைசெய்யவில்லை. அண்டனா உடைந்து கிடக்கிறது. நாங்கள் உங்களைச் சூழ்ந்திருக்கிறோம்…”என்றான்

“எங்களிடம் இவள் இருக்கிறாள்…”

“இவளை நீங்கள் கொன்றால் எவரும் தப்ப முடியாது”

“பரவாயில்லை. பார்ப்போம்”

அவன் பெருமூச்சு விட்டான்.”நான் போய் பேசிப்பார்க்கிறேன். முடிவை இரண்டுநாட்களுக்குள் தெரிவிக்கிறோம்”

“இரண்டுநாள் அவகாசம் தரமுடியாது… உங்களிடமுள்ள எங்கள் காப்டன் காயம்பட்டிருக்கிறார். மதியம் தகவல் தெரிந்தாக வேண்டும். இரவே காப்டன் இங்கே வந்தாகவேண்டும்”

“நான் பேசிவிட்டுவர ஒருநாளாவது ஆகும்”

“இதோபார் எங்கள் சிக்னல் சிஸ்டம் சரியாவதற்குள் நீ வந்துவிடுவாய்.

நான் செய்திசொல்லி ஆட்களை வராழைப்பதை நீங்கள் விரும்பமாட்டீர்கள். பிறகு எதற்கு இந்த வித்தை எல்லாம்?”

அவன் ஒருகணம் பேசாமல் நின்றான் .பிறகு ”சரி…”என்றான்

அவன் போவதை நானே பின் தொடர்ந்து சென்று நோக்கி நின்றேன்.

பிறகு என் அறைக்குச் சென்றேன். நாயரை அங்கு வரவழைத்தேன்.

“நாயர் அவர்கள் நம்மைச் சூழ்ந்திருப்பார்களா என்ன?”

“கண்டிப்பாக இல்லை. அவர்கள் அதிகம்பேர் இல்லை. எங்கிருந்தோ ஆட்கள் வந்துசேரக் காத்திருக்கிறார்கள்.அவன் இரண்டு நாள் அவகாசம் கேட்டது அதற்காகத்தான்.”

நானும் அதை ஊகித்திருந்தேன்.

”இன்று மதியம் அவன் என்ன சேதி கொண்டுவருவான்?”

“அனேகமாக இன்று அவன் நம்மை அலைக்கழித்து நேரம் சம்பாதிக்க முயல்வான். நாளை விடிகாலையில் நம்மைச் சூழ்ந்துகொள்வார்கள். அதன்பின்னர்தான் உண்மையான பேரம் ஆரம்பமாகும்.”

“ஆமாம்”என்றேன். ”அதற்குள் இன்றிரவே நீயும் நான்குபேரும் காட்டுக்குள் போய் முடிந்தவரை கண்ணிவெடிகளை புதைத்து வந்தால் நல்லது”

“போரிடப் போகிறோமா?”

“தெரியவில்லை. எந்த தொடர்பும் இல்லை. ஏதாவது செய்திவரும்வரை தாக்குப்பிடிக்கவேண்டுமே”

நாயர் பெருமூச்செறிந்தான். ”இந்தப்பெண் ஒரு தூண்டிலில் வைக்கப்பட்ட இரையாகக் கூட இருக்கலாம்.யார் கண்டது?”

மதியம் அண்டனா சரிசெய்யப்பட்டது. மாணிக்கம் அலைவரிசைகளை மாற்றி மாற்றி துழாவினான். அதற்கேற்ப அண்டனாவை மாற்றி மாற்றி வைத்தார்கள். திரை அலையடித்தது. இரைச்சல் மட்டுமே எஞ்சியது.

மாணிக்கம் பின்னால் சரிந்தபடி ”அங்கே இன்னும் சரியாகவில்லை. ஷிட். நாடா இது? காடு, மலை, கடல் ….இருப்பது இதேபோன்ற துருப்பிடித்த பாடாவதி கருவிகள்…ஷிட்”ஆங்கிலப் படங்களைப் பார்த்துக் கற்றுக்கொண்ட அந்தச் சொல் அவன் வாயில் உதிர்ந்துகொண்டே இருக்கிறது. அவ்வாறான உதிரி ஆங்கிலம் மூலம் தங்களை புரஃபஷனல்களாக எண்ணிக்கொள்வது தரைபப்டையில் ஒரு இனிய பிரமை.

நான் ”முயற்சி செய்….மனம் தளராமல் முயற்சிசெய்” என்றேன்.

அப்போது மீண்டும் செய்திவந்தது.அதே கிழவன். அவனைக் கூட்டிவந்து என் முன் நிறுத்தினார்கள்

“சொல்லு” என்றேன்

“அவளை நீங்கள் தாரளமாகக் கொல்லலாம்.”என்றான். ”காப்டனை விட முடியாது. வேண்டுமென்றால் மூன்று ஜவான்களை மட்டும் விடுவார்கள்”

“இதுதான் செய்தியா?”

“இப்படித்தான் எனக்குச் சொல்லப்பட்டது”

” சரி ,காப்டனை விடவேண்டுமென்றால் என்ன செய்யவேண்டும்?”

“ஆயுதங்கள்தான் அவருக்கு பிணை. நீங்கள் உங்கள் ஆயுதங்களையும் வெடிப்பொருட்களையும் அப்படியே விட்டுவிட்டு பின்னகர்ந்து கீழிறங்கி படகுத்துறையை அடைய அனுமதிப்போம். காப்டனையும் திருப்பி அளிப்போம்”

“ஆயுதங்களை நாங்கள் விடமுடியாது”

“காப்டனை நாங்கள் கொல்லவேண்டியிருக்கும். உங்களையும் தாக்குவோம். பாதிப்பேர் கண்டிப்பாக சாவீர்கள். உங்களுக்கு வேறுவழி இல்லை”

” இல்லை ,அது முடியாது. காப்டனுக்குப் பதில் இந்தப்பெண். அவ்வளவுதான். போய்ச் சொல்லு ”

“சரி” என்றான் கிழவன்

“நாங்கள் நாளை மதியம் வரை காப்போம். மதியம் ஒருமணிக்கு இவளைக் கொல்வோம். இவள் முக்கியமானவள் என்று எங்களுக்கு உறுதியாகவே தெரியும். உங்கள் தலைவர்கள் இவளை இழக்க விரும்ப மாட்டார்கள்” நான் திடமாகச் சொன்னேன்”இதுதான் செய்தி”

”சரி.நான் பேசிப்பார்க்கிறேன்”என்றான் கிழவன்

அவனை அனுப்பிவைத்தபின் நான் ஆயுதங்களை சரி பார்த்தேன். மணல் மூட்டைகளுக்குப் பின் இயந்திரத்துப்பாக்கிகளை அமைத்தேன்.

இரவு நெருங்கியது. காட்டின் ஓலம் மாறுபட்டது. செர்ச் விளக்குகள் எரியத் தொடங்கின. முகாம் விழிப்புடன் இருந்தது.

நாயர் சீருடையில் எட்டு ஜவான்களுடன் வந்தான். அவர்கள் அனைவரும் கண்ணிவெடிகளை சுமந்திருந்தார்கள். வாக்கிடாக்கி வைத்திருந்தார்கள். நான் அவர்களை பரிசோதித்தேன்.

”செர்ச் லைட் அரைமணிநேரம் வடக்குப்பக்கமாக அடிக்காமல் இருக்கச் சொல்லியிருக்கிறோம். இருட்டிலேயே போய்விடுங்கள். காட்டில் வழி

தெரியும் இடத்தில் கண்ணிவெடிகளை வைக்க வேண்டாம். முதல் குண்டு வெடித்தபிறகு அவர்கள் வழிகளில் நடக்க மாட்டார்கள். புதர்களை ஒட்டி ஒரு கைதூரத்தில் புதையுங்கள். புதர்களைப் பிடிக்காமல் இருட்டில் நடக்க முடியாது”என்றேன்

” எஸ் சார்”என்றான் நாயர்.

அவர்கள் கிளம்பிய பின் நான் மீண்டும் ஒரு ரம் ஊற்றி குடித்தேன். களைப்புடன் நாற்காலியில் அமர்ந்தே கண்மூடினேன்.

ஆடர்லி சாப்பாடு கொண்டுவந்தான். சப்பாத்தி உலர்ந்த இறைச்சிக்கறி.

சாப்பிடும் முன் அவனிடம்” அந்தப்பெண் சாப்பிட்டாளா?”என்றேன்

” காலை முதல் ஒன்றும் சாப்பிடவில்லை”

”ஏன்?”

“அழுகிறாள்”

நான் பேசாமல் இருந்தேன். சப்ராசி போனபின் சப்பாத்தியை கிழித்து வாயில் வைத்தேன். சாப்பிட முடியவில்லை.

பின்பு எழுந்து அவள் அறைக்குச்சென்றேன். அவள் அப்படியே கட்டிலில் அமர்ந்திருந்தாள். என்னைக்கண்டதும் ஒருமுறை ஏறிட்டு நோக்கிவிட்டு தலைகுனிந்தாள். அழுது வீங்கிய முகம். உப்பிய கன்னங்கள்.

“ஏன் சாப்பிடவில்லை?” என் குரல் தணிந்திருந்தது.

அவள் பதிலிறுக்கவில்லை.

”விளையாடுகிறாயா? பட்டினி கிடந்து சாக நினைப்பா? நீ செத்தால் எங்களுக்கு ஒன்றுமில்லை...இது போர். போரில் யார் செத்தாலும் ஒன்றுதான்... ”சாப்பட்டை எடுத்து அவள் முன்
வைத்து ”சாப்பிடு”என்றேன்

அவள் அசையவில்லை

“எப்படியும் உன்னை நாளை மதியம் கொல்லத்தான் போகிறோம்... சாப்பிட்டுவிட்டு செத்துப்போ...”

அவள் இமைகூட அசையவில்லை

“சாப்பிடு.கிறாய இல்லையா? ..யூ” நான் கையை ஓங்கினேன். அவள் என்னை ஏறிட்டுப்பார்த்தாள்.என் கை அந்தரத்தில் நின்றது. நான் மெல்ல தணிந்தேன் .”என்ன பிரச்சினை உனக்கு ?”

அவள் உதடுகளை கடித்துக் கொண்டாள்.

“உன் கத்தி வேண்டுமா?”

அதை அவளருகே வைத்தேன். ”இதோ…. நீ கோபத்தில் அபத்தமாக ஏதாவது செய்துகொள்வாய் என்றுதான்…”

அவள் உதடுகளை அழுத்திக் கொண்டாள். ஒரு துளி கண்ணீர் கன்னங்களில் வழிந்தது

நான் இளகினேன்” ஸாரி…நான் செய்தது அசிங்கம். உண்மையாகவே வருத்தமாக இருக்கிறது. மன்னித்துவிடு…”

அவள் என்னை ஏறிட்டு பார்த்தாள்

“ஸாரி… ரொம்ப வலித்தது… அதுதான்… ” என்னால் அவளை ஏறிட்டுப்பார்க்க முடியவில்லை. ” ஸாரி…. ஆண் என்கிற திமிரில் அடிவிழுந்தபோதுதான் இன்னும் வலித்த்து… ப்ளீஸ்…அது ஒரு கீழ்த்தரமான செயல்தான். ஸாரி”

“நீ ஒரு மிருகம். இந்திய நாய்…. நக்குகிற நாய் ” அவள் சட்டென்று கிரீச்சிட்ட குரலில் சீறி ஓங்கித் துப்பினாள்.

நான் தலைகுனிந்து திரும்பினேன். வெளியே வந்ததும் பூட்ஸுகளால் தரையை உதைத்தேன். என் அறைக்குப் போய் சாப்பாடு முன் அமர்ந்தேன். சட்டென்று தலையை கையால் அறைந்து

கொண்டேன்.சாப்பிடாமல் எழுந்து போய் கட்டிலில் படுத்துக் கொண்டேன்.

௬

இரவில் முகாமில் எவரும் தூங்கவில்லை. நான் நள்ளிரவில் எழுந்து சாப்பிட்டுவிட்டு  சிக்னல் அறைக்குப்போய் சிகரெட்டுகளாக பிடித்தபடி ஒரு சொல் கூடப் பேசாமல் காத்திருந்தேன். மானிட்டர் அலைகளை எழுப்பியபடி இரைந்துகொண்டிருந்தது. மாணிக்கம் ” ப்ச” என்றான்

“என்ன?”

“நேராக இம்பால் சி.எச்.க்யூவுக்கே முயற்சி செய்கிறேன். ”என்றான்

”அத்தனை தூரமா?”என்றேன்

“இங்கே இந்த பாஸ்டர்டுகள் ஆப் செய்து வைத்துவிட்டு காலிடுக்கில் கைகளைப் பொத்திக்கொண்டு தூங்குகிறார்கள். பார்ப்போம். மேகங்கள் சாதகமாக இருந்தால் ஒருசில சொற்களை அனுப்பிவிட முடியும்....” அவன் மேலும்மேலும் பட்டன்களைத் தட்டுவதை பார்த்தபடி இருந்தேன்.

“நாயர் என்ன சொல்கிறான்?” என்றேன்

“புதைக்கிறார்கள்... அங்கே ஒரே சகதி... பன்றிகள்”

முகாம்வட்டார ரேடியோ ரிசிவர் முனகியது. ”நாயர்தான்” என்றான் சண்முகம்

“கொடு” என்றேன்

“ஹலோ  காட் •ப்ளை ... லெப்டினெண்ட் காப்டன் பேசுகிறேன்... ஓவர்”

“நாயர்.. ஓவர்”

“என்ன நிலைமை”

“பன்றிகள்”என்றான் சுருக்கமாக.

“கண்ணிவெடிகளை பன்றிகள் வெடிக்கவைத்துவிடக்கூடாது...”’

” இந்த ஆசாமிகள் அதிக எடையில்லை”

“பன்றிகள் எடையுள்ளவை”

“ஆமாம்.ஆனால் அவற்றுக்கு நான்கு கால்”

“வெல்...இது இரண்டுகால்பன்றிகளுக்கு மட்டும்”

நாயர் ” கண்டிப்பாக”என்றான் சிரித்தபடி.

நான் எழுந்தேன். ”ஒரு முறை ரவுண்ட் அடித்துவிட்டு வருகிறேன். பையன்கள் தூங்கிவிடக்கூடாதல்லவா?”

“எப்போது தாக்குதலை எதிர்பார்க்கிறீர்கள்?”

“அனேகமாக அதிகாலையில்....” என்றேன். சிகரெட் பற்றவைத்தபடி நடந்தேன்.

காவலர்களின் வணக்கங்களை வாங்கியபடி நடந்தேன்.டவர் மீது சிகரெட் புள்ளி தெரிந்தது

“டவர் 2 ”என்றேன்

“சார்”

“டவர் மீது சிகரெட்  நெருப்பு தெரிகிறது. பைனாகுலரில் நன்றாக தெரியும்... ”

“சாரி சார்’

“அணைக்கவேண்டாம். மறைத்துக்கொள்”

“சார்”

“யாரது ? சிராஜ்? ”

“எஸ் சார்”

“விஷ் யூ” என்றேன்.

என் கால்கள் அவள் அறைப்பக்கமாகவே கூட்டிச்சென்றன. உள்ளே நுழைந்தேன். அவள் கட்டிலில் படுத்துக்கிடந்தாள். கத்தி நான் வைத்த இடத்திலேயே இருந்தது.

என்னைக் கண்டதும் கண்களைத் திறந்தாள்.ஆனால் எழவில்லை.

கத்தியை எடுத்தேன் ” உனக்கு கத்தி வேண்டாமா?”என்றேன்

“வேண்டாம்”

“ஏன்?”

“அதனால் பிரயோசனமில்லை”

”ஆனால் கத்தி இருக்கும்போதுதான் நீ கூர்மையாக இருக்கிறாய்…” கத்தியை அவளருகே வைத்தேன். ” இப்போது நனைந்த பூனை

போலிருக்கிறாய்”

நான் திரும்பி வாசலைநோக்கி நடக்கும்போது அவள் ” ஒரு நிமிஷம் காப்டன்  ” என்றாள்

“லெ•ப்டினெட்ண்ட்”’

“ஓகே. ஸம் ஷிட்” என்றாள் ”நீ என்ன நினைத்திருக்கிறாய்? நீ ஒரு முத்தம் கொடுத்ததனால் நான் உன்னை உள்ளூர காதலிக்க ஆரம்பித்திருப்பேன் என்றா?”

நான் அயர்ந்து போனேன். சட்டென்று கோபத்துடன் திரும்பி ”யூ…”என்றேன்

” நீ ஒரு இந்திய பாஸ்டர்ட்… நான் ஒரு நாயை காதலித்தாலும் உன்னைப்போன்ற ஒரு கறுப்புக் குரங்கைக் காதலிக்க மாட்டேன். புரிகிறதா?” அவளது முகத்திலிருந்த வெறுப்பு என்னை பதறச்செய்தது.

“வாயை மூடு” என்றேன் நரம்புகள் புடைக்க .

“ஆகவே நீ அடிக்கடி இந்தமாதிரி ரொமாண்டிக்காக நடந்து இங்கே வர வேண்டிய அவசியம் இல்லை. பீட் இட்”

நான் கண்களில் கண்ணீர் வரும் வரைக் கூசி நின்றேன். பிறகு சரசரவென்று இறங்கி வெளியே நடந்தேன்.  முகாம் படிகளில் நின்றபடி

இருட்டில் தெரிந்த மலைகளை நோக்கிக் கொண்டிருந்தேன். புகைபிடித்தேன். சுற்றிசுற்றி நடந்து களைத்தேன். அதே சொற்கள் ஓயாது காதில் விழுந்தன. கறுப்புக்குரங்கு… பீட் இட் .கறுப்புக்குரங்கு… பீட் இட் .

சிகரெட் நுனியை என் கையில் வைத்து அழுத்தினேன். வலி நெற்றி நரம்புகளை துடிக்கசெய்தது. வலியை அகம் உணர்ந்தது, ஆனால் அது எண்ணக்களை மீட்கவில்லை. அது வேறு எங்கோ சென்றது.

நேராக என் அறைக்குச்சென்று மீண்டும் ரம் குடித்தேன். புதிய சிகரெட் பாக்கெட் எடுத்துக் கொண்டேன்.

சிக்னல் அறையில் இருந்து மாணிக்கம் என்னை அழைத்தான். ”லெப்டினெண்ட் மேஜர்…. லைனிலே நாயர் . அவசரச்செய்தி”

நான் சிக்னல் அறைக்கு ஓடினேன் .நாயர் தொடர்பில் இருந்தான். ”காட் •ப்ளை . காப்டன் ஹியர்.”

“நாயர். ஓவர்” என்றது குரல் ” சார் நாங்கள் இங்கே பிணங்களைப் பார்க்கிறோம்.. நம்முடைய ஆட்கள். நான்கு உடல்கள் ”

“யார்?”என்றேன் என் மூச்சு அடைபட்டது.

”காப்டன் சௌகான். அவரது தலை இல்லை.”

“மை காட்! தலை?”

“வெட்டி எடுக்கப்பட்டிருக்கிறது. நான்குபேருக்கும் தலை இல்லை. ”

நான் நாற்காலியில் அப்படியே பின்னால் சரிந்தேன்

“லெஃப்டினென்ட்”

“எஸ்”

“இவர்கள் கொல்லப்பட்டு ஒருநாள் தாண்டியிருக்கலாம். பிணம்  அழுக ஆரம்பித்துவிட்டது”

“ஓக்கே” என் நிதானத்தை மீட்டிருந்தேன்.

“பிடிபட்ட உடனே இவர்களைக் கொன்றிருக்கிறார்கள். ஆதாரத்துக்கு தலைகளை மட்டும் கொண்டுசென்றிருக்கிறார்கள்....”

”ஓக்கே. உடனே திரும்பி வந்துவிடுங்கள்..உடனே..சீக்கிரம்”

நான் பெருமூச்சுடன் சாய்ந்து ஒரு கணம் அமர்ந்தேன்.

“ஏன் அவர்கள் பிணைக்கைதிகளை உடனே கொல்ல வேண்டும்?” என்றான் மாணிக்கம்

“அவர்கள் அதிகம் பேர் இருந்திருக்க மாட்டார்கள். இவர்களைத் தூக்கிச்செல்ல முடியாமல் கொன்றிருப்பார்கள்.”

“பாஸ்டர்ட்ஸ்… கொன்றுவிட்டு வந்து உயிருடன் வைத்திருப்பது போல பேரம்பேசுகிறார்கள்”

சட்டென்று என் அடிவயிற்றிலிருந்து ஆவேசம் எழுந்தது. துப்பாக்கியை உருவியபடி எழுந்தேன்.

மாணிக்கம் என்னைப்பிடித்தான் ”சார் …ப்ளீஸ்”

அவனை உதறித்தள்ளிவிட்டு இருளில் இறங்கி ஓடினேன். அவளது கூடாரத்தில் ஆவேசமாக நுழைந்தேன். வாசலில் நின்ற ஜவான் என்னை வியப்புடன் நோக்கினான்.

உள்ளே அவள் என் வேகத்தைக் கண்டதும் பாய்ந்து எழுந்தாள். நான் என் பெரெட்டாவை நீட்டினேன் அதன் லாக் கிளிக் என்று திறந்தது. மூச்சிரைத்தேன். கண்களை மூடியபடி சடசடவென்று சுட்டேன்.

கூடாரத்துணி கிழிபட குண்டுகள் சென்றிருந்தன. அவள் சுருண்டு அப்படியே அமர்ந்திருந்தாள். விழித்த கண்கள். நடுங்கும் கைகளால் முகம்பொத்தியிருந்தாள்.

நான் மூச்சிரைத்தபடி வெளியே வந்தேன். சுப்புக்கண் தியாகராஜன் ஸ்ரீகண்டன் என முகங்கள் என்னை நோக்கின.

தியாகராஜன் “காப்டன்!” என்றான் பீதியுடன்

“சுடவில்லை. என்னால் முடியவில்லை. ”என்றேன் தளர்வுடன். துப்பாக்கியை ஓங்கி கீழே வீசினேன். லான்ஸ் நாயக் ஸ்ரீகண்டன் சற்று முகம் தெளிவது தெரிந்தது. பிறரும் இறுக்கம் தளர்ந்தனர்.

நான் நேராக சிக்னல் அறைக்குச்சென்று அமர்ந்துகொண்டேன். ஸ்ரீகண்டன் வந்தான் ”அவள் அரண்டு போய்விட்டாள். பேச்சே இல்லை” என்றான்

நான் தலையசைத்தேன்.

ரிசிவர் உறுமியது . ”எஸ் லெஃப்டினென்ட் ஹியர் ஓவர் ”

“லெஃப்டினென்ட், நாங்கள் வந்துகொண்டிருக்கிறோம். அவர்கள் எங்களுக்குப் பின்னால் மிக அருகே வந்துகொண்டிருக்கிறார்கள்…”

“சீக்கிரம் வந்துவிடுங்கள்” என்றேன். ரிசீவரை பொத்தியபடி ” ஆபரேஷன் ஆன்” என்று திடமான மெல்லிய குரலில் ஆணையிட்டேன். ரிசிவரில் ”நாயர்!” என்றேன்

“அவர்களை பார்க்க முடிகிறது. நிறையபேர். நிறைய ஆயுதங்கள்!”‘

வெளியே அலாரங்கள் அடித்தன. ஆட்கள் ஓடும் உரக்கப்பேசும் ஒலிகள். பரபரப்பு.

“லெஃப்டினென்ட், அவளைக் கொன்றுவிடலாம். இந்த பாஸ்டர்ட்ஸ் அவளை கொண்டு போக நாம் விடக்கூடாது” நாயர் சொன்னான்

“எஸ்”

“கொல்ல வேண்டியதுதான். உடனடியாக” நாயர் குரலில் வெறுப்பும் கோபமும் இருந்தன.

“நீ வந்துசேர்”

“பிள்ளைவாள் இதில கருணைக்கே இடமில்ல. அவ ஒரு நஞ்சு .நம்மள கூண்டோட ஒழிக்க வந்தவ. கில் ஹெர்”

“யூ கம் ஹியர் மான்”

“அவங்க கண்ணிவெடிகள் கொஞ்சநேரம் தடுக்கும்...அதுக்குள்ள வந்திடறேன்...சான்ஸ் இருக்கு”

”வா . ஓவர்” துண்டித்தேன்.

வெளியே மணல்மூட்டைகளுக்கு அடியில் எந்திரத்துப்பாக்கிகள் அருகே ஆட்கள் அமர்ந்தார்கள். குண்டுகளை தூக்கி கொண்டுபோய் குவித்தார்கள். விசில் ஒலியும் கட்டளைகளுமாக தியாகராஜனும் ஸ்ரீகண்டனும் ஓடினார்கள்.

“ஸ்ரீ” என்றேன்

“ஏஸ் சார்”

“சத்தம் அதிகம் கேட்கக் கூடாது. நாம் தூங்குவதுபோல இருக்கவேண்டும்”

“எஸ் சார்”

”இந்தப்பெண்ணுக்கு இன்னும் மூன்று பேரை காவல் போடு”

“எஸ் சார்”

என் கை ·போன் ஒலித்தது. நாயர்

” பிள்ளைவாள், அவங்க எங்கள பாத்தாச்சு.... ”

காட்டில் மறுகணம் ஏகே47 ஒலிகள் புறாச்சிறகுகள் அடித்துக் கொள்வதுபோல எழுந்தன. காட்டுப் பறவைகள் கலையும் ஒலி. எதிரொலிகள். வானத்தில் மெல்லிய ஒளி அதிர்ந்தது. கண்ணிவெடி வெடிக்கும் குப் குப் வெளிச்சம் காட்டுமரங்களின் இலையடிப்பகுதிகளை காட்டி அணைத்தது. மெல்லிய அலறல்கள் சில.

தொடர்ச்சியான இடியொலி போல குண்டுகள். வெடியோசைகள்.

மணல் மூட்டைகளுக்குப் பின்னால் அமர்ந்திருந்த ஜவான் ஒரு சிகரெட்டைப் பற்றவைத்தான். மெல்ல முகாம் முழுக்க சிகரெட்டுகள் ஒளிப்புள்ளிகளாகத் தெரிந்தன.

அரை மணிநேரம் குண்டுகள் ஒலித்தன. பின் அமைதி. என்னருகே நின்ற தியாகராஜன் என்னிடம் “காப்டன்... என்ன ஆச்சு ? நாயர்.. ?”

“இது போர்” என்றேன். அவன் முகம் இருளில் தெரியவில்லை

அமைதி நீண்டது. அமைதியாக காத்திருந்தோம். நான் நகம் கடிக்க கையை வாயருகே கொண்டுசென்று பின் தவிர்த்தேன். காற்று தொட்டபோதுதான் அந்தக்குளிரிலும் மெல்லிய வியர்வை உடலில் படர்ந்திருப்பதை உணர முடிந்தது.

சீறியபடி ஒரு கிரனைட் இருளில் வாணம் போல ஒளிசிதற தலைக்குமேல் சென்று விழுந்து வெடித்தது. வெடிபொருளின் குமட்டும் வாசனை. என் பதற்றம் விலகி உடல் முழுக்க ஒரு தினவும் வேகமும்

ஏறின. போர். இதுவரை இத்தனை நேரான போரைப் பார்த்தது இல்லை. எத்தனை பயிற்சிகள். போலிச்சண்டைகள். இது உண்மையான போர். இங்கே சுட்டதும் சிரித்தபடி எழுந்து ”நீ அவுட்”என்று கூவ முடியாது. இது மரண விளையாட்டு. மரணம். மரணம்

மரணம்.எப்படி இருக்கும் அது? இல்லாமலாதல். எதுவுமே மிஞ்சாமலாதல். உடல், நினைவுகள், எண்ணங்கள். அம்மா அப்பா இல்லை. நண்பர்கள் இல்லை. நெல்லைத் தெருக்கள் இல்லை. கார்த்திகை சக்கரவர்த்தி திரையரங்குகள் இல்லை… சுசீலாவின் தித்திக்கும் குரல்—.

ஏன் மரணத்தை இப்போது நினைக்கிறேன்? நான் கோழையா என்ன?ஆனால் என் மனதில் அப்போது அச்சமில்லை. ஒரு வித மரப்பு. சிந்தனைகளில் ஒரு நிதானம். மந்தம். இதோ அத்தனைபேர் நினைவிலும் ஓடுவது மரணம் அல்லாது என்ன?

தியாகராஜன் பைனாக்குலரில் பார்த்தபடி ” அது ஒரு எம் 203ஏ1 கிரனேட் லாஞ்சர் . பெரிய படை வந்திருக்கிறது” என்றான். ” ஒரு எம்கெ 19-3 40 எம் எம் கிரெனெட் மெஷின் கன்னை சிறு வண்டியில் வைத்து தள்ளிக்கொண்டு வருகிறார்கள்….”

”அலெர்ட் •பஸ்ட் லெவல் !”என்றேன்

மணல் மூட்டைகளை ஒட்டி இருந்த எம் 249 ஸ்க்வாட் ஒன்று இலேசாக அசைந்த ஒலி மட்டும் இருளில் கேட்டது. நான் திரும்பி அதைப்பார்த்தேன். எ•ப் என் மேனு•பேக்சரிங் என்ற எழுத்துக்களை உலோக ஒளியாகப் பார்த்தேன்.

இரண்டாவது கிரெனைட் மிக முன்னாலேயே விழுந்து வெடித்த ஒளியில் முகாமின் அத்தனைபேரும் பதுங்கியிருப்பது தெரிந்தது.

நான் அல்ட்ரா ரெட் பைனாகுலரால் பார்த்தவாறிந்தேன். டவர் மீதிருந்த சிராஜ் சட்டென்று " ராஜர்.. மென் கமிங் ஓவர்"என்றான்

“செக் ரேஞ்ச் ஓவர் ”

“ரேஞ்ச் ஆல்ரைட் ஓவர்”

”செக் ஹிம்  ஓவர்”

”அவன் கையில் வெள்ளை கொடி வைத்து ஆட்டுகிறான்”

நான் தலையசைத்தேன். ஆமாம், தூது. சூழ்ந்து கொண்டு எங்களையே பணயக்கைதியாக்கப் போகிறார்கள்.

சில நிமிடங்களில் அதே கிழவன் வாசலுக்கு வந்தான். கதவை சற்றே திறந்து தியாகராஜன் சென்று கிழவனைக் கூட்டிவந்தான்.

”நீயா?” என்றேன்

“செய்தி…எங்கள் காப்டன் பேச விரும்புகிறார்.” அவன் ஒரு ஸ்பீக்கரை நீட்டினான்.

நான் அதை வாங்கி ஆன் செய்து காதில் வைத்தேன். ” நான் கமாண்டர் பேசுகிறேன்”

“நீ என்ன பதவி?”என்றது கிழக்குரல்

”லெப்டினெண்ட், பொறுப்பு  காப்டன்”

“கவனி. உங்களுக்கு எந்த வாய்ப்பும் இல்லை. நீங்கள் அங்கே வெறும் நாற்பத்தேழுபேர். நான்கு கிரானேட் லாஞ்சர். இரண்டு சப் மெஷின் கன். கொஞ்சம் ரைபிள்கள். ஓட்டை கார்பைன்கள் சில… நாங்கள் கிட்டத்தட்ட நாநூறு பேர் இருக்கிறோம்…”

“சரி, நான் பாதியை கணக்கு வைக்கிறேன்”

“உன் விருப்பம். அவளை உடனடியாக எங்கள் ஆளிடம் அனுப்பு. ஆயுதங்களை அப்படியே விட்டுவிட்டு பின்வாங்கு. உங்கள் உயிர் பிழைக்கும்..”

”நீங்கள் யார் . முதலில் அதைச் சொல்லுங்கள்”

” கமாண்டர் , செகண்ட் கம்பெனி , ஏ.எல்.எ•ப்”

“கமாண்டர் ஏ.எல்.எ•ப் , ஸாரி,  நாங்கள் இங்கே உயிர்பிழைக்க வரவில்லை. போரிட வந்திருக்கிறோம்”

“இதோபார் நீ விளையாடுகிறாய். உனக்கு அனுபவம் போதாது…”’

“பரவாயில்லை கமாண்டர். கற்றுக் கொள்கிறேன். ”

“அவளுக்கு சிறு தீங்கு நடந்தாலும்கூட உங்கள் தலை ஒன்றுகூட மிஞ்சாது”

“நீங்கள் ஏற்கனவே நான்கு தலைகளை வெட்டிவிட்டீர்கள் கமாண்டர்”

மறுமுனையில் அமைதி

பிறகு நிதானமான குரல் ”அவளை என்ன செய்தீர்கள்?”

“கொன்றுவிட்டோம். உடனடியாக”

கிளிக் என்று ரேடியோ அணைந்தது

நான்கிழவனைப் பார்த்தேன். அவன் முகத்தில்  எந்த அசைவும் இல்லை.

”தியாகு.”

“எஸ் சார்’

“டேக் கேர் ஆ•ப் ஹிம்.”

தியாகராஜன் இழுத்த போது அவன் உயிரின் இயல்பால் சற்று திமிறினான். மறுகணமே தளர்ந்த கால்களுடன் சென்றான். அப்பால் குண்டு வெடிக்கும் ஒலி கேட்டது.

அப்பால் காட்டில் அவ்வொலி கேட்டிருக்கும். சடசடவென கிரனைட்டுகள் கிளம்பி வந்துவிழுந்து வெடித்தன

”ராஜர். •பைன் பாயின்ட். குளோஸிங் சார். ஒவர்” என்றான் சிராஜ்.

“ஷ¥ட்” என்றேன் சுருக்கமாக.

எங்கள் எம்கெ 19-3 40 எம் எம் கிரெனெட் லாஞ்சர்கள் திம்தித்திம் என்று அதிர ஆரம்பித்தன.  முதல் டவரிலிருந்த இயந்திரத்துப்பாக்கியின் சிதறும் ஒளியில் நான் சிராஜை பார்த்தேன்.  கையில் சிகரெட் இருந்தது.

வெளியே இருந்து குண்டுகள் சரம் சரமாக வந்து உள்ளே விழுந்து வெடித்தன. புகையும் ஒளியும் சூழ்ந்த சூழலில் நான் குனிந்து ஓடி சிக்னல் அறையை அடைந்தேன். மாணிக்கம் சண்முகம் இருவரும் சிக்னலில் இருந்தார்கள்.

மாணிக்கம் ”சார், இம்பால் சிக்னல் கிடைத்தது. அவர்கள் பேசுவது கேட்கவில்லை. செய்தியையும் அவளது புகைப்படத்தையும் அடையாளங்களையும் அனுப்பிவிட்டேன் ”என்றான்

நான் அதை கவனிக்கவில்லை ”இனி அதனால் அதிக பலன் இல்லை ”என்றேன் ” இங்கே இரண்டுபேர் போதும் மீதி சிக்னலர்ஸ் களத்துக்குப்போங்கள்”என்று ஆணையிட்டேன் ” சப்ராசிகளும் டபேதார்களும் குண்டுகள் தூக்கட்டும். யாருக்கும் விலக்கு இல்லை” சிக்னல்கள் அலைபாய்ந்தன.

வயர் லெஸ் ரேடியோவில் பொதுக்கட்டளையிட்டேன் . ”இடைவெளியே விடாது சுடுங்கள். கார்ப்பெட் த •பீல்ட்”

மீண்டும் ஓடி மணல் மூட்டைகளுக்கு அடியில் பதுங்கி களத்தைப் பார்த்தேன். படுத்தபடி நிழல்கள் போல அவர்கள் தொடர்ந்து முன்னேறுவது தெரிந்தது. கடுமையான உயிர்ச்சேதம் இருக்கும். ஆனால் அவர்கள் வெறிகொண்டவர்கள். குண்டுகளின் ஒளியில் அவர்களை ஒருகண கனவுத்தோற்றமாக கண்டேன். கையில் ரை•பிள்களுடன் தவழ்ந்து வந்தனர். முதலைகள் போல. ஆலங்கட்டி மழை போல குண்டுகள் மணல் மூட்டைகளையும் கூடாரத்துணிகளையும் தாக்கின. காற்றில் சிய் சிய் சிய் என்று பறந்தன. என்னருகே நின்ற ஜவான் சரிந்தான். டவரில் இருந்த கிரனைட் லாஞ்சர் அமைதியானது.

” டவர் டூ டெட் . ரிப்ளேஸ் . ஓவர்” என்று ரேடியோவில் ஆணையிட்டேன்.

இன்னொருவன் டவரில் ஏறினான். அவனும் குண்டடிபட்டு விழுந்தான்.

திடீரென்று பின்பக்கமும் குண்டுகள் வெடித்தன .

தியாகராஜன் “காப்டன்! பின்பக்கமும் வருகிறார்கள்”

” கவர் பேக்ஸைட். கார்ப்பெட் இட்” என்று ஆணையிட்டேன். ” இது நம் கடைசிப்போர். கடைசி மூச்சு! ”

வெறிபிடித்தது போலச் சுட்டார்கள். வெடியோசை அந்த இடம் உருவானபிறகு எப்போதுமே அப்படி ஒலித்துக் கொண்டிருந்தது போலக் கேட்டது. புகை மூச்சில் நான் கமறினேன்.

கால்மணிநேரம் மிகக் கடுமையாக போராடினோம். ஆடர்லிக்கள் குண்டுகளுடன் ஓட ஷ¥ட்டர்கள் இடைவிடாது சுட குண்டுபட்டு விழுந்தவன் இடத்தில் அடுத்தவன் உடனே அமர்ந்துகொள்ள உச்ச கட்டப் போர் .ஒரு சிறு கம்பெனிக்கு சாத்தியமான அதிகபட்சப் போர்.

பின்பு அமைதி. குண்டுகள் வருவது நின்றது.

காற்றில் மூட்டம் கலைந்தது. நான் தலைதூக்கிப் பார்த்தேன். ஆங்காங்கே புகை எழுந்தது. ஐந்து கூடாரங்கள் எரிந்துகொண்டிருந்தன. அதன் ஒளியில் பிணங்கள் சிதறிக்கிடப்பதைக் கண்டேன்.

“காப்டன் அவர்கள் பின்வாங்கிவிட்டார்கள்”

“இல்லை. அதிகபட்சம் ஐந்து நிமிடங்களில் மீண்டும் வருவார்கள். அவர்கள் முன்னணிப்படைக்கு கடுமையான சேதம் இருக்கலாம்” என்றேன்”இறந்தவர்களை அகற்று. புதிய குண்டுகளைச் சேர்த்துக்கொள். வேகம்”

மீண்டும் தாக்குதல். இம்முறை மிகத்தீவிரமாக . என்னைச்சுற்றி குண்டுகள் வெடித்தபடியே இருந்தன. எல்லா கூடாரங்களும் எரிந்தன. எங்கும் புகை. புகைக்குள் ரைபிள்களும் கிரனைட் லாஞ்சர்களும் சுடும் ஒளிப்பூ மின்னல்கள். சுடுபவனின் சட்டையும் விலாவும் தெரிய கிழிபடும் இருள் திரை. நான் மணல் மூட்டைச்சுவர் மீது தவழ்ந்து வெளியே பார்த்தேன். முதலைக்கூட்டம் மிக நெருங்கிவிட்டது .வரும்வழியெங்கும் சரிந்த மரத்தடிகள் போல பிணங்கள்.

நான் மைக்கில் ” ஸ்ரீ.. இது காப்டன்.. ஸ்ரீ ”என்றேன். பதில் இல்லை. புகை காற்றில் விலகியபோது ஒரு கணத்தில் என்னைச்சுற்றி பிணங்களாக கிடப்பதைக் கண்டேன்.

நான் சிக்னல் அறை நோக்கி ஓடினேன். மாணிக்கம் தரையில் கிடந்தான். தரையெல்லாம் கரிய பாலிதீன் விரித்தது போல உலர்ந்த ரத்தம். கூடாரம் கிழிபட்டு காற்று துளைகள் வழியாக உள்ளே சீறிக் கோண்டிருந்தது. சண்முகம் ரிசீவரில் இருந்தான். நான் மைக்கை எடுத்தேன். ”ஜெனரல் லௌட் ஸ்பீக்கர்! ”என்றேன். அதை பரிசோதித்துவிட்டு கூவினேன் ” அட்டென்ஷன்! திஸ் இஸ் காட் •ப்ளை கமாண்டர் நெல்லையப்பன். .. அட்டென்ஷன்! இது உத்தரவு. டவர் மீதிருப்பவர்களைத் தவிர பிறர் உடனடியாக தியாகராஜன் தலைமையில் ஒன்று சேருங்கள். முகாமை விட்டுவிட்டு ஒன்றாக தப்பி வெளியேறுங்கள். ” என்றேன்

தியாராஜன் கரியும் புகையுமாக உள்ளே ஓடி வந்தான். ”காப்டன்”' என்று மூச்சிரைத்தான்

“அவர்கள் எண்ணிக்கையில் அதிகம். நாம் இனிமேல் தாக்குப்பிடிக்க முடியாது. அவர்களிடம் சரணடைவதில் அர்த்தமில்லை.சரணடைந்தவர்களைக் கொல்கிறார்கள். ” என்றேன் ”நீங்கள் நேராக படகுத்துறைக்குப் போங்கள். பிளாஸ்டிக் படகுகள் புதைத்துவைத்திருக்கும் இடம் உனக்குத்தெரியும்”

“காப்டன் நீங்கள்? நீங்கள் இங்கே…”

”அவர்கள் வரும்போது ஆயுதக்கிடங்கை எரிக்கவேண்டும். நான் இங்கே இருக்கிறேன் ”

“அதை நான் செய்கிறேன் காப்டன்”

“நான்தான் இதன் கமாண்டர்” என்றேன் நிதானமாக

தியாகராஜன் “ஆனால்…”என்றான்

“இது ஆணை”என்றேன் சுருக்கமாக.

“எஸ் சார்”

“தியாகு”

“எஸ் சார்”

“போவதற்குள் அவளை சுட்டுவிடு” நான் அவனைப் பார்க்கவில்லை

“எஸ் சார்” அவன் குரலில் ஓர் இறுக்கம்.

அவன் வெளியேறினான்.நான் நெற்றியை கையால் வருடினேன். என் உடல் அதிர்ந்தபடி இருந்தது.

சண்முகம் ”ஹலோ ஹலோ காட்ப்ளை காட் •ப்ளை ஹியர்....ஓவர்” என்றான் . அது கரகரத்தது. அவன்” ஹலோ! ஹலோ” என்றபின் ‘ஷிட்”என்றான் ”போய்விட்டது”

நான் “சரி நீயும் தப்பிச் செல்” என்றேன்.ஏன் குரல் அடைத்திருந்தது.

“சர்” என்றான்

சட்டென்று ரிசிவர் உயிர்பெற்று கரகரவென்று ஏதோ சொன்னது.

“என்ன?”என்றேன்

“சார் அவள் கே என் யூ தலைவர் நேபா குமாரின் மகள். அவளை கொல்லாமல் எப்படியாவது ஹெட் குவார்ட்டர்ஸுக்கு கொண்டுசெல்லவேண்டுமாம்”

நான் ” மை காட்!” என்று வீரிட்டபடி வெளியே ஓடினேன். அவளது கூடாரம் தரையில் கிடந்து எரிந்து கொண்டிருந்தது. அதனருகே அவள் இல்லை. நான் ”தியாகு! ”என்று கூவினேன்.

சற்று தள்ளி அவள் தரையில் அமர்ந்திருந்தாள். அருகே துப்பாக்கியுடன் தியாகராஜன். அவன் திரும்பிப்பார்த்தான்.

“சுடாதே” நான் கூவினேன்.

அவன் ஆறுதல் கொள்வது தெரிந்தது.

”அவள் ஏ.எல்.எ•ப் தலைவரின் மகள். கொல்லாமல் கொண்டுசெல்ல உத்தரவு”

நான் வாய் மூடுவதற்குள் குண்டுகள் பெய்தன. தியாகராஜன் முழங்கால் ஊன்றி விழுந்தான். என் தோளில் ஒரு வலிமையான உதையை உணர்ந்தேன். புஜம் முற்றாக செயலற்றது.வலியே இல்லை. ஆனால் சூடான ரத்தம் ஊற்றுபோல கைகள் வழியாகக் கொட்டியது. நான் கீழே விழுந்தேன்.

மண்மூட்டைகளை தாண்டி அவர்கள் வேட்டைநாய்கள் போல பாய்ந்து உள்ளே வந்தனர். துப்பாக்கிகள் சீறும் ஒலியும் ஒளியும் எங்கும் நிறைந்தன. ஒரு கணம் நான் எல்லாம் முடிந்தது என்று செயலற்றிருந்தேன். பின்னர் ஆவேசத்துடன் எழுந்து அவளை பிடித்து இழுத்தேன். என் கைத்துப்பாக்கியை அவள் கழுத்தில் வைத்தேன். அவளை இழுத்தபடி சரிந்த கூடாங்களின் மறைவின் வழியாக ஓடினேன்.

அதை அந்த நேரத்து களேபரத்தின் வெற்றி என்றுதான் சொல்லவேண்டும். அவர்கள் அந்த இடத்தை புரிந்துகொண்டு ஆக்ரமிக்க சில நிமிடங்கள் எடுத்தன. மேலும் முதலில் வந்தவர்கள் வெறும் போர்வீரர்கள். ஆணையிடுபவர் எவருமில்லை. அந்த குழப்பத்தில் புகையில் இருளில் நான் அவளுடன் வெளியே ஓடினேன். பதுங்கியும் விழுந்தும் ஓடி புதர்கள் நடுவே மறைந்துகொண்டு பார்த்தேன். அவர்கள் கிடப்பவர்களைச் சுட்டார்கள். பதுங்கியிருந்தவர்களையும் எழுப்பி சுட்டுத்தள்ளினார்கள். கூடாரங்களை தூக்கி தேடினார்கள். அவள் இல்லை என்பதை சில கணங்களில் கண்டுபிடிப்பார்கள்.

நான் என் கையிலிருந்த ரிமோட் கன்ட்ரோலை அழுத்தினேன். பேட்டரியின் எலக்ட்ரா¦னிக் சிக்னலர் ஆணையை வாங்கி மெல்லிய ஒளியுடன் ஒரு குண்டை வெடிக்கச்செய்ய தொடர்ந்து மண்ணுக்கடியில் தோண்டி அமைக்கப்பட்டிருந்த ஆயுதக்கிடங்கு பேரொலியுடன் வெடித்தது. அதன் மேலிருந்த இரும்புத் தகடுகளும் பலகைகளும் வானில் எழுந்து புகையுடன் சுழன்று மண்ணை நோக்கி இறங்கின.புகை எங்கும் சூழ்ந்தது. கலவர ஒலிகள். ஊடாக குனிந்து அவளை இழுத்தபடி ஓடினேன்.

நான் அவளுடன் மலைச்சரிவில் ஏற ஆரம்பித்தேன். அவர்கள் மலைச்சரிவில் ஆறு நோக்கி நான் இறங்குவதைத்தான் எதிர்பார்ப்பார்கள். அந்தப்பகுதியில்தான் தேடுவார்கள். என் ரத்தம்

கொட்டிக் கொண்டிருந்தது. கை கனமாகத் தொங்கியது. மயக்கம் வந்து உடல் தள்ளாடியது. என் இடையில் பெரெட்டா இருந்தது . கையில் எம்4 கார்பைன் வைத்திருந்தேன்.

நான் அவளை இழுத்தபடி காட்டுக்குள் ஊடுருவிச்சென்றேன். அவள் சட்டென்று திமிறினாள்

“வா..”என்றேன்

“நோ…”என்று பேச வாயெடுத்தாள்.

நான் சட்டென்று அவளை அடிக்க ஆரம்பித்தேன். மீண்டும் மீண்டும் ஆவேசமாக அடித்து வீழ்த்தினேன். ”நாயே நாயே செத்துப்போ செத்துப்போ”என்று உறுமியபடி அடித்தேன்.

பின்பு ”ஒரு சொல் பேசினால் கொன்று விடுவேன்…வா” என்று மூச்சிரைத்தேன்.

அவள் வாயில் ரத்தத்துடன் எழுந்தாள். தூக்கி இழுத்தபடி காட்டுக்குள் சென்றேன்.

7

வெறும் பத்து நிமிடம்தான் அவகாசம். அதற்குள் தொலைவில் அவர்களின் அறிவிப்பு பியூகிள் முழங்குவதைக் கேட்டேன். நான் தப்பிவிட்டதை உணர்ந்துவிட்டார்கள். மெல்லிய ‘திப்திப்’களாக ரை•பிள்கள் வெடித்த ஒலியும் பறவைகள் எழுந்து கலைந்தொலித்த ஓசையும் கேட்டது. கலைந்த காட்டுபன்றியொன்று புதர்களினூடாக சீறி எங்களருகே ஓடியது. அவகாசமில்லை. வெறும் பத்துநிமிட இடைவெளி. காடு ஒரு திரை. ஆனால் அவர்களுக்கு காடு உள்ளங்கை போல தெரியும். நல்லவேளை அவர்களிடம் நாய்கள் இல்லை. பதுங்கித் தாக்கும் வசதிக்காக அவர்கள் நாய்களை வைத்துக் கொள்வதில்லை

ஒரு சாதக அம்சம் இருக்கிறது. அவர்கள் இந்தக்காட்டை முற்றிலும் அறியாத என்னைப்போன்ற ஒருவன் என்ன செய்யக்கூடும் என்று கற்பனைசெய்ய முடியாது. காட்டை அறிந்தவர்களின் கோணத்திலேயே அவர்களால் சிந்திக்க முடியும்.

மீண்டும் மழை பெய்ய தொடங்கியது. இலைகள் மீது வானத்தின் அருவி விழும் ஒலியை சுற்றிலும் கேட்டேன். அதுவும் நல்லதுதான். அசைவுகளையும் ஒலிகளையும் அது மறைத்துவிடும்.ஆனால் என் காயத்தை சீரழித்துவிழும் இந்த மழை. ரத்தம் இன்னும் நிற்கவில்லை. கொப்பளித்து நீரில் கரைந்து வழிந்தபடியே இருந்தது. நெருப்புத்துண்டு ஒன்றைசேர்த்துக் கட்டிவைத்தது போலிருந்தது. வேர்களில் கால்சிக்க தள்ளாடியபடி சென்றேன்.

சற்றுத்தள்ளி ஒரு மெல்லிய பேச்சுக்குரல். அவர்கள் அத்தனை அருகே வந்திருப்பார்கள் என்பது எனக்கு வியப்பளிக்கவில்லை. அதை எதிர்பார்த்திருந்தேன் போலும். சட்டென்று ஒரு குழிக்குள் சரிந்து சென்று புதருக்குள் எங்களை ஒளித்துக் கொண்டேன். அவள் இடையில்

என் துப்பாக்கியை அழுத்தி வைத்தேன். அவள் என் முகத்தைப்பார்த்தாள். அச்சமில்லை. ஆனால் வேறு ஏதோ ஒன்று.என்ன அது?

பூட்ஸ்¤கள் சேற்றை அழுத்தி அழுத்தி அதிர்ந்து தாண்டிச்சென்றன. அவர்களின் பயனெட் கிளைகளை வெட்டித்தள்ளுவதைக் கண்டேன். இரண்டுபேர். மண்நிற மங்கோலிய முகங்கள். அவர்களுக்குப்பின்னால் மேலும் இருவர். மௌனமாக எங்களைத்தாண்டிச்சென்றார்கள்.

திடீரென்று என் பார்வை அலையடிப்பதை உணர்ந்தேன். அதை வெல்ல என் மனம் முயன்றபோது எண்ணங்கள் வழுக்கிச்சென்றன. மணிப்பூர் காட்டில் ஏன் நெல்லையப்பர் கோயில் கோபுரம் நினைவில் எழவேண்டும். இரவும் நிலவும் காயுது என் நினைவில் தென்றல் வீசுது.... எண்ணங்களை என் தொகுப்பில் நிறுத்த முயன்றேன். முடியவில்லை. எண்ணங்கள் தான் எத்தனை இதமானவையாக பாதுகாப்பானவையாக இருக்கின்றன. பாப்புலர் தியேட்டர். ரஜினியின் 'தில்லுமுல்லு ' ஓடுகிறது. புழுக்கம். வியர்வை நெடி. மழைபோல ஒலிப்பது •பேன்களின் ஓசை. இல்லை இது மனிப்பூர் காடு. நான் செத்துக் கொண்டிருக்கிறேன். மரணம். மரணம்தான் இத்தனை இனிமையான விடுதலை. மரணத்துக்குப்பிந்தான் சுதந்திரமாக இருக்கமுடியும். பாதுகாப்பாக இருக்க முடியும். இருப்பா? மரணம் என்பதே இல்லாமலாதல்.... இல்லாமலாகி....முற்றிலும் இல்லாமலாகி....அதுகூட தவறு. இல்லை என்பது கூட ஒருவகை இருப்பு.லில்லை என்ற சொல்லாவது இருக்கிறது.... மரணம் முழுக்கருமை. முழு வெறுமை....எத்தனை பயங்கரம்...நினைக்காதே...மரணத்தைப்பற்றி நினைக்காதே....எத்தனை நினைப்புகள். மழை பெய்கிறது. அருணாச்சலா மெஸ். நெல்லையில் எப்போதுமே இட்லி சுவையானது. சாம்பார் புதினா சட்டினி. மரணம்...மரணம். மரணமும் இட்லியும்... .மரணம் என்றால் மூழ்கி மூழ்கி போவது. இது யார் அருகே இருப்பது. நாயர்? இல்லை நாயர் செத்துப்போய்விட்டான். இது வேறு. இது ஒரு பெண். இளமையின்

வாசனை. வெம்மை. இவளை நான் நீண்டநாட்களாகவெ அறிவேன். நான் பிறக்கும்முன்பே அறிவேன். பிறந்தது இவள் கைகளில்தான். இவள். இது என் அம்மா. இளமையான அம்மா. இவளுக்காகத்தான் காத்திருந்தேன்.அம்மா....அம்மா ..வழுக்குகிறது பிடித்துக்கொள்... அம்மா அம்மா.....

பளீரென்று ஒளி என் கண்களின்மீது பொழிய நான் விழித்துக் கொண்டபோது காட்டின் இலைகள் ஒளிரும் தகடுகளாக காற்றிலாடின. ஒளித்துளிகளாக நீர் சொட்டியது. இனிய வெம்மை கொண்ட சிறு மண்பொந்தில் கிடந்தேன். உடம்பெங்கும் மெல்லியவலியும் கனக்கும் சோர்வும். தாகம். ” தண்ணீர்”என்றேன்.

என் மேல் அவள் முகம் தெரிந்தது. இளமையால் எப்போதும் புதியதாக இருந்த முகம். புன்னகை. நீலமணிக்கண்கள். இவள்தான். எத்தனை காலமாகத்தெரிந்தவள் எனக்கு!”நீயா? நீ எங்க போனே? ” இவள்தான் .என் இளமையில் சங்கரன்கோயிலுக்குபோய் கருவறையில் கண்ட சிற்றாடைகட்டிய கோமதியம்மன். என்னை நன்கறிந்த குறுஞ்சிரிப்புடன் மெல்லிய இடை ஒசித்து நின்றவள். தெரியுமா உனக்கு? எத்தனை நாள் உன்னை எண்ணி எண்ணி பகல்கனவுகளில் மூழ்கி அமர்ந்திருக்கிறேன் என்று? குறுக்குத்துறை தாமிரவருணிக்கரையில். சுப்ரமணிய சாமி கோயில் படிகளில். நீண்ட நெல்லையப்பர் பிரகாரங்களில். என் அறையின் தனிமையில் . மீண்டும் மீண்டும் விதவிதமாக நம் முதற்சந்திப்பு. நம் முதல் தொடுகை. முதல் முத்தம்..... நீ குளித்து ஈரம் உலராது சொட்டும் கூந்தலில் துளசிக்கதிர் சூடி மலையாள முண்டு உடுத்து நெற்றியில் சந்தனத் தொடுகுறி அணிந்து குளத்துப்புழை கோயில்முன் கைகூப்பி நிற்கிறாய். கொல்லம் காயலில் கூந்தல் விரித்துப்போட்டு பாடலொன்றை முனகியபடி மார்புகள் தளும்ப தோணியோட்டுகிறாய். தாவணியும் பாவாடையும் அணிந்து ரெட்டைச்சடை போட்டு குங்குமப்பொட்டு வைத்து தாமிரவருணிக்கரையின் சிறிய ஓட்டுவீட்டின் கொல்லைப்பக்கம் துவைகல் மீது அமர்ந்து நிலவைப்பார்க்கிறாய்....உன்

முன்நெற்றிக்கூந்தல் அலையாடுகிறது…  உன் நினைப்பு எப்போதும் என் அகத்துக்குள் ஏற்றிவைக்கப்பட்ட சிற்றகல். அணையா ஒளி. அனைத்தையும் பொன்னாக்கும் மாயச்சுடர். நீ தான் அது. என் மீது நிலவெழுந்ததுபோல் தெரியும் உன் முகம். உன் புன்னகை. உன் நீலமணிக்கண்கள்…. ”எனக்கு ரொம்ப தாகம்”

மறுகணம் விழித்து துடித்தெழுந்தேன். விலாவிலும் வயிற்றிலும் வலித்தது.  கையால் அழுத்தியபடி சுற்றும் பார்த்தேன். யாருமில்லை. ”இது எந்த இடம்?”

“காடு”என்றாள் ”அவர்கள் நம்மை இன்னும் தேடுகிறார்கள். ஆனால் தாண்டிச்சென்றுவிட்டார்கள்” அவள் கமுகுப்பாளையால் செய்த நீர்க்குடுவையிலிருந்து நீரை நீட்டினாள். நான் அதை வாங்கி மடமடவென்று குடித்தேன்.

“நான்…”

“மயக்கமாகிவிட்டீர்கள். ராத்திரியெல்லாம் நினைவேயில்லை….”

நான் பெருமூச்சுடன் தளர்ந்து அமர்ந்தேன். என் சட்டை கழட்டப்பட்டிருந்தது. காயங்கள் இளம் வாழைப் பட்டையால் நன்றாக கட்டப்பட்டிருந்தன.

”நீயாக கட்டினாய்?”

“ஆமாம். இங்கே காட்டில் நல்ல பச்சிலைகள் உண்டு. எங்களுக்கு அதெல்லாம் நன்றாகவே தெரியும்” அவள் புன்னகைத்தாள்.

நான் என் துப்பாக்கியை பற்றி நினைத்தேன். அதை என் கை அறிந்ததுபோல இடையை தொட்டது

” உங்கள் துப்பாக்கி இதோ ”என்று காட்டினாள். கார்பைனும் பிஸ்டலும் அருகருகே இருந்தன.

நான் சொற்களிழந்து அவளையே நோக்கி அமர்ந்திருந்தேன். அவள் ஒரு பெரிய பப்பாளிப்பழத்தை எடுத்து பயனெட்டால் துண்டுபோட்டு ஒரு பெரிய துண்டை எனக்கு நீட்டினாள். அதை வாங்கிக் கொண்டேன் ” நீ ஏன் தப்பி ஓடவில்லை?”என்றேன்

“நீங்கள் சாகக்கூடும்” என்றாள் சுருக்கமாக.

“செத்தால் என்ன?எங்கள் ஆட்களில் யாருமே மிஞ்சவில்லை”

“நீங்கள் என்னைக் கொல்லவில்லை” என்றாள் பப்பாளிப்பழத்தையே பார்த்தபடி.

நான் அப்பதிலால் ஏமாற்றம் கொண்டேன்.அவள் முகத்தை உற்றுப்பார்த்தேன். பப்பாளிப்பழத்தை சீவிக் கொண்டு எங்கோ பார்த்தாள்.

”சரி ”என்று எழுந்தேன். ”இப்போது நான் போய்விட முடியும். நீ உன் ஆட்களிடம் திரும்பிப்போ”

”நீங்கள் அப்படிபோய்விட முடியாது. காட்டில் உங்களுக்கு யாராவது வழிகாட்டவேண்டும். இங்கே எங்கள் ஆட்கள் உங்களைத்தேடுகிறார்கள்…”  அவள் என்னைப்பார்த்தாள்.” உங்கள் காயமும் ஓரளவு ஆழமானது”’

“நீ குத்திய காயமா?”என்றேன். அந்தக் குரூரமான கேள்வி எனக்குப் பிடித்திருந்தது

அவள் பார்வையை விலக்கி ” இல்லை குண்டு பட்டது. நல்லவேளை குண்டு உள்ளே இல்லை ” என்றாள்.

“நன்றி. எதிரியானாலும் நீ அன்புடன் இருக்கிறாய்”

“இது ஒரு மனிதாபிமானம்தானே?”

“ஆமாம். மனிதாபிமானம்தான்” நான் மெல்ல என் சுயத்துக்கு திரும்பினேன்.”சரி ,நாம் கிளம்புவோம்”

” ஆமாம். கிளம்பவேண்டும். உங்களை நான் படகுத்துறைவரைக்கும் கொண்டுசென்று விடுகிறேன்.படகுவழியாக நீங்கள் எளிதாக உங்கள் பிராந்தியத்துக்குள் போய்விடலாம்”

“நன்றி” என்றேன் .”உன் மனிதாபிமானத்தைப்பற்றி நான் எங்கள் யூனிட்டில் சொல்வேன்”

அவள் சட்டென்று திரும்பி என்னைப்பார்த்தாள். கண்களில் ஒரு  கணம் சினத்தின் முள். நான் பார்வையை விலக்கி எழுந்துகொண்டேன்.

நான் தயாரானதும் இருவரும் கிளம்பினோம். மலைச்சரிவில் புதர்களை விலக்கி நடந்தோம். நான் அவள் பார்வையை என் மீது உணர்ந்தபடியே இருந்தேன். அவளை நான் பார்த்தபோது அவள் மிகுந்த எச்சரிக்கையுணர்வுடன் வேறெங்கோ பார்த்தாள். சிறிய குருவி போலிருந்தாள். கச்சிதமாக. முற்றிலும் புதிதாக. எக்கணமும் விருட் என்று சிறகடித்து எழுந்துவிடுவதுபோல.

ஒரு இடத்தில் நான் தடுமாறியபோது அவள் வந்து என்னைப்பிடித்தாள் .நான் அதை மெல்ல உதறினேன்

“ஸாரி” என்றாள்

“ஏன்?”

“நான் குத்திய காயம் அது”

“நல்ல காயம். ஆனால் ஆழமில்லை. நீ போதிய பயிற்சி எடுக்கவில்லை என்று நினைக்கிறேன்”

“நான் இதுவரை யாரையும் கொன்றதில்லை”என்றாள் .கண்களில் மெல்லிய கண்ணீர்.

“குத்தியிருக்கிறாயா?”

“ம்”

“யாரை?”

“கல்லூரியில் ஒருவன் என்....’சட்டென்று வெட்கி ”....அவன் ஒரு பர்மிய இளைஞன். லேசாக கையில் கீறினேன். பயந்து ஓடிப்போனான்”

“நீ மியான்மாரிலா படித்தாய்?”

“ஆமாம்.எங்கள் ஆட்களின் குழந்தைகள் அதிகமும் பர்மவில்தான் படிக்கிறார்கள்”

“என்ன படித்தாய்?”

“மெட்ரிக் எண்ட்ரி. நான் ஆக்ஸ்போர்டில்கூட நேராகப்போய் கல்லூரியில் சேரமுடியும்”

“ஏன் போக வேண்டியதுதானே?”

“நான் அம்மாகூட இருக்கலாம் என்று ஆசைப்பட்டேன்…” அவள் பெருமூச்சுவிட்டாள் ”நான் பிறந்தது முதல் அம்மாவைப் பிரிந்துதான் இருந்திருக்கிறேன். அம்மா ஏ.எல்.எ•ப் போராளி. •போர்த் கமாண்ட் காப்டனாக இருந்தாள்”

”இப்போது?”

“இல்லை. சென்றவருடம் ஒரு தாக்குதலில் கொல்லப்பட்டாள்”

“ஐ யம் ஸாரி”என்றேன் அபத்தமாக

“அது சாதாரணம்தான். நாங்கள் எல்லாரும் எப்படியோ கொல்லப்படுகிறோம். அம்மாவைப்பார்க்கத்தான் நான் இங்கே வந்தேன். இதில் சேர்ந்தேன்.”

“நீ போராளியா?”

“இல்லை. நான் மியான்மாரில் நர்ஸிங்கும் படித்தேன். இங்கே ஒரு கமாண்டுக்கே நான்தான் •பிஸிஷியன், சர்ஜன் எல்லாம். ”– சிரித்து வெட்கி ”எட்டு பிரசவம் பார்த்திருக்கிறேன்” என்றாள்

அக்கணம் அவள் மிக அழகாக இருந்தாள். நான் புன்னகை செய்தேன். அவள் கன்னம் சிவக்க வேறு பக்கம் திரும்பிக் கொண்டாள்.

நாங்கள் ஒரு பாறைமீதேறி அதன் இடுக்கில் அமர்ந்தோம். ஒரு சிறு முயல் பாய்ந்தோடியது.”முயல்!”என்று அவள் பாய்ந்து எழுந்தாள். அது ஓடிவிட்டது

”இங்கே எங்காவது அதன் தாய் இருக்கும்” என்றாள். ”முயல் நல்ல இறைச்சி”

“நான் இறைச்சி சாப்பிடுவதில்லை”

“முயலிறைச்சி நன்றாகவே இருக்கும்”

“நான் எந்த இறைச்சியும் சப்பிடுவதில்லை”

“ஏன்?”

“எங்கள் வழக்கம். ”

“மீன்?”

“மீன் முட்டை இறைச்சி எதுவும்.”

“ஏன்?”

“உயிர்களைக் கொன்று தின்பது பாவம்”

“மணிப்புரிகளைக் கொன்றால் மட்டும் பாவமில்லையா?”

“இது போர். என் நாட்டுக்காக இதைசெய்கிறேன்”

”இது உங்கள் நாடு இல்லை. இது மணிப்புரி மக்களின் நாடு”

”இது இந்தியா”

“அதை நீங்கள் சொல்லக்கூடாது.நாங்கள் சொல்லவேண்டும்”அவள் முகம் சீறிச்சினந்தது.

“ஸாரி….நான் ராணுவ ஆள். எனக்கு சொல்லப்பட்டதுதான் எனக்குத்தெரியும்”

“நீங்கள் பயிற்சியளிக்கப்பட்ட வேட்டை நாய்கள்”

“நீங்கள்? மாலை போட்டு அனுப்பபடும் பலியாடுகளா?”

“ஷட் அப்!”

“ஸாரி”

அவள் மெல்ல மூச்சிரைத்து தணிந்தாள். ”இட் இஸ் ஓக்கே” என்றாள்

“ஸாரி”

“லீவ் இட்”

மீண்டும் கசப்பான மௌனம். அவளே அதை கலைத்தாள். “நீங்கள் எந்த ஊர்?”

நான் பேசாமலிருந்தேன்

”ஏன் நாம் சண்டைபோடவேண்டும்? மாறி மாறி மன்னிப்பு கெட்கவேண்டும்? நாம் ஒருவருக்கொருவர் ஒன்றும் தவறு செய்யவில்லையே”

நான் தலையசைத்தேன்.

”இந்தியனாக இருப்பதில் நீங்களும் மணிபுரியாக இருப்பதில் நானும் வெட்கம் கொள்ள ஆரம்பித்திருக்கிறோமா என்ன?”

“நான் ஒன்றும் வெட்கம் கொள்ளவில்லை”என்றேன் கோபமாக. ”ஐ யம் பிரவுட் டு பி என் இண்டியன்”

அவள் முகம் கூம்பியது.

”நீதான் வெட்கப்படவேண்டும்….” நான் அவளைக் கூர்ந்து பார்த்து வீம்பாகச் சொன்னேன்.

“சரி” என்றள் அவள், அடம்பிடிக்கும் குழந்தையிடம் பேசுவதுபோல.

”எவனோ ஆயுதம் கொடுக்கிறான் என்று தூக்கிக்கொண்டு வந்து கொல்கிறீர்கள் .நீங்கள்—-”

”— சரி”என்றாள் அவள் கறாராக

நான் நிறுத்திக் கொண்டேன்

இறுக்கமான மௌனம் நிலவியது இருவருக்குள். அவள் அதைக் கலைக்கும் முகமாக ” நீங்கள் எந்த ஊர் என்றாள்”

“திருநெல்வேலி. இந்தியாவில் தெற்கே. பசுவின் மடி போல தொங்குகிற நுனியில். நாங்கள் தமிழ் பேசுகிறோம்.”

”தெரியும். மியான்மாரில் நிறைய தமிழர்கள் உண்டு” என்றாள் ”என்ன படித்திருக்கிறீர்கள்?”

”எம்.ஏ. ஆங்கில இலக்கியம்..”

“அப்படியென்றால் ஏன் ராணுவத்தில்சேரவேண்டும்?”

“இது எங்களூரில் மதிப்பான வேலை.”

“இப்படி காட்டில் அலைவதா? கொல்லப்படுவதா?”

என்னால் பதில் சொல்ல முடியவில்லை

“மாலை போட்டு அனுப்பபட்டவர் நீங்கள்தான்” என்றாள் சிரித்தபடி.

நானும் சட்டென்று சிரித்துவிட்டேன். ‘உண்மை” என்றேன்

“நெல்லையப்பன் என்றால் என்ன அர்த்தம்?”

“எங்கள் ஊரில் ஒரு மிகப்பெரிய கோயில் இருக்கிறது. அதில் உள்ள கடவுளின் பெயர் இது. சிவன்”

“மியான்மாரில் பெரிய கோயில்கள் நிறைய இருக்கிறது. பழைய பர்மாவில் மூன்று இந்து அரசுகள் இருந்தன…”

“நீ போயிருக்கிறாயா?”

“படிக்கும்போது கூட்டிப்போனார்கள்” அவள் எழுந்தாள் ”கிளம்பலாமா?” வலியுடன் ‘அம்மா” என்றாள்

”காயம் பட்டிருக்கிறதா?”என்றேன்

“சிறிய காயம்தான். ”

“எப்படி?”

“நீங்கள் அடித்தது”

“நானா?அடித்தேனா? எப்போது?”

அவள் என்னைப்பார்த்ததும் சட்டென்று நினைவுக்கு வந்தது

“ஸாரி…நான் ஒரு வெறியில்….”

“பரவாயில்லை. எனக்கு அது பிடித்திருந்தது”

“ஏன்?”என்றேன் அதிர்ச்சியுடன்

“உங்கள் ஆட்கள் அத்தனைபேரும் கொல்லப்பட்டார்கள்....” மெல்லியகுரலில் தலைதாழ்த்திச் சொன்னாள்.

“அதற்கென்ன...இது போர்”

“என்னால்தானே?”

“”போரில் எல்லாம் நடக்கத்தானே செய்யும் ?”

“என்னால் அந்த மனிதரை மறக்க முடியவில்லை. கருப்பாக இருப்பாரே...”

“தியாகராஜன். உன்னைக் கொல்ல அனுப்பினேனே?”

“ஆமாம். அவர் என்னை கொல்ல விரும்பவில்லை. நேரம் கடத்தினார்...”

நான் ”பாவம். நல்ல நண்பன்”என்றேன்.

”அவர் ஒன்று சொன்னார்”

“என்ன?”

அவள் சட்டென்று வெட்கி தலை குனிந்து ”இல்லை”என்றாள்

“என்ன?”

“ஒன்றுமில்லை” மேலும் வெட்கினாள்

“என்ன?”என்றேன் கோபத்துடன் ‘சொல்லு என்ன?”

”கோபப்பட்டால் எப்படிச் சொல்வது?”

“சரி கோபப்படவில்லை .சொல்லு”

“அவர் என்னைக் கொல்வதை நீங்கள் விரும்பவில்லை என்று சொன்னார். ஆனால் கொல்ல உத்தரவிடவேண்டும் அது உங்கள் கடமை என்பதற்காகத்தான் அவரிடம் கொல்லச் சொன்னீர்கள் என்றார் ” அவள் புன்னகைத்தபடி ” இதோ ஒரு நிமிஷத்தில் பாய்ந்து வந்து கொல்லவேண்டாம் என்று சொல்லி எதாவது காரணம் சொல்வார் பார் என்று சிரித்தார்”

நான் ஒன்றும் சொல்லவில்லை

”அவர் சொன்னார், நீங்கள் என்னை …”

”உன்னை?” என் மூச்சு அடைத்தது

”உங்களுக்கு என்னை பிடித்திருப்பதாக. ”

”ஷிட்”என்றேன் கோபத்துடன் ”உளறியிருக்கிறான்”

”நீங்கள் தனிமையில் நின்று என் பெயரை திரும்பத்திரும்பச் சொல்லியிருக்கிறீர்கள். அவர்கள் எல்லாரும் கூடி நின்று பார்த்து சிரித்தார்களாம்”

“டாமிட்”

“கையில் சிகரெட்டால் சுட்டீர்களாம்”

நான் துப்பாக்கியை கீழே வீசிவிட்டு அப்படியே அமர்ந்துவிட்டேன்

“ஐயம் ஸாரி” என்றாள் புன்னகையுடன்.

“ஷட் அப். என்ன நினைத்தாய் என்னைப் பற்றி ? பெண்ணைப்பார்த்தால் பல்லிளித்துக்கொண்டு வேலையை மறக்கக்

கூடியவன் என்றா? மேலேயிருந்து ஆணை வராவிட்டால் இந்நேரம் செத்து மட்க ஆரம்பித்திருப்பாய்....”நான் ஆவேசத்துடன் துப்பாக்கியை எடுத்தேன் ”இதோ இந்தக்கணம் உன்னை சுட்டு வீழ்த்த என்னால் முடியும். கண்னை இமைக்காமல் சுட்டுத்தள்ளுவேன்.தெரியுமா?”

“சுடுங்கள்”

நான் அவளையே பார்த்தேன். துப்பாக்கியை பிடித்த என் கரம் நடுங்கியது.

மெல்ல சமாதானம் அடைந்தேன்

என்னை திரட்டிக் கோண்டேன். ” நான் மூன்று அக்காக்களுடன் பிறந்தவன். நீ ஒரு பெண். உன்னைப்பார்த்ததும் பரிதாபம் ஏற்பட்டது. அவ்வளவுதான். இரக்கம். என்னால் உன்னை கொல்ல முடியவில்லை அவ்வளவுதான். புரிகிறதா? ” எழுந்து ”வா போகலாம்”என்றேன்

இருவரும் சில அடி நடந்தோம் .” என் பார்வையில் இந்த ஊர் பெண்கள் எல்லாம் பெண்களாகவே தெரியவில்லை. எங்கள் ஊரில் பெண்களுக்குக் கண்கள் அழகாக இருக்கும். கரிய வண்டுபோல அகன்று மினுமினுப்பாக இருக்கும். மூக்கு நன்றாக கூர்மையாக இருக்கும். எனக்கு எங்கள் ஊர் பெண்களைப்பார்த்தால்தான் அழகிகளாகத் தெரிகிறார்கள்......உன்னைப்பார்த்தால் பர்மிய மரப்பொம்மை போல இருக்கிறாய்...”

அவள் அதிர்ந்து என்னைப்பார்த்தாள். தலை குனிந்தாள்.

இருவரும் வெகுநேரம் மௌனமாக நடந்தோம்.

குன்றின் சரிவேறி கீழே ஆற்றைப்பார்த்தோம். நீர் நுரைத்தோடியது. கரையில் புதர்கள் அடர்ந்திருந்தன. புதர்நடுவே ஒரு மூங்கில்தோப்பு தெரிந்தது. மறுகணமே அவன் பயனெட்டின் ஒளியும் கண்ணில்பட்டது. பிறகு இன்னொருவன். இன்னும் ஒருவன். கிட்டத்தட்ட பத்துபேர் அங்கே காவலிருந்தார்கள். ஒரு எம்.கெ 19-3 இலகு இயந்திரத் துப்பாக்கியையும் கண்டேன்.

”அந்த வழியாக நீங்கள் படகுகளில் இறங்குவதைக் கண்டிருக்கிறோம். படகுகள் திரும்பிச்செல்லாவிட்டால் இங்கே எங்காவதுதான் இருக்கும். ஆகவே கண்டிப்பாக நீங்கள் அங்கே வருவீர்கள் என்று எதிர்பார்க்கிறார்கள்” என்றாள் அவள்.

நான் சோர்வும் ”ம்”என்றேன்

”குன்றுக்கு அப்பால் சென்று இறங்கினால் ஆற்றுக்கு கீழே போகலாம். ஒரு நாள் ஆகும்”

”படகு?”

“ஒரு மரப்படகு அங்கே புதைக்கப்பட்டிருக்கிறது.எனக்கு இடம் தெரியும். ”

”சரி”என்றேன் எனக்கு வேறு வழிதெரியவில்லை. இருவரும் நடந்தோம். நான் அவளிடம் பேச முனையவில்லை. ஏதோ அவமானத்துக்கு ஆளானதுபோல மனம் புகைந்தது.

8

இரு இடங்களில் எங்களைத்தேடும் கும்பலில் இருந்து பதுங்கி தப்பினோம். காடு முழுக்க எங்களைத்தேடுகிறார்கள் என்று தெரிந்தது. இந்தப்பெண் கூடவே இல்லாவிட்டால் இந்தக்காட்டில் நடமாடவே முடியாது. மழை விட்டு ஈரம் உலர்ந்த இலைகள் காற்றில் சிலுசிலுத்தன. மழை இல்லாவிட்டால் மணிப்பூர் காட்டுக்குள் நீராவி நிறைந்துவிடும். வெக்கை ஆளைக்கொல்லும். வியர்வை உடலெங்கும் வழிந்தது. பெரிதாக மூச்சுவிட்டபடி கனத்த காலடிகளை எடுத்து வைத்து சேற்றில் நடந்தோம். இலைகளில் ஒட்டியிருந்த தேரைகள் தாவிக்குதித்தன. புதர்ப்பறவைகள் புப் புப் என்றபடி எழுந்து பறந்தன.

”தண்ணீர்”என்றேன். அவள் கமுகுப்பாளைக்குடுவையில் நீர் வைத்திருந்தாள். குடித்துவிட்டு கொடுத்தேன். அவளும் குடித்தாள்.

”வலி இருக்கிறதா?”

“கொஞ்சம்”

“அசையும்போது மட்டும் வலிக்கிறதா , இல்லை சும்மாவே தெறிக்கிறதா?”

“அசையும்போது மட்டும்தான்”

தொட்டுப்பார்த்துவிட்டு ”சூடாக இல்லை”என்றாள் “செப்டிக் ஆகவில்லை. இந்த பச்சிலைகள் நல்ல ஆண்டிபயாட்டிக்குகள்”

“தாங்ஸ்”

அவள் சாதாரணமாக தொடர்வதுபோல ”மியான்மரில் நிறைய தமிழர்கள் உண்டு”என்றாள்.

“அப்படியா?”

“ஆமாம். என்னுடன்கூட நிறைய தமிழர்கள் படித்தார்கள். அவர்களெல்லாம் ரப்பர்த் தோட்டத்தில் வேலைபார்க்கிறார்கள்”

“ம்” என்றேன்

“பெண்களெல்லாம் அழகாகவே இருக்கமாட்டார்கள். நல்ல கறுப்பு நிறம். பல்லெல்லாம்கூட பெரிதாக இருக்கும்”

நான் அதைக் கேட்டதாக காட்டிக் கொள்ளவில்லை

”ஆனால் மிகவும் முரட்டுத்தனமானவர்கள். பயங்கரமாக சத்தம் போட்டு கூவிக் கூவிச் சண்டைபோட்டு பேசுவார்கள்”

நான் அவளை பார்க்கவேயில்லை. அவள் பார்வையை உணர்ந்தபடியே இருந்தேன்.

மேலும் நடந்தோம்.

”இங்கே உயரமான பாறை ஒன்று இருக்கிறது. அதன் மீதிருந்து இப்பகுதியை பார்ப்பார்கள். நாம் புதர்களுக்குள் பதுங்கித்தான் போகவேண்டும்” என்றாள்

புதர்கள் வழியாக தவழ்ந்து சென்றோம். பாறை மீது இருவர் எம் 249 ஸ்க்வாட்  ஆட்டமாட்டிக்குடன் நிற்பது தெரிந்தது. பச்சை இலைகளை உடல் முழுக்க கட்டிய அங்கமி வீரர்கள்.

மறு எல்லைக்குச் சென்றதும் அவள் எழுந்தாள். நானும் எழுந்தேன். அவள் ”அந்த தமிழ்ப்பெண்களுக்குச் சாப்பிடக்கூடத் தெரியாது. அசிங்கமாக சாப்பிடுவார்கள். குரங்குகள் போல , கைகளால் அள்ளி அள்ளி வாயில் போட்டு மெல்வார்கள்…” என்றாள்

”ஷட் அப்” என்று சீறினேன்.

என் கோபம் கண்டு அவள் முகம் சிவந்துவிட்டது

ஒரு நீரோடை செல்லும் ஒலி கேட்டது. பாசிப்பச்சைக் கற்களில் மோதியபடி  ஓடைநீர் உடைந்து கண்ணாடியாகிச்சென்றது . பாறை இடுக்குகளில் கால்வைத்து இறங்கினோம். நான் முகம் கழுவிக்கொண்டேன். அவள் சற்று தள்ளி பாறை மறைவுக்குப்போய் தன் உடைகளை விலக்கி உடலைக் கழுவினாள். நீரில் சந்தனம் போல் கரைந்து நெளிந்த அவள் பிம்பத்தை கண்டேன். மனம் படபடத்தது.

அருகே ஒரு மரத்தின் அடியில் இளைப்பாறினோம்.

அவள் என்னருகே அமர்ந்தாள். தன் முழங்கால்கள் மீது தலையைச் சரித்துக் கொண்டாள். மெல்ல தனக்குள் ஒரு மணிப்புரி மொழிப்பாடலை முனகினாள். நான் அவளையே நோக்கி அமர்ந்திருந்தேன்.

”இது அங்கமி மொழிப்பாடலா?” என்றேன்

“இல்லை பர்மிய மொழி பாடல். அங்கமியில் நாட்டுப்புற பாடல்கள் மட்டும்தான். எனக்கு அதெல்லாம் அவ்வளவாகப் பிடிக்காது”

“‘ஏன்?”

“எனக்கு மாடர்ன் பாட்டுதான் பிடிக்கும்.”

நான் புன்னகை செய்தேன்

அவள் உடனே ”அதற்காக நான் அங்கமி மொழியை விரும்பவில்லை என்று பொருள் இல்லை”

“புரிகிறது” என்றேன் புன்னகையுடன்.

“என்ன புரிகிறது?”

”உன் மனம்”

“என்ன மனம்?”

நான் சிரித்தேன்.

அவள் சினத்துடன் ” உங்கள் நினைப்பு புரிகிறது. நான் இதையெல்லாம் உள்ளூர விரும்பவில்லை. மாடர்னாக வாழ விரும்புகிறேன். அப்படித்தானே நினைக்கிறீர்கள்?”

“அதில் என்ன தவறு?”

“டாமிட்” என்று சீறினாள் ”எனக்கு என் நாட்டு விடுதலைதான் முக்கியம். அதற்காக சாவதுதான் என் …”

“நாடு விடுதலை அடைந்தபிறகு நகப்பாலிஷ் போட்டிருக்கலாமே”

“நகப்பாலீஷா நானா?”

நான் அவள் கைகளைப் பிடித்து மலர்த்தினேன். அழிந்த நகப்பாலீஷ். ” ஒருவாரம் முன்னால் நகப்பாலீஷ் போட்டிருக்கிறாய். காட்டுக்குள் இது

கிடைக்கவேண்டுமென்றால் நீ சொல்லி அனுப்பி வரவழைத்திருக்கவேண்டும்…’

“சீ…”என்று கையை இழுத்துக் கொண்டாள். ”இது… இது..” சட்டென்று வேகம் கொண்டு கையை தரையில் பரபரவென உரசினாள். பிறகு அப்படியே குவிந்து அமர்ந்து அழ ஆரம்பித்தாள்.

நான் அவள முுவதையே பார்த்து அமர்ந்திருந்தேன். பின்பு மெல்ல அவள் தோளைத் தொட்டேன். அவள் என் கையை உதறினாள். நான் விலகிக் கொண்டேன்

சட்டென்று முகம் துடைத்து எழுந்து ”போகலாம்”என்றாள்.

காடு தன்மை மாறியது. சதுப்புத்தரை அகன்று சற்று திடமான நிலம் வந்தது. வேர்கள் அடர்ந்து பின்னிய நிலத்தில் புதர்கள் குறைவாக இருந்தன. குட்டையான புதர்களில் செண்டு செண்டாக மலர்கள்.

இருவரும் புதர்களை விலக்கி நடக்கும்போது நான் ” இதில் வெட்கப்படவோ அழவோ ஏதுமில்லை.”என்றேன்”நீ ஒரு பெண். பெண்ணாக இருப்பதில் என்ன தவறு? பெண்ணுக்குரிய உணர்ச்சிகள் ஏன் உன்னிடம் இருக்கக் கூடாது?”என்றாள்.

”டாமிட். நான் ஒருய் போராளி. அவ்வளவுதான்”

”நீ ஒரு அழகான பெண்”

”புல் ஷிட்”

”இனிமையானவள்..”

”ஷட் அப் ப்ளீஸ்”

”சொல்லுவேன். நீ ஒரு மஞ்சள் தேவதை. கோல்டன் டால்....”

அவள் முகம் சிவந்து முன்னால் ஓடினாள்.நான் பின்னால் சென்றேன். அவள் முகம் மலர்ந்திருப்பதைக் கண்டேன். ஒரு காட்டுமலரைப்பறித்து முகர்ந்து பார்த்தபின் அதை காதோரம் சூடினாள்.

”உனக்கு பூ நன்றாக இருக்கிறது...”

அவள் வெட்கிச்சிவந்த முகத்துடன் சிறு குழந்தைபோல ”இஸ் இட்?” என்றாள்

”ரியலி”

அவள் பெருமூச்சுவிட்டாள். மெல்லிய குரலில் குற்ற உணர்வுடன் “ஐ லவ் சினிமா”என்றாள்

“குட்”என்றேன்

“........ஆன்ட் ஐஸ்கிரீம்” இம்முறை குரலில் உற்சாகம்.

“ஓக்கே. தென்...”

“சின்னக் குழந்தைகள்.....”

“வெரிகுட்...”நான் புன்னகைத்தேன் ” பாய்ஸ்?”

“ச்சீ... ஐ ஹேட் தெம்.”

“ஏன்?”

“என்னைச் சீண்டிக்கொண்டே இருக்கிறார்கள்”

“ஒரு இடத்தில் அந்தச் சீண்டல் பிடிக்க ஆரம்பித்துவிடும்”

“அதெல்லாமில்லை. ஐ ஹேட் பாய்ஸ்”

“அடாடா... அப்படியானால் எப்படி குழந்தைகள் வரும்? உனக்குத்தான் குழந்தைகள் பிடிக்குமே”

” யூ”என்று சீறினாள்”ஐ வில் கில் யூ” என்றாள். முகம் ரத்தமாகச் சிவந்துவிட்டது.

நான் சிரித்தேன்.

இருள் பரக்க ஆரம்பித்திருந்தது. என் கடிகாரத்தில் ஐந்து மணி ஆகவில்லை.

”இருட்டுகிறது”என்றேன்

“ஆமாம்.நாம் இங்கே தங்கவேண்டும். ”

“இவ்வளவு சீக்கிரமே இருட்டுகிறது” என்றேன் வியப்புடன்

”இங்கே நான்கு மணிக்கே இருட்டும்… இன்று மேக மூட்டமே இல்லை. பின்னிரவில் நிலா வரும் என்று நினைக்கிறேன்…”

“அப்படியா?”

“இன்று என்ன நாள் தெரியுமா?”

“என்ன?”

“சைத்ர பௌர்ணமி ” என்றாள் ”புத்த பூர்ணிமா”

“அப்படியா?”

“வருடத்தில் நிலா மிக முழுமையாக அழகாக இருப்பது இந்த ஒருநாளில்தான். மியான்மாரில் இந்த நாளை தேசியவிழா போலக் கொண்டாடுகிறார்கள்….”

”எங்களுக்கும் இந்த நாள் முக்கியம்தான். நாங்கள் சித்ரான்னம் செய்து கொண்டுபோய் ஆற்றுக்கரையில் வைத்து குடும்பத்தோடு சாப்பிடுவோம். குறுக்குத்துறை சுப்ரமணியசாமி கோயில் என்று ஒரு கோயில் எங்களூரில் ஆற்றின் அருகே இருக்கிறது. அங்கே மணல்மேடு அழகாக இருக்கும். அங்கே அமர்ந்து சாப்பிடுவோம். மணல் ராத்திரி ஏழெட்டு டீம் விடிய விடிய கபடி  ஆடுவார்கள். ”

“நீங்கள் ஆடுவீர்களா?”

“இல்லை. என் அம்மா விடமாட்டார்கள். அடிபடும் என்று சொல்வார்கள். அம்மா விட்டாலும் அக்காமார்கள் விடமாட்டார்கள்”

“அய்யே”என்று சிரித்தாள் ”அக்கா சொன்னால் கேட்பீர்களா?”

“சொன்ன பேச்சு கேட்காவிட்டால் என் மூத்த அக்கா பயங்கரமாக கிள்ளுவாள். அவள் நினைப்பதுதான் வீட்டில் நடக்கும். அப்பாகூட மறுபேச்சு பேசமாட்டார் . சின்ன அக்கா என் பக்கம். இன்னொரு அக்காவுக்கு எப்போதுபார்த்தாலும் பாட்டு கேட்பதுதான் வேலை. வேறு

ஞாபகமே இருக்காது. சிலோன் ரேடியோ எங்களூரில் நன்றாகக் கேட்கும். நிறைய தமிழ்பாட்டு போடுவார்கள். அதை கேட்டபடியே இருப்பாள் ”

“மியான்மாரில்கூட சிலோன் ரேடியோ கேட்கும். நல்ல பாட்டுகள்…. நான் கேட்டிருக்கிறேன் ”

” அப்படியா?” என்றேன் வியப்புடன்

” மியான்மாரில் சினிமாவே இல்லையே” என்றாள் அவள் ”பாட்டும் குறைவு”

” சரிதான் சினிமாப் பாட்டு இல்லாமல் எப்படி வாழ்வது? எனக்கும் சினிமாப்பாட்டு என்றால் உயிர். ஒருமுறை சென்னை போனபோது தேடிப்போய் டிஎம் சௌந்தர ராஜனைப் பார்த்தேன்…பெரிய பாடகர்”

“தெரியும். ‘அமேடியான நடியினிலே ஓடெம்….அடிகமான வெல்லம் வன்றால் ஆடெம்”

“மைகாட்!”என்று கூவி விட்டேன். ”மை காட்! எவ்வளவு பாட்டு தெரியும்…?”

“நிறைய தெரியும். இங்கே கூட சில சமயம் சிலோன் ரேடியோ எடுக்கும். மழை இல்லாமலிருக்கவேண்டும் .” அவள் பாடினாள் ‘ நீல நயெனங்களில் ஒரு நீன்ற கனெவு வன்றது…” அவள் நன்றாகவே

பாடினாள். ஆனால் ஒரு வகை சீன ஒலி கூடவே கலந்திருந்தது.

என் மனம் விம்மியது. மறு கணம் கூம்பியது .”முகாமில் சரவணன் என்று ஒரு லேன்ஸ் நாயிக் இருந்தான். அவனும் நானும்தான் தமிழ் பாட்டு போட்டி போட்டு பாடுவோம். ராத்திரியெல்லாம் பாடிக்கொண்டே இருப்போம். தியாகராஜன் பாட மாட்டார் ஆனால் எல்லா பாட்டுக்கும் வரிகள் தெரியும். அப்றம் நாயர். அவந்தான் சரியான பாடகன்…பெரும்பாலும் எல்லாருக்குமே சினிமாப்பாட்டுமீதுதான் பெரிய மோகம்… எங்கள் கம்பெனியில் இரவ்வெல்லாம் மாறி மாறிப்பாடுவோம். தெலுங்கு மலையாளப்பாடல்கள்…. பாட்டுப்போட்டிகூட உண்டு…”

“ஐயம் சாரி”

” ஏன்?”

“என்னால்தானே?”

“நீ என்ன செய்வாய்? சாகத்தானே இங்கே வந்தோம்?” நான் கசப்புடன் சொன்னேன் ”பாட்டு சினிமா எல்லாவற்றையும் விட்டுவிட்டு அனாதையாக செத்து காட்டில் அழுகுவதற்காக…”

அவள் முகமும் கூம்பியது. நான் பெருமூச்சுவிட்டேன்.

நான் திடீரென்று ஏற்பட்ட வேகத்துடன்” ஏன் இந்த சண்டைகள்? எதர்காக இப்படி சுட்டுக்கொண்டு சாகிறோம்?”

அவள் ஏதோ சொல்ல வந்தாள். நான் மேலும் சீற்றம் கொண்டேன் ”….ஸ்டாப். அந்த ஐடியாலஜி ஷிட் எல்லாம் என்னிடம் சொல்லதே. ஐடியாலஜி மதம் தேசம் கொள்கை ….ஷிட் ஷிட் ஷிட்…. மனிதனை மனிதன் சுட்டுத்தள்ளுவதற்கு எத்தனை காரணங்கள். எத்தனை ஆயுதங்கள்…”

”நீங்கள் பார்த்த முதல் போரா இது?”

நான் வெறுப்புடன் பேசாமலிருந்தேன்.

‘நான் இதுவரை எட்டு சண்டைகளைப் பார்த்துவிட்டேன். என் அம்மா குண்டுபட்டு சிதறிகிடந்ததையும் கண்டேன்” அவள் சொன்னாள் ”நானும் நினைப்பேன் .போரே இல்லாத இடம் உண்டா என்று. பயமே இல்லாமல் வாழக்கூடிய இடம்….”

”இருக்கிறது. நமக்கு இந்த ஆயுதங்களை உருவாக்கி விற்கக்கூடிய நாடுகள். பார்த்தாயா பெரெட்டா. அமெரிக்க கம்பெனி. இந்தக் கம்பெனியில் ஷேர் வாங்கியவர்களெல்லாம் நிம்மதியாக இருப்பார்கள். ஹாலிடேக்கு மியான்மாருக்கும் இந்தியாவுக்கும் வந்து கலைப்பொருட்கள் வாங்குவார்கள்…” நான் உரக்கச் சிரித்தேன்.

”எனக்கு இதெல்லாம் பிடிக்கவேயில்லை. ஆனால் வேண்டியவர்களின் இறப்பு மேலும் மேலும் வெறியை ஏற்றுகிறது. அம்மாவின் பிணத்தின் முன் வைத்து நான் முடிந்தவரை இந்திய ராணுவத்தினரைக் கொல்ல சபதம் எடுத்தேன். மனம் சோர்வுறும்போதெல்லாம் அம்மாவை நினைத்தால் எனக்கு வேகம் ஏறும். உண்மையில் எங்கள் யூனிட்டில்

எல்லாருக்குமே இப்படி தனிப்பட்ட கோபமும் வெறுயும்தான் இருக்கிறது. இந்திய ராணுவம் எங்களைக் கொல்லக் கொல்ல எங்களுக்கு போராடும் வேகம் ஏறுகிறது……”

“அதற்காகவே உங்களை பலிபோடுகிறார்களோ என்னவோ”

அவள் ”இருக்கலாம்”என்றாள் ” நான் இந்தியர்களை மனிதர்களாக நினைத்ததே இல்லை…. முகாமில் உங்களைப் பார்த்து முகங்கள் அறிமுகமான பிறகு எல்லாருமே மனிதர்களாக ஆகிவிட்டீர்கள்….” .

”எல்லாரும் இப்போது வெறும் நினைவுகள்….” என்றேன். தாளமுடியா மனப்பாரத்தை என் உடல் முழுக்க உணர்ந்தேன். இருவரும் தத்தம் நினைவுகள் கனக்க அப்படியே அமர்ந்திருந்தோம்.

அவள் பேச்சை மாற்றுவதுபோல ” அக்காக்கள் எல்லாம் என்ன செய்கிறார்கள்?” என்றாள்

”மூத்த அக்காள் பெயர் காந்திமதி. டீச்சராக இருக்கிறாள்.”

“சரிதான். நினைத்தேன் ,அவர் டீச்சராகத்தான் ஆவார் என்று”என்று சிரித்தாள்

” அவளுக்கு இரண்டு குழந்தைகள். இரண்டு பெண்கள். அம்பாசமுத்திரத்தில் இருக்கிறாள். கணவரும் டீச்சர். சின்ன அக்கா கோமதி. அவள் கணவருக்கு டெல்லியில் வேலை. ஒரு பையன். கடைசி அக்கா காதல் திருமணம். வேறு ஜாதி ”

“ஜாதி என்றால்”

“வேறு இனக்குழு.நாடார் என்று பெயர்…” என்றேன் ”என் அப்பாவுக்கு பயங்கர கோபம். அவள் வீட்டைவிட்டுபோய் கல்யாணம் செய்துகொண்டாள். நான் லீவுக்குபோனபோது அவள் வீட்டுக்குப்போய் சமாதானம் செய்தேன். அவள் கணவர் இரும்புக்கடை வைத்திருக்கிறார். நல்ல மனிதர்.அவளுக்கு ஒரு பையன்”

“பாட்டு கேட்கிற அக்காவா காதலித்தது?”

“ஆமாம்.”

“நினைத்தேன்”என்று மீண்டும் சிரித்தாள்.

நானும் சட்டென்று சிரித்தேன். ”என் அத்தான் பாட்டு கேசட் கொடுத்தே காதலித்தாராம்”

”அப்பா என்ன செய்கிறார்?”

“தமிழ் ஆசிரியராக இருந்தார். இப்போது ரிட்டையர் ஆகி விட்டார். கந்தபுராணச் சொற்பொழிவு ஆற்றுவார்.”

“அம்மா?”

“அம்மாவுக்கு என்ன? எப்போது பார்த்தாலும் சமையல்கட்டு. டிவி சீரியல் பார்ப்பது. வெள்ளிக்கிழமை தோறும் காந்திமதியம்மனை பார்க்க கோயிலுக்குப் போவாள். நெய்விளக்கு ஏறுவாள்…”

“•போனில் பேசுவீர்களா?”

“இங்கே சிக்னல் கிடைக்காது. கடிதம் வரும். இப்போது அக்காக்கள் இல்லாமல் வீடு உறங்கி கிடக்கிறது. கல்யாணம்செய்துகொள் என்று சொல்கிறாள் . ஒரே அலுப்பு ”

அவள் வேறு பக்கம் பார்த்தபடி ” ஏன், செய்து கொள்ளவேண்டியதுதானே?” என்றாள்

“காப்டன் ஆக பிரமோஷன் ஆகட்டும் என்று பார்த்தேன்”

“இதுவா காரணம் ?” பயனெட்டால் மரத்தைக் குத்தினாள்

“அதில்லை. அது ஒரு சாக்குதான். எனக்கு சம்பிரதாயமாகப் போய் பெண்ணெல்லாம் பார்ப்பது சங்கடமாக இருக்கிறது”

“என்ன சங்கடம்?”

“இல்லை. மிக அந்தரங்கமான ஒன்றை எல்லாரும் சேர்ந்து பேசி

முடிவுசெய்து செய்வது சரியில்லை என்று நினைப்பு. ”

“நீங்கள் ரொம்ப ரொமாண்டிக்” என்று சிரித்தாள்

“அதுதான் பாட்டு கேட்பதிலேயே தெரிகிறதே” நானும் சிரித்தேன்.

”பெரிய கண்களும் கூர்மையான மூக்கும் கொண்ட கருப்பான பெண் வேண்டும் – இல்லையா?”என்றாள்

எங்கள் கண்கள் சந்தித்தன. ஒருகணம் எதுவோ ஒன்று பிறந்து வளர்ந்து நடுவே நின்று சிரித்தது

”நான் ஒரு பேச்சுக்குச் சொன்னேன்” நான் கண்களை விலக்கினேன்

”அதுதானே நியாயம்?” அவளும் விலக்கினாள்

“எனக்கு அப்படி ஏதும் எண்ணம் இல்லை”

“இல்லாமலா சொல்வார்கள்?”

“மனிதர்களின் பாதிப்பேச்சு மனதை சொல்வதற்காக அல்ல, ஒளிப்பதற்காக”

“நீங்கள் எதை ஒளித்தீர்கள்?” சட்டென்று திரும்பி கூரிய நோக்குடன் கேட்டாள். கண்கள் சந்தித்தன. மிகக்கூரிய நுனிகள் மட்டும் உரசின.

அது இருவருக்கும் நடுவே நடனமாடியது

நான் என் பயனெட்டால் ஒரு மரத்தை
குத்தி ”தெரியவில்லை.”என்றேன் ” பெரும்பாலும் வெற்று ஈகோ. இல்லாவிட்டால்—” நான் தரையை பார்த்தேன். ” இந்த இடம் சற்று உலர்திருக்கிறது”

அவள் புன்னகையுடன் மரங்களைப்பார்த்தபடி நடந்தாள். துள்ளி ஒரு மரத்தின் தாழ்ந்த கிளையை பிடித்தாள். சரசரவென அவள் மீது பூக்கள் கொட்டின. மலர் அபிஷேகம் போல. கண்களை கசக்கியபடி தலையிலும் தோள்களிலும் பொன்னிறப் பூக்களுடன் நின்றாள்.

”கண்ணில் விழுந்துவிட்டதா?”

“இது தேன் நிறைந்த பூ”என்றாள் .கண்களைக் கொட்டியபடி ”நிறைய தேன் எறும்பு” தோளிலிருந்து ஒரு பூவை எடுத்து வாயில் வைத்து சப்பினாள். நான் ஒரு பூவை எடுத்தேன்

‘ரொம்பக் கொஞ்சமாகத்தான் தேன் இருக்கும்” என்றாள்
‘ரொம்பச்சின்ன பூ தானே”

”தேனீக்கு அதுபோதுமே”என்றபடி சப்பினேன். ”மென்மையான திக்திப்பு

நாங்கள் ஒரு பாறைவெடிப்பை அடைந்தோம் .”இது நல்ல இடம். மழைவந்தாலும் நனையாது” என்றாள் அவள். பாறையைச்சுற்றி மரங்கள் அடர்ந்து பாறைமீதே சரிந்து கிளைபரப்பி நின்றன. உதிர்ந்த மலர்கள் கரிய பாறைப்பரப்பில் யானை மத்தகம் மீதுசெம்புள்ளிகள் போல விரிந்து பரவிக்கிடந்தன. இளம்குளிர் காற்று அலையலையாக வீசியது.

”ஆமாம் ”என்றேன். அங்கே என் மழைக்கோட்டை கழற்றி வைத்தேன். உள்ளே வியர்வை கொட்டியது. குளிர்காற்று இதமாக இருந்தது.

”மழை வருமா?”

“உடனே வராது”என்றாள். காடு இருண்டுவிட்டது. சில்வண்டு ஒலி. அப்பால் ஒரு மிருகத்தின் காலடி ஓசை

”உங்கள் குடும்பத்தை பார்க்க ஆசையாக இருக்கிறது ”என்றாள்

“அப்படியா?”என்றேன் அர்த்தமில்லாமல்

“ஆனால் நீங்கள் மாமிசம் சாப்பிடுபவர்களை விரும்ப மாட்டீர்கள் இல்லையா?”

“அதெல்லாமில்லை. என் சின்ன அக்கா கணவர் இறைச்சி இல்லாமல் சாப்பிடமாட்டார். அவள் நன்றாக குழம்பு வைப்பாள்”

“உங்கள் ஊரில் எல்லாவற்றையும் எளிதாக விட்டுக்கொடுத்து வாழ்கிறீர்கள்”

“அப்படித்தானே வாழவேண்டும்?”

“ம்’ என்றாள் ,பிறகு பெருமூச்சுவிட்டாள்

எனக்குக் களைப்பாக இருந்தது. கால்களை நீட்டிக் கோண்டேன். கோட்டாவி விட்டேன். இருளையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

“காயம் வலிக்கிறதா?” என்றாள் அவள்.

“கொஞ்சம்” என்றேன்

”நாலைந்துநாள் வலிக்கும் . பிறகு சரியாகப்போய்விடும்.”

மெல்ல தூங்கிவிட்டேன்.

௭

இரவில் அந்த இடத்தில் தூங்குவதற்கு அபாரமான களைப்பு நம்மை அடித்துச் சரிக்கவேண்டும். மண்ணிலிருந்து குளிர் பரவி நரம்புகளைக் குத்தியது.  மலைகளில் இருந்து வந்த குளிர் காற்று மரங்களைக் கோதியபடி ஊளையிட்டுச் சுழன்றுகொண்டிருந்தது. அதில் யானைகளின் பிளிறல்கள் அருகிலும் தொலைவிலுமாக கலந்து ஒலித்தன. எண்ணற்ற பிற விலங்கொலிகள். பூச்சிகள் எழுப்பிய ரீங்காரத்தின் தீவிரமான சுருதியில் அவ்வொலிகள் இணைந்து காடே ஒரு பெரும் இசையாக இருளுக்குள் நிகழ்ந்துகொண்டிருந்தது.

நான் அருகே கேட்ட ஒரு பிளிறலால் விழித்துக் கொண்டபோது ஒருகணம் எதுவுமே புரியவில்லை. என் கைகள் இயல்பாக பாய்ந்து என் கார்பைனைத் தேடின. அதன் இரும்பு சிலிண்டரை என் விரல்கள் தொட்டதும் நெஞ்சில் உறுதி உருவாயிற்று. எழுந்து அமர்ந்தேன். அருகே நிழல் போல அவள் அமர்ந்திருந்தாள். அவளது இருப்பை மெல்லிய வெம்மையாக உணர்ந்தேன். இல்லை அதை என் மனம்தான் உணர்ந்தது.

எங்கள் மீது நிலவு இலைகளை ஊடுருவிய மாபெரும் நிழலோவியவலை விரிந்து பரந்திருந்தது. கண்களை பிரமிக்கவைத்தபடி அதன் கண்ணிகள் அசைந்தசைந்து இழுபட்டன. என் உடல் கறுப்பும் வெளுப்புமாக உடைந்து அந்நிழல்வலையில் கரைந்து விட்டிருந்தது

“என்ன சத்தம் அது?” என்றேன்

“யானை..... கீழே ”என்றாள் அவள்

நான் கார்பைனை நெஞ்சோடு சேர்த்துக் கொண்டேன்.

அவள் அதை திரும்பிப்பார்த்தாள். ஒன்றும் சொல்லாமல் விழிகளைத் திருப்பிக் கொண்டாள்.

அப்பால் பாறைச்சரிவு மீது நிலவின் ஒளி பாற்பெருக்கென வழிந்தோடியது. நிலவில் நனைந்த உயர்ந்த சிகரப்பாறை ஒன்று குளிர்ந்த தியானத்தில் நின்றது. அதன் பின்னால் அதன் தோழர்கள் கனவில் ஆழ்ந்து நிழலில் பாதி மறைந்து நின்றனர்.

”இன்று தானே சித்ரா பௌர்ணமி ? ”என்றேன் நான்.

“ம்” என்றாள் அவள்.

“நிலவு எங்கே?”

“இன்னும் மேலே எழவில்லை. மலைக்குமேல் வரும்போது நல்ல வெளிச்சம் இருக்கும்”

காற்று சுழன்று சென்றது. சருகுகள் சில எங்களை நோக்கி வந்து நின்று வட்டமிட்டன. மனதில் ரகசிய நினைவுகளை கிளர்த்தும் மணம் ஒன்று விசியது

“என்ன மணம் அது?”

”நீங்கள் மணிப்பூருக்கு வந்து எத்தனை வருடம் ஆகிறது?”

“நான்கு”

“இதுவரை இந்த பூவின் மணத்தை அறிந்ததில்லையா?”

“நான் பெரும்பாலும் முகாம்களில்தான் இருந்திருக்கிறேன்”

“துப்பாக்கி நிழலில் ?”

நான் சிரித்து ”ஆமாம்”என்றேன்

“அது மதூக மலர்”

“கேள்விப்பட்டதில்லை”

”மகாபாரதத்திலேயே அதைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. இங்குள்ள பிஷ்ணோய் வைஷ்ணவர்களுக்கு அது மிகப்புனிதமான மலர். ஆங்கிலத்தில் ஷிராய் லில்லி என்று பெயர். ” அவள் சொன்னாள் ” இங்கே உள்ள மிக உயரமான மலைகளில் ஒன்று ஷிராய் கான்ஹாங் . அங்கே இந்த மலரை பிரிட்டிஷ் நேச்சுராலஜிஸ்ட் டாக்டர்.கிங்வார்ட்

1948ல் கண்டுபிடித்து டாக்குமெண்ட் செய்தார். அவர்தான் அதற்கு ஷிராய் லில்லி என்று பெயர் சூட்டியது. மிக அபூர்வமான மலர். சாதாரணமாக தோட்டத்தில் மலராது.”

“எப்படி இருக்கும் அது?”

” அதைப்பார்க்காமல் சொல்லி புரியவைக்க முடியாது. மூன்றடி உயரமுள்ள சிறிய புதர்ச்செடிதான். மலர்கள் இலேசாக பிங்க் நிறத்தில் இதழ்கள் கொண்டிருக்கும். பவளத்தாலான பூ போலிருக்கும்”

“இங்கே மலர்ந்திருக்கிறதா அது?”

“எங்கே என்று சொல்ல முடியாது. அதன் மணம் மென்மையானது, ஆனல மிகவும் தூரத்துக்கு வீசும். ” அவள் கையை நீட்டினாள் ”அந்த மலைச்சரிவில் இருக்கலாம். அது சதுப்புமண்ணில் வளராது. ஆகவே அனேகமாக உயரமான மலைச்சரிவில்தான் பூக்கும்”

நான் அதை மூச்சுக்குள் நிறைத்தேன்.

”பறக்க முடியும்போலிருக்கிறது. ”என்றேன் ”போதையேற்றும் மணம். ” கொஞ்சம் செண்பகம் கொஞ்சம் நாகலிங்கப்பூ கலந்த மணம்

”இதை சித்ராங்கதை அர்ச்சுனனுக்குக் கொடுத்தாள் என்கிறார்கள். ”

“யார்?” என்றேன்.

“மகாபாரதத்தில் உள்ள கதை அது. அர்ச்சுனன் நாடுகாணப் போகும்போது மணிப்பூருக்கு வந்தான் . இங்கே அப்போது சித்ரவாகனன் என்ற மன்னன் ஆட்சிசெய்திருந்தான்.அவனது அழகான மகள்தான் சித்ராங்கதை. காட்டில் இனிய மலர்மணம் கேட்டு அதைத்தேடிவந்த அர்ஜ்ஜுனன் காட்டில் வனபோஜனத்துக்கு வந்த சித்ராங்கதையை சித்திரைமுழுநிலவில் சந்தித்தான். அவளைச்சுற்றி மணமெழுப்பும் மதூக மலர்ச்சோலை இருந்தது. அர்ஜுனன் அவளை அக்கணமே காதலித்தான். இருவரும் காந்தருவ மணம் செய்துகொண்டனர்.பின்னர் அவர்கள் திருமணத்தை சித்ராங்கதன் அங்கீகரித்தான். அவர்களுக்கு பப்ருவாகனன் என்ற குழந்தை பிறந்தது.”

”ஆமாம் .ஞாபகம் வருகிறது. ராஜ்குமார் நடித்த ஒரு கன்னடப்படம்கூட வந்திருக்கிறது…”

“இந்த மதூகமலரைத்தான் சித்ராங்கதை வரதட்சிணையாக கொடுத்தாள். அர்ஜுனன் அவளை பிரிந்து ஹஸ்தினபுரம் போகும்போது அவள் நினைவாக ஒரு மதூக மலரைத்தான் கொண்டுபோனான். அது அவன் திரும்பிவந்து அவளைக் கூட்டிக் கொண்டுபோவதுவரை வாடவேயில்லை”

நான் மனதை நிறைத்த இனம் புரியாத ஏக்கத்தை பெருமூச்சுகளாக விட்டு தீர்த்துக் கொண்டிருந்தேன். சட்டென்று அவள் எழுந்து ”போகலாமா? மதூகம் எங்கே மலர்ந்திருக்கிறது என்று பார்க்கலாம்”என்றாள்

நான் அவளை புரியாமல் பார்த்தேன். அவள் என்னை கவனிக்கமல்

பாய்ந்தோடிவிட்டிருந்தாள். நானும் பாய்ந்து எழுந்து அவளைத்தொடர்ந்து ஓடினேன்  இருவரும் பாறைச்சரிவில் ஓடினோம்.

ஒளியும் நிழலும் கலந்து கிடந்த காடு உயிருள்ள கருப்புவெள்ளை ஓவியக்கோலம் போலிருந்தது. நிழல்கள் அசைந்து அசைந்து உருமாற தன் உள்ளே ஓடிய காற்றின் ஒலியாக காடு மூச்சுவிடுவதைக் கேட்ட்டேன். இன்பமான முனகல்களை எழுப்பியபடி தன்னுள் நிறைந்த நறுமணத்தில் தானே மெய்மறந்திருந்தது அது.

காட்டில் புதர்களை விலக்கிச்சென்றோம். மெல்லமெல்ல காடு துலங்க தொடங்கியது. கண்பழகியதா இல்லை மேலே சித்திரை முழுநிலவெழுந்ததா? இலைகள் வெள்ளித்தகடுகளாக ஒளிவிட்டன. தளிர்கள் ஒளிபட்ட பளிங்குச்சிமிழ்கள் போலிருந்தன. அவ்வப்போது இலைகளில் இருந்து சொட்டும் நீர் ஒளித்துளியாக மண்ணைத் தொட்டு உச் உச் உச் என்றது.

நாங்கள் பேசவில்லை. கனவொன்றில் செல்வதுபோலச் சென்று கொண்டிருந்தோம்.அல்லது மகத்தான இனிமைகொண்ட பாடல் ஒன்றுக்குள் வழிதவறி உள்ளே நுழைந்துவிட்டது போல.

நிலவின் ஒளி சிதற ஒரு சிற்றோடை பாறையிலிருந்து விழுந்து சிரித்துச் சென்றது. அதில் சரிந்து புதர்கள் நீர் அருந்தின. புதர்களுடன் புதர்போல நின்றிருந்த இரு மான்கள் தலை தூக்கின. அவற்றின் கண்கள் பச்சைநிற வைரங்களாக ஒளிவிட்டன. அவற்றின் கழுத்துமயிர் சிலிர்த்திருப்பதைக் கண்டேன். காதுகளை பின்னால் தள்ளியபடி எங்களைப் பார்த்தபின் அவை மீண்டும் நீர் அருந்தின. சட்டென்று இரண்டு மான்களும் ஒரே போன்ற காலசைவுகளுடன் புதர்கள் மீது துள்ளி சென்றன. அவை நிலவு பொழிந்த ஓர் வெளியை தாண்டியபோது வெள்ளிச்சிலைகள் உயிர்பெற்றது போல மாறி

காற்றில் காலத்தில் ஒருகணம் நிலைத்து கனவாகி இருளுக்குள் மறைந்தன.

மெல்லிய இருள் சரிந்த மரநிழலில் தனியாக நின்ற யானை ஒன்று உடலை அடிமரத்தில் சாய்த்து தூங்கிக் கொண்டிருந்தது. எங்கள் காலடி ஓசையில் அது கால்களை சரியாக ஊன்றி ”ம்ம்ம்ம்”என்று வயிற்றுக்குள் அதிர்ந்த ஒலியை எழுப்பியது. துதிக்கையை நீட்டி வாசனை பிடித்தது. காதுகள் தோளில் படிந்தன. பின் அலுப்புடன் நகர்ந்து மறுபக்கம் சென்றது அது.

நிலவின் ஒளி அதிகரித்தபடியே வந்தது. ஒரு பாறை மீது ஏறினோம். எங்களைச்சுற்றி காடு மர உச்சிகளில் நிலவு அருவியெனப்பொழிய அலையலையாகக் கிடந்தது. காற்றில் அந்த கடல் கொந்தளித்தது. மலைச்சிகரங்கள் நனைந்தவை போல பிரமை கொண்டு நின்றன. கண்ணாடித்துருவல் மேகங்களுக்கு நடுவே நிலவு உருகிய தங்கம்போல ஆரஞ்சு நிற வட்டமாக அசைவிலாது நின்றது. வெண்ணிறச்சுடர் எரிந்த மேகம் ஒன்று நிலவை நோக்கி நகர்ந்தது. அது நிலவைத் தொட்டதும் நிலவு கத்தி போல அதைக் கிழித்துச் சென்றது. மேகம் சல்லாபோல ஒளி ஊடுருவ நிலவைக் காட்டியது. காடு இருண்டு பின் வெளுத்தது.

”இங்கே எங்கோதான்” அவள் கிசுகிசுப்பாகச் சொன்னாள்.

நான் பெருமூச்சு விட்டேன். அவளுடைய கன்னங்களின் பூனைமயிர் பொன்பிசிறுகள் போல ஒளிர்ந்தது. கூந்தல் இழைகள் சிதறி நிலவில் சுடர்ந்து ஒரு ஒளிவட்டம் செய்தன. கழுத்து வளைவும் கன்னங்களின் மெல்லிய உப்பலும் சருமத்தின் மலர் மென்மையைக் காட்டின. நிலவு அவற்றை மீண்டும் மீண்டும் கழுவிக் கொண்டிருந்தது. வெண்ணொளியில் அவள் சருமம் மெல்ல எரிந்து

கரைந்துகொண்டிருந்தது. நெற்றியில் மென்மயிர் சுருள்கள் நிழல்களுடன் சேர்ந்து விழுந்தாடின. சிறிய குருவி போல உடலெங்கும் பரவியிருந்த பதற்றத்துடன் அவள் சட் சட்டென்று திரும்பினாள். பாறைகளில் ஏறி இறங்கினாள். தூய கைகால்கள். தூய உடல். தூய்மையே உருவாக ஒரு பெண்.

என்னிடம் திரும்பி ”இங்கே அருகேதான்…வாருங்கள் ”என்றாள்.

சுட்டிய கரங்களில் பளிங்கின் ஒளி. சிறிய உதடுகளின் ஈரத்தில் மலரிதழின் ஒளி. உள்ளே தெரிந்து மறைந்த பற்களில் முத்துக்களின் ஒளி. ஒரு பெண்ணா நீ? பெண்ணைதேவதையாக்கும் மாயக்கரம் உன்னை தீண்டும் தருணமா இது? என்ன செய்வாய்?அப்படியே பறந்து எழுந்துவிடுவாயா வெண்சல்லா போல? ஒளிர்ந்து பிரிந்து கரைந்தழிவாயா வானில் வெண்மேகக்குவை போல?

அவளை தொடர்ந்து நானும் ஓடினேன்.

காடு அசைவிழந்திருந்தது இப்போது. ஒலியின்மை காதை நிறைத்தது. மாயக்கணம் ஒன்று நீண்டு நீண்டு காலமாகியது போல.

பாறையின் மறுபக்கம் சரிவில் இரண்டடி உயரமான புதர்செடிகள் அடர்ந்து கம்பளமாகியிருந்தன. அவற்றில் மலர்ந்த பூக்களிலிருந்து காற்று ஓடிவந்து என்னைச்சூழ்ந்தது. குளிர்ந்த காற்று. நறுமணமே தொடுகையாக மாறிய காற்று. அகம் கிளரும் எண்ணங்களே புறவயமாக மாறியுருவான காற்று.

அவள் ஓடிப்போய் அந்த செடிகளினூடாக நடந்தாள். கைகளால்

வருடினாள். அணைத்தாள். என்னால் அதை வெறுமனே பார்க்கத்தான் முடிந்தது.

அவள் அதன் நடுவெ அமர்ந்தாள். நான் அவளருகே அமர்ந்தேன்.

வானத்தில் மேகங்கள் விலகத்தொடங்கின. ஓர்¢ரு நட்சத்திரங்கள் துலங்கிவந்தன

” நட்சத்திரங்கள் வருகின்றன”அவள் சொன்னாள் ”இங்கே மேமாத இறுதியில் மட்டுத்தான் நட்சத்திரங்களை நிறைய பார்க்கமுடியும்…இந்த பூவும் மேமாதம்தான் மலரும்.”

என்னால் ஒரு சொல் கூட பேசமுடியவில்லை. நான் அப்படியே மல்லாந்து மலர் நடுவே படுத்தேன். மேகங்கள் விலக நட்சத்திரங்கள் நீல இருளில் இருந்து எழுந்தபடியே இருந்தன. சில நிமிடங்களில் வானில் பல்லாயிரம்கோடி கண்கள் திறந்து மின்னத் தொடங்கின. நடுவே நிலவு நின்றது , வைரவிரிப்பிட்ட சாலையில் இனிய கனவொன்று கண்டு நடக்கும் அரசி .

”கான்ஹாங் மலைச்சிகரத்திற்கு கீழே இது பலநூறு கிலோமீட்டர் விரிவுக்கு மலர்ந்துகிடக்குமாம். அங்கே ஷிராய்லில்லி மட்டுமே ஒரே பூ என்றார்கள்” அவள் சொன்னாள் ”அதுதான் மண்ணில் உள்ள சொற்கம் . அந்த இடத்தை நாங்கள்  கொரெள என்போம். பொன்னுலகம் என்று பொருள்…”’

” வெகுதொலைவா அது?”

“கான்ஹாங் மலை 8500 அடி உயரம். நான்கு பக்கமும் செங்குத்தாக இருக்கும். மிகமிக அடந்த காடுகள் சூழ்ந்திருக்கும். அங்கே யாரும் போக மாட்டார்கள். அதன் மேற்குபக்கம்தான் இந்தியா. கிழக்குபக்கம் மியான்மார்”

” அப்படியானால் கிழக்குச்சரிவு ‘நோ மேன்ஸ் லேண்ட்’ ஆக இருக்கும்”என்றேன்

“அப்படியென்றால்?”

“இருநாடுகளுக்கு நடுவே உள்ள பொது நிலம்.அது எந்த நாட்டுக்கும் சொந்தமில்லை. அது இந்தியாவும் இல்லை மியான்மாரும் இல்லை”

“அப்படியானால் அந்த மண் யாருக்குச் சொந்தம்?”

”யாருக்குமே சொந்தமில்லை. மனிதர்களுக்கு சொந்தமில்லாத மண் அது…”

“யாருக்குமே சொந்தமில்லாத மண்ணா!”என்றாள் அவள் வியப்புடன்.

”அங்குள்ள யானைகளுக்கு, மான்களுக்கு, மற்ற மிருகங்களுக்கு, பறவைகளுக்கு, பூச்சிகளுக்குச் சொந்தமான மண்.”

அவள் மார்பின்மீது கைவைத்தாள்.சட்டென்று மெல்ல விம்மினாள். இருளில் அவளது விம்மல் ஒலியைக் கேட்டேன்

“ஏய் ,என்ன? என்ன ?”என்றேன்

”ஒன்றுமில்லை”

“அழுதாய்”

“இல்லை”

“ப்ளீஸ் சொல்லு”

”இல்லை”

நான் பெருமூச்சுவிட்டேன். என்ன மணம் இந்த மதூகம்! நெஞ்சில் எண்ணங்கள் கூட நறுமணத்துடன் ஓடின.

“அங்கே போகவேண்டும் ”என்றாள்

“அங்கே யாரையும் அனுமதிக்க மாட்டார்கள்.இந்தியர்களை மியான்மார் அனுமதிக்காது. பர்மியர்களை இந்தியா அனுமதிக்காது… ”

” நான் இந்தியனோ பர்மியனோ இல்லை. நான் அந்த யானை போல மான் போல ஒரு உயிர்…” அவள் சொன்னாள் . குழந்தைக்குரிய வீம்புடன் ” அந்த மண்ணில் வாழ்ந்தால் எனக்கும் அது சொந்தமாகிவிடும்”

“முட்டாள்தனம்”

“இல்லை. இங்கே இபப்டி துப்பாக்கியைத்தூக்கிக் கொண்டு ஒருவரை ஒருவர் கொல்வதுதான் முட்டாள்தனம். மண்ணை இந்தியா மியான்மார் பூட்டான் என்றெல்லாம் பெயரிட்டு பங்குபோடுவதுதான் முட்டாள்தனம். நோ மேன்ஸ் லேண்டில் வாழ்பவன்தான் உண்மையான மனிதன்…”அவள் மூச்சுவாங்கியபடி சொன்னாள் ”அங்கே போகவேண்டும்… போகவேண்டும். ”

பின்னர் அப்படியே மல்லாந்து படுத்தபடி ” நோ மேன்ஸ் லேண்ட்…. ..நோ மேன்ஸ் லேண்ட்….” என்று முனகிக் கொண்டாள்.

விண்ணில் விரிந்த நட்சத்திரப் பிரவாகத்தை நான் நோக்கினேன். என்னை கண்ணிமைத்துக் கண்ணிமைத்து பார்த்தன. சட்டென்று ஒரு விண்மீன் உதிர்ந்தது

அவள் எழுந்து அமர்ந்து ”அது நட்சத்திரம்…. அங்கேதான் அது உதிர்கிறது… மதுகமலர்ச்சமவெளியில்…”என்றாள்.

”நெல்” என்றாள்

”ம்”

”அங்கே போனால் நீங்களும் வருவீர்களா?”

மெல்லிய பிளேடு சதையை கிழிப்பதுபோல என் ஆத்மாவை கிழித்துச்சென்றது அந்தக்குரல். நான் பதில் சொல்லவில்லை

”நெல்...”

‘ம்”

”சொல்லுங்கள்...வருவீர்களா?”

“நான் ஒரு ராணுவ வீரன்...எனக்கு கடமைகள் உள்ளன”

அவள் பதில் சொல்லவில்லை. இருளில் சட்டென்று அவளது தேம்பல் ஒலியை கேட்டேன்

”ஜ்வாலா...ப்ளீஸ்..” என எழ முயன்றேன்

“ப்ளிஸ் ப்ளீஸ் என்னை விட்டுவிடுங்கள்.. என்னை அழவிடுங்கள். ப்ளீஸ்”

நான் சிறியமனிதனாக புழுவாக என்னை உணர்ந்தபடி அப்படியே கிடந்தேன்.

இந்தக்கணத்தில் நான் என்ன செய்யவேண்டும்? மெல்லுணர்வுகளினால் கோழையாவதா? வீரம் என்பதுதான் என்ன? அழிப்பது, அதை வெற்றி என்று எண்ணிக் கொள்வது, வேறென்ன ? ஆணவமில்லாது வீரம் உண்டா என்ன? இல்லை. என்னுடைய கடமை . என் மண். என்னுடைய நாடு. நெல்லையில் சிறியவீட்டில் இந்நேரம் தூங்கிக் கொண்டிருக்கும் என் அம்மா..ஏன் அப்பா... என் நற்பெயர்...என் மூதாதையர்...

என் கன்னங்களை நனைத்தபடி கண்ணீர் ஓடியது.

நட்சத்திரங்களின் நடுவே வானம் வெளிறத் தொடங்கியது. நிலவின் ஒளி குறைந்து அது வெண்தகடாக மாறி கீழ்வானில் நின்றதைக் கண்டேன்.காட்டுக்குள் பறவை ஒலிகள் எழுந்தன. முதல் பறவை உபுஉபுஊப் என்று முழங்கியது. பின்னர் கிளிகள். வானின் அரையிருளில் பறவைகள் பறக்கும் அசைவு தெரிந்தது.

பின்னர் சில பறவைகள் எங்கள் அருகே வந்து அமர்ந்தன. எழுந்து பறந்தன. மலை உச்சி வானிலிருந்து துலங்கி எழுந்துவந்தது. அதன் மடிப்புகளும் புடைப்புகளும் தெளிவாக அருகே நெருங்கிவர தலைமீதெழுந்து நின்றன பெரும் பாறைகள். அங்கிருந்து மலைக்கழுகுகள் சிறகடித்து வானில் சுழன்றன

திரைகள் ஒவ்வொன்றாக இழுபட்டு மறைந்தன. முதலில் கரிய திரை. பின் சாம்பல் நிற திரைகள். பின் மெல்லிய நீலத்திரை. இளநீல ஒளியில் அப்புதர்ச்செடிகளின் இலைப்பச்சை அடர்நிறத்தில் ஈரத்தின்

பளபளப்புடன் காற்றில் சிலும்பியது. வாடாமல்லிப்பூ நிறத்தில் கவிழ்ந்த குவளை போன்ற மலர். மெல்லிய ஊதாவரிகள் இளம்சருமத்தில் ஓடும் உதிரக்குழாய்வலை போல. பளிங்கில் பரவிய வரிகள் போல. நீண்ட புல்லிகளில் மகரந்தம் செறிந்த பூனைமயிர்கள் புல்லரித்து நின்றன.

வானிலிருந்து மெல்லிய சிவப்பு நிறமான ஒளி மலைச்சிகரங்கள் மீது பொழிந்தது .அவை அதை காட்டுக்கு மேல் விரித்தன. தளிர்கள் ஒளிர காடு ஒளிகொண்டது. காற்றும் சிவந்திருந்தது. சிவந்த காற்றில் விரிந்த செஞ்சிறகுகளுடன் பெரிய பட்டாம்பூச்சிகள் பறந்துவந்தன. அவை மலர்களின் நடுவே மலர்களாகப் பறந்தன. அமர்ந்து படபடத்து எழுந்தன. காற்றில் மலர்ந்த அவற்றின் சிறகுவிழிகள் எங்களை பார்த்து இமைகொட்டின.

பட்டாம்பூச்சிகள் நடுவே அவள் கண்மூடிக்கிடப்பதைக் கண்டேன். பெரிய பட்டாம் பூச்சி ஒன்று இறகு ஒடுக்கிக் கிடப்பதுபோல.

நான் அந்தமலரை எடுத்து என் கைகளில் வைத்தேன். அதன் மென்மை. அதன் நிறங்களின் ஊடுபாவு.அதன் குளிர்.அதன் உயிர். அதை என் முகத்துடன் சேர்த்தேன். அதன் தொடுகையில் என்னுள் ஒரு நரம்பு முறிந்தது. என்னுள் காலை ஒளியின் கதிர்கள் விரிந்தெழுந்தன.

”ஜ்வாலா” என்றேன்றாந்த மலருடன் அவளருகே குனிந்து

”ம்” என்றாள் கண்ணைத்திறக்காமலேயே

”நான் இனிமேல் எங்கும் திரும்ப மாட்டேன். என்னால் முடியாது”

அவள் கண்களை திறந்து என்னை பொருளில்லாமல் பார்த்தாள்.

”நாம் நோ மேன்ஸ் லேண்டுக்குச் செல்வோம்.”

”நான் நேற்று எதுவோ உளறினேன். விடுங்கள்”

“இல்லை. இனி என்னால் ஆயுதம் தூக்க முடியாது. இனி நான் சீருடை அணியவும் மாட்டேன்” என்னுள் புதிய எண்ணங்கள் கொப்பளித்தெழுந்தன. உள்ளம் எழுந்து எம்பிய வேகத்தால் என்னால் மண்ணில் கால் பாவி நிற்கக் கூட முடியவில்லை.

ஒரு கணத்திலெழுந்த ஆவேசத்தில் நான் எழுந்து என் கார்பைனை தூக்கி சுழற்றி வீசினேன். என் சீருடையில் இருந்த பட்டையை ஆங்காரத்துடன் பிய்த்துவீசினேன்.

அவள் எழுந்து என்னருகே என்னை வெறித்து நோக்கியபடி நின்றாள்.

என் மனதில் உற்சாகம் நிறைந்தது. வாய்விட்டுச்சிரித்தபடி என் தொப்பியை எடுத்து சுழற்றி வீசினேன். அது சுழன்று காற்றில் திரும்பி வந்தது. சிரித்தபடி ஓடிப்போய் எடுத்து மீண்டும் வீசினேன். போவதைக் கண்டு ”ஹா!”என்று கைவீசி சிரித்தேன். பெல்ட்டை கழற்றி மீண்டும் கூவியபடி வீசினேன். அவளும் என்னுடன் சேர்ந்துகொண்டாள்,இருவரும் சிறு குழந்தைகள் போல சிரித்து துள்ளி குதூகலித்தோம். அந்தக்கணங்களில் சிந்தனை இல்லாமல் மகிழ்ச்சி மட்டுமே மனமாக இருந்தோம்.

பின் அவள் இரு கைகளையும் விரித்தபடி என்னை நோக்கி நின்றாள். கண்ணீர் நிறைந்த கண்களும் உணர்ச்சியால் கொந்தளிக்கும் முகமுமாக. நான் அவளைப்பார்த்து அக்கணத்திலேயே உறைந்து காலமின்றி நின்றேன்.

அக்கணம் ஒளியுடன் உடைந்தபோது அவள் பாய்ந்து வந்து துள்ளிஎன்மீது தொற்றி என்னை இறுகப்பற்றிக் கொண்டாள். என் இருகைகளையும் அவளைச்சுற்றி முறுக்கி அவளை இறுக அணைத்துக் கொண்டேன். என் உடலுக்குள் அவளை அழுத்திச் செலுத்திவிடுபவனைப்போல. அவள் உடலிலிருந்து அவள் அக எழுச்சியை நெரித்துப் பிதுக்கி வெளியே எடுப்பவன் போல. அவள் முகத்திலும் கன்னங்களிலும் கழுத்திலும் வெறிகொண்டு முத்தமிட்டேன். முத்த்த்த்த்த்த்த மிட்ட்ட்ட்ட்ட்டு அவளை மூச்சுத்திணறச்செய்தேன். என் உதடுகள் அவள் உதடுகளை கண்டடைந்த கணம் அந்த வேகம் நின்றது. அவள் இதழ்கள் வழியாக அவள் ஆத்மாவையே பருகினேன்.

பின் பிரிந்து ஒருவர் முகத்தை ஒருவர் நோக்கி ஒளிந்துவிளையாட்டில் கண்டுகொண்ட குழந்தைகள் போலக் கூவிச்சிரித்தோம். மீண்டும் முத்தம். பிறகு பிரிந்தபோது இருவர் கண்களிலும் நெடுங்காலம் பிரிந்தவர் கூடுவது போல கண்ணீர் . விம்மி விம்மி அழுதபடி தழுவி ஒன்றாகி நின்றோம். காலமேயில்லை. காலம் என்பது இன்ப துன்பங்களுக்குடையேயான ஊசலா? இன்பம் மட்டுமேயான உச்சத்தில் காலமே இல்லையா? காலமன்பது தனியுடல் ஒன்று கொள்ளும் பதற்றம்தானா? இணையும் உடல்களுக்கு காலமே இல்லையா?

எங்களைச் சுற்றி வண்ணத்துப்பூச்சிகளும் தேன்சிட்டுகளும் சிறகடித்துக் கலைந்தன. மலைகளுக்கு அப்பால் சிவந்த சிறகுகளை நாற்புறமும் வீசியபடி சூரியன்.

நாங்களிருவரும் சிறு குழந்தைகளாகி விட்டிருந்தோம். காடு எங்கள் விளையாட்டுப்பூங்காவாகியது. அதன் அடர்த்தி இருள் அனைத்தும் அழகாக மாறிற்று. அதன் உக்கிரமும் ஆபத்தும் விளையாட்டு ரகசியங்களாக மாறின. பாறைகளில் ஆர்ப்பரித்துகூவி ஏறி, புதர்களினூடாக வகுந்து சென்று, சிறு நீரோடைகளை சிரித்தபடி உருண்டைக்கற்களில் கால்வைத்து சமன்கொண்டு கடந்து சென்றபடியே இருந்தோம். அந்தக் களிவெறி அடங்கவேயில்லை. எங்கள் கைகளோ உடலோ ஒருவரோடொருவர் தொட்டால் அங்கேயே நின்று இறுகத்தழுவி முத்தமிட்டோம்.

காடு அவளுக்கு நன்குபயின்ற புத்தகம்போலிருந்தது. காய்களும் கனிகளும் மட்டுமில்லாமல் தளிர்களும் பூக்களும்கூட உணவாகுமென்று சொன்னாள். மணிப்பூர் போராளிகள் எப்போதும் மிகக் குறைந்த அளவுக்கே உலர் உணவு கையில் வைத்திருப்பார்கள் என்றாள். களைத்துச் சோர்ந்து மாலையில் ஒரு பெரிய மரத்தடியில் அமர்ந்தோம். நான் அப்படியே கைகளை தலைக்குவைத்து படுத்துவிட்டேன். மனம் இன்னும் இன்னும் என்று தாவியது. அவள் அந்த மரத்தை சுற்றி வந்து பார்த்தாள். ”இது தேக்குமரம். இந்த மாதம்தான் பூக்கவேண்டும். பூக்காமலேயே நிற்கிறது”என்றாள்.

“நீ அதை தொட்டால்போதும், அப்படியே பூத்துவிடும்”என்றேன்

”ஹாங் ” என்று சிணுங்கியபடி வந்து என்னருகே அமர்ந்தாள். நான் அவளை இழுத்து அணைத்துக் கொண்டேன். அவள் உதடுகளின் வெம்மை வழியாக அவளுள் ஓடு துடிப்பை உணர்ந்தேன்.பின்பு பெருமூச்சுடன் அவள் என் மார்பில் சாய்ந்தபடி ”வரும்போது எனக்கு ஏனோ அடிக்கடி சாவது பற்றிய நினைப்பாகவே இருந்தது ”என்றாள்

“ஏன்?”என்றேன்

“ஏன் என்று தெரியவில்லை. இனிமேல் சாவதுமட்டும்தான் மிச்சம் என்று பட்டது. வாழ்க்கையின் உச்ச கட்ட மகிழ்ச்சியை அனுபவித்த பிறகு ஏன் வாழவேண்டும்?”

“உளறாதே”

“இல்லை நெல். மனிதர்களுக்கு மகிழ்ச்சியே இல்லை. மகிழ்ச்சியாக இருக்க அவர்களுக்கு தெரியவில்லை. அடையாளங்களையும் துப்பாக்கிகளையும் வைத்திருப்பதுவரை எவருமே உண்மையான மகிழ்ச்சியுடன்  இருக்க முடியாது. மகிழ்ச்சியைதேடி அது இன்றைக்குவரும் நாளைக்கு வரும் என்று கனவுகண்டு அவர்கள் உயிர்வாழ்கிறார்கள். நாம் மகிழ்ச்சியை கண்டுவிட்டோம். அதை நிறைய அனுபவித்தபிறகு சாவதுதானே சரியாக இருக்கும்?”

”உனக்கு பிராக்டிகல் சிந்தனைகள் வந்துவிட்டன. அதைத்தான் இப்படி ரொமாண்டிக்காக மாற்றிக் கொள்கிறாய்”என்றேன்

அவள் என்னை ஏறிட்டுப்பார்த்தாள்

“மதூகச் சமவெளிக்குப்போன பிறகு என்ன செய்வது என்று நினைக்கிறாயா?”

“என் உடைகளை கழற்றிவீசுவேன், நீங்கள் ஆயுதங்களை வீசியதுபோல. ஏவாள் ஆகிவிடுவேன். அதுதான் ஏதன் தோட்டம்” அவள் கையை விரித்தாள் ”நெல் நான் பெண் என்று உணர்ந்தபின் ஒவ்வொரு கணமும் உடைகளைப்பற்றிய கவனத்துடனேயே வாழ்கிறேன் தெரியுமா? உடைதான் என் விலங்கு…”

நான் சிரித்தபடி அவளை அணைத்துக் கொண்டேன். ”உன்னிடம் எனக்கு பிடித்ததே இதுதான் தெரியுமா? முன்பு மனிப்பூர் தேசியவாதம் பேசிக்கொண்டிருந்தபோதும் சரி, இப்போதும் சரி ,நீ மண்ணிலேயே கால் வைப்பதில்லை. எல்லாம் கனவு. எல்லாம் உச்சகட்ட வேகம்…”

”நான் எப்போதுமே அப்படித்தான்”என்று என் மார்பில் முகம் புதைத்தாள்”எனக்கு இங்கே ஒன்றுமே பிடிக்கவில்லை நெல்.எல்லாமே கட்டுப்பாடுகள். எல்லாமே சிக்கல்.படிப்பு போர் எல்லாமே அபத்தமாக இருக்கிறது”

”என் அம்மா பிறந்ததிலிருந்து இதுவரை சமையற்கட்டிலேயேதான் அதிகமும் வாழ்கிறார்கள். தோசை இட்டிலி சாம்பார் சோறுகுழம்பு இதேதான் வாழ்க்கை. அவளிடம்  போனதடவை கேட்டேன், இதெல்லாம் சலிக்கவில்லையா என்று….”

”என்ன சொன்னார்கள்?”

“அவளுக்கு புரியவில்லை. ஏன் சலிக்கவேண்டும்? என் குழந்தைகளுக்காகத்தானே எல்லாம் செய்கிறேன் என்றாள்” நான் அவள் கண்களைப் பார்த்துச் சொன்னேன் ”அன்பு இருந்தால் எல்லாமே இனிமையாக மாறிவிடும். அன்பு மட்டும்தான் பூமியில் ஒரே அர்த்தம் வாழ்க்கைக்கு”

“காதல்?”என்றாள் குறும்புடன்.

“அன்பை காமத்தில் கலந்து நன்றாக கொதிக்கவைத்தால் அதுதான் காதல்”

அவள் சிரித்து என் மார்பில் குத்தினாள்.

”கான்ஹாங் வேலியிலிருந்து அப்படியே நாம் பூட்டான் போய்விடுவோம்.”என்றேன். ”அங்கே எனக்குத்தெரிந்த ஒருவர் இருக்கிறார். பூட்டானில் நாம் பெயரையும் அடையாளத்தையும் மாற்றிக் கொள்வது ரொம்ப எளிது…. எனக்கு எங்கும் ஆங்கிலம் சொல்லிக்கொடுக்கும் வேலைகிடைக்கும்.”

”பூட்டான் போகும் வழி எனக்குத்தெரியும்… நான்குமுறை போயிருக்கிறோம்”என்றாள்

”பூட்டானில் நாம் வசித்தாலும் நாம் எந்த நாட்டுக்கும் சொந்தக்காரர்களாக இருக்கக் கூடாது. அங்கிருந்து வேறு எங்காவது போகவேண்டும். ஐரோப்பா. அமெரிக்கா.. எங்காவது….”

“அடிக்கடி நோ மேன்ஸ் லேண்டுக்கு வரவேண்டும்”

“பிள்ளைகளையும் அழைத்து வருவோம்..”

அவள் சிரித்தபடி என் மார்பில் முகத்தை புதைத்தாள்.

”இதோபார் ஏய்”என்று அவளை பிய்த்து எடுத்தேன். அவள் தலை நிமிரவேயில்லை. ” கற்பனைசெய்து பார்….. மங்கோலியக் கண்களும் மூக்கும் முடியும் கொண்ட ஒரு  தமிழ்க் கறுப்புக் குழந்தை… ம்ம்ம் தங்கோலிய இனம்…. ” நான் என் முகத்தை கண்களை இடுக்கி கன்னங்களை உப்பி மங்கோலியத்தனமாக மாற்றி காட்டினேன் ”எப்படி இருக்கிறது? ”

”அய்யோ!”என்றாள் அப்படியே முகத்தைப்பொத்தி குனிந்து அமர்ந்தாள். சிரிப்பில் உடல் குலுங்கியது. நான் அவள் முகத்தை பிடித்து தூக்கி கண்களைப் பார்த்தேன்.என்னை கைகளால் செல்லமாக  மாறி மாறி அடிக்க ஆரம்பித்தா¦ள். நான் அவள் கைகளைப் பிடித்தேன். திமிறினாள். இருவரும் ஒருவர்மேல் ஒருவர் விழுந்து சிரித்தோம். சிரிப்பு பற்றிக் கொண்டுவிட்டது. சிரித்துசிரித்து ஓய்ந்து மீண்டும் நினைத்துக் கொண்டு சிரித்தோம். அவள் கண்ணீருடன் ஓயும்போது நான் மங்கோலிய முகம்போல கண்களை இடுக்கிக் காட்டி ” எக்ஸ்க்யூஸ் மி, ஐ யாம் எ தங்கோலியன். மேட் இன் கான்ஹாங்”என்றேன். மீண்டும் வயிற்றைப்பற்றிக்கொண்டு சிரித்தாள். பிறகு ”ப்ளிஸ் வேண்டாம் ப்ளிஸ்”என்றாள்

இருவரும் மீண்டும் எழுந்து நடந்தபோது அவள் சோர்ந்து தலைகுனிந்து பெருமூச்சுவிட்டாள்.

“ஏன் ஒருமாதிரி இருக்கிறாய்?”

“ஒன்றுமில்லை”

“என்ன திடீரென்று?”

“நெல், நாம் மிக அதிகமாக சந்தோஷப்படுகிறோம். ரொம்பச் சிரித்தால் ரொம்ப அழுவோம் என்று பாட்டி சொல்வாள்”

”எல்லா ஊரிலும்தான் அதைச் சொல்கிறார்கள். மனிதர்களுக்கு சந்தோஷமாக இருப்பதற்குப் பயம்”

”இல்லை நெல், மனிதர்கள் இத்தனை சந்தோஷம் இருக்க இயற்கை அனுமதிக்காது”

“ஸோ ?”

“எனக்கு பயமாக இருகிறது”

“என்ன?”

“ஒன்றுமில்லை. ஆனால் எனக்கு இதுவே போதும். நான் பிறந்ததே இதற்காகத்தான்....”

”பின்னே என்ன செய்வது அழலாமா கொஞ்சநேரம்?”

”உண்மையிலேயே  கொஞ்சநேரம் அழுதால்தான் மனம் சமநிலை அடையும்போலிருக்கிறது”

“உளறாதே”

”உளறவில்லை.... இவ்வளவு இனிமை இவ்வளவு உத்வேகம்... என்னாள் தாளமுடியவில்லை. சிலசமயம் நல்ல பாட்டுகளைக் கேட்கும்போது கொஞ்சநேரம் மனம் நெகிழும். கண்ணீர் வரும். அதிகம் போனால் ஐந்து நிமிடம். அவ்வளவுதான்.....ஆனால் இப்போது ஒரு இரவும் ஒரு பகலும் அதே மனநிலையில் இருந்திருக்கிரோம்.... இது ஒரு மனிதப்பிறவிக்கு ரொம்ப அதிகம்...”

”சரியான உளறல்.... சக்கரைமிட்டாய் ரொமாண்டிசிசம் என்று இதற்கு பெயர்”

“ஏப்... நீ சரியான ஏப்...”’

”என்ன ?” என்றேன்

“ஏப். நீ கொரில்லா குரங்கு போல கருப்பாக இருக்கிறாயல்லவா? அதனால்தான்”

“சீ நாயே அடிப்பேன்”என்று கையை ஓங்கினேன். அவள் தள்ளிப்போனாள்.  உரக்கசிரித்தாப்டி ”ஏப். கறுப்பு நிறம் பெரிய

பல்...ஏப்”

நான் இடுப்பில் கைவைத்து நின்றபடி ”உனக்கு என்னபெயர் போடுவது? ம்ம்...புஸ்ஸி..”

“என்ன?”

“புஸ்ஸிகேட். நீ சயாமீஸ் பூனைக்குட்டி போல இருக்கிறாய்”

”பூனை பிராண்டும்” அவள் கை நகங்களை நீட்டியபடி சீறி பற்களைக் காட்டி என்னை நோக்கி ஓடிவந்தாள். நான் சிரித்தபடி விலகி ஓடி அவளை அலைக்கழித்து ஒரு சரிந்த மரத்தில் ஏறி கொரில்லா போல மார்பில் அடித்து தலையைத்தூக்கி ஓஒ என ஒலியெழுப்பினேன்.

அவள் சிரித்து சிரித்து உட்கார்ந்து ”அச்சு அசல்...குரங்கேதான்”என்றாள்

”சும்மாவா? ஆதியில் குரங்கு மனிதனாக மாறியதே எங்கள் பகுதியில் வைத்துத்தான்”

”அப்படியா?” என்றாள் நக்கலாக

”மணிப்பூரில் மனிதர்கள் குரங்காக மாறுகிறார்கள்”

”யூ”என்று என்னை அடிக்க வந்தாள். நான் அவளைப் பிடித்து தட்டாமாலை சுற்றி நிறுத்தினேன்

“தலை சுற்றுகிறது” என்றாள்

”என்மீது சாய்ந்துகொள்”

“அப்போது உலகமே சுற்றும்”

“ஜ்வாலா…உனக்கு ஒரு விஷயம் தெரியுமா?”

“என்ன?”

“புஸ்ஸி என்றால் இன்னொரு அர்த்தம் உண்டு”

“ம்?”

நான் அவள் காதில் சொன்னேன். அவள் நிஜமாகவே சீறி கோபவெறியுடன் என்னை அடிக்க நான் ஓடினேன். தரையிலிருந்து கற்களை எடுத்து வீசினாள். நான் துள்ள அவை எதுவும் படவில்லை. தரையில் கால் உதைத்து மெல்ல அழுதாள்.

“புஸ்ஸி”

”நான் போகிறேன்.நான் என் அப்பாவிடமே போகிறேன். உன் கூட வரமாட்டேன்” அவள் திரும்பி சென்றாள்

”ஏய் …இதோபார்”என்று நான் பின்னால் ஓடினேன்.அவள் தோளை பற்றினேன்

”என்னைத் தொடாதே”

”ஸாரி”

”ஐ ஹேட் யூ. நீ என்னை தொடாதே”

”சரி தொடவில்லை” என்றேன் ”வா..”

”ஐ ஹேட் யூ…ஐ ஹேட் யூ”

“சரி.” என்றேன் . ” ஐ லவ் யூ …ஐ லவ் யூ”

“நீ என்னை அப்படி கூப்பிடக்கூடாது”

“இல்லை”

“சத்தியமாக?”

“சத்தியமாக”

“இந்தக் காடுமேல் சத்தியமாக?”

“காடுமேல் சத்தியமாக. போதுமா. வா”

அவள் என்னுடன் திரும்பி நடந்தாள்.

‘ஜ்வாலா உன்னை என்ன சொல்லி கூப்பிடக்கூடாது?புஸ்சி என்றுதானே?”

“யூ ”என்று சீறி கால்களை உதைத்து சிணுங்கி நின்றாள்

”அடாடா இதற்கெல்லாம் அழுவாயா? சரி இனிமேல் சொல்ல மாட்டேன்”

“கடவுள்மீது சத்தியமாக?”

”சத்தியமாக”

“என் மீது சத்தியமாக”

‘சரி ”

நான் அவளை பற்றி இருகைகளையும் பிடித்து முன்னால் நிறுத்தி ”இந்த அழகான காட்டில்வைத்து உன்னை சுத்தமான கவிதையால் வர்ணிக்கவேண்டும் போலிருக்கிறது தெரியுமா?” என்றேன் .”உன் அழகைச்சொல்ல ஒரே ஒரு வார்த்தைப்போதும். கவித்துவமான வார்த்தை”

“ம்?”

”புஸ்ஸி ! ”என்றேன். அவள் சீறி என்னை அடித்து பிராண்டி பிறகு ஒரு கணத்தில் வெடித்துச் சிரித்தாள்.

சட்டென்று அவள் செவி கூர்ந்தாள்.

”என்ன?”என்றேன்

அப்பால் ஒரு குரல் கேட்டது ” லெ•ப்டினெண்ட் சர்!”

இன்னொரு குரல் ”பிள்ளைவாள்!”

”நாயர்!”என்றேன்.

”யார்?”

“என் செகன்ட் லெ·ப்டினெண்ட்” என்றேன் .அவளை இழுத்தபடி ”வா”என்றேன்.

இருவரும் புதர்களில் ஒளிந்து ஓடினோம். மூச்சிரைக்க ஓடி நின்று திரும்பிப்பார்த்தோம். நான் ஒரு சிறுமரத்தில் ஏறி பார்த்தேன்

நாயர் முழுச்சீருடையில் கையில் எம்16 ரை·பிளுடன் முன்னால் வர அவன் பின் எட்டுபேர்கொண்ட இந்திய ராணுவக்குழு ரை·பிள்களுடன் வந்து கொண்டிருந்தது.

நான் இறங்கி ”என்னைத்தேடிவருகிறார்கள்.” என்றேன்.

அவள் பீதியுடன் ” சுடுவார்களா?”என்றாள்.

“கண்டிப்பாக. ஜ்வாலா நாம் இப்போது இருதரப்புக்கும் பொதுவான எதிரிகள்… நமக்கு நாடு இல்லை. நம்மை யார் பார்த்தாலும் சுடுவார்கள்…”

நாங்கள் காடு வழியாக குனிந்தும் தாவிக்குதித்தும் தப்பி ஓடினோம்.

சட்டென்று எதிரே ஒரு பாறைமீது நாயர் தோன்றினான்.

”ஹாண்ட்ஸ் அப்...” என்றான். கையில் கார்பைனுடன் முன்னால் நகர்ந்தபப்டி ” லெ•ப்டினெண்ட் நெல்லையப்பன், யூ ஆர் அண்டர் அரெஸ்ட்”

“நாயர் நான்...”

“ஆயுதங்களை கீழே போடுங்கள் லெப்டினெண்ட் .”

“என்னிடம் ஆயுதம் ஏதுமில்லை”

“பிஸ்டல்”

“எதுவுமில்லை”

“சரி. கைகளை தலைக்குமேல் வைத்துக் கொண்டு அப்படியே நில்லுங்கள். சார்ஜெண்ட் அவருக்கு விலங்கிடுங்கள்”

ஒரு ஹவல்தார் மேஜர் ரை•பிள் ஒருகையில் இருக்க என்னை அணுகினான்.

நான்” இதோ பார் நாயர்...” என்றேன்

” ஸாரி லெப்டினெண்ட் சர், சமாதானங்கள் வேண்டாம்….நீங்கள் இந்தப்பெண்ணுடன் தப்பி ஓடினீர்கள். நானே பார்த்தேன். என்னால் நம்பவே முடியவில்லை. ஆனால் நானே பார்த்தேன் . நீங்கள் மியான்மார் எல்லைக்குத்தான் ஓடுகிறீர்கள் என்று ஊகித்து இங்கே வந்தேன்” நாயர் இறுகிய முகமும் இடுங்கிய கண்களுமாக என்னைப்பார்த்தான்.

“நான் சொல்வதைக்கேள்… நாயர்….” ஹவல்தார் மேஜர் என் கைகளை பின்னால் கட்டி விலங்கிட்டான். இன்னொரு லான்ஸ் நாயக் அவளைப் பிடித்து முன்பக்கமாகவே கைகளை வைத்து விலங்கிட்டான்.

”நாயர்….”

“ஷட் அப் யூ பிளடி பாஸ்டர்ட் ”என்று நாயர் வெடித்தான் ” நீ தேசத்துரோகி. நட்புத் துரோகி. யூ….” தன்னிலை இழந்து தன் எம்4 கார்பைன் சிலிண்டரை ஓங்கி என்னை அடிக்க வந்தான். அடக்கிக் கொண்டு நின்று குமுறினான். பற்களைக் கிட்டித்து நின்று பின் திரும்பி ”டேக் ஹிம்”என்றபடி நடந்தான்

எங்களை நடுவே விட்டு அவர்கள் சூழ்ந்து கொண்டார்கள். பயனெட் சூடிய எம்16 ரை•பிள்கள் சூழ்ந்து வர நாங்கள் மௌனமாக நடந்தோம்.

நாயர் மீண்டும் திரும்பினான்,” பிள்ளைவாள்… எதுக்காக இப்டி செஞ்சீங்க? எதுக்காக கம்பெனியையே காட்டிக் கொடுத்தீங்க?சொல்லுங்க” குரல் உடைய” நம்மாட்கள் அம்பத்திமுணுபேர் செத்துப் போனாங்க பிள்ளைவாள்.

”என்றான் .உடைந்த குரலில் ”எல்லாரும் உங்ககூட பேசி பாடி சிரிச்சு சொந்த ரத்தம் போல வாழ்ந்தவங்க….. உங்க குடும்பம் பிள்ளைவாள்… ” குரல் வெறிகொண்டது”…..சொல்லுங்க இத்தனைபேரை கொன்னுட்டு உங்களுக்கு அப்டி என்ன கிடைக்குது பர்மாவில?”

நான் சொல்லிழந்து நின்றேன்

”என்ன குடுக்கிறாங்க ?பொண்ணா பணமா?என்ன ,சொல்லுங்க பிள்ளைவாள்”

“நாயர்…நான்..நீ நினைக்கிற மாதிரி”

“சீ வாய மூடுடா நாயே… இதுக்குமேலயும் பசப்புறியா? இங்கேயே சுட்டுத்தள்ளிருவேன் ரெண்டுபேரையும்….. நம்ம கம்பெனியை காட்டிக்குடுத்ததே நீதான் …. ” கலங்கிய கண்களுடன் நாயர் பைத்தியம் போலிருந்தான் .” இல்லாட்டா ஏன் பர்மிய எல்லைக்கு ஓடினே? எங்கடா உன்னோட பாட்ஜும் ஸ்டாரும்…?”

நான் ஒன்றும் சொல்லவில்லை

”பொறந்த ஊருக்கே நாத்தத்த கொண்டுவந்திட்டியே நெல்லையப்பா… துரோகி  துரோகீ ”சட்டென்று நாயர் திரும்பி என் முகத்தில் துப்பினான். வெறியுடன் என்னை மாறி மாறி அடித்தான்.

‘நோ நோ நோ” என்று அவள் வீரிட்டாள்” அவர் ஒன்றும் செய்யவில்லை நான்தான்..ப்ளிஸ்”

“ஷட் அப்! யூ பிளடி பிச்” என்றான் லான்ஸ் நாயக்.

நாயர் ஓய்ந்து மூச்சிரைத்தான். ”உன்னை எப்டி நினைச்சேன். உனக்காக சாகறதுக்குத்தயரா இருந்தேன்.... சீ ”  நாயர் திரும்பி முன்னால் நடந்தான். சட்டென்று தன் ரை•பிள் சிலிண்டரால் தன் நெற்றியையே ஓங்கி அடித்தான். அவன் முதுகு அதிர்வதைக் கண்டேன்

”சார்’என்றான் ஹவல்தார் மேஜர்

”கமான்.குயிக்”

நாங்கள் குன்றைத்தாண்டினோம். சரிவிறங்கும்போது அப்பாலிருந்து முதல் குண்டு விசிலுடன் பறந்துவந்தது. அது லான்ஸ் நாயக்கை தொட்டுச்சென்றது.

” ஆர்டர்! டவுன் !”என்றபடி நாயர் விழுந்து பதுங்கினான். நான் ஜ்வாலாவை பாய்ந்து அமுக்கி படுக்கவைத்தேன். படுத்தபடி தவழ்ந்தோம்.

நாயர் தன் கார்பைனை எடுத்துக் கொண்டு மெல்ல எழுந்தான். அவன் தலை தெரிந்ததும் குண்டுகள் சீறி வந்து மரப்பட்டைகளை சிதறடித்தன. தலைக்குமேல் பறவைகளின் ஓலம் எழுந்தது. நாயர் குண்டுவந்த திசை நோக்கி சுட்டான். ஒரு அலறல் கேட்டது. குண்டுகள் நிலைத்தன. மறுகணம் பிற ஜவான்களும் எழுந்து அதே திசை நோக்கி சரசரவென சுட்டார்கள்.

”மோவ் வைல் ஷ¥ட்” என்றான் நாயர்.

சுட்டபடியே அவர்கள் எங்களுடன் நகர்ந்தார்கள். ஒரு கிரனெட் வந்து அருகே விழுந்து வெடித்தது. எதிரே வந்த பாறையின் இடுக்கில் ஏறும்போது குண்டுபட்டு லான்ஸ் நாயக் அலறியபடி சரிந்து சறுக்கிச்சென்று விழுந்தான்.

நாயர் போரின்போது அவனில் கைகூடும் ஆழ்ந்த அமைதியுடன் ஒளிரும் கண்களுடன் இருந்தான். வயலார் ராமவர்மாவின் மலையாள காதல்பாடல்களை உருகி உருகிப்பாடும் நாயராக அப்போது அவன் இல்லை.

நாயர் இலக்கு தவறாது இன்னொரு முறை சுட்டுவிட்டான். அங்கே அலறல் கேட்டது.

பாறையை நாங்கள் கடந்து இறங்கும்போது பக்கவாட்டில் இருந்து குண்டுகள் வந்தன. பாறையில் கிணிங் கிணிங் என்று சிதறின. ஒரு ஜவான் குண்டுவாங்கி குப்புற விழுந்தான். மீதி ஏழுபேரும் சுட்டபடியே தவழ்ந்தார்கள்.

பாறைக்கு அப்பால் புதர் சரிவு. அங்கே சென்றால் குண்டுகளிலிருந்து சற்று பாதுகாப்பு. அவர்கள் நிறையபேர் இருக்கக் கூடும். சுற்றிவளைத்தபடியே இருக்கிறார்கள். முழந்தாளிட்டு நகர்ந்து புதர்களை அணுகினோம். இன்னும் இரு குண்டுகள் இரு ஜவான்களை வீழ்த்தின.

நாயர் துணிந்து முடிவெடுத்தான். திரும்பி பாறைமீது பாய்ந்தோடினான்.அவன் காலடியில் சிதறும் கூண்டுகளின் தீப்பொறிகள் பறந்தன. பாறை மீதிருந்து சடசடவென சுட்டான். மூன்று அலறல்களைக் கேட்க முடிந்தது. ஒரு கிரனைட் வந்து அருகே விழுந்து வெடிக்க செம்மண் புகை அடங்கிய போது உடலெல்லாம் செம்மண்ணுடன் ஓடிவந்த நாயர் மீண்டும் சுட்டான். இன்னுமொரு அலறல் ஒலித்தது.

நாயர் எங்களை முன்னேற சைகை செய்துவிட்டு முன்னேறினான். அனேகமாக கிரனெட் லாஞ்சர் வைத்திருந்தவனைச் சுட்டுவிட்டான். புதர்கள் வழியாக தவழ்ந்து இறங்கி சென்றபோது எதிர்தரப்பில் தாக்குதல் நின்றிருந்தது. சிதறி ஓடியவர்கள் மீண்டும் ஒருங்கிணைய நேரமெடுக்கும்.

கீழே ஆற்றில் இந்திய ராணுவத்தின் படகு நின்றது. அதில் ஸ்டாண்டில் எம்கெ 19-3 கிரெனெட் மெஷின் கன் காட்டை நோக்கி சிறிய இருண்ட வாய்திறந்து நிற்க பத்து ஜவான்கள் கைகளில் எம் 249 ஸ்க்வாட் ஆட்டமாட்டிக் லைட் மெஷின் கன்களுடன் நின்றார்கள்.

நாயர் அவர்களுக்கு செய்தியனுப்பினான். அவர்கள் சுட்டபடி நீரில் குதித்து கரையில் ஏறி வந்தார்கள். அவர்கள் சுட்ட கூண்டுகள் வீண்தான்.ஆனால் அவை அவர்கள் வருவதை தெரிவித்தன.

அடுத்த ஜவானும் குண்டடி பட்டு வீழ்ந்தான். மீதிப்பேர் மனம் தளர்ந்துவிட்டனர்.

நாயர்” ஆர்டர் மோவ் டுவேர்ட்ஸ் த ரிவர்”என்று

ஆணையிட்டான்.சரசரவென ஒரு மரத்தில் ஏறினான். கொடிகள் மூடிய அதன் தடியுடன் கலந்து மறைந்திருந்தான். ”சுட்டபடியே செல்லுங்கள்!”என்றான்

நாங்கள் முன்னேறியபோது எங்களுக்குப் பின்னால் கிரைனைட் விழுந்து வெடித்தது. கீழே விழுந்து மட்கிக் கொண்டிருந்த மரங்களில் குண்டுகள் சிம்புகள் சிதறச் சிதற பாய்ந்தன. சட்டென்று மரத்தின் மீதிருந்த நாயர் சுட ஆரம்பித்தான். சரியான குறி. அவன் குண்டுபட்டு மூன்றுபேர் அலறி விழுவதைக் கேட்டேன்.

எங்களை கீழிருந்த ராணுவ வீரர்கள் கண்டு விட்டனர். எங்களை நோக்கி ஓடிவந்தனர். நாயரின் குண்டுகள் பின்னால்வந்தவர்கள நிறுத்திவிட்டன

ஜவான்கள் எங்களை அணுகினார்கள். என்னை இழுத்து வந்த ஜவானின் காலில் குண்டுபாய்ந்திருந்தது. வந்தவர்களில் முன்னால் நின்றவர் காப்டன் சிவ்நாராயண். என்னை அவர் அடையாளம் கண்டதாகக் காட்டவில்லை.

காப்டன் அங்கேயே பதுங்கி பின்னால் சுட பிறர் என்னையும் அவளையும் இழுத்துச் சென்றார்கள். காயமடைந்தவரை தூக்கினர். படகுக்குள் எங்கள ஏற்றும் வரை காப்டனும் குழுவும் நின்று சுட எதிர்தாக்குதல் மெல்ல ஓய்ந்தது.

காப்டன் படகில் ஏறும்போது நாயர் புதர்கள் நடுவே எவ்விக்குதித்தபடி ஓடிவந்தான். அவனும் ஏறிக் கொண்டதும் படகு நீரில் நகர்ந்தது.

பாறைமீது ஒரு அங்கமி வீரனின் தலை தெரிந்தது. சுடு எல்லைக்கு அப்பால் . மேலும் சில தலைகள். பிறகு அவர்களின் கமாண்டரின் தலை.

11

படகில் என்னை ஏற்றி கேபினுக்குள் கொண்டுசென்றதும் ‘ஸிட்!” என்று கூவி ,நான் அமரும் முன்னரே ஓங்கி கன்னத்தில் அரைந்தான் கன்னத்தில் மரு இருந்த அந்த ஹவல்தார் மேஜர். நான் சுதாரிக்கும் முன் அடிவயிற்றில் உதை விழுந்தது. அப்பட்டியே சரிந்து அமர்ந்தேன். ”நோ! நோ !அவரை ஒன்றும் செய்யாதீர்கள்! ப்ளீஸ்...ப்ளீஸ்...வேண்டாம் !வேண்டாம்! ” என்று ஜ்வாலாவின் அலறலைக் கேட்டேன். அவளை இழுத்தபடி அடித்தட்டில் எஞ்சின் அறைக்குக் கொண்டுசென்றார்கள். என் இடது கையில் விலங்கு பூட்டை திறந்து படகின் வளையம் வழியாக விட்டு மீண்டும் பூட்டி என்னை படகோடு கட்டினார்கள்.என்னால் எழ முடியாது திரும்ப முடியாது. சற்று வசதிப்பட்டுத்திக் கொள்வதற்காக நான் திரும்பியபோது ஜவான் ” லை‘டா கி பால்... சாலா... அராம் ஹெ”என்று உறுமியபடி என்னை ஓங்கி அறைந்தான். இந்த அறைகள் என்னை அச்சுறுத்துவதற்காக அல்ல. நான் இப்போது லெ•ப்டினெண்ட் அல்ல, கைதிதான் என ஐயமில்லாமல் உணர்த்துவதற்காக.

படகு அலைகளில் ஊசல் போல ஆடியது. என் தலை படகின் இரும்பு உள்தகட்டில் மோதியது. கீழே ஜ்வாலாவின் அலறலும் அழுகையும் கேட்டது.

நான் “ப்ளீஸ்...அவளை ஒன்றும் செய்யாதீர்கள்.... அவளுக்கு ஒன்றும் தெரியாது ப்ளீஸ்”என்று அழுகையுடன் மன்றாடினேன். அந்த லான்ஸ் நாயக் என்னை ஓங்கி அறைந்து ”ஷட் அப் யூ சன் ஆவ் எ பிச்” என்றான்

நீரின் சுழற்றலில் படகு பலவாறாக திரும்பியது. முட்டித்ததும்பியது.

சட்டென்று கரையில் துப்பாக்கி மின்னல்கள் பளிச்சிட்டன. ஒலிகள் சற்றுதள்ளி வேறு இடத்தில் கேட்பதுபோல பிரமை எழுந்தது. படகில் ஒரு ஜவான்  ”யா அல்லா! ” என குண்டு பட்டு விழுந்தான். அவன் அலறல் காபினுக்குள் எதிரொலித்தது. படகிலிருந்த கிரனைட் லாஞ்சர் படகே அதிரும்படியாக சுடத் தொடங்கியது.அதன் முழக்கம் என் காதுகளை ரீங்கரிக்கச் செய்தது. வெடிமருந்து புகை படகிலேயே குமட்டச் செய்தபடி தங்கியது. கரையில் அதன் குண்டுகள் விழுந்து புகை எழுப்பி வெடிபப்தைக் கண்டேன். பல இடங்களில் புதர்களினூடாக தெரிந்த குண்டு வெடியொளிகளும் அவ்வப்போது தெரிந்த மணிப்பூர் போராளிகளின் தலைகளும் அவர்கள் பெரும் எண்ணிக்கையில் இருப்பதை தெரிவித்தன.

குண்டுகள் நீரிலும் படகிலுமாக பாய்ந்தன. படகின் இரும்புப்பகுதிகளில் குண்டுகள் களங் களங் என்று பாய்ந்து சிதறிய ஒலி கேட்டது. படகை சுழற்றி திருப்பி அதை தப்பவைத்தபடி ஓட்டினார்கள். நீரோட்டம் அதிகமான இந்த காட்டாறுதான் பாதுகாப்பு .

இருபக்கமும் கடுமையான போர் நடந்துகொண்டிருந்தது. படகில் மேலும் இருவர் அலறி விழுந்தனர். கரையில் சேதம் அதிகமாக இருக்கலாம். படகில் இன்னமும் அவர்களின் கிரனைட் விழவில்லை. நீரில் விழுந்து குபீரிட்டு மறைந்தன அவை. ஆனால் இன்னும் சில நிமிடங்கள் தான். இன்னும் சில கணங்கள்....

எதிரே இன்னொரு ஆயுதம் தாங்கிய இந்தியப் படகு சுட்டபடியே எதிரோட்டமாக வந்தது.  அதைக் கண்டதும் கரையில் இருந்த மணிபுரிப் போராளிகள் சிலர் உரக்க கூவினர்.

கரையில் புகை அடர்ந்து மூடியிருந்தது.அதன்மீது மேலுமேலும் குண்டுகள் விழுந்தன. காற்றில் புகைத்திரை விலகியபோது

விழுந்துகிடந்த போராளிகளின் உடல்களைக் கண்டேன்.

பின்னர் கரை அமைதியானது. எங்கள் படகை மற்ற படகு பின்தொடர்ந்தது. விசித்திரமான சுழற்றலால் எனக்கு குமட்டி வந்தது. இருள் பரவி கரைகள் மறைந்தன. படகுக்குள் இயந்திர அறையில் மட்டும் ஒளி இருந்தது. அங்கே மெல்லிய குரலில் ரேடியோ குழறியது. படகில் ஜவான்கள் பிஸ்கட்டும் டீயும் சாப்பிடும் ஒலி கேட்டது. காயமடைந்த இருவரின் முனகல்கள். அவர்களுக்குக் கட்டுபோடுகிறார்கள்.

நான் சற்று தூங்கியிருக்க வேண்டும். என்னை அவர்கள் தட்டி எழுப்பியபோதுதான் விழித்துக் கொண்டேன். காலையில் படகுகள் சேறு மண்டிய கரையருகே ஒதுங்கியிருந்தன. என் விலங்குகள் அவிழ்க்கப்பட்டன. இருகைகளையும் முன்னால் சேர்த்து  பூட்டப்பட்டன.

கரையிறக்கி நடக்கச் செய்தனர். அருகே அவளை இட்டு வந்தனர்.தன் அனைத்து உறுதியையும் இழந்து அவள் நனைந்த பறவை போல ஒடுங்கி குறுகி குனிந்து நடந்தாள். தோள்கள் குலுங்கிக் கொண்டே இருந்தன. அவளை கிட்டத்தட்ட இழுத்தபடி சென்றனர். அவள் ஓர் உணர்வால் என்னை திரும்பிப்பார்த்தாள். வலிப்பு வந்தவள் போல உடல் துடிக்க ”நெல்!” என்று ஒலியில்லாமல் கூவி கைநீட்டினாள். கையும் உடலும் துடித்தன. மீண்டும் மீண்டும் அதே உதட்டசைவு. அதே துடிப்பு...

நான் வேறு பக்கம் திரும்பிக் கொண்டேன். என் உதடுகளை இறுகக் கடித்திருந்தேன். அழக்கூடாது என்று எனக்கே ஆணையிட்டுக் கொண்டேன்.

அவளை இழுத்தார்கள், கால்தடுமாறி தரையில் அவள் விழுந்தபோது அப்படியே தூக்கி சென்றார்கள்.

கரையில் நான்கு டிரக்குகள் நின்றன. அவற்றில் வந்து கரையில் கூடி நின்ற ஜவான்கள் எங்களை விலகி நின்று வேடிக்கை பார்த்தனர். மெல்லிய சிரிப்பின் ஒலி கேட்டது. நான் கடந்துசென்ற போது ஒருவன் ”சாலா மத்ராசி,... சாலா ”என்று கூவி ஓங்கி துப்பினான்.

சேற்றில் நடந்து சென்று ராணுவ டிரக்கில் ஏற்றப்பட்டேன்.அவளும் காயமடைந்தவர்களும் இன்னொரு டிரக்கில். என் டிரக்குக்குள் நாயரும் இரு ஜவான்களும் ஏறிக் கொண்டார்கள்.

டிரக் எங்கள் கம்பெனி தலைமையகத்தை அடைந்தது. அது பழைய கிராம நிர்வாக அலுவலகம். அதைச்சுற்றி முட்கம்பிச்சுருள் வேலி. தரையில் ஆழ ஊன்றிய இரும்புத்தடிகளில் இரும்புத்தகடுகளை ஸ்க்ரூ செய்து பிணைத்து உருவாக்கப்பட்ட கோட்டைக்குமேல் காவல் கோபுரங்களில் கிரனெட் லாஞ்சர்கள் காத்திருந்தன. எம் 16 ரை•பிள்களும் ஏ.கெ.47 இயந்திரத்துப்பாக்கிகளும் எம்4 கார்பைன்களும் ஏந்திய வீரர்கள் மணல்மூட்டைகளுக்கு அப்பால் நின்றனர். கம்பி வாசல் திறந்து கிடந்தது.

என்னை நேராக காம்ப் ஆ•பீசுக்குக் கொண்டுசென்றார்கள். நாயரும் லெப்டினெண்ட் மேஜரும் கூடவே வந்தார்கள். இருவரும் இறுக்கமாக இருந்தனர். அங்கே என் கம்பெனி கமாண்டர் மேஜர் திரிபாதியின் அறை வாசலில் நான் நிறுத்தப்பட்டேன். எல்லா அலுவலக அறைகளையும் போலத்தான் அதுவும். காத்திருப்போருக்கான பெஞ்சு. இரட்டைக் கதவு. மேலே இந்திய ராணுவத்தின் அடையாளம். எங்கள் கம்பெனியின் முத்திரை. பக்கச்சுவரில் பெரிய அறிவிப்புப் பலகையில் என் குழுவில் இறந்த ஜவான்கலின் புகைப்படங்கள் ஒட்டப்பட்டு அஞ்சலி

எழுதபப்ட்டிருந்தது. தியாகராஜன், சிராஜ், திம்மய்யா,ஸ்ரீகண்டன்,மாணிக்கம்,சண்முகம்.... ஒவ்வொரு முகமாக குபீர் குபீரென என்னை நோக்கி வந்தன. என்னை அவர்களின் கண்கள் சந்தித்தன.

கதவு திறந்து மேஜர் வெளியே வந்தார். பஞ்சாபி பிராமணர். வெள்ளையன் போல சிவந்த ஒல்லியான முகம். சாம்பல் கண்கள். என்னை தெரியாத ஆளைப்பார்ப்பது போலப் பார்த்தா. ” இஸ் ஹி வூண்டட்?” என்றார். காப்டன் ”நோ சர்”என்றார். ”வேர் இஸ் ஹிஸ் வெபன்ஸ்?”

நாயர் ஹிந்தியில் ”அவர் ஆயுதங்களும் அடையாளங்களும் இல்லாமல் கைதுசெய்யப்பட்டார்” என்றான்.

மேஜர் என்னை மீண்டும் பார்த்தார். ”கைதுசெய்யும்போது சாட்சியாக இருந்த எத்தனைபேர் இருக்கிறீர்கள்”

“நான்குபேர் இருக்கிறோம். மீதி ஐந்துபேர் சுடப்பட்டார்கள்”என்றான் நாயர்.

“இவரை கஸ்டடியில்; வையுங்கள்....யூனி •பார்மைக் கழற்றிவிடுங்கள் ”என்றார் ” விரிவான விசாரணை பிறகு. அந்தப்பெண் எங்கே?’

காப்டன் ” தனி அறையில் வைத்திருக்கிறோம்” என்றார்

மேஜர்”அவளை நான் பார்க்க வேண்டும்”என்றபடி முன்னால் நடந்தார் .

“எஸ் சார்” என்றார் காப்டன். இருவரும் அவரை தொடர்ந்தார்கள்.

என் ஆடைகளை அவர்களே கழற்றி  வெள்ளை பைஜாமாவும் குர்தாவும் தந்தார்கள். யூனி •பார்மை ஒரு பிளாஸ்டிக் கவரில் போட்டு ஸீல் வைத்தார்கள். பின் என்னை இழுத்து காவலறைக்குக் கொண்டுசென்றார்கள். சாதாரணமான ஸ்டோர் அறைதான். மட்கிய காகித நாற்றமும் தூசுவீச்சமும் இருந்தான. ஜன்னல்களை பூட்டி இரும்புப்பட்டை வைத்து இறுக்கி மூடியிருந்தனர். மேலே ஓடு. அதை எட்ட முடியாதபடி இரும்புவலை அடிக்கப் பட்டிருந்தது. தரையில் சிமிண்ட் வைத்து பதிக்கப்பட்ட இரும்பு வளையத்தில் விலங்கால் என்னைக் கட்டி பூட்டினார்கள்.

கதவு வெளியே பூட்டப்பட்டது.

நான் அதுவரை நடந்ததை என்னுள் ஓட்டினேன். எதுவுமே நம்பும்படியாக இருக்கவில்லை. ஏதோ கெட்ட கனவில் இருப்பதுபோலிருந்தது. தூக்கம் வந்தது. அதுவரையிலான மன அழுத்தம் எப்படியோ குறைவது போல ஓர் அமைதி மனதில் நிறைவது போல உணர்ந்தேன். அவளை ஒன்றும் செய்யமாட்டார்கள். இந்திய ராணுவ வீரர்கள் பலர் ஏ.எல்.எ•பின் கைதிகளாக இருக்கையில் அவள் ஒரு பெரிய சொத்து...

கதவு திறந்தது. ஏழடி உயரமான ஜவான் ஒருவர் உள்ளே வந்தார். பின்னால் மேலும் இரு ஜவான்கள். மேல் சட்டை இல்லாமல் பனியன் மட்டும் போட்டிருந்ததனால் அவர் என்ன ரேங்க் என்று தெரியவில்லை. பின்னால்வந்த இருவரும் லான்ஸ் நாயக்குகள்.

என் பூட்டை திறந்து என் இருகைகளையும் சேர்த்து பின்னால் கட்டி நிறுத்தினர். என்னை பார்த்தபடியே சுற்றி வந்தார். உணர்ச்சியற்ற மிருகக் கண்கள். மிருகத்தின் உடல்.

இந்தியில் ” நீ செய்தது எல்லாம்
தெரிந்துவிட்டது”என்றார் ”எங்களுக்குத் தேவை உன் வாக்குமூலம்”

நான் பேசாமல் நின்றேன்

”நீ வாக்குமூலம்  கொடுத்தாக வேண்டும். இல்லாவிட்டால் உன்னை சித்திரவதை செய்வோம்…”என்றார் அவர்.” நீ லெ•ப்டினெண்டாக இருந்தவன். உனக்குத்தெரியும் ராணுவச்சித்திரவதைகளைப் பற்றி”

என் வயிற்றுக்குள் உருண்டு வலியுடன் அடிநெஞ்சை முட்டிய அந்த குளிர்ந்த பந்தை பற்கலைக் கடித்து தாங்கிக் கொண்டேன்

”நகங்களைப் பிய்ப்போம்.  மயிர்களை ஒவ்வொன்றாக பிடுங்குவோம். எலும்புகளை உடைப்போம்…. ஆசன வாயில் மிளகாயும் அமிலமும் தடவுவோம்.” என்னை உற்று பார்த்தபடி சொன்னார்.

என் உடல் காற்றில் இலை நுனி போல நடுங்குவதை உணர்ந்தேன். நடுக்கம் ஏறி  ஏறி என் உள்ளே ஓடிய சொல்லோட்டம் கூட நடுங்கி அதிர்ந்தது. பற்கள் கிட்டித்தன.

”பல முறைகள் உள்ளன. பனிக்கட்டிமீது படுக்க வைக்கலாம். மின்சார அதிர்ச்சி அளிக்கலாம். தலைகீழாக •பேனில் கட்டிவைத்து சுழலச்செய்யலாம்”

என் வயிற்றிலிருந்து சிறுநீர் நழுவி பாண்ட் நனைந்தது. சட்டென்று என்னைப்பற்றிய வெட்கம் என்னைக் கவ்வியது. நான் ஒரு லெப்டினெண்ட் . ஏழு வருடம் ராணுவசேவை செய்தவன். இல்லை அப்படி உடைந்துபோக மாட்டேன். என் முழு எண்ணங்களையும் சிறுநீரிலேயே நிலைநாட்டினேன். என் பிரக்ஞையால் அதை இழுத்து பிடித்து என்னுள் நிறுத்தினேன்.

”.....எங்கள் நோக்கம் அதல்ல. நாங்கள் விரும்புவது ஒரு வாக்கு மூலம்”

நான் ஒன்றைக் கண்டு கோண்டேன். அச்சம்தான் சித்திரவதையின் முக்கியமான கருவி. அச்சத்துக்கு ஆட்படாமலிருந்தாலே பாதி வென்றது போலத்தான். ஆனால் அச்சம் நம்மை மீறியது.எதை வெல்ல ஒரே வழி அதை உதாசீனம் செய்வது. உதாசீனம் செய்ய சிறந்தவழி பிறிதொன்றை கவனிப்பது.

” ......சொல்”

பேசக்கூடாது. பேசுவதென்பது அவன் சொல்வதைக் கவனிப்பது. கவனித்தால் அதற்கு மனம் எதிர்வினைச் செய்யும். அஞ்சும். அது எனக்கான சொல்லே இல்லை. எனக்குப் புரியும் மொழியே இல்லை. அது வெறும் ஒலி. அது என் முன் ஒலிக்கவேயில்லை.

”சொல்…. நீ புத்திசாலி”

நான் என் முழுக்கவனத்தையும் என் சிறுநீரிலேயே நிறுத்தினேன். ஒரு துளி மட்டும் விட முயன்றேன். அடுத்த துளியை பிடித்து நிறுத்த வேண்டும். ஒரு துளி. அடுத்தது அதேகணத்தில் —- நிறுத்த என் முழு உடலையும் இறுக்கவேண்டியிருந்தது. நிறுத்திவிட்டேன். வெற்றியின் உவகையை உணர்ந்தேன்.

”லெ·ப்டினெண்ட்… நீங்கள் நான் சொல்வதை கவனிக்கவேண்டும்….”

மீண்டும் ஒருதுளி. ஒரே துளி….

”லெ·ப்டினெண்ட் காப்டன் நெல்லையப்பன்….நீங்கள் தப்ப ஒரேவழிதான் இருக்கிறது. இது வெறும் மிரட்டல் அல்ல என்று உங்களுக்குத் தெரியும். துரோகிகளுக்கு ராணுவத்தில் மன்னிப்பே இல்லை”

மீண்டும் ஒரு துளி

”ஓகே …நீங்கள் இதை தேர்வுசெய்கிறீர்கள்”

அவர்கள் என்னைப் பிடித்து ஜன்னல்சட்டத்தில் இறுக்கிக் கட்டினார்கள்.

”இன்னும் பிந்திவிடவில்லை லெ·டினெண்ட்…”

அவன் ஒரு மெல்லிய பிளாஸ்டிக் தகடை எடுத்தான். அதற்குள் டங்ஸ்டன் சுருள் இருக்கிறதென நான் ஊகித்தேன். சாதாரண அயர்ன் பாக்ஸிலிருந்து கழற்றியது. அதை என் புஜத்தில் வைத்து கட்டினான்.

என் நெற்றியெங்கும் வியர்வை கொட்டியது. என் கைவிரல்கள் கிட்டித்து ஒன்று இன்னொன்றுமீது ஏறிக்கொண்டன. தாடையை இறுக்கிக் கொண்டேன். தோள்சதைகள் மாபெரும் எடை ஒன்று தலையில் ஏறியவை போல தெறித்தன.

அவன் மறுமுனையை ஒரு பிளக்கில் செருகினான். ”நான் இன்னும் சுவிட்சை ஆன் செய்யவில்லை லெ•ப்டினெண்ட். உங்களுக்கு இன்னும் சில நிமிட அவகாசம் இருக்கிறது”

நான் என் கால்களால் துழாவி கீழே ஒரு சிறு பொருளை அறிந்தேன். ஏதோ பாட்டில் மூடி. அதை என் கால்விரல்களால் நெருடினேன். அதை எவ்வளவு வலித்தாலும் விடக்கூடாது. அதுதான் என் சுய கௌரவம் என்னுடைய தனித்தன்மை. என்னுடைய மனம். அதை விடவே கூடாது. அதை பற்றிக் கொண்டேன்

அவர் சுவிட்சில் கைவைத்து என்னைக் கூர்ந்து பார்த்தார். ” டேக் கேர்....இதுதான் கடைசி நிமிடம்”

நான் அந்த மூடியை என் கால்களால் பற்றிக் கொண்டேன்.

”ஓக்கே...” சுவிட்சை அவன் போட்டான். கம்பியில் மின்சாரம் பாய்ந்திருக்கலாம். என் உடல் உண்மையிலேயே அந்த மின்சாரத்தை உணர்ந்தது போல விதிர்த்தது. சில கணங்களில் தகடு சூடாயிற்று.

மெல்லிய சூடுதான்…சூடு அதிகரித்தது. சில கணங்கள். சில கணங்கள். சிலகணங்கள். அல்லது ஒரே கணம்தானா? என் சதையை எரித்து இறங்கியது கடுமையான எரிச்சல். உடலே எரிந்தது. மூளைக்குள் அமிலம் நிறைந்தது. கொதித்தது. மூளைச்செல்களை எரித்து எரித்து எரித்து….நான் அந்த மூடியை கால்களால் பற்றியிருந்தேன். என் விரல்கள் அதை நழுவ விட்டன. அதை மீண்டும் இழுத்து பிடித்துக் கொண்டேன். மீண்டும் நழுவியது. விரல்கள் என் கட்டுப்பாட்டைவிட்டு வலிப்புகொண்டவை போல் நெளிய மீண்டும் பற்றிக் கொண்டேன். விரல்கள் தீப்பிடித்து எரிந்தன. அது நழுவி உருள எம்பி கட்டைவிரலால் பிடித்தேன். பிடித்து விட்டேன். அறையே எரிந்தது. அமிலமழை. அமில அருவி. அதை பிடிக்க அடுத்த கால்விரலை அசைக்க முடியவில்லை. ஒட்டியிருந்தது. கால்விரல்களை இழுத்து இழுத்து அதை கவ்வினேன். பிடித்துவிட்டேன்.பிடித்தாகிவிட்டது. நழுவவில்லை. இன்னும் கெட்டியாக…ஆம்.

மனதில் ஒருகணம் ஆறுதல் .மறுகணம் உடலெங்கும் பரவியிருந்த வலிப்பை உணர்ந்தேன். உடம்பு கோணலாகி துள்ளிதுள்ளி துடிப்பதையும் கழுத்து இறுகி விரைத்து நின்றிருப்பதையும் உணர்ந்தேன்.

அவன் சுவிட்சை நிறுத்தினான்

”இதுதான் அந்த வலி லெ•ப்டினெண்ட்”என்றான் என்னருகே வந்து அந்த பட்டையை என்தோலோடு பிய்த்து எடுத்தான். தோல் கருகி புகைவிட்டு அதில் ஒட்டியிருக்க என் சதை வெந்து வெளுத்து திறந்திருந்தது. வெந்த சதையின் வாசனை ஏதோ உணவை நினைவூட்டிய விந்தையை அப்போதுகூட என் மூளையின் ஒரு மூலை வியந்துகொண்டது. மேலும் அதிசயமாக ஒன்றை உணர்ந்தேன். அங்கே வலியே இல்லை. வலி நரம்புகளும் கருகி விட்டனவா? ஆனால் அங்கே மட்டும்தான் வலி இல்லை. உடலெங்கும் கடுமையான வலி இருந்தது.

அப்போது  இன்னொன்றும் தெரிந்தது, வலியைப் பற்றிய அச்சமளவுக்கு பயங்கரமானதல்ல வலி. வலியைத் தாங்க முடியாது என்ற கற்பனையே பொய். வலியை தாங்க முடியும். மனிதனால் மிகமிகக் கடுமையான வலியைக்கூட தாங்க முடியும். அதை செயல்முறைகல் மூலம் உணர உணரத்தான் சித்திரவதைமுறைகள் மேலும் மேலும் கடுமையாகின்றன. அவை அப்படி கடுமையாக ஆவதில் இருந்தே மனிதன் வலியை வெல்கிறான் என்று தெரிகிறது.இதோ என்னைப்போல.நானும் வலியை வென்றிருக்கிறேன். என்னாலும் முடியும்….அந்த வெற்றியுணர்வு என்னை பூரிக்கச்செய்தது. என்னைப்பற்றி எப்போதும் உணராத பெருமிதம் உருவாயிற்று.

”இது ஒரு தொடக்கம்தான் லெ•ப்டினெண்ட். இன்னும் உங்களுக்கு வாய்ப்பிருக்கிறது. இப்போதுகூட உங்கள் வாக்குமூலத்தை நீங்கள் தொடங்கமுடியும்” என்றான்

அவனது தன்னம்பிக்கை நிறைந்த அந்த புன்னகை! எனக்கு சட்டென்று புன்னகை வந்தது.  உலகமெங்கும் சித்திரவதை செய்யும் ஆட்கள் அதை அனுபவித்தவர்களே அல்ல என்பதுதான் இன்றுவரை அம்முறை நீடிப்பதன் மர்மம். சித்திரவதை என்பது சற்று தாக்குபிடித்தால் கடந்துசெல்லக்கூடிய ஒன்றுதான் என அவர்கள் அறியமாட்டார்கள். அவர்களும் அதை கற்பனை செய்து பெரிதுபடுத்திக் கொள்ளும் நிலையிலேயே இருக்கிறார்கள்.

”உங்களை இன்னும் ஒரு சோதனைக்கு நான் உட்படுத்தவேண்டியிருக்கிறது…”

நான் அவனையே கூர்து நோக்கினேன். சட்டென்று குறுக்குத்துறை

சுப்ரமணிய சாமி கோயில் மணல்மேடு நினைவில் எழுந்தது. இனிய காற்று. தாமிரவருணியில் குளித்துபோகிறவர்கள் விட்டுச்செல்லும் சோப்புமணம். எண்ணை மணம். நான் அங்கே இருந்தேன். உடல் பலவீனமாக இருக்கும்போது மட்டுமே கற்பனைகள் கொள்ளும் உக்கிரமான துல்லியம்.நான் அங்கே இருந்தேன். வெகுதொலைவில். மணலில் படுத்திருந்தேன். நீரில் இறங்கி மறுகரை சென்று மீண்டேன். ஆழமில்லை. தொடைவரைத்தான் தண்ணீர்... உண்மையில் நான் அங்கே இருப்பதாகவே பட்டது.  அந்தச்சிறையும் வதையும் வெறும் கனவென மனம் பிரமை காட்டியது.எது உண்மை எது பிரமை?அது மனம் கொள்ளும் தெரிவுதானா? உடலை வெல்ல மனம் செய்யும் மாயமா இது? உடைந்துபோகாமலிருக்க மனம் செய்யும் முயற்சியா? ஆனால் நான் தாமிர வருணியில் இருந்தேன்... குளிர்ந்த நீரை உணர்ந்துகொண்டிருந்தேன்

அவன் என் நகங்களை சிறு குரடால் பற்றினான். ”கொஞ்சம் வலிக்கும் லெ•ப்டினெண்ட். ஆனால் நீங்கள் நினைத்தால் இதை தவிர்க்க முடியும்...”

பூர்ணகலாவில் என்ன படம்? பழைய படம். வசந்தமாளிகை. சிவாஜி வாணிஸ்ரீ. சிவாஜி கையில் கோப்பையுடன் சால்வை போர்த்தி நிற்கும் போஸ்டர். வாணிஸ்ரீயின் பெரிய கொண்டை.

”நீங்கள் சிந்தித்துப் பார்க்கலாம் லெ•ப்டினெண்ட். எல்லாம் முடிந்துவிட்டது.ஏன் இந்த பிடிவாதம்?”

மயக்கமென்ன..... என்ன ஒரு இழுப்பு. என்ன ஒரு குரல்.  இந்த மௌனமென்ன மணிமாளிகைதான் கண்ணே.... டிஎம்எஸ் . விபூதி பூசப்பட்ட ஏரு நெற்றி. டிஎம்எஸ். கே.வி மகாதேவன் இசை.... கன்னத்தைத் தொட்ட கைகளினால் மதுக் கிண்ணத்தை இனிநான்

தொடமாட்டேன். ஊடாக ஒரு ரயில் பயங்கர ஓசையிட்டு கடந்துபோவது போல வலி கடந்துசென்றது. பாடலில் அபசுரம் கலந்ததுபோல அதன் ஓசை. யாருடைய அலறல் அது? இன்னொரு பாட்டு இன்னொரு பாட்டு... ஆ1 ”யாருக்காக யாருக்காக இந்த மாளிகை வசந்த மாளிகை காதல் ஓவியம் கலைந்த மாளிகை!” ஊடே ஒலிக்கும் அந்த பயங்கர அலறல். அதுவும் அப்பாடலின் பகுதிதான்.....”எழுதுங்கள் என் கல்லறையில் அவள் இரக்கமில்லாதவளென்று எழுதுங்கள் என் கல்லறையில் இவன் பைத்தியக்காரனென்று” ...அலறல். சிரிப்பொலி. நான்தான் சிரித்துக் கொண்டிருந்தேன்.

என் மூன்று விரல்களின் நுனி செங்குழம்பாக இருந்தது.நான் வெறிபிடித்தவன் போல சிரித்துக் கொண்டிருந்தேன். கண்களில் நீர் வழிய.

”லெ•ப்டினெண்ட் இங்கே பாருங்கள்...”

“‘எழுதுங்கள் என் கல்லறையில் அவள் இரக்கமில்லாதவளென்று எழுதுங்கள் என் கல்லறையில் இவன் பைத்தியக்காரனென்று அஹ்ஹஹ்ஹஹ்ஹா”

அவன் சற்று தள்ளி என்னைப்பார்த்தான்.

”இந்த வேடத்தால் நாங்கள் ஏமாந்துவிடமாட்டோம் லெ•ப்டினெண்ட். நீங்கள் தப்பவே முடியாது. இப்போது கொஞ்சம் ஓய்வெடுங்கள். இரவில் காயங்கள் கடுமையாக வலிக்கும். வலியுடன் இருளுக்குள் விழித்திருந்தால் நல்ல முடிவு கண்ணுக்குப்படும். குட் நைட்!”

அவர்கள் என்னை அவிழ்த்து மீண்டும் வளையத்தில் கட்டியபின் வெளியே சென்றார்கள். கதவு மூடப்பட்டது. நான் அக்கதவையே பார்த்தேன். எங்கிருக்கிறேன்? சினிமா. ஆம் நான் ஒரு ஆங்கில சினிமாவுக்குள் நுழைந்துவிட்டேன். கதாநயகனைச் சித்திரவதை செய்கிறார்கள். போர் படம். ‘பஸ்ட் பிளட்… ?

அந்த மூடியை சற்று தள்ளி தரையில் பார்த்தேன். சிறிய கார்க் அது. சட்டென்று எல்லாம் தெளிவடைந்தது. கைகளைத் தூக்கிப் பார்த்தேன். தோள்காயத்தைப் பார்த்தேன். ஆமாம் சித்திரவதை செய்திருக்கிறார்கள். சித்திரவதை. கற்பனைகள் பிரமைகள் வழியாக நான் அவற்றைக் கடந்து வந்துவிட்டேன். ஆம் கடந்துவிட்டேன்.அவ்வளவுதான். நான் புன்னகை செய்தேன்

கதவு திறந்தது. உணவுத்தட்டும் தண்ணீர் ஜாடியுமாக டபேதார் வந்தான். என்னருகே அவற்றை வைத்தான்.

”சாப்பிடுங்க சார்’என்றான்

நான அவனையே வெறித்துப்பார்த்தேன்

”சாப்பிடுங்கள் நெல்லையப்பன்சார்… என்னைத்தெரியல? கான் சார்… முகமது ரியாஸ் கான். நம்பளுக்கு திண்ணவேலிதான்சார்… ஏர்வாடிப்பக்கம் ஆத்தங்கரப்பள்ளி. …சார மூண்டுவாட்டி பாத்திருக்கேன். சாப்பிடுங்க…நல்ல சாப்பாடுதான்…”

நான் தட்டை இழுத்துக் கொண்டேன்.சாப்பிட்டு பலநாள் ஆனதுபோல உணர்ந்தேன்.ஆவேசத்துடன் சாப்பிட்டேன். நடுவே விக்கி தண்ணீர்

குடித்தேன்.

”பட்டாளத்தில கெடைக்க சோறு கொலச்சோறுண்டு எங்க இத்தாத்தா சொல்லுவாஹ. நம்ம வாப்பா பட்டாளம்தான்... மாமா பெரியவாப்பா அல்லாருமே பட்டாளாம்தான்...ஆனா இந்த சட்ட கடன் வாங்கின மொதலு. அது நம்மள்க்கு தெரியும் சார்....சாப்பிடுங்க”

தட்டுகளை எடுத்ததும் அவன் மெல்ல குனிந்தான். ரகசியக்குரலில் ”இந்தாங்க பிள்ளவாள்... ”என்றான் ஒரு கொளுத்திய பீடி

”கஞ்சா. இளுத்தியன்னாக்க வலி தெரியாது. நல்லா தூங்கலாம். இளுங்க...நாம குடுத்ததா சொல்லிப்பிடாதீங்க”

நான் அதை மீளமீள இழுத்தேன். மணமில்லாத புகை.

அவன் ” நாம பாண்டிப்பட்டாணி.... தோக்கும் ஈட்டியும்னு தலையில எளுதியிருக்கு. உங்களுக்கு என்னெண்டு எளவாப்போடுது பிள்ளவாள்? தாம்ரர்ணிப் பக்கம் காடுகரைண்ணு பாத்திட்டு நெல்லையப்பன்சாமியக் கும்பிட்டிட்டு யா அல்லான்னு இருந்திருக்கலாம்... ம்ம்... என்னமோ போங்க தலயெளுத்து சும்மா விடுமா? ” அவன் எச்சத்தை வாங்கிக் கொண்டான் ”வாறன்....சொல்லிப் போடாதிஹ”

அவன் சென்றபின் கதவு மூடியது. நான் அக்கதவையே பார்த்திருந்தேன். பல நாட்கள். பல வருடங்கள்.

மெல்ல பாட்டு கேட்டது. சற்று தள்ளி .”மயக்கமென்ன இந்த மௌனமென்ன மணிமாளிகைதான் கண்ணே...” சுவரில் காதுவைத்து அந்தப்பாட்டைக் கேட்டேன். அது சட்டென்று நின்றது. நானே பாடினேன் .”மயக்கமென்ன இந்த மௌனமென்ன மணிமாளிகைதான் கண்ணே...”.

இரவெல்லாம் டி எம் எஸ் பாட்டுகளாக பாடினேன். ‘முல்லைமலர் மேலே ‘ , ‘ அந்த நாள் ஞாபகம்’ ‘பூமாலையில் ஓர் மல்லிகை’ . ஊடாக கடும் வலி என்னை சாட்டையால் சொடுக்கியபோது விழித்து என் இருண்ட அறைக்குள் அமர்ந்திருந்தேன். வலி தாளாமல் சுவரில் தலையால் முட்டி கூவி அழுதேன். வலியழுகையையே பாட்டாக மாற்றிக்கொண்டேன். ‘முத்துக்களோ கண்கள்...’ . எதிரே கதவில் சினிமாக்காட்சிகளை சிலசமயம் கண்டேன். அவை உருவெளித்தோற்றங்கள் என்றும் அப்போது தெரிந்திருந்தது. சிலசமயம் அந்தப்பாடல்காட்சிகளை நெல்லை பூர்ணகலாவிலும் ரத்னாவிலும் பாப்புலரிலும் அமர்ந்து திரையில் கண்டேன். சிலசமயம் அம்மா அப்பாவுடன் அமர்ந்து டிவியில் கண்டேன். ‘அமைதியான நதியினிலே ஓடம்’. அதை மட்டும் பலமுறை கேட்டேன், கண்டேன். இரவெல்லாம்.

12

இரண்டாம் நாள் என்னை இழுத்துச்சென்று துப்பாக்கி காவலுடன் குளிக்கச் செய்தார்கள். ஷேவ் செய்து விட்டனர். ஜட்டியுடன் நடக்கவைத்து அறைக்குள் கொண்டுசென்று என் சீருடைகளை அளித்தனர். அவை பல இடங்களில் கிழிந்திருந்தாலும் சலவைசெய்யப்பட்டிருந்தன. அவற்றை கையால் தொட்டபோது மிக அன்னியமான எதையோ தொடுவதுபோல உணர்ந்து தயங்கினேன். ”உம்”என்றார் லான்ஸ் நாயக். நான் அவற்றை அணிந்துகொண்டேன். இரண்டு தங்கபப்ட்டைகள் கொண்ட அச்சீருடையை ஒருகாலத்தில் நான் எவ்வளவு விரும்பியிருக்கிறேன். ஆனால் அப்போது அவை இரும்பால் செய்யப்பட்டவை போல என்மீது கனத்தன. விலங்கு போடப்படவில்லை.

இருவர் கைகளில் கார்பைன்களுடன் காவல் செய்ய என்னை உள்ளே ஒரு தனி அறைக்குக் கொண்டு சென்றார்கள். அது அப்பள்ளியின் ஒருவகுப்பறையாக இருந்திருக்கலாம். நிறைய சுவர் கிறுக்கல்கள். சில மேஜைகள் மட்டும் கிடந்தன. பெரிய ஜன்னல்களில் புதிதாக அடிக்கப்பட்ட இரும்புப்பட்டைகள். குளிர்ந்த காலியான அறையில் நான் காத்து நின்றேன். என் தலைசுழன்றது. காதுகளில் கிர்ர் என்ற ரீங்காரம் இருந்தது.

பூட்ஸ் ஒலிகள் கேட்டன. நாலைந்துபேர். மேஜர் திரிபாதி எங்கள் பட்டாலியன் தலைவர் லெ•ப்டினெண்ட் கர்னல் டேனியல் ஞானப்பிரகாசம் . அவர்களைச் சூழ்ந்து கார்பைன்கள் ஏந்திய எட்டு ஜவான்கள். அனைவரும் ஹவல்தார் பதவி கொண்டவர்கள்.

அவர்கள் உள்ளே வந்ததும் என்னுடைய காவல் ஜவான்கள் எழுந்து விரைப்பாக சல்யூட் வைத்தனர். நான் பேசாமல் நோக்கி நின்றேன். லேசான குமண்டல் போல என் வயிறு ஒருமுறை அதிர்ந்தது. சற்று

நேரம் கழித்து தள்ளி காப்டன் ஒரு பெரிய மணிலா கவருடன் உள்ளே நுழைந்து கதவை மூடினார்.

அவர்கள் மேஜைக்குப்பின் அமர்ந்தார்கள். காவலர்கள் விலகி சுவர் ஓரமாக நின்றனர்.

”உட்காருங்கள்”என்றார் காப்டன்

நான் அவர்களை பொருளில்லாமல் பார்த்தபடி நின்றேன்

”நீங்கள் இப்போதும் லெப்டினென்ட்தான் மிஸ்டர் நெல்லையப்பன்”என்றார் லெ•ப்டினெண்ட் கர்னல்”நீங்கள் தாராளமாக உட்காரலாம்”

நான் எனக்கென போடப்பட்ட நாற்காலியில் அமர்ந்துகொண்டேன். அவர்கள் என்னை உற்று பார்த்தனர். ஒரு ஜவான் மேஜைமீது ஒரு வீடியோ கருவியை பொருத்தினான். விளக்குகள் போடப்பட்டன.

‘…என்ன நடந்தது?”என்றார் லெ•ப்டினெண்ட் கர்னல் இயல்பாக, மெல்ல குனிந்து அனுதாபமான முகத்துடன். அவர் குரலும் மென்மையாக இருந்தது. மெழுகு போட்டு கூர்மையாக முறுக்கபப்ட்ட வெண்ணிற மீசை. கரிய சதுர முகத்தில் வெண்ணிறமான பற்கள். நரைத்த கிருதாக்கள்.

நான் பெருமூச்சுவிட்டேன். புண்பட்டு கட்டுபோடப்பட்ட என் கைகளை பார்த்தேன்

”நாங்கள் இங்கே உங்கள் மீது அனுதாபத்துடன் தான் இருக்கிறோம். உங்கள் பழைய ரிக்கார்டுகள் நன்றாக இருக்கின்றன” என்றார் லெ•ப்டினெண்ட் கர்னல்”ஆக்சுவலி நானும்கூட திருநெல்வேலிப் பக்கம்தான். இடையான்குடி.. கேட்டிருப்பீங்க…கால்டுவெல் இருந்த ஊர்”

”ம்”

”நான் இங்க உங்களுக்கு ஹெல்ப் பண்ணத்தான் வந்திருக்கேன்… கன் யூ அண்டர்ஸ்டேன்ட் ? ”

நான் ஒன்றுமே சொல்லவில்லை. உண்மையில் என் மனதில் மொழியே இல்லை.

”லெ•ப்டினெண்ட் நீங்கள் எதிரியுடன் சேர்ந்துகொண்டு கம்பெனியை காட்டிக்கொடுத்ததாக புகார் இருக்கிறது. எதிரியுடன் தப்பி மியான்மார் எல்லை நோக்கி செல்லும்போது கைதுசெய்யப்பட்டிருக்கிறீர்கள். உங்கள் ராணுவச்சின்னங்களையும் துறந்திருக்கிறீர்கள்” மேஜர் சொன்னார்

நான் நிமிர்ந்து பார்த்தேன்.

மேஜர் திரிபாதி லெப்டினெண்ட் மேஜரின் கையிலிருந்த மணிலா கவரை வாங்கி பிரித்து இருந்து ஒரு புகைப்படத்தை எடுத்துப்போட்டார். தியாகராஜனின் படம். அருகே நான். நாங்கள் இம்பால் ஏரியில் எடுத்த படம். என் மனம் அதிர்ந்தது.

மேஜர் படங்களாக எடுத்துப்போட்டார் . ஸ்ரீகண்டன் மாணிக்கம் சண்முகம் சிராஜ்……

”இவர்களெல்லாம் கொல்லபப்ட்டார்கள் லெ•ப்டினெண்ட். அவர்கள் சடலம் கூட கிடைக்கவில்லை”

என் தொண்டை அடைத்தது

”அவர்களுடன் சேர்ந்து வாழ்ந்த நாட்களை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள்..”

நான் விசும்பிவிட்டேன்

”சொல்லுங்கள் லெ•ப்டினெண்ட். ஏன் இதைச்செய்தீர்கள்?” என்றார் மேஜர்

“முப்பதுவெள்ளிக்காசுக்காக யூதாஸ் செஞ்சான்னு பைபிள்ல சொல்லியிருக்கு.. ”என்றார் லெ•ப்டினெண்ட் கர்னல் அவர் கண்கள் சிறிது இடுங்கி ஒளிவிட்டன.

“நான் துரோகி இல்லை” என்றேன். அதற்குள் என் குரல் உடைந்தது. ”என் தோழர்களை நான் காட்டிகொடுக்கவில்லை. நான் எங்களால் முடிந்தவரை எதிரிகளுடன் போராடினேன்…”

”அப்படியானால் ஏன் மியான்மாருக்குத் தப்பி ஓடினீர்கள்?”

”மியான்மாருக்குப் போகவில்லை. நான்…”

”எங்கே போனீர்கள்? சொல்லுங்கள்….”

“மியான்மாருக்குப் போகவில்லை…” என்றேன் உரக்க, அடம்பிடிக்கும் குழந்தைபோல என்று உடனே எண்ணிக் கொண்டேன். இன்னும் முதிர்ச்சியாக இருக்கவேண்டும். இன்னும் ஆழமாக பதில் சொல்லவேண்டும்.

“அப்படியானால் எங்கே? அங்கமி லிபரேஷன் •ப்ராண்ட் தலைமையகத்துக்கா?”

என் சொற்கள் என்னுள்ளே உறைந்தன. இவர்களிடம் நான் பேசமுடியாது. இவர்கள் மனம் ஒரே திசை நோக்கி மட்டுமே ஓடும்…

”பேசுங்கள் லெ•ப்டினெண்ட்” என்றார் காப்டன் ”இந்தக் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் நீங்கள் மரணதண்டனைக்கு ஆளாவீர்கள் தெரியுமல்லவா? ”

“ஆம்”

”உங்கள் அம்மா அதை எப்படி எடுத்துக் கொள்வார்கள்? யோசித்தீர்களா?”

நான் உடலை குறுக்கினேன். மனம் அதிர்ந்ததில் என் தோள்கள் குலுங்கின

”என்ன செய்யப்போகிறீர்கள்? ”

என்னால் பெருமூச்சுவிடத்தான் முடிந்தது

“மரணதண்டனையிலிருந்து நீங்கள் தப்பலாம். ஒரு வழி இருக்கிறது. ” லெ•ப்டினெண்ட் கர்னல் சொன்னார் ” உங்கள் தொடர்புகளை முழுக்க விரிவாக சொல்லிவிடுங்கள்.எப்படி உங்கள தொடர்புகொண்டார்கள்? யார் யார் உங்களுக்கு தெரிந்த வேறு துரோகிகள். உங்கள் செய்தித்தொடர்புமுறை என்ன…எல்லாம்…”

நான் அவர்களை தவிப்புடன் பார்த்தேன்.எப்படி சொல்வது? எதைச்சொன்னால் அவர்களுக்குப் புரியும்?

”சொல்லுங்கள்…நீங்கள் தப்ப மயிரிழையளவுக்கு இடம்தான் இருக்கிறது” மேஜர் ஊக்கினார்

நான் என் பதறும் விரல்களால் பாண்ட் பாக்கெட்டை துழாவினேன். பிரிந்த நூல்கள்…ஒரு சருகு கையில் பட்டது. மறுகணம் அது என்ன என்று தெரிந்தது. மதூகமலர். நான் அன்று பறித்து உள்ளே போட்டது. கைகளை வெளியே எடுத்தேன். மெல்ல மீசையை வருடுவது போல முகத்தருகே கொண்டுசென்று முகர்ந்தேன். மிகமெல்லிய மணம். ஒருவேளை அது என் பிரமையாகக் கூட இருக்கலாம். சலவைக்குப்பின்

எப்படி மணம் வரும்? ஆம், பிரமைதான்… ஆனால் அத்தனை தெளிவாக இருக்கிறதே….மீண்டும் முகர்ந்தேன். மலர் மணம் என்னை தூக்கி வீசியது. வெட்டவெளியில்.அங்கே மலர்கள் விரிந்து காலை ஒளியில் கண் நிறைத்து கிடந்தன. வண்ணத்துப்பூச்சிகள் பெரிய சிறகுகளுடன் பறந்தன. காற்றின் தூரத்து இரைச்சல் இசையாக ஒலிக்க ஒளிர்ந்து நின்ற மேகங்களுக்கு கீழே சிகரமுகடுகள் தியானத்திலாழ்ந்த மலைகள்….

”நான் எந்த நாட்டுக்கும் துரோகம் செய்யவில்லை.”என்றேன் உறுதியாக. ” கர்னல், உங்களுக்கு இதை என்னால் சொல்லி புரியவைக்கமுடியாது….”

” இங்கே பாருங்கள் லெ•ப்டினெண்ட், நீங்கள் இந்திய ராணுவத்தைச் சேர்ந்தவர்”

“இல்லை. நான் அந்த பதவியை துறந்துவிட்டேன்.எனக்கு அப்படி எந்தப்பொறுப்பும் இல்லை” நான் வேகத்துடன் சொன்னேன் ”நான் அந்த பதவியில் இருந்த நிமிடம் அவரை அதை முற்றிலும் விசுவாசமாகச் செய்தேன். என் உயிரைப்பணயம்வைத்து போராடினேன்… கடமைக்காக உயிர்துறக்க தயாராக இருந்தேன்…. ஆனால் அந்த பதவி தேவையில்லை என்று முடிவெடுத்த பின் ஒருகணம்கூட நான் அந்த அடையாளங்களை வைத்திருக்கவில்லை… ”

“லெ•ப்டினெண்ட்..நீங்கள் ஒரு இந்தியப்பிரஜை…”

“இல்லை இல்லை…நான் இந்தியப்பிரஜை இல்லை”

“பின் எந்த நாட்டுப்பிரஜை? மியான்மார்? பூட்டான்? பங்க்ளாதேஷ்?” கர்னல் சிரிக்காமல் கேட்டார், ஆனால் கண்களில் நக்கல் இருந்தது.

” நான் எந்த நாட்டுக்கும் பிரஜை இல்லை.” நான் அதைச்சொல்லும்போது எனக்கு மயிர்கூச்செறிந்தது ” ஐ பிலாங்ஸ் டு நோ மேன்ஸ் லேண்ட்”

மறுகணமே அது எத்தனை அபத்தமானது என்று உணர்ந்தேன். அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து புன்னகை செய்தார்கள்.

” ஐ பிலாங்ஸ் டு நோ மேன்ஸ் லேண்ட்” இம்முறை என் குரலில் கண்ணீர் இருந்தது. வெட்கி என் முகம் சிவந்து பழுத்தது.

” தாட் இஸ் வை யு ஆர் ரன்னிங் டுவேட்ஸ் நோ மேன்ஸ் லேண்ட் ? ” லெ•ப்டினெண்ட் கர்னல் கேட்டார்

நான் பலவீனமாக”ஆம்”என்றேன்

“லெ•ப்டினெண்ட், அங்கே ஒரு மேய்ச்சல் காளை போனால்கூட உயிர்வாழ முடியாது என்று தெரியுமா? அது மனித நடமாட்டமே இலலாத அடர்காடு….”

”தெரியும்”

“அங்கே இந்தப்பெண்ணோடு குடும்பம் நடத்தப்போனீர்கள், இல்லையா?” இம்முறை ஜவான்களே சிரித்தார்கள். மேஜர் அவர்களை கண்டிப்பதுபோல ஏறிட்டுப்பார்த்தார்.

“என்னுடைய மண் அது ”

“லெ•ப்டினெண்ட், நீங்கள் சின்னக்குழந்தை இல்லை. நீங்கள் சொல்வதை நம்ப நாங்களும் சின்னக்குழந்தைகள் இல்லை. ”என்றார் மேஜர். ” எங்களுக்கு உண்மை தேவை. நீங்கள் எங்கே போவதாக இருந்தீர்கள்? மியான்மார் ? பூட்டான்? கமான்…”

“நான் சொல்லிவிட்டேன். நோ மேன்ஸ் லேண்ட்…..இதுதான் உண்மை …நான் என்ன சொன்னாலும் உங்களுக்கு புரியப்போவதில்லை”

”நீங்கள் உங்கள் வாய்ப்புகளை தவறவிடுகிறீர்கள்….. இது ராணுவ விசாரணை. நீங்கள் சொல்வதெல்லாம் பதிவுசெய்யப்படுகிறது…”

”நான் உண்மையைத்தான் சொல்கிறேன்’

“ஆதாம் ஏவாள் விளையாட்டு விளையாட ஏதேன் தோட்டம் போனீர்கள் என்றா? புல் ஷிட்” என்றார் கர்னல்

”யூ ஸே புல் ஷிட் ” நான் திடீரென்று வீரிட்டேன். மறுகணம் என் மனதின் மூடிகள் தெறித்தன . எழுந்து அவர் முன் கைநீட்டி,” இத்தனை நேரம்

நீங்கள் பேசியதுதான் புல் ஷிட். யார் நீங்கள்? யார்? வெறும் சாதாரண மனிதர்கள். திரிபாதி ,டேனியல், சுப்ரணியம் ,குப்புசாமி.... வெறும் சாதாரண மனிதர்கள்...யாரோ மாதாமாதம் சம்பளம் தருகிறார்கள். தொப்பியும் அடையாளமும் தந்து துப்பாக்கியை கையில் கொடுத்து போய் சுடு போ என்கிறார்கள். தேசமே உங்கள் பொறுப்பில் இருப்பதாக கற்பனை செய்கிறீர்கள். தேசத்துக்காக கொல்லவும் சாகவும் வந்து நிற்கிறீர்கள். தேசத்துக்காக நீங்கள் எதுவும் செய்யலாம்..... எல்லாமே நியாயம்.... தட் இஸ் ஷீர் புல் ஷிட் ஐ ஸே...”நான் தொண்டை புடைக்க கத்தினேன் ”..தேசம் என்றால் என்ன ? தேசமென்றால் மண்.... நீங்கள் யாராவது மண்ணை ஒருகணம் பார்த்தது உண்டா? மண்ணில் வளர்கிற செடிகளை பறவைகளை பூக்களை பார்தது உண்டா? பார்த்தவன் மண்ணுக்காக துப்பாக்கி தூக்கமாட்டான். முட்டாள்கள்...” நான் என்ன சொல்கிறேன் என்றே எனக்குத்தெரியவில்லை. எனக்குத்தெரிந்தது எல்லாம் கத்தினால் என் மனம் காலியாகிறது எண்ணங்களின் எடைகுறைகிறது மார்பு இலகுவாகிறது என்பது மட்டுமே.

“முட்டாள்கள்... அயோக்கியர்களுக்கு அடிமையாக இருக்கும் முட்டாள்கள் நீங்கள்.... மனிதர்கள் வாழ்வதற்காகத்தான் மண்.சாவதற்காக இல்லை. நீங்கள் சாகுங்கள். வெட்டி சுட்டு எரித்து செத்து ஒழியுங்கள்.நான் இல்லை. நான் உங்களுடன் இல்லை.நான் எவருடனும் இல்லை. நான் உங்கள் நாட்டான் இல்லை. ஐ யம் நாட் என் இண்டியன்...ஐ பிலாங்ஸ் டு நோ மேன்ஸ் லேண்ட் ”

“லெ•ப்டினெண்ட்”என்றார் மேஜர் நிதானமாக. ”நீங்கள் இங்கே பேசியவை எல்லாம் பதிவாகும். ஆனால் இது ராணுவ நீதிமன்றத்தில் உங்களுக்கு உதவாது. உங்களை மனம் பிறழ்ந்தவர் என்று இதைவைத்து நிரூபிக்க முடியாது....நீங்கள் வேடம் போடுகிறீர்கள் என்று தான் பதிவாகும் . காரணம் உங்கள் பழைய ரிக்கார்டுகள் மிக தெளிவாக இருக்கின்றன”

நான் சோர்ந்து அமர்ந்தேன். அழுகைதான் பீரிட்டுவந்தது. அழக்கூடாது என்று என்னையே கட்டுப்படுத்திக் கொண்டேன். மெல்ல சோர்ந்து அமர்ந்தேன் ”எனக்கு நாடு இல்லை. ராணுவம் இல்லை. எனக்கு எந்தப்பொறுப்பும் இல்லை. யார் மீதும் வெறுப்பும் இல்லை…. நான்… ….எனக்கு இதெல்லாம் அபத்தமாக தெரிகிறது”

” நாங்கள் உண்மையை விரும்புகிறோம்” என்றார் மேஜர் திரிபாதி . ”உண்மை. ஒரு துரோகி அகப்பட்டால் அவன் மற்றவர்களை காட்டிக்கொடுத்தாக வேண்டும். இதுதான் விதி”

”நான் துரோகி இல்லை . ஐ யம் என் அவுட்சைடெர்…”

”லெ•ப்டினெண்ட். நீங்கள் ஒத்துழைக்காவிட்டால் மிகக்கொடூரமான அனுபவங்களை அடையவேண்டியிருக்கும்” என்றார் காப்டன்

“நான் தயார்”என்றேன். ”நான் இன்பத்தின் உச்சத்தை அனுபவித்துவிட்டேன். ஊஞ்சல் மறுபக்கம் வருகிறது. இனி துன்பத்தின் மறுபக்கம். அது நியாயம்தான். நான் தயார்”

“என்ன பேசுகிறீர்கள் என்று புரிகிறதா?” மேஜர் பொறுமை இழந்தார்.

“உங்களுக்குப் புரியாது” என்றேன்

”பீட் இட் ஐ ஸே” என்று லெ•ப்டினெண்ட் கர்னல் வெடித்தார். எழுந்து நின்று முகம் சிவக்க” நான் இங்கே வந்தது முதல் இதை நீங்கள்

சொல்லிக் கேட்கிறேன்…எங்களுக்குப் புரியாதது அப்படி என்ன உங்களுக்குப் புரிந்துவிட்டது? டாமிட்…..நங்களும் காதலித்திருக்கிறோம். நாங்களும் ராத்திரி பகலாக பெண் பின்னால் அலைந்து கவிதை எழுதி கனவுகண்டு கண்ணீர்விட்டு உருகியிருக்கிறோம்….எல்லாரும் கடந்து வரக்கூடிய அனுபவம்தான் அது…. அதற்காக பெற்ற தாய் தகப்பன்களை உதறவில்லை. பிறந்த நாட்டுக்கு துரோகம் செய்யவில்லை. சொந்த சகோதரர்களைச் கொல்லவில்லை”

அவரது கோபம் எனக்கு இதமாக இருந்தது. அந்த விசாரணையின் அமைதியும் அதன் உள்ளே இருந்த எள்ளலும் என்னை நிலைகுலைய வைத்திருந்தன. இந்த வேகம்தான் எனக்கு நெருக்கமாக இருந்தது.

”அதாவது நீங்கள் காதலுக்காக எதையுமே இழக்கவில்லை. அதுதான்.அவ்வளவுதான்.. லெ•ப்டினெண்ட் கர்னல். உங்கள் காதலில் உங்களுக்கு உங்களைப்பற்றிய நினைப்பு இருந்திருக்கிறது. உங்கள் பெற்றோர் நாடு எதிர்காலம் எல்லாவற்றைப்பற்றியும் நினைப்பு இருந்திருக்கிறது… இதெல்லாம் எல்லைகள் கர்னல். எல்லைகளைத்தாண்டி ஓர் இடம் இருக்கிறது… நீங்கள் எதையெல்லாம் வைத்திருக்கிறீர்களோ அதையெல்லாம் வீசிவிட்டுத்தான் அங்கே போக முடியும். எல்லா எல்லைக்கோடுகளையும் தாண்டித்தான் அங்கே போகமுடியும்… காதல் அங்கேபோவதற்கான பாஸ்போர்ட் அவ்வளவுதான்…அந்த இடம்தான் முக்கியம்….”நான் மூச்சிரைத்தேன்

”ஷட் அப் ஐ ஸே” என்றார் லெப்டினெண்ட் கர்னல். ”யூ மேக் மி எ •பூல்”

பின்பக்கம் சுவரில் விரிந்திருந்த வரைபடம் மீது ஒரு எறும்பு ஊர்ந்து சென்றது. நான் எழுந்து அதை நோக்கி ஓடினேன் ” இங்கே பாருங்கள் லெ•ப்டினெண்ட் கர்னல், இது இந்தியா. இது மியான்மார். இது பூட்டான்……இங்கே பங்க்ளாதேஷ்…. எல்லாம் நாடுகள்… இந்த எறும்பு

எப்படிப்போனாலும் ஏதேனும் ஒரு நாட்டுக்குத்தான் போக முடியும்... ஆனால் இன்னொரு வழி இருக்கிறது.... ” நான் சிரித்தேன். கிறுக்குபோன்ற சிரிப்பு என்று எனக்கே தெரிந்திருந்தது. ” இன்னொரு வழி இருக்கிறது. மிக எளிமையான வழி...அப்படியே சிறகடித்து பறந்து எழுந்துவிடலாம்.... வானத்தில்....நாடுகள் இல்லாத வெளியில்.... ” அந்த வரைபடத்தைப் பார்த்தேன் ” நீங்களே யோசியுங்கள் .... சிறகு உள்ள எந்த பூச்சியாவது அதன் மீது ஊர்ந்து போகுமா? சொல்லுங்கள்... அதைத்தான் நானும் செய்தேன்.... அங்கே நான் போனேன். அங்கே போனபிறகு எனக்கு இங்கே உள்ள எதுவுமே ஒரு பொருட்டாக இல்லை. இது எதுவுமே என்னுடையது அல்ல. இங்கு என்னால் வாழ முடியாது....அதுதான் நான் ஓடினேன்...”

“நோ மேன்ஸ் லேண்டுக்கு?” லெ•ப்டினெண்ட்  கர்னல் இப்போது அமைதியாக சென்று அமர்ந்து ஒரு சிகரெட் பற்றவைத்தார்.

“ஆமாம். அது யாருக்கும் சொந்தமில்லாத நிலம் ”

”ஓ மை காட்...தி புல் ஷிட்!”என்றார் மேஜர் எரிச்சலுடன். ”அவர் திட்டமிட்டு அதையே திருப்பி திருப்பிச் சொல்கிறார் லெ•ப்டினெண்ட் கர்னல்”

”எனக்கு வேறு ஒன்றும் சொல்வதற்கு இல்லை. நான் ஒரு உச்சத்தை கண்டேன். இன்பத்தின் உச்சம். மனித வாழ்க்கையின் உச்சம்.அப்போதே செத்திருக்க வேண்டும்..இனி ஒன்றும் நான் அனுபவிக்கவேண்டியதாக இல்லை... ஆனால் சாகவில்லை. இத்தனை துன்பத்தையும் அனுபவிக்கிறேன்...இது கூட காரணமாகத்தான். இப்போதுதான் அந்த இன்பத்தின் உண்மையான மதிப்பு எனக்கு தெரிகிறது ” என் கண்கள் பளபளத்தன போலும் ” நான் இப்போதுதான் நிறைவாக இருக்கிறேன். பெரிய விஷயங்களை அடைந்திருக்கிறேன். அடைந்தது என்ன

என்பதை இப்போது ஆழமாக உணர்கிறேன். ஐ •பீல் மை லை•ப் இஸ் •புல்•பில்ட் சர் ”

“ஐ காண்ட் ஸ்டேண்ட் இட் எனி மோர்” என்றார் மேஜர் ” எனக்கு மண்டை குழம்புகிறது” சிகரெட்டை ஓங்கி வீசினார். ”திஸ் பாஸ்டர்ட் மேக் மி சிக்”

லெ•ப்டினெண்ட் கர்னல் என்னை அருகே வந்து உற்று பார்த்தார். ”லெ•ப்டினெண்ட் நீங்கள் ஏதாவது போதை மருந்தை பயன்படுத்துவீர்களா?”

“இல்லை”

“அந்த காட்டுக்குச் சென்றீர்களே, அங்கே ஏதாவது போதையை உட்கொண்டீர்களா? ”

‘இல்லை”

“அவள் உங்களுக்கு ஏதாவது புகை அல்லது தின்பண்டம் கொடுத்தாளா?”

“இல்லை. இல்லை”

“நீங்கள் உங்கள் வசம் இல்லை.... இது எளிதாக கண்டுபிடிக்கபப்டக்கூடிய விஷயம். ஒரு டாக்டர் உங்களை சோதித்தால்

போதும்”

“உங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை கர்னல்...நான் மிகத்தெளிவாக இருக்கிறேன்”

“எக்ஸாட்லி ”என்றார் மேஜர் ” தெளிவாக திட்டமிடப்பட்ட நாடகம். முதல் அங்கத்தில் நீங்கள் வென்றிருக்கிறீர்கள். இதோ விடியோ பதிவுகளில் உங்கள் பேச்சும் நடத்தையும் மிகத் தெளிவாக உள்ளது. ஒரு நல்ல அட்டர்னி உங்கள் மனநிலை மீதான ஐயத்தை வெற்றிகரமாக உருவாக்கிவிட முடியும்...”

லெ•ப்டினெண்ட் கர்னல் பெருமூச்சுவிட்டார். மீண்டும் சென்று சோர்ந்து அமர்ந்து கன்னத்தை வருடியபடி என்னையே பார்த்தார்.

மேஜர் தொடர்ந்தார் ”ஆனால் அது அத்தனை எளியவிஷயமல்ல லெ•ப்டினெண்ட் .நாங்கள் அப்படி விட்டுவிடமாட்டோம். இனிமேல்தான் நீங்கள் கடுமையாக முயற்சிசெய்யவேண்டியிருக்கும். ராணுவத்தில் அதற்கான முறைகள் நிறைய உண்டு...”

“சித்திரவதைகளுக்கு நான் தயார்”

லெ•ப்டினெண்ட் கர்னல் சட்டென்று எழுந்து ” வைன்ட் இட் அப் ” என்றபடி நடந்து வெளியேறினார்

மேஜரும் எழுந்தார்.” இன்னும் நாலைந்து நாட்கள் இங்கே நீங்கள் இருப்பீர்கள் லெ•ப்டினெண்ட் அதற்குள் உங்கள் மன உறுதி

உடைந்துவிடும். குழந்தைபோல கேட்பதற்கெல்லாம் பதில் சொல்வீர்கள்”என்றார். சிவந்த கண்களுடன் என்னை நோக்கி புன்னகை செய்தபின் ”பலபேர் மழலைகூட பேச ஆரம்பித்திருக்கிறார்கள் தெரியுமா?” அவரும் நடந்து கதவை திறந்து வெளியே சென்றார்.

காப்டன் பெருமூச்சுடன் ” ஓக்கே லெ•ப்டினெண்ட். உங்கள் விதி”என்ற பின் என்னை மீண்டும் கொண்டுபோய் அடைக்கும்படி ஆணையிட்டார். இருவர் என்னை நெருங்கி என் கைக¨ளை பற்றி எழுப்பினர்.

13

என்னைக் கொண்டுசெல்லும்போதே அடித்தார்கள். நான் கால்தடுமாறிச் சுவரில் முட்டி விழுந்தபிறகு எழவே அனுமதிக்கவில்லை. அடித்தபடி செத்த உடல்போல இழுத்துக் கொண்டுசென்று அறைக்குள் தள்ளி பூட்டினார்கள்.

நான் கதவையே உற்று பார்த்தேன். அது ஒரு சருமம் போல அதிர்ந்தது.

கதவு திறந்து கான் உள்ளே வந்து என்னருகே வந்தான்

”தண்ணிகுடுக்கச் சொன்னாஹ”என்றான் ரகசியக்குரலில் ”இன்னும் வச்சிருக்காஹ போல. கொடுமைக்காரத் தாயோளிஹ” தட்டை வைத்தான். ” பேயாம என்னாமாம் சொல்லணுமானா சொல்லிபோடுங்க பிள்ளைவாள் ”என்றான்.நான் அவனையே உற்று பார்த்தேன். மூடிய டம்ளருக்குள் எரிந்தபடி இருந்த கஞ்சாபீடியை நீட்டி ” இளுங்க... அப்டியே சல்ல்லுண்ணு இளுத்துப்போடுங்க ” பிடிச்சா நம்ம தலையாக்கும் போறது. ஊரில எட்டு பிள்ளைய அனாதயாயிரும் கேட்டீஹளா?”

நான் அதை தாகத்துடன் இழுத்தேன்

”நாகூருக்கு ஒரு நேர்ச்சை நேந்திருக்கேன்.... நாகூரான் கனிஞ்சு எல்லாம் சரியாப்போகும் கேட்டீஹளா?”என்றபடி தண்ணீர் கொடுத்தான்.நான் குடித்ததும் சென்றான்

மீண்டும் கதவு திறந்தது. அந்த சித்திரவதை ஆள் வந்தான். அவன் ஒரு கார்ப்பொரல். இம்முறை யூனி•பாம் மாட்டியிருந்தான்.

” அரே •பாயி... மஜா கரோ? ” என்றான். யூனி•பாமை கழற்றியபடி ” உனக்கு சிறகுகள் இருக்கிறது என்று சொன்னதாகக் கேள்விப்பட்டேன்... அப்படியா ” என்னருகே வந்து குனிந்து ”இன்றைக்கு உன்னை பறக்க வைக்கலாம். என்ன?”என்றான்

நான் அவன் கண்களையே பார்த்தேன். அவற்றில் ஒரு ஒளி இருந்தது. எதிர்மறையான விஷயங்களில் இன்பம் காண்பவர்களுக்கான ஒளி. அல்லது மெல்லிய பைத்தியத்தின் ஒளி. இவன் ஒருநாள் பைத்தியமாவான். நான் புன்னகை செய்தேன்.

”’என்ன சிரிப்பு?” என்றான் அவன் கைவிலங்கை அவிழ்த்தபடி.

நான் என் கையை உடனே மூக்குக்கு கொண்டுபோய் முகர்ந்தேன். மெல்லிய சருகுத் துகள் கைகளில் இருந்தது.

”என்ன அது... நாயக் ஹோல்ட் இட் ”

நாயக் என் கையை மூர்க்கமாகப் பற்றினான்.நான் வெறி கொண்டு கூவி திமிறி துள்ளினேன். அவன் என் கையைப் பிடித்து மடக்கி அந்த துகள்களை தன் கர்சீ•பால் துடைத்து எடுத்தான்.

”கஞ்சாவா?” முகர்ந்தபின் இல்லை என்பதுபோல தலையசைத்தான்.

”நாயக் கிளீன் ஹிஸ் ஹேண்ட்ஸ்”

நாயக் என் கைகளை குடிநீரில் ஈரமாக்கிய கர்சீ•பால் துடைத்தான். நான் ” நோ ! நோ! பாஸ்டர்ட்ஸ்! பாஸ்டர்ட்ஸ்! ”என்று மிருகத்தனமாக கூவினேன். கையை அவன் விட்டதும் அந்த கார்பொரலை ஓங்கி அறைந்தேன். அவன் புன்னகையுடன் கன்னத்தை தடவியபடி எழுந்தான்.

நான் மனம் உடைந்து விம்மி அழுதேன்

கண்ணீரை துடைக்க என் கையை மூக்கருகே கொண்டுசென்றேன். மதூக மணத்தை உணர்ந்தேன். மனதை மூழ்கடிக்கும் மணம். அழியாத நறுமணம். இது என் கையில் என்றுமிருக்கும். அழியவே அழியாது…அழியவே அழியாது..

நான் கண்ணீருடன் புன்னகைசெய்தேன்.

கார்ப்பொரல் என்னைப் பார்த்தான். ” சிரி… நீ வாய்விட்டு சிரிப்பதையும் நான் பார்க்கத்தான் போகிறேன்”என்றான்

ஒரு ஜவான் நீண்ட தாம்புக்கயிற்றைக் கொண்டுவந்தான். அதை உத்தரம் வழியாக போட்டு மறுநுனியை எடுத்தான். என்னை பிடித்து தூக்கி கைவிலங்கை அவிழ்த்து என்னை இருவர் சேர்ந்து தூக்க வேறு ஒருவன் என் வலதுகாலை ஒரு நுனியிலும் இடது கையை மறு நுனியிலும் கட்டினான். அவர்கள் என்னை விட்டதும் நான் விசித்திரமான கோணலாக தொங்கினேன். என் வலதுகையும் இடது காலும் தொங்கி இழுபட்டன. அப்போது எழுந்த வலியை தவிர்க்க அவற்றை நான் தூக்க வேண்டியிருந்தது. அவ்வசைவில் கயிறு

மாறிமாறி இழுபட பறக்க முனைவது போன்ற விசித்திரமான விளைவு ஏற்பட்டது.

”ஜாலி ஹெ?”என்றான் கார்ப்பொரல் ” என்ஜாய்…”

கதவை மூடி அவர்கள் சென்றார்கள். சில கணங்களில் நான் களைத்தேன். பறப்பதை நிறுத்தி என் கால்கள் தொங்கின. மறுகணம் என் தொடை இடுக்கில் தேள்கள் மாறிமாறிக் கொட்டின. கை இடுக்கிலும் தேள்கள்.

வலியில் என் பற்கள் கிட்டித்துக் கொண்டன. குரலே எழவில்லை. என் மீண்டும் பறந்தேன். இப்போது பறப்பதே வலி மிக்கதாக இருந்தது. மீண்டும் கால்கள் தொங்கியபோது உடலே இரண்டாகப் பிய்ந்துவிடுவது போல வலித்தது.

அந்த வலி என் முன் ஒரு பருப்பொருள் போல நிற்பதாக உணர்ந்தேன். நானும் அதுவும் அன்றி யாருமே இல்லை. சுவர்கள் இல்லை. கூரை இல்லை. அறை இல்ல. நானும் வலியும் மட்டுமடங்கிய ஓர் உலகம். என்ன ஆயிற்று கஞ்சா? கஞ்சாவா? இந்த வலி எல்லா திரைகளையும் கிழிப்பது. புகைத்திரையல்ல இரும்புத்திரைகளைக்கூட இது கிழிக்கும்…

பின் வலி நரம்புகளுக்கு பரவியது. என் உடலின் நாடித்துடிப்புகள் அனைத்தும் தேள் கொடுக்குகளாக மாறி என்னைக் கொட்டின. என் கண்ணீர் பொலபொலவென தரையில் கொட்டுவதை உணர்ந்தேன். அழக்கூடாது. அழக்கூடாது. ஆனால் நான் அழுதுகொண்டிருந்தேன். யாருடைய குரல் இது? என் குரல். மிருகம் போல கூவி கேவி அலறும் குரல். அந்தக்குரல் என்னைச் சூழ்ந்திருந்தது

பின் என் குரல் கம்மியது. கேவல்கள் விசித்திர உறுமல்களாக மாறின. பிறகு ஒலி இல்லை. என் உடலுக்குள் ஒலி திமிறி தசைகள் புடைத்து அடங்கியதை உணர்ந்தேன். என் உடலை நான் அறைக்கு வெளியே எங்கோ இருந்து பார்த்துக்கொண்டிருந்தேன்.

கதவு திறந்து கான் எட்டிப் பார்த்தபோது நான் வீரிட்டேன் ”கான்.... ! கான் ..! .என்னை கொன்னிரு..ப்ளிஸ் என்னை கொன்னிரு.. .உன் காலைப்பிடிச்சு கேக்கேன்..என்னை கொன்னிரு..ப்ளீஸ்...” கான் அச்சத்துடன் பதறி விலக கதவு மூடியது ”கான் !கான்! ப்ளீஸ்.. கான் கில் மீ ப்ளீஸ்!”

கதவு திறந்தது. நான் எழுந்து அமர்ந்து ஒளியை கண்களால் மறைத்தபடி ” ஆ!!”என்று வீரிட்டேன். தவழ்ந்தபடியே சுவரோரமாகச் சென்றேன். கைகளால் என் உடலை நன்றாக மறைத்து ஒரு பந்தாக மாறி ஒடுங்கி அமர்ந்து நடுங்கியபடி ” ஷிராய் லில்லீ ஷிராய் லில்லீ....”என்று கூவினேன்.

என் மீது ஓர் உதை விழுந்தது .”லுக் ஹியர் யூ •பூல்!”

நான் ஏறிட்டுப்பார்த்தேன். அந்த கார்ப்பொரல். என்னை பிடித்து இழுத்துக் கொண்டுசென்றான். இது எந்த இடம்?நான் எப்படி இங்கே வந்தேன்? தியாகராஜன் எங்கே? அவனிடம்தான் அன்றைய ஆங்கிலச்செய்தித்தாளை எடுத்து வரச்சொன்னேன். குளிர்ந்த தரை . குளிர்ந்த சுவர்கள். நான் ஒரு ஜவானிடம் ‘ ஐ வாண்ட் ஹிண்டு. யூ நோ. நாட் அம்ருதபஸார் பத்ரிகா”என்றேன்

என் முன் நாற்காலியில் ஒரு பெண் அமர்ந்திருந்தாள். அவளருகே இரு ஜவான்கள். இருவரும் கார்ப்பொரல்கள். அந்தப்பெண் என்னை பார்த்ததும் குதித்து எழுந்து ஆ என்று திறந்த வாயுடன் மின் அதிர்ச்சி அடைந்தவள் போல நின்றாள். பிறகு அவள் உடலே இரண்டாக கிழிபடுவதுபோல ஓர் அலறல். ”நெல்! நெல்!நெல்!...” தலையிலும் மார்பிலும் அறைந்தபடி ”நோ! நோ! நான் சொல்லிவிடுகிறேன் எல்லாவற்றையும் சொல்லிவிடுகிறேன்...அவரை விட்டுவிடுங்கள் சொல்கிறேன் ! சொல்கிறேன் !”என்றாள். அவளை கார்ப்பொரல்கள் இறுகப்பிடிக்க அவள் துள்ளி திமிறி தொண்டை நரம்புகள் நீலமாகபுடைக்க எம்பி முறுக்கிக் கொண்டாள். நான் அவளை விசித்திரமாகப் பார்த்தேன்.

என்னை இழுத்து மீண்டும் பக்கத்து அறைக்குக் கொண்டுசென்றார்கள். அவளது குரல் ”நெல்!நெல்!” கார்ப்பொரல்களின் உறுமல் பேச்சு ”வேண்டாம் வேண்டாம் சொல்லிவிடுகிறேன் சொல்லிவிடுகிறேன்”

என்னை மீண்டும் என் அறைக்குள் கொண்டுவந்தார்கள். என் அறையைக் கண்டதும் நானே ஓடிச்சென்று அதற்குள் ஏறிக் கொண்டேன். பாதுகாப்பாகவும் நிம்மதியாகவும் உணர்ந்தேன். என்னை கூட்டிவந்த ஹவல்தாரிடம் ”பூட்டு ! கதவைப் பூட்டு !”என்று பதறினேன்.

கதவு மூடியதும் நான் சென்று என்னுடைய மூலையை அடைந்து சுவரோரமாக முடங்கிக் கொண்டேன். பதற்றமெல்லாம் வடிய மானம் அமைதி கொண்டது. என் கைகளை எடுத்து முகர்ந்தேன். மதூக மலரின் மணம். மதூகச் சமவெளியில் நான் ஓடிக்கொண்டிருந்தேன். குளிர்ந்த இளஞ்சிவப்பு மலர்களின் ஊடாக. நீலவான் நிறைந்த மேகங்களுக்கு கீழே அமைதியே வடிவான மலைகளுக்கு கீழே.

வழியில் ஒரு பாறையில் ஜ்வாலா நிற்பதைப்பார்த்தேன். பாவாடைத் தாவணி அணிந்து இரட்டைப்பின்னல் போட்டிருந்தாள். அது திருநெல்வேலி ஹிந்து ஹைஸ்கூலின் சீருடை. சிரித்தபடி என்னை நோக்கி வந்தாள். ” இன்னைக்கு ஸ்கூல் இல்லியா?”என்றேன். சிரித்தாள். அவள் கையில் ஒரு புத்தகம் இருந்தது. ஒன்பதாம் வகுப்பு வரலாறு. அதை விரித்து பார்த்தேன். ‘நெப்போலியன் எந்த போர்க்களத்தில் தோற்றார்?”என்று வாசித்து அவளிடம் கேட்டேன். அவள் சிரித்தபடி தெரியாதே என்று தலையாட்டினாள். நான் புத்தகத்தை சுழற்றி எறிந்தேன். அது வானில் சுழன்றது. வானில் பறவைகள்…நான் சிரித்தபடி துள்ளி துள்ளி குதித்தேன். அவளும் புத்தகங்களை சுழற்றி வானில் எறிந்தபடி குதித்தாள். சிரிப்பும் துள்ளலுமாக குதூகலித்தோம்

கதவு திறந்தது. கான் உள்ளே வந்தான். எனக்கு உணவு தந்தான்.” ஒண்ணும் பயபப்டாதீஹ. இது சித்திர. சித்திர மாசமுல்லா.. மேஷ ராசிக்கு மோசமாக்கும். வைகாசியிலே வெளங்கிரும்…” பீடியை அளித்தான்”குடியுங்க…” நான் ஆவலுடன் புகையை இழுத்தேன்

கான் என்னிடம் ” லெ•ப்டினெண்ட்”

நான் அவனை கூர்ந்துபார்த்தேன். அவன் ”பிள்ளைவாள்”என்றான்

”யாரு?”

“பிள்ளைவாள் நான்தான்… ”என் தாடையைப் பிடித்து ஆட்டினான். ”நான்தான் நாயர்”

நாயர்தான். யூனி•பாமில் என் அருகே அமர்ந்திருந்தான்.
”பிள்ளைவாள்…”

”நெப்போலியன்!”என்று நான் சொன்னேன் ” வாட்டர்லூ….”

”பிள்ளைவாள் குடியுங்கள்…”எனக்கு அவன் குளிர்ந்த தண்ணீரைக் கொடுத்தான். நான் ஆவலுடன் குடித்து முடித்து அவனிடம் ”நெப்போலியன் செண்ட் ஹெலனா தீவில் இறந்தான்….” என்றேன்

”பிள்ளைவாள் வாங்க”என்று நாயர் என்னை தூக்கினான்.

அவனுடன் கைத்தாங்கலாக நான் குளிர்ந்த காரிடாரில் நடந்தேன். திறந்த வெளியை அடைந்தேன். செடார் மரத்தின் அடியில் ஒரு நாற்காலி போடப்பட்டிருந்தது. நாவிதன் காத்து நின்றிருந்தான்

நான் நாற்காலியில் அமர்ந்தது, நாவிதன் என்னிடம் கண்ணாடியை நீட்டினான். நான் அதை வாங்கி என் முகத்தைப் பார்த்ததும் ”ஆ!” என்று அலறியபடி எழுந்தேன். அதை எதிர்பாராத நாவிதனின் கத்தில் என் முழங்கையை கிழித்தது.

”•பூல்!”என்று அவனை சீறியபடி நாயர் என்னைப்பற்றி அமரச்செய்தான்.

”மாப் கரோ சாப் மாப் கரோ”

”நான் போறேன்..நான்..” என் முகமாகவே அது இல்லை. தாடிமீசை மண்டிய ஒரு பயங்கர முகம். நானா அது?

”எங்க?”

”ரூமுக்கு”

”லெ•ண்டினெண்ட்... கொஞ்சம் நிதானமா நினைச்சுப்பாருங்க எல்லாத்தையும்... ப்ளீஸ்....அமைதியா இருங்க” நாவிதனிடம் ”ம்”என்றான் நாயர்

ஷேவ் செய்தபின் என் முகத்தை நான் கண்ணாடியில் பார்த்தேன். நான் நெல்லையப்பன். லெ•ப்டினெண்ட் . இண்டியன் ஆர்மி... அந்த பிம்பத்தை நோக்கி புன்னகை செய்தேன்.

குளிர்ந்த நீரில் குளித்து என் சீருடைகளை அணிந்து கொண்டேன். மீண்டும் கண்ணாடியில் பார்த்தேன். அந்த அறை அதன் இருள் எல்லாம் சில மணி நேரத்திலேயே எங்கோ மறைந்தன.

என்னை நாயர் கூட்டிச்சென்று தன் கூடார அறைக்குள் கொண்டுசென்றான். காம்ப் கட்டிலில் அமரச்செய்தான்.

”பாஸ்ட் இஸ் பாஸ்ட் லெ•ப்டினெண்ட் சார்”என்றான் நாயர். ”இனி ஆகப்போவதைப்பத்தி பேசுவோம்....நாம சில விஷயங்களை மனம் திறந்து பேசணும். அதுக்காக என்னை அனுப்பியிருக்காங்க”

நான் என் கையை எடுத்து முகர்ந்தேன். மதூகம். துடிப்புடன் நிமிர்ந்து ”ஜ்வாலா? ஜ்வாலா எங்கே?”என்றேன்

”அமைதியா இருங்க…அவளுக்கு ஒண்ணும் ஆகல்லை. நல்லா இருக்கா”

அவள் அலறித்துடிக்கும் காட்சியை என் கண்ணுக்குள் கண்டேன்

எழுந்து வெறியுடன் நாயரின் தோள்களை பிடித்து ” ஜ்வாலா ஜ்வாலா எங்கே?” என்று கூவினேன்

”உட்காருங்க பிள்ளைவாள்….அவ ஒரு தலைவரோட மகள்…அவளை யாரும் ஒண்ணும் பண்ணிட முடியாது…உக்காருங்க”

நான் கண்ணிருடன் அமர்ந்தேன். தலையை கைகளால் பற்றிக் கோண்டேன்

”அண்ணைக்கு அவ உங்களப் பாத்து அலறினப்பவே லெ•ப்டினெண்ட் கர்னல் புரிஞ்சுகிட்டார். அவர் பக்கத்து ரூமிலதான் இருந்தார்… ”

”ம்”

”மேஜர்தான் கொஞ்சம் குழப்பினார் .ஆனா லெ•ப்டினெண்ட் கர்னல்

ரொம்ப தெளிவா இருந்தார். உங்களோடது ஒரு இமோஷனலான உறவு...நீங்க கொஞ்சம் ஜாஸ்தியா ரொமாண்டிஸைஸ் பண்ணிட்டீங்க அவ்வளவுதான்னு சொன்னார்”

” நாம இப்ப எதைப்பத்திப் பேசப்போறம்?”

”உங்கலைப்பத்தி. உங்க எதிர்காலத்தைப்பத்தி...”

நான் லேசாகச் சிரித்தேன்

”இப்ப ஒண்ணும் குடிமுழுகிபோகலை பிள்ளைவாள். எல்லாத்தையும் விரிவா பேசிடலாம்...”

”சொல்லு”

”ஜ்வாலாவை நாளைக்கு கூட்டிட்டுப்போறாங்க”

நான் எழ முனறு மீண்டும் அமர்ந்தேன்

”யாரு?”

“அவ அப்பாவோட ஆளுங்க.”

”எப்டி?..”

“பேச்சுவார்த்தை. அவளை வைச்சு பேரம் பேசினோம்...” நாயர் சொன்னான் ”அவங்க பிடிச்சு வைச்சிருந்த எட்டு பேரை விடுவிச்சாங்க. அதில ஒருத்தர் மேஜர். ரெண்டுபேர் காப்டன் ரேங்கில உள்ள ஆ•பீசர்ஸ். மூணுபேர் பிளாண்டேஷன் ஓனர்ஸ். சமீபகாலத்தில இதுமாதிரி ஒரு அறுவடைய நாம பண்ணினதில்லை. எல்லாருக்கும் கல்கத்தா ஈஸ்டர்ன் கமாண்டிலேருந்து ஐரிகார்ட்ஸ் வந்திருக்கு. எனக்கு ஒரு பிரமோஷன் கிடைக்கும்”

”கன்கிராஜுலேஷன்ஸ்”

‘தாங்க்ஸ். கர்னல் இந்த விஷயத்தை இப்டியே முடிக்க விரும்பறார். ”

”ம்”

”அது உங்க கையிலதான் இருக்கு பிள்ளைவாள்.”

”ம்?”

” நீங்க அவளை மறந்திரணும்.... அவ நம்மளைச் சேந்தவ இல்லை. அவ மியான்மார் சிட்டிஸன் .அவள மறந்திருங்க.எல்லாம் ஒரு கனவு மாதிரி. அவ்ளவுதான் கனவு கலைஞ்சிருச்சி... உங்கள சதர்ன் கமாண்டுக்கு மாத்துவாங்க. ஒரு சின்ன பனிஷ்மெண்ட் வரும் பாட்ஜ் தொலைஞ்சதுக்கு....”

”அவளை மறந்திரணும்?”

“கமான்… டிராமாட்டிக்கா ஒண்ணும் வேணாம்… ஈஸி. மறந்திருங்க. எல்லாம் சரியாயிரும். நீங்க ஹைதராபாத் போலாம். சில வருஷங்களில திருவனந்தபுரத்துக்குக்கூட போலாம். அப்பா அம்மாவுக்கு நீங்க ஒரே பையன். வயசான காலத்தில நீங்க அவங்க கூட இருக்கலாம். அங்கேயே ஒரு குடும்பம். பிள்ளைங்க அங்கேயே தமிழ் பேசி படிக்கலாம்….லுக் ஒரு ஆர்மி ஆ•பீசருக்கு இதைவிடப்பெரிய வாய்ப்பு ஒண்ணும் இல்லை…”

”அதுக்கு நான் அவள மறந்திரணும்….. மறந்திரணும் இல்லியா?”

” ப்ளீஸ்… இப்ப வேண்டாம். இப்ப ஒண்ணும் சொல்ல வேண்டாம். யோசியுங்க ..யோசிச்சு முடிவெடுங்க”

”நாயர்..பாத்தியா?”என்று என் கையை நீட்டினேன்…”இதில இப்பவும் மனம் வருது”

”என்ன மணம்?”

“மதூகம். ஷிராய் லில்லி”

“ப்ளிஸ்…” என்றான் நாயர் கசப்புடன் ‘ப்ளீஸ் பிள்ளைவாள்.சோதிக்காதீங்க..”

“கண்டிப்பா வருது நாயர்...உங்களுக்கெல்லாம் இது பைத்தியக்காரத்தனமாத்தான் படும்.ஆனா எனக்கு அந்த மணம் வருது... நான் எப்டி அவள மறக்க முடியும்?”

நாயர் பொறுமை இழப்பது தெரிந்தது ”லெ•ப்டினெண்ட் நீங்க முட்டாள் இல்லை. உண்மையாவே சொல்லுங்க என்ன இதெல்லாம்? விளையாடுறீங்களா?”

”நான் அவள மறக்க முடியாது நாயர். மறக்க மாட்டேன்னு சொல்லலை. மறக்க என்னால முடியாது அவ்வளவுதான்....”

”ஏன்? எதுக்காக உங்களைப்போல ஒரு ஆர்மிமேன் இந்த அளவுக்கு இமோஷனல் ஆகணும்?”

”நாயர், நமக்கு கிடைக்கிற சாதாரண அனுபவங்களைவிட மேலான பெரிய அனுபவங்கள் இந்த உலகத்தில உண்டுன்னு நீங்க நம்பறீங்களா?”

”வெல்...” நாயர் தயங்கினான்.

”நீங்க அடைஞ்சிருக்கீங்க ...ஒரு துளி...அன்னிக்கு அந்த மலையாளப்பாட்டை பாடினப்ப நீங்க ஏன் கண்கலங்கினீங்க? ஒரு ஆர்மி மேன் அடையற உணர்வா அது? அதை லாஜிக்கலா எக்ஸ்ப்லெய்ன் செய்ய உங்களால முடியுமா?”

நாயர் ‘பட்– ”என்று ஆரம்பித்தான்

”அதேபோல மகத்தான அனுபவங்கள் பூமியில நிறைய இருக்கு நாயர். மனுஷனை எறும்பு மாதிரி கொசு மாதிரி அற்பமா ஆக்கற மகத்தான அனுபவங்கள். அந்த அனுபவங்களுக்கு எந்த எல்லையும் இல்லை. நாம நம்ம அன்றாட வாழ்க்கையில ஏராளமான எல்லைகளைப்போட்டுட்டு வாழறோம். என் வீடு என் ஊரு என் நாடு என் இனம்…. மகத்தான அனுபவங்களுக்கு எல்லையே இல்லை. தே ஆர் எஸென்ஷியலி பவுண்ட்லெஸ்…. வானம் மாதிரி திறந்துக்கற அனுபவங்கள். நம்ம மனசே பிரபஞ்சமா ஆகிற அனுபவங்கள்…”

”இந்த அங்கமி பொண்ண லவ் பண்றது அதில ஒண்ணா?”

” அந்த மாதிரி அனுபவங்களை அடைஞ்சவங்களை நாம சித்தர்கள் ஞானிகள்னு சொல்றோம். கவிஞர்கள் அந்த அனுபவங்களை பத்தி ஓயாம பாடியிருக்காங்க… சினிமாபாட்டுகூட….”நான் நெகிழ்ச்சியுடன் ” எத்தனை வாட்டி கேட்ட பாட்டு… …இந்தக்காற்றினில் நான் கலந்தேன். உன் ஆடையில் ஆடுகின்றேன். நான் போகின்ற பாதையெல்லாம் உன் பூமுகம் காணுகின்றேன்” என்று பாடினேன் ”கண்ணதாசன் வரி. அவன் அந்த பரவசத்தை ஒரு நிமிஷமாவது அடைஞ்சிருக்கான். யோசிச்சுப்பாரு. காதல்னா எவ்வளவு சின்ன விஷயம்? ஒரு ஆணும் பெண்ணும் ஒருத்தரை ஒருத்தர் விரும்பறாங்க. சேந்து வாழ நினைக்கிறாங்க. அவ்ளவுதானே? எதுக்குய்யா அதைப்போய் உலகம் முழுக்க ஞானிகளும் கவிஞர்களும் மாறிமாறிப்பாடியிருக்காங்க? காவியங்களா எழுதிக் குவிச்சிருக்காங்க… நம்மாழ்வார் பாடினார். குணங்குடி மஸ்தான் சாயபு பாடினார். பாரதி பாடினார்…ஏன்யா? அவன்லாம் முட்டாளா? ஒண்ணும்தெரியாத பைத்தியக்காரனா? இல்ல. காதலும் அந்த உச்சத்துக்குப் போகும். அப்டிப் போனா அதுவும் பவுண்ட்லெஸ் எக்ஸ்பீரியன்ஸ்தான்… அதுவும் ஆன்மீகம்தான் … பாரதி அதை யோகம்னு சொன்னான்… மண்ணில ஆன்மீகத்தோட

ஒப்பிடக்கூடிய ஒரே அனுபவம் அது தான்... கடவுளைப்பத்தி சொல்லவந்தவன்லாம் காதலைப்பத்தி சொன்னது அதனாலதான்......” என் குரலை நானே உணர்ச்சிகரமாக கேட்டுக் கொண்டிருந்தேன் ” கடவுளை மாதிரியே காதலும் பவுண்ட்லெஸ் எக்ஸ்பீரியன்ஸ்தான்....ஐ நோ தட்... ஆண்ட் அயம் ஷ்யூர் எபவுட் தட்”

‘ ரிடிகுலஸ்” நாயர் பற்களை கிட்டித்தபடி பொறுமை இழந்து சொன்னான்.

”நீதான் ரிடிகுலஸா பேசறே.... வயலார் பாட்டு தெரிஞ்சவன்தானே.... அவர் பாடாததா? டேய் முட்டாள் உலகம் முழுக்க அத்தனை பேரும் மாறி மாறி அதைத்தான் பாடிட்டிருக்காங்க.... முட்டாள் முட்டாள்!” நான் கூவினேன்’

”ஓக்கே. நீங்க அந்த அனுபவத்தை அடைஞ்சீங்க.... அதுக்கு இப்ப என்ன? அவ அவளோட அப்பாகூட போறா... அவ்ளவுதான். எல்லாம் முடிஞ்சாச்சு. அந்த அனுபவத்தை உங்க ஆத்மாவில பொத்தி வைச்சுக்குங்க. அங்கே அது உங்களுக்கு மட்டும் தெரிஞ்ச ஒரு இனிமையான ரகசியமா இருக்கட்டும்... இப்ப இந்த எபிஸோட இதை முடிப்போம்”

”இல்ல.நீ சொன்னே நான் அவள மறக்கணும்னு. மாட்டேன்.செத்தாலும் மாட்டேன்.... நான் அவளை தேடிப்போவேன். அவ எங்க இருந்தாலும் அவளைத் தேடிப்போவேன்.தவ இல்லாம நான் இல்ல. அவகூட வேண்டாம்....அவ நடந்த மண்ணைப் பாத்தாலும் போதும் எனக்கு.அவளை தொட்ட காத்து கூட எனக்கு போதும். ஆனா அவளை விட்டிட்டு நான் இருக்க மாட்டேன்....”

”அவ உங்களை விட்டாச்சு...மறந்தாச்சு. அவ நாளைக்கு போறா. அப்றம்

நீங்க ரெண்டுபேரும் பாக்கவே மாட்டீங்க”

”அவளால முடியாது” நான் அமர்ந்துகொண்டேன். என் கைகளை குறுக்காக கட்டினேன்

”முடியும். மறந்திட்டா. நாளைக்கு நீங்களே பாருங்க”

”நாயர். எனக்கு நீங்க ஒரு உதவி பண்னணும்… என் மேல பிரியம் இருந்தா…. என்னை நீங்க ஒரு மனுஷ ஜென்மமா மதிச்சா…ப்ளிஸ்…”

”என்ன?” நாயர் ஐயத்துடன் கேட்டான்.

“நான் அவள பாக்கணும். அவகூட பேசணும்”

“லெ•ப்டினெண்ட் சார் , நான் உங்கள மாதிரி இல்லை. எனக்கு எல்லா இமோஷன்ஸும் உண்டு. ஆனா எல்லாத்தையும் விட எனக்கு என் நாடுதான் பெரிசு.  நான் ஒரு சோல்ஜர். டியூட்டிதான் எனக்கு முக்கியம். ஸாரி… நோ” அவன் எழுந்தான்.

இரு ஜவான்கள் எட்டிப்பார்த்தனர். கையில் எம். 16 கார்பைன்கள். அவர்களிடம் தலையாட்டியபின்  நாயர் வெளியே போனான். அவர்கள் என்னை எழுப்பி மீண்டும் அறைக்குக் கொண்டுசென்றார்கள்.

14

என் அறைக்குள் செல்ல நான் அப்போது விரும்பவில்லை. நான்கு சுவர்களுக்குள் அடைபடுவதை மனம் எதிர்த்தது. வெட்டவெளியில் வானத்தின் கீழ் நிற்க ஏங்கினேன். ”கார்ப்பொரல் ப்ளீஸ்...என்னை அந்த அறைக்குக் கொண்டு செல்லாதீர்கள்...ஐ ஹேட் இட்”என்று கெஞ்சினேன்.

”நோ ஆர்டர்ஸ் ·பர் தட் ஸார்”என்றான் அவன்

”என்னை சிறையில்தானே போடவேண்டும்... இந்த வராந்தாவில் சங்கிலியால் கட்டிப்போடுங்கள்.... ப்ளீஸ். நான் வானத்தை பார்க்கவேண்டும்....”

”ஆர்டர் இல்லை சார்” என் புஜத்தைப்பற்றினான்

”மேஜரிடம் நான் கேட்கிறேன்....நான் கெஞ்சியதாகச் சொல்லுங்கள் ப்ளீஸ்”

ஆனால் அவன் அறைக் கதவை திறந்து ” ப்ளீஸ் கெட் இன் சர்” என்றான். அவன் குரல் கடுமையாகியது ” டு வாட் ஐ ஸே”

நான் தயங்கியபடி உள்ளே சென்றேன். கதவு மூடுவதற்குள் அதை தடுக்கும்பொருட்டு கதவைப்பற்றிக் கொண்டேன். ”அப்படியானால் கதவை மூட வேண்டாம். கட்டிப்போடுங்கள் . மூடவேண்டாம்...”

”நோ ஆர்டர்ஸ் சர்”

கதவை மூடி அவர்கள் சென்றதும் நான் சோர்ந்து சுவர் அருகே சென்று அமர்ந்தேன். கைகளால் முகத்தை மூடினேன். என் உடல் அதிர்ந்தபடியே இருந்தது.

ஜன்னலுக்கு அப்பால் ரேடியோ ஒலி கேட்டது. சிலோன் ரேடியோவா? ” ஓராயிரம் பார்வையிலே உன் பார்வையை நான் அறிவேன்…” ஏராளமான பேர் சேர்ந்து பெரும் கோரஸாக அதைப்பாடினார்கள். பாடவில்லை, முழங்கினார்கள். முழக்கம் என்னைச் சூழ்ந்து அறையை நிரப்பியது. நான் எழுந்து ஜன்னல் மீது தொற்றி ஏறி வெளியே பார்த்தேன். மதூக மணம் ஜன்னல் வழியாக குளிர் காற்றுடன் கலந்து வந்தது. நிலவு தேய்ந்து பெங்காலி சங்குவளையல் துண்டுபோல வானில் நின்றது. அந்த பாடல் இப்போது மிக மிக சோகமாக இழைந்தது. ” இந்தப்பூக்களின் வாசமெல்லாம் ஓர் மாலைக்குள் வாடிவிடும். நம் காதலின் வாசம் மட்டும் எந்த நாளிலும் நிலைத்திருக்கும்”

நான் மனம் நெகிழ்ந்து அழுதேன். கம்பிகளில் கன்னம் அறுபட முகத்தைப் பதித்து வானத்தை முடிந்தவரை எட்டிப்பார்த்து கண்ணீர் கொட்ட தேம்பி அழுதேன்.

திடீரென்று நிலவின் ஒளி அதிகரித்தது. ” ” ஓராயிரம் பார்வையிலே உன் பார்வையை நான் அறிவேன்… உன் காலடி ஓசையிலே …” இசை பெருத்து வலுத்து ஓங்கியது. நிலவு வளர்ந்தது. ஆமாம், பிரமை இல்லை. உண்மையாகவே வளர்ந்தது. முழுநிலவாக ஆயிற்று. செடார் மரங்களும் செடிகளும் இலைச்சுடர்கள் ஒளிர எழுந்தன. காம்ப் கூடார கூரைகளும் பாலொளியில் நனைந்து பளபளத்தன. முழு நிலவில் காம்ப்

முற்றாகத்தூங்க அமைதி எங்கும் நிரம்ப அந்த இசை மட்டும் குரலற்ற பாடலாக மாறி பின் ஒலியற்ற பாடலாக சுழன்றபடியே இருந்தது.

நான் காலையில் ஜன்னலுக்கு கீழே கிடந்தேன். கதவு திறந்து முழு சீருடையில் வந்த நாயர் என்மீது குனிந்து ”லெ·ப்டினெண்ட்”என்றான்

எழுந்து அவனை வெறித்துப் பார்த்தேன்.

”கமான் லெட் அஸ் ரெடி. ஷி இஸ் லீவிங் டுடே”என்றான்.

நான் புரியாமல் பார்த்தேன்.

”நேத்து ராத்திரியே ஜ்வாலாவோட ஆட்கள் வந்தாச்சு. இண்ணைக்கு காலம்பற அவள கூட்டிட்டு போறாங்க…”

நான் துடித்து எழுந்து ” எங்க? எங்க ஜ்வாலா? எங்க அவ?”என்றேன். கதவை நோக்கி ஓடமுயன்றேன்

நாயர் என்னைத் தடுத்தான். ”நீங்க பல்தேய்ச்சு ரெடியாகுங்க….”

நான் வேகமாகப் பல்தேய்த்து குளித்து வேறு சீருடை அணிந்தேன்.

”இது லெ·ப்டினெண்ட் கர்னலோட ஆர்டர். நீங்க அவ போறதைப்பாக்கணும். அப்பதான் உங்க மனசில உள்ள பிரமைகள்

இல்லாம ஆகும். அவ போறா லெ•ப்டினெண்ட். அனேகமா அவளை மியான்மாருக்கு அனுப்பிடுவாங்க. ஒரு சேப்டர் முடியுது. திரும்ப நீங்க அவள பாக்கவே முடியாது…அதை நீங்க இன்னைக்கு உணர்ந்தாகணும்” நாயர் கூரிய பார்வையுடன் சொன்னான்.

நான் என் உடல் மெல்ல நடுங்கிக் கொண்டிருப்பதை உணர்ந்தேன். டீ கொடுத்தார்கள். என்னால் டம்ளரை கைகளால் பற்ற முடியவில்லை. தளும்பியது. மேஜைமீது வைத்துவிட்டேன்.

”ஈஸி… லெ•ப்டினெண்ட் சார். இது உங்க வாழ்க்கையில ஒரு முக்கியமான நாள். கனவு கலையற வலியை நான் புரிஞ்சுக்கறேன். ஆனா கனவுன்னா அதிலேருந்து வெளியே வந்துதானே ஆகணும் ? ”

மீண்டும் காரிடாரில் நடக்கும்போது நாயர் சொன்னான் ” இது லெ•ப்டினெண்ட் கர்னலோட ஏற்பாடு. அவர் சில விஷயங்கள தீர்மானமா சொல்லியிருக்கார். நீங்க அவகிட்டே பேசக்கூடாது. ஒரு வார்த்தைகூட பேசக்கூடாது. அந்த கண்டிஷன்மேலத்தான் நீங்க அவளை

பாக்கமுடியும்…”

நான் நின்றுவிட்டேன்

”ஆமா இதில மாற்றமே இல்ல”

”நான் அவகிட்டே பேசணும்”

”நோ. இனிமே மீண்டும் ஒரு டிராமா தொடங்கிறத லெ•ப்டினெண்ட் கர்னல் விரும்பல. கண்டிப்பா பேசறதுக்கு பெர்மிஷன் இல்லை...” நாயர் சொன்னான்.

”ப்ளீஸ்!” என் குரல் உடைந்தது

”நோ” என்றான் நாயர் ”நான் ஒரு ஒரு சோல்ஜர். எனக்கு என்ன ஆர்டரோ அதைத்தான் நான் செய்வேன்.அதில எந்த காம்ப்ரமைஸ¤ம் இல்லை. நீங்க ஒரு வார்த்தை அவ கிட்ட பேசக்கூடாது. அதுக்குத் தயார்னாத்தான் நாம இப்ப போறோம். ”

”ஒரு வார்த்தை...ஒரு வார்த்தை... நாயர்”

”ஒரு சைகைக்கு கூட பெர்மிஷன் இல்லை .ஸாரி...”

நான் விம்மியபடி நின்றேன்

”என்ன சொல்றீங்க?”

“ம்”

” நீங்க எனக்கு சத்தியம் செய்து குடுக்கணும்.... ” நாயர் கைநீட்டினான்.

‘நாயர்!”

“ப்ளிஸ் பிள்ளைவாள்..... சத்தியம் செஞ்சு குடுக்கணும்...அத நீங்க மீறமாட்டீங்கன்னு எனக்குத்தெரியும்”

நான் அவன் கைக¨ளைப் பிடித்து ”சத்தியம்”என்றேன்

என்னை அவன் கர்னலின் அறைக்கு அருகே மேஜரின் காபினுக்குள் கொண்டுசென்றான். அதன் கதவு கண்ணாடியாலானது. நான் உள்ளே சென்றதும் ஒரு ஜவான் வந்து அதை வெளியே பூட்டி ஒரு ஸ்டிக்கர் டேப்பை ஒட்டினான்.நாயர் அதை உள்ளே பூட்டி ஸ்டிக்கர் டேப்பை ஒட்டினான்.

”எதற்கு இது?”

லெ•ப்டினெண்ட் கர்னல்  ஆர்டர். டேக் நோ சான்ஸஸ்னார்... ” என்றான் நாயர் ”உக்காருங்க பிள்ளைவாள்”

நான் இரும்பு நாற்காலியில் அமர்ந்தேன். வெளியே காரிடாரையே பார்த்தேன்.

காப்டனும் மேஜரும் வந்தனர். தங்களுக்குள் மெல்ல பேசியபடி என்னை ஓரக்கண்ணால் பார்த்தனர். லெ•ப்டினெண்ட் கர்னலின் அறைக்குள் சென்று அமர்ந்தனர். சற்று நேரம் கழித்து லெ•ப்டினெண்ட் கர்னல் தன் ஏ.டி.சி தொடர வேகமாக வந்தார். தலைகுனிந்து நடந்து தன் அறைக்குள் நுழைந்தார். அந்த அறையின் கண்ணாடிக்கதவு வழியாக உள்ளே

அவர்கள் சல்யூட் அடிப்பதும் அமர்வதும் தெரிந்தது. லெ•ப்டினெண்ட் கர்னல் அவர்களிடம் கவலை தோய்ந்த முகத்துடன் ஏதோ சொன்னார். அவர்கள் ஏதோ சொல்ல அவர் மெல்லிய புன்னகையுடன் என்னைப் பார்த்தார்.

நிமிடங்கள் மெல்ல கனத்து ஊர்ந்தன.

கார்பைன் ஏந்திய எட்டு ஜவான்களால் அழைத்துவரப்பட்ட ஆறு மணிப்பூர் போராளிகள் வந்தனர். ஒருவர் வயதானவர். அவர்களிடம் ஆயுதங்கள் இல்லை.

அவர்கள் லெ•ப்டினெண்ட்     கர்னல் காபினுக்குள் சென்றனர். அங்கே அமர்ந்தனர்.

”ஏ எல் எ•ப் போட ஏரியா கமாண்டர் அந்த ஆள்”என்றான் நாயர் .” சீரு தாபான்னு பேர்.  அவரையே அனுப்பியிருக்காங்க….”

பெரிய தாம்பாளத்தில் பிஸ்கட்டுகளும் கெட்டிலில் டீயுமாக இரு சப்ராஸிகள் உள்ளே சென்றனர்.

”எங்க ஜ்வாலா?” என்றேன்

”வருவாள். ” நாயர் சொன்னான்.

சற்று நேரத்தில் இரு ஜவான்களால் ஜ்வாலா கூட்டிவரப்பட்டாள். அவள்

முகம் வீங்கியது போலிருந்தது. புதிய ஷர்ட்டும் கவுனும் அனிந்திருந்தாள். தீ நிறமான அந்த உடையில் அவள் தழல் விட்டு எரிந்துகொண்டிருப்பது போல பட்டது. முகமும் கூந்தலும்கூட எரிந்தன. அவள் நடக்கும்போது தழல் ஓசையிலாது  எரிந்து செல்வது போலிருந்தது. ஜ்வாலாமுகி – அதற்கு என்ன பொருள்? நெருப்பை நோக்குபவள். நெருப்பே முகமானவள்…

அவள் உள்ளே சென்றாள். லெ•ப்டினெண்ட் கர்னல் அவளை வரவேற்று அமரச்செய்தார். சில சொற்கள் சம்பிரதாயமாகப் பேசப்பட்டன. மௌனை திரைப்படம் போல் நான் உணர்ச்சிகளை மட்டும் கண்டு கொண்டிருந்தேன். என் மனம் இரைந்து கொண்டிருந்தது.

அவர்கள் கும்பலாக எழுந்து வெளியே வந்தனர். கிழவன் ஜ்வாலாவின் தோள்களில் கையை வைத்து மெல்ல அணைத்துக் கொண்டு நடந்தான்.

லெ•ப்டினெண்ட்  கர்னல் கிழவனின் கையை குலுக்கினார். மேஜரும் காப்டனும் அவரிடம் கைகுலுக்கினர். ஜ்வாலா குனிந்த தலையுடன் அசையாமல் நின்றாள். அவள் கன்னத்தில் பூனைமயிர் மெல்லிய தங்கப்பிசிறாக நிற்பதைக் கண்டேன். அழுந்திய சிறு உதடுகளில் உள்ளே குமுறும் அழுகையை உணர்ந்தேன்.

”அவள் என்னை பார்க்கல….நாயர்…அவ என்னை பார்க்காமலே போயிடுவா” நான் என் நாற்காலி கைப்பிடியை இறுகப்பற்றினேன்

”அவளுக்கு தெரியும்” என்றான் நாயர் ”அவ உங்களை பாத்தாச்சு. ப்ளீஸ் நீங்க எந்திரிக்கக் கூடாது. யூ மேட் எ ப்ராமிஸ்”

”இல்ல... நீங்க அவகிட்டே சொல்லல... என்ன ஏமாத்தறீங்க”

”இல்லை லெ•ப்டினெண்ட். சொல்லியிருக்கோம். கூடவே அவளோட ஆட்கள் இருக்காங்க... அவ உங்களை பொருட்படுத்தாமத்தான் போவா...”

”நோ நோ... ஜ்வாலா.” நான் எழப்போனேன்

”நீங்க சத்தியம் பண்ணியிருக்கீங்க பிள்ளைவாள்...”

நான் அமர்ந்தேன். என் உடம்பே அதிர்ந்தது. மேஜைமீதிருந்து ஒரு பேனாவை எடுத்தேன் அது நடுநடுங்கியது. மேஜைமீது போட்டேன்

அவர்கள் திரும்பினர். ஜ்வாலாவின் கண்கள் இயல்பாக வந்து என்னைத் தொட்டன. ஒரு கணம், அல்லது அதில் ஆயிரத்தில் ஒரு பகுதி. நான் எழப்போனேன். உடல் அசையவில்லை.

அவள் உறைந்த முகத்துடன் திரும்பிக் கொண்டாள். அவர்கள் படி இறங்கினார்கள். அவர்களுடைய டொயோட்டா ஜீப் வந்து அருகே நின்றது. அதில் எம்16 ரை•பிள்களுடன் இருவர் இருந்தனர். கிழவனைத்தவிர பிறர் அதில் ஏறி தங்கள் ரை•பிள்களை எடுத்துக் கொண்டார்கள்.

கிழவர் லெ•ப்டினெண்ட் கர்னலை நோக்கி புன்னகையுடன் கையசைத்தார்.

ஜ்வாலா தலைகுனிந்து படியிறங்கியபோது அவள் உடைகள் படபடப்பதைக் கண்டேன் தீ போல . அவள் கால்கள் படிகளில் மிதித்தபோது என் நெஞ்சில் அந்த எடை அழுந்தியது. உடையின் தீ... தழல்....அவள் எரிந்து சாம்பலாகிவிடுவாள் என்று பட்டது....

கடைசிப்படி இறங்கியதும் எதிர்பாராதபடி ஜ்வாலா உச்சக்கட்ட வெறியுடன் அலறியபடி என்னை நோக்கி திரும்பினாள். அவள் கழுத்துநரம்புகள் புடைப்பதையும் முகம் கண்ணீருடனும் ஆவேசத்துடனும் வலிப்பு கொண்டிருப்பதையும் கண்டேன். அவளை கிழவர் பாய்ந்து புஜத்தைப் பற்ற ஒரே வீச்சில் அவரை தூக்கி சரித்துவிட்டு துப்பாக்கி முனைகளை தட்டி வீசி கண்ணாடிச்சுவர் நோக்கி வந்தாள். நான் எழுந்து கண்ணாடி மீது மோதி கைவைத்து நின்றேன். அவள் ஓசையிலாது கதறியபடி கண்ணாடியை வந்து மோதினாள். வேகமாக கையால் கண்னாடியை அறைந்தாள். தலையால் .... நெற்றி உடைந்து ரத்தம் மூக்கில் சிதறுவதைக் கண்டேன். குங்குமம் போல. இரு மணிப்பூர் போராளிகள் வந்து அவளைப் பிடித்தனர். அவள் திமிறி அவர்களை உதறி மீண்டும் பாய்ந்து வந்து கன்ணாடியை தலையால் மோதினாள். கண்ணாடி விரிசல் விட்டது.

”நெல்... மறக்காதீர்கள்... மறக்காதீர்கள் நெல்”என்று அவளது மெல்லிய அலறலைக் கேட்டேன்

விரிசலில் வாயை வைத்து நான் ” மறக்க மாட்டேன்.... மறக்க மாட்டேன்...ஜாவாலா ! ஜ்வாலா ! ”என்று கத்தினேன்

நாயர் ” பிள்ளைவாள்! ப்ளீஸ்! பிள்ளைவாள்! ப்ளீஸ்! ”என்று என்னை பிடித்து இழுத்தான். ஆவேசமாக” ப்ளிஸ் லெ•ப்டினெண்ட்

காப்டன்....”என்று கூவினான்’

நான் ”ஐ யம் ஸாரி”என்று அமைதியானேன்

அவர்கள் அவளை ஒரு திமிறும் குழந்தையை தூக்குவதுபோலக் கொண்டுசென்றார்கள். டொயோட்டா வெண்புகை விட்டு சீறி அதிர்ந்து கிளம்பிச்சென்றது. சூழ்ந்த ரைபிள் பயனெட் காட்டுக்குள் ஜ்வாலாவை கடைசிமுறையாகக் கண்டேன். அவளது நீட்டிய கையின் அசைவை...

அப்படியே மேஜைமீது முகம் புதைத்துக் கொண்டேன். கண்ணீர் மேஜைமீது கொட்டியது

”லெ•ப்டினெண்ட் சார்” நாயர் கூப்பிட்டான்

நான் அப்படியே அமர்ந்திருந்தேன்

”லெட் அஸ் கோ”

ஒரு ஜவான் வெளியே டேப்பை எடுத்து கண்ணாடிக் கதவை திறந்தான். நாயர் உள்ளே திறந்தான். வெளியே இருந்து ஒலிகள் உள்ளே பீரிட்டன.

லெ•ப்டினெண்ட் கர்னல் ”அவரை இங்கே கொண்டு வாருங்கள்”என்று சொல்லிவிட்டு தன் அறைக்குள் சென்றார்

”எழுந்திருங்கள் லெ•ப்டினெண்ட் …”என்றான் நாயர். நான் எழுந்தேன். முகத்தை துடைத்துக் கொண்டேன். மேஜைக் கண்ணாடியில் என் கண்ணீர்துளிகள் கண்ணாடிமுத்துக்கள் போலஒளியுடன் சிதறிக்கிடந்தன

லெ•ப்டினெண்ட் கர்னல் அறையில் காப்டனும் மேஜரும் ஆம்ர்ந்திருந்தனர். மேஜர் முகம் சிவந்து கையில் பேப்பர் வெயிட்டை வைத்து உருட்டிக் கொண்டிருந்தார்.

லெ•ப்டினெண்ட் கர்னல்”டேக் யுவர் ஸீட் லெ•ப்டினெண்ட்”என்றார்.நான் அமர்ந்தேன்

”என்ன சொல்வதென்று தெரியவில்லை. ”என்றார் லெ•ப்டினெண்ட் கர்னல் ”ஆனால் ஒரு சேப்டர் முடிகிறது.அதை நீங்கள் உணர்ந்தாகவேண்டும்”

”நோ. அது அபப்டி முடியாது”என்றேன்.”நான் உயிரோடு இருப்பதுவரை அது முடியாது”

” லெ•ப்டினெண்ட், நாங்கள் இதை இந்த அளவுக்கு விட்டுக்கொடுத்து பார்க்கவேண்டிய அவசியமே இல்லை. உங்களை இதற்குள் நாங்கள் சுட்டுத்தள்ளியிருக்கவேண்டும். சட்டப்படி கோர்ட் மார்ஷியலுக்கு அனுப்பியிருக்கவேண்டும்…. எங்களால் முடியவில்லை. பிகாஸ்….பிகாஸ் ஸ்டில் வி ஹேவ் எ லவ் ஆன் யூ” லெ•ப்டினெண்ட் கர்னல் ஒரு கணம் தன் மனதை கட்டுப்படுத்திக் கொண்டார். தமிழில் நெகிழ்ந்த குரலில் ”அதை நீங்க புரிஞ்சுக்குவீங்களா? இல்ல அந்த பொண்ணோட லவ் தவிர எதுவுமே உங்களுக்கு புரியாதா”

”நான்…”

”இவனைப்பாருங்கள்… நாயர். இவன் தான் உங்களைப் பிடிச்சவன். உங்களை துரோகீன்னு தண்டிச்சா அதைக் கண்டுபிடிச்சதுக்காக இவனுக்கு இன்னும் ஒரு பிரமோஷன் கிடைக்கும். காப்டன் ஆயிருவான். ஆனா சேம்பருக்குவந்து என் காலில வந்து விழுந்து அழுதான். உங்களுக்கு பரிஞ்சு பேசினா இவன் மேலேயும் சந்தேகம் வரும். ஆனா அதைத்தெரிஞ்சுக்கிட்டே உங்களுக்காக உயிர்ப்பிச்சைகேட்டு அழுதான்… உங்களை மாத்திக்காட்டுறேன்னு உங்க கிட்ட வந்தான். இவனோட அன்புகூட உங்களுக்கு முக்கியமில்லையா? நாடு குடும்பம் நட்பு எல்லாத்தையும்விட பெரிசா நீங்க சொல்ற அந்த பிளாட்டானிக் லவ்?”

என் தொண்டை அடைத்தது. சட்டென்று திரும்பி நான் நாயரின் கைகளைப் பற்றினேன்.”தெரியும் சார். ஐ நோ ஹிம்…”அதற்கு மேல் என்னால் பேச முடியவில்லை. ”…ஆனா …ஆனா அவள மறக்க என்னால முடியாது. மறந்தா நான் இல்லை. நான் அப்டியே செத்து உலர்ந்து சருகு மாதிரி ஆயிடுவேன்….”

”புல் ஷிட்”என்றார் மேஜர் வெறுப்புடன்.

”கீப் கொயட்”என்றார் லெ•ப்டினெண்ட் கர்னல்

”ஐ வில் கீப் கொயட் சார்” மேஜர் கடும் சினத்துடன் சொன்னார் ”பிகாஸ் ஹி இஸ் எ டமில் ஆண்ட் யு ஆர் ஆல்ஸொ எ டமில்”

”வாட் யூ மீன்?”

”ஐ மீன் வாட் ஐ மீன்....இதுவே ஒரு பஞ்சாபியாக இருந்தால் இதற்குள் நாயை சுடுவதுபோல சுட்டுத்தள்ளியிருப்பீர்கள்.”

”நோ மேஜர். நோ. நான் ஆர்மிக்கு வந்து இருபத்தேழுவருடமாகிறது. என்றுமே நான் அப்படி இருந்தது இல்லை. இவர்கள் நம் பிள்ளைகள். இவர் வயதில் எனக்கும் ஒரு மகன் இருக்கிறான்.”

மேஜர் தலையை அதிருப்தியாக ஆட்டினார்.

நான் எழுந்தேன். அதை புரிந்துகொண்டு ஜவான் கார்பைனுடன் அருகே வந்தான்.

” பாத்ரூம்? இங்கேயே நீங்க போலாம்” என்றார் லெ•ப்டினெண்ட் கர்னல்

நான் கதவை திறந்து பக்கவாட்டு அறைக்குள் சென்றேன். குரல் கேட்டது.

”பிளாட்டானிக் லவ். அதைப்பற்றிக் கேட்டதோடு சரி. இப்போதுதான் பார்க்கிறேன் . இட் இஸ் ரியலி எ மேட்னெஸ்,. மேட்னெஸ் டு த கோர்”

நான் திரும்பினேன்

நாயர் ”சார்”என்றான்

“எஸ்” என்றார் லெ•ப்டினெண்ட்  கர்னல்

“எங்க ஊரில இதுக்கு கைவிஷம்னு சொல்லுவாங்க.... அந்த ஆதிவாசிகள் ஏதாவது...”

”வசிய மருந்து?”

”ம்”

”அதுக்கு?”

“யாராவது இதைப்பத்தி தெரிஞ்சு பாக்கிறவங்க கிட்ட காட்டினா...”

“மந்திரவாதிகள்ட்ட?”

“ம்”

“புல் ஷிட்! வாட் யூ ஸே?” என்றார் மேஜர்.

காப்டன் ”ஆக்சுவலி நானும் அதைத்தான் நினைத்தேன்.  அவர்

கண்களைப் பாருங்கள். ஒரு வெறி இருக்கிறது. போதை மருந்து உண்பதுபோல... தேர் இஸ் சம்திங்”

நான்  வெளியே வந்து அவர்களருகே சென்று ”நோ சார். ஐயம் கம்ப்லீட்லி சேன்”என்றேன். ”எனக்கு எந்தச் சிக்கலும் இல்லை. நான் முழுக்கமுழுக்க தெளிவா இருக்கேன்”

”ஓக்கெ.. ஓக்கே. இப்ப நீங்க போய்ட்டு வாங்க”

நான் திரும்பும்போது அறையே பதற்றமாக இருந்தது. மேஜர் வயர்லெஸ் மைக்கில் ”வாட் இஸ் இட் ? டாமிட்!” என்று கூவிக் கொண்டிருந்தார்

லெ•ப்டினெண்ட் கர்னல் என்னைப்பார்த்து ”அவரை அறைக்குக் கொண்டுசெல்லுங்கள்”என்றார்

நாயர் என்னைப்பிடித்து ”கமான்”என்றான்

மேஜர் வெடித்தார் ” டாமிட்...இட் இஸ் எ சீட்! மை காட்!” கர்னலிடம் ” அது உண்மைதான் லெ•ப்டினெண்ட் கர்னல்,  நேபாகுமார் நேற்று காலையிலேயே கொல்லப்பட்டுவிட்டார். அவருடைய லெ•ப்டினெண்ட்  ... தலைமைக்கு வந்துவிட்டான்.... ”

”ஓ நோ”என்றார் லெ•ப்டினெண்ட் கர்னல். என்னை பார்த்து ”டேக் ஹிம் அவே”என்றார்”அப்படியானால் இன்று இவளைக்கூடிச்சென்ரவர்கள் யார்? எனக்கு ஒன்றுமே புரியவில்லை” என்றார் மேஜர்.

இரு ஜவான்கள் என்னை இழுத்தார்கள். நான் திமிறி ”ஜ்வாலா… ஜ்வாலாவுக்கு என்ன ஆயிற்று ? ”என்றேன்

” அவர்களின் தலைமையை தீர்மானிப்பவர்கள் பர்மியர்கள்…அல்லது சீனா… நேபாகுமார் நம் மேஜரை விடுவித்ததுமே அவர்கள் அவர்மீது ஐயப்பட ஆரம்பித்திருப்பார்கள். உடனே தலைமையை மாற்றிவிட்டார்கள்.” மேஜர் சொன்னார். காப்டனிடம் ” ஆர்டர் த கம்பெனி டு சேஸ் தெம்…”என்றார்

காப்டன் “எஸ் சார்”என்று சல்யூட் வைத்து வெளியே பாய்ந்தார்.

”அப்படியானால்…” லெ•ப்டினெண்ட் கர்னல் என்னைப்பார்த்து ”டேக் ஹிம் அவே” என்று சீறினார்

என்னை தரதரவென இழுத்து வெளியே கொண்டுவந்தனர். நான் ”ஜ்வாலா ஜ்வாலா…அவளுக்கு என்ன ஆச்சு…” என்று கூவி திமிறினேன்

நாயர்”கூல் கூல்…நான் எல்லாவற்றையும் வந்து சொல்கிறேன் …நீங்கள் சும்மா இருந்தால் எல்லா தகவலையும் சொல்கிறேன்”என்றான்

மீண்டும் என் அறை. என்னை கட்டினார்கள். கதவை மூடவில்லை. நாயர் வெளியே ஓடினான். நான் சுவரில் ஓங்கி கைகலால் அறைந்து ”ஜ்வாலா ! ஜ்வாலா ! ஜ்வாலா! ஜ்வாலா ! ”என்று கூவினேன்.

நாயர் உள்ளே வந்தான்

”நாயர்!ஜ்வாலா ? ”

”அவர்கள் ஜ்வாலாவின் அப்பாவைக் கொன்று விட்டார்கள். நம்முடைய அதிகாரிகளை விடுவித்ததை மியான்மாரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. கொல்ல உத்தரவிட்டுவிட்டார்கள். அடுத்த தலைவன் வந்துவிட்டான். ”

”ஜ்வாலாவை யார் கொண்டுபோனது?”

“அந்த இரண்டாவது தலைவனின் ஆட்கள். அது ஒரு புத்திசாலித்தனமான நாடகம்”

நான் பிரமை பிடித்து நின்றேன்

”அவளைக் கொல்ல மாட்டார்கள். அவளிடம் நம் முகாம் பற்றிய தகவல்கள் இருக்கின்றன....”

“சித்திரவதை செய்வார்கள்! ” நான் வீரிட்டேன்.

நாயர் தலை குனிந்தான்

நான் மிருகம் போன்ற பயங்கரக் குரலில் ” ஜ்வாலா!”என்று

அலறினேன். சங்கிலியை பிடித்து இழுத்தேன். என் நெற்றியை ஓங்கி ஓங்கி விலங்கால் அறைந்தேன். சொட்டும் குருதி என் கண்களை மறைத்தது.

நாயர் வெளியே போய் கம்பெனி டாக்டருடன் வந்தான். ஏழெட்டு ஜவான்கள் என்னை பிடித்து அமுக்கினர். டாக்டர் என் தொடையில் ஊசியை செருகினார். பெதடின் அல்லது மார்பின்.

நான் நாயரின் கனத்த புஜங்களைப் பிடித்திருப்பதைத்தான் கடைசியாக உணர்ந்தேன்.

15

நான் விழித்துக் கொண்டபோது என் உடல் மெல்ல ஆடிக்கொண்டிருந்தது. நான் படுத்திருந்த தரை அதிர்ந்தது. உடனே முழு விழிப்பு வந்தது. அது ஒரு ராணுவ டிரக்தான். என்னைச்சுற்றி எம் 16 ரை•பிள்களும் எம் 4 கார்பைன்களும் கற்றாழைப்புதர்முட்களுடன் அடர்ந்திருப்பதுபோலச் சூழ்ந்திருந்தன. எழுந்துகொண்டேன். தலைசுழன்றது. இலேசாகக் குமட்டல் எடுத்தது.

”படுத்துக்கொள்ளுங்கள் லெ•ப்டினெண்ட்”என்றான் என் எதிரே அமர்ந்திருந்த ஹவல்தார் மேஜர்.

”நாம் எங்கே போகிறோம்?”

முன்னால் டிரைவரின் கேபினிலிலிருந்து நாயர் திரும்பி துணித்திரையை நீக்கி ” பேசாமல் படுங்க பிள்ளைவாள்… ”என்றான்

”இப்ப எங்க போறம்?”

”இம்பாலுக்கு”

”எதுக்கு?”என் வயிறு கிரானைட் விழுந்த மண் போல திம்மென்று அதிர்ந்தது ” ஜ்வாலா? ஜ்வாலா எங்க?”

”பேசாம படுங்க…”

”நான் வரமாட்டேன்… நான் வரமாட்டேன்”என எழமுயன்றேன். என் கரங்கள் விலங்கிடப்பட்டு இரும்புப் படுக்கையுடன் இணைக்கபப்ட்டிருப்பதைக் கண்டேன்.

” இப்ப நீங்க கைதியா போறீங்க…”என்றான் நாயர்

நான் நடுங்கும் உடலுடன் அவனையே பார்த்தேன். பின்பு சோர்வுடன் படுத்துக் கொண்டேன்.

”உங்க லக் . லெ•ப்டினெண்ட் கர்னலுக்கு உங்கமேல அனுதாபம் போகவேயில்லை. உங்கள நேரா இம்பால் கொண்டுபோய் மெண்டல் செக் பண்ணச்சொல்லியிருக்கார். இனிஷியல் டிரீட்மெண்டுக்கு பிறகு உங்கள டிஸ்சார்ஜ் பண்ணிடுவாங்க… தண்டனை இல்லாம”

‘ஜ்வாலா? ”

”ஸ்டாப் த நான்சென்ஸ்!”என்றான் நாயர். ”அவளை இந்நேரம் சித்திரவதை செஞ்சு கொன்னிருப்பாங்க…. போதுமா? ”

”நோ”என்று நான் பயங்கரமாக வீரிட்டேன்

”லுக் லெ•ப்டினெண்ட். அவங்களோட புரூட்டல் மெதட்ஸ் உங்களுக்கு தெரியும். அவகிட்டே நம்மைப்பத்தி உங்களப்பத்தி ஏதாவது தகவல் இருக்குமான்னு பாப்பாங்க. இல்லேன்னு தெரிஞ்சதும் தீத்திருவாங்க. ”

நாயர் சொன்னான் ”நீங்க மார்•பின் மயக்கத்தில எட்டு நாளா இருக்கீங்க. இதுக்குள்ள உலகமே தலைகீழா மாறியிருக்கும்”

நான் ”நோ”என்றேன். இம்முறை தீனமாக. என் குரல் எனக்கே அருவருப்பு ஊட்டும்படி.

”டேக் ரெஸ்ட். இப்பதான் கௌம்பியிருக்கோம். நாம போய்ச்சேர பன்னிரண்டு மணி நேரம் ஆகும்” நாயர் திரும்பிக் கொண்டான்

நான் படுத்தபடி தலையை அதீதவலி கொண்டவன்போல அசைத்தேன். ஜ்வாலா ஜ்வாலா என்று என் மனம் முடிவிலாத மந்திரம் போல அரற்றிக் கொண்டது.

ஒரு மலைவளைவில் டிரக் வேகம் குறைத்தது. ”ராஜர்.அலெர்ட்!”என்று நாயரின் குரல் ஒலித்தது. ரை•பிள்களும் கார்பைன்களும் கிளிக் கிளிக் என்று விடுவித்துக் கொண்டன. ஜவான்கள் டிரக்கின் கீழ்ப்புற இடைவெளிகளின் வழியாக துப்பாக்கி நீட்டி குறி பார்த்தபடி சீட்டுக்கு நடுவே அமர்ந்தார்கள். என்னை ஒரு நாயக் இழுத்து சீட் நடுவே குறுகி அமரச்செய்தான்.

நாயரின் குரல்  டிரக் மேலிருந்த மைக்கில் ஒலித்தது ” செக் த வுட்ஸ் .போத் சைட். ஓவர்”

”செக்ட் . சே•ப். குட் . ஓவர்” என்றான் ஹவல்தார் மேஜர்

”குட்” என்றான் நாயர் ” ஜம்ப் ஆண்ட் டேக் பொஸிஷன் ஓவர்.”

சரசரவென துப்பாக்கிகளுடன் ஜவான்கள் கீழே குதித்தனர். டிரக்கின் அடியிலும் விலாவிலுமாக பதுங்கி இருபக்கமும் நோக்கினர். யாருமில்லை. ஒருவன் என் விலங்கை அவிழ்க்க நான் மணிக்கட்டுகளை கையால் உருவி விட்டபடி குதித்து டயர் அருகே குந்தி அமர்ந்தேன்.

டிரக்கின்முன் தூரத்தில் வெள்ளைநிற உடையணிந்த ஆள் நிற்பது தெரிந்தது.

எம்16 ஏ 2 கோல்ட் ரை•பிளின் எண்ணூறு மீட்டர் சுடுதொலைவை கணக்கிட்டு வண்டியை நிறுத்திருந்தான் நாயர். பிறகு டிரக் மெல்ல மெல்ல முன்னகர்ந்தது.

ஆளின் முகம் தெரிந்தது. சிறுவன் போலிருந்தான். மங்கோலிய முகங்களின் வயதை நம்மால் ஊகிக்க முடிவதில்லை. அவன் தன் கையில் வெண்ணிறத்துணி ஒன்றை ஆட்டிக் கொண்டிஒருந்தான் . கீச்சுக்குரலில் ” ஷீலௌ…! மெ பாலௌ! ” என்றான்.

நாயர் உரக்க ஆணையிட்டான் ” கையை தூக்கியபடி வா… கூட யார்?”

மணிப்புரி மொழியில் அவன் ” நை ”என்றான். ”ஷீலௌ… மெ பாலௌ ”

நாயர் ”என்ன சொல்கிறான்?”

“மச்சான், என் பாதுகாவலனே என்கிறான்… ” ஹவல்தார் மேஜர் சொன்னான்.

நாயர் அந்த ஹவல்தார் மேஜரை மட்டும் போகும்படி உத்தரவிட்டான். நீட்டிய கார்பைனுடன் அவன் நடந்துசென்று அந்த ஆளை நெருங்கி அவன் இடையையும் தோளையும் சோதித்தான்.

”பக்கா ! ஜீ சாப்” என்றான் ஹவல்தார் மேஜர்

”பிரிங் ஹிம்”

ஹவல்தார் சிரித்தபடி அவளை முன்னால் விட்டு நடந்து வந்தான். ” யெ பேட்டி ஹெ !”என்றான். ஜவான்களிடம் மெல்லிய சிரிப்பு பரவியது. அது இளம்பெண். பதினெட்டு வயதிருக்கும்.

அவள் அருகே வந்து ” மெஸெஜ் … லெப்டினெண்ட் நெல் ”என்றாள்

நாயர் கண்களை சுருக்கியபடி ” யாரிடமிருந்து?”என்றான்

அவள் ”ஜ்வாலா”என்றாள்

நான் பாய்ந்து அவளை அணுகி ”நான்… நான்தான் லெப்டினெண்ட் நெல்… ஜ்வாலா எங்கே…?” என்றேன். அவளை பிடிக்கப்போனேன்

அவள் மணிப்புரியில் ” அவளை நாங்கள் இரு தோழிகள் தப்புவித்து காட்டில் தங்க வைத்திருக்கிறோம்…. உங்களை தேடி காம்புக்கு போனோம். மலைமீதிருந்து பார்த்தோம்” என்றாள்.

நான் உரக்க ”என்ன என்ன?” என்று பதறினேன் . நாராயண் மொழிபெயர்த்துச் சொன்னார்.

நாயர் எங்கள் இருவரையும் குழப்பமாகப் பார்த்தான்

அரைக்கணம் கழித்துத்தான் அவள் என்ன சொல்கிறாள் என்று எனக்குப்புரிந்தது. என் மூளையில் எல்லா நரம்புகளும் மின்சாரம் பாய்ந்து அதிர்ந்து சுருண்டன. ”அவள் எங்கே இருக்கிறாள்? நன்றாக இருகிறாளா?” நான் கண்ணிரும் பரவசமுமாக கூவினேன்.

” சிங்! சிங் !”என்றாள் . மலையை சுட்டிக்காட்டினாள். என்னுடன் வந்தால் கொண்டு போகிறேன் என்று கைகாட்டினாள்

”என்ன ?என்ன?” என்றேன். என்னுடைய எண்ணங்களை என்னால் தொகுக்க முடியவில்லை. என் தொடைகள் தன்னிச்சையாக துடித்துக்கொண்டிருந்தன.

நாராயண் ”மலையில் இருக்கிறாளாம்”என்றார்

அவள் சட்டைக்குள் கைவிட்டு ஒரு மதூக மலரை எடுத்தாள் ” கொரௌ •ப்ளவர்” என்றாள் . என்னிடம் நீட்டினாள். ”ஜ்வாலா”

நாயர் கடிதம் என எண்ணி வாங்க கைநீட்டி தயங்கி நின்றான். அந்த இடைவெளியில் நான் அதை பாய்ந்து வாங்கி க்கொண்டேன். அதை மூக்குடன் சேர்த்துக்கொண்டு முகர்ந்தேன். அவள் அதை எடுக்கும்போதே அது மதூகமலர் என அறிந்திருந்தேன் என்று உணர்ந்தேன்.

"இதோ நான் வருகிறேன் .. வா. "என்று கிளம்பினேன்.

"நோ..."என்றான் நாயர் திடமான குரலில். தன் எம்௭ , 0.45 பெரெட்டா பிஸ்டலை நீட்டியபடி "நீங்கள் என் கைதி லெ•ப்டினெண்ட். உங்களை பத்திரமாக இம்பாலுக்கு கொண்டுசெல்லும்படி உத்தரவு... கெட் இன் த டிரக். ஹவல்தார் மேஜர் நாராயண்.அரெஸ்ட் ஹெர்"

ஹவல்தார் மேஜர் முன்னகர்ந்தார்

"நாயர்.... நாலு வருஷம் உன் தோளில கைபோட்டு பழகினவன் நான்..... எல்லாம் உனக்கே தெரியும்...ப்ளீஸ்" என் குரல் எனக்கே அன்னியமாகும்படி தழைந்தது. என்னால் சொர்களை முடிக்க முடியவில்லை.

"நோ.. நான் என் டியூட்டியைத்தான் செய்வேன். கெட் இன் த டிரக் ஐ ஸே" தேர்ந்த ராணுவ வீரனுக்கே உரியமுறையில் நாயரின் கண்கள் என் கையசைவுகளில் கூர்மையாக பதிந்து நுட்பமாக என் அசைவுகளுடன் சேர்ந்து அசைந்தன.

”நாயர் ப்ளீஸ்.. ”என் குரல் தழுதழுத்தது. ”உன் காலைப்பிடிக்கிறதா நினைச்சுக்கோ...ப்ளீஸ்” அந்த நிலத்தில் அப்படியே விழுந்து அவன் கால்களை மண்டியிட்டுக் கெஞ்சியது என் பிரக்ஞை. ஆனால் என் உடல் உயிரில்லாதது போல் நின்றிருந்தது.

”நோ....”என்றான் நாயர் உரக்க ”நான் உங்களை மாதிரி ஒரு ரொமாண்டிக் இடியட் இல்லை லெ•ப்டினெண்ட் . நான் ஒரு ஜெனூய்ன் சோல்ஜர். எனக்கு நாடுதான் முக்கியம். வேற எல்லாத்தயும் விட, என் உயிர விட டியூட்டிதான் முக்கியம்... கெட் இன்” மெல்ல துப்பாக்கியால் என்னிடம் உள்ளே ஏறும்படிச் சைகைசெய்தான்.

நான் அவன் கண்களைப் பார்த்தேன். அவை இளகாது என்று அறிந்தேன். என் மனம் மெல்ல உறுதியடைந்தது. அந்த உறுதி என் இறுகிய தசைகளை இளகச்செய்தது. பெருமூச்சுடன் ” இல்ல. அவளோட மெஸெஜ் வந்ததுக்கு பிறகு நான் உன் கூட வரமுடியாது. நான் போறேன். நீ என்னைச் சுடு...உன் குண்டால நான் செத்தா அதுவும் நியாயம்தான்...” என்றேன். மெல்ல முன்னால் நடந்தேன்

நாயர் தன் பெரெட்டாவை குறிபார்த்தான் ” லெ•ப்டினெண்ட் ஸ்டாப்... ஸ்டாப் ஐ ஸே.... நான் கண்டிப்பா சுடுவேன்....”

‘சுடு”நான் நடந்தபடியே இருந்தேன். என் முதுகெல்லாம் நுண்மையான கண்களாக மாறி விட்டிருந்தது.

”லெ•ப்டினெண்ட் டர்ன் பேக்... ” நாயரின் குரலில் அதே திடம் இருந்தது.

நான் திரும்பவில்லை

”லெ•ப்டினெண்ட் சார் ... டர்ன் பேக்...  டர்ன் பேக் ப்ளீஸ்”

நான் அந்த பெரெட்டாவின் கரிய ஓட்டைக்கண்ணை மனதுக்குள் கண்டேன். நடந்தபடியெ இருந்தேன் நிதானமாக. என் கால்கள் தளரவில்லை.

‘ஒன்... டூ .. ” நாயரின் குரலுக்கு எதிரொலிபோல தூரத்தில் காடு அதிர்ந்ததைக் கண்டேன்.

ஆனால் எனக்குப்பின்னால் ஓசைகள் மாறுபட்டன. பலவிதமான அசைவொலிகள். அவை எனக்கு ஏற்படுத்திய ஐயத்தால் நான் திரும்பினேன்.

ஜவான்கள் அத்தனைபேரும் நாயருக்கு குறிவைத்திருந்தார்கள்.

ஹவல்தார் மேஜர் நாராயண் என்னிடம் ,” நீங்கள் போங்கள் லெ•ப்டினெண்ட். ” என்றான். அந்தப்பெண்ணிடம் மணிப்புரி மொழியில் ” தி ஜாரா!” என்றான்

நான் அந்த ஜவான்களைப் பார்த்தேன். ஒருகணம் என் மனம் சிந்தனையில்லாமல் இருக்க அவர்களை ஒரு அழியாத ஓவியம் போல் என் நினைவில் அள்ளிக்கொண்டேன். மனிதர்கள் வழியாக அவர்கள் அறிந்திராத இன்னொன்று வெளிவந்து தன்னை நிகழ்த்திக்கொள்வதை அங்கே கண்டேன்.

பின் நான் அந்தப்பெண்ணைப் பிடித்துக்கொண்டு ஓடினேன். நாங்கள் மலைச்சரிவை ஏறி ஓட ஆரம்பித்தோம்

நாயர் கோப வெறியுடன் ” பாஸ்டர்ட்ஸ்,… ஐ வில் பனிஷ் யூ ஆல். பனிஷ் யூ சிவியர்”’ என்று கூவினான்

”வி வில் ராதர் டை •பர் திஸ் ஸர்” என்றார் ஹவல்தார் மேஜர் நாராயண் ” டேக் கேர் லெ•ப்டினெண்ட் சர்”

நான் திரும்பி கையசைத்தேன். ஏறிச்செல்லும் மலைச்சரிவு களிமண்ணால் ஆனதாக இருந்தது. என் கால்கள் இருமுறை வழுக்கியபோது அந்தப்பெண் திறமையாக என்னைப் பற்றி மேலேற்றினாள்.

நாயர்  உரக்க” பிள்ளைவாள்.. இது ஒரு டிராப்…நீங்க உங்க மரணத்தைப்பாத்து போறீங்க.. ப்ளீஸ் லிஸன் மீ .”என்று கூவினான்

”பரவாயில்லை நாயர்!” நான் காட்டுக்குள் நுழைந்தேன்.

அவள் எனக்கு விரைந்து வழிகாட்டினாள். காட்டின் மடிப்புகள் வழியாக மூங்கில் புதர்களும் பாறைக்கூட்டங்கலும் மண்டிய சரிவினூடாக சென்றோம். குளிர்ந்த காற்று என்னை மூடியது. உயர்ந்த கான்ஹாங் மலைச்சரிவில் இருந்து நிலம் நோக்கி வீசும் காற்று. மலைச்சிகரம் தூங்கும் குழந்தையை பார்க்கும் தாய் போல குனிந்து இந்நிலத்தைப் பார்க்கிறது. புதர்களில் பச்சை ஒளி விரிய மெல்லிய காற்றலையில் ஒளி அலையடித்தது. மலையின் மூச்சு போல.

என் நெஞ்சில் மூச்சு குளிர்ந்த பந்துகள் போல நிறைந்து வெளியேறியது. மூச்சு வழியாக நான் அடைந்த எல்லா துயரங்களும் வதைகளும் வெளியேறின. என் மனம் எடையிழந்தது. அந்த பசும்வெளி என்னிடம் இனி துயரமே இல்லை என்று சொன்னதுபோல. மண்ணில் மனிதனுக்கு பேரின்பம் என்பது விடுதலை. அந்த விடுதலையை உனர அவன் சிறைப்படவேண்டியிருக்கிறது.

மூச்சுவாங்க ஒரு இடத்தில் நின்றோம். அருகே ஓடிய சிற்றோடையில் அவள் கைப்பிடி நீரை அள்ளிக் குடித்தாள். சிறிய முயல்போன்ற பெண். சிறிய செம்புள்ளிகள் நிறைந்த மஞ்சள் சருமம் கொண்ட கன்னங்கள்.

நான் அவளிடம் ”நேபா குமார்?”என்றேன்

”ஹாங் . நேபா சாப். நேபா சாப் ”அவள் கண்களில் கண்ணீரைக் கண்டேன் ” நிங்தௌ மி நிங்தௌ…”தலையில் மன்னனின் கிரீடம் போல கைவைத்து ”நிங் தௌ! அங்கமி நிங்தௌ”என்றாள்.

ஒரு மன்னனின் மறைவு. ஆனால் அது ஓர் இலையுதிர்வதற்கு அப்பால் ஏதுமில்லை. அவன் அவனறியாத ஏதோபெரும் சக்தியின் கைப்பொம்மை. அவன் இருக்கும்போது சர்வ வல்லமை கொண்டவனாக ஒரு சொல்லில் பலநூறு உயிர்களை அழிப்பவனாக இருப்பான். ஆனால் சட்டென்று ஒருநாள் உதிர்ந்து போவான். அவனைச்சார்ந்தவர்கள் அனைவருமே உதிர்வார்கள். அவர்களைப்பற்றிய சொற்கள் அனைத்தும் மௌனச்சேற்றில் விழுந்து புதைந்து மறையும். அவனை வரலாறு மறந்துபோகும். அவன் வாழ்ந்த நிலத்தில் அவன் தலைமுறை நினைவுகளில் அவன் மொழியில் அவனது தடமே இருககது. போர் ஓயாது நீளும். காலங்கள் தோரும்.

சாவதற்காக பிறந்து வந்துகொண்டே இருப்பார்கள். மீண்டும்மீண்டும் வரலாறு அதை நிகழ்த்திக்கொண்டே இருக்கிறது சலிப்பில்லாமல்…

மெல்லிய ஒளி பரவிய வானத்தால் விளிம்பிடப்பட்ட குன்றுக்கு மேல் ஏறி மறுபக்கம் சென்றோம். அப்பால் மூங்கில் புதருக்குள் ஒரு மெல்லிய சீட்டி ஒலி கேட்டது. தொடர்ந்து சிவப்புத் துண்டு ஒன்று அசைக்கப்பட்டது. என்னுடன் வந்த பெண் அதை நோக்கி தன் சிவப்பு துவாலையை அசைத்துக் காட்டினாள் ” ஜ்வாலா…”என்று கையை காட்டினாள்.

மூங்கில் காட்டுக்குள் ஒரு அங்கமிப் பெண் தெரிந்தாள். ஒரு கணம் என் மனம் உயர் அழுத்த மின்கம்பிபோல துடிதுடித்தது. அது ஜ்வாலா இல்லை. ஆனால்….. நான் அந்த திசை நோக்கி ஓடினேன். இருமுறை புற்களில் தடுக்கிவிழுந்து எழுந்து வாயால் மூச்சிரைத்தபடி மனம் ஜ்வாலா ஜ்வாலா ஜ்வாலா என்ற அழியாத பெயராக இருக்க ஓடினேன். அந்த அங்கமிப்பெண் உள்ளே நோக்கி ஏதோ சொல்ல உள்ளிருந்து ஜ்வாலா வெளிவந்தாள்.

”நெல்!” ஓசையில்லாமல் உதடுகள் நிலைத்தன. கண்கள் காலமிழந்து பிரமித்து நின்றன.ஒரு கணம்

மறுகணம் என்னை நோக்கி ஓசையில்லாமல் கதறியபடி ஓடிவந்தாள்.

ஓங்கி நின்ற மௌனமலையின் மடியில் நாங்கள் இருவரும் காட்டாறுகள் போல சந்தித்துக் கொண்டோம். அவளை அப்படியே அள்ளி என் உடலுடன் சேர்த்து இறுக்கிக் கொண்டேன். அவள் எலும்புகள் நொறுங்க மார்பு நெரிய…. அவள் முகத்திலும் கழுத்திலும் தோள்களிலும் வெறியுடன் முத்தமிட்டேன். முத்தம் ! முத்தம்! முத்தம்! முத்தம்! முத்தம்! முத்தம்! முத்தம்! முத்தம்! முத்தம்! முத்தம்! முத்தம்!

முத்தம்! முத்தம்! முத்தம்! முத்தம்! முத்தம்! முத்தம்! முத்தம்! முத்தங்களன்றி வேறு எதுவுமே இல்லாத காலவெளியொன்றில் வெகுதூரம் சென்றோம்.

பின் விடுவித்துக் கொண்டு நெடுமூச்செறிந்தோம்.அவள் முகத்தை தூக்கி கண்களைப்பார்த்தேன். நீர் மூடிய நீலமணிகள். மலர்ப்பரப்புபோன்ற கன்னங்கள். புல்லிவட்டம் போல சிவந்த உதடுகள். அந்த முகத்தில் காயங்கள். மீண்டும், அக்கணமே இறந்துவிடுவது போன்ற ஆவேசத்துடன் இறுக அணைத்து முத்தங்கள் பொழிந்தேன். வெகுநேரம் கழித்து மீண்டபோது இருவருமே ஒருவர் கண்ணீர் ஒருவர் உடலில் சொட்ட அழுது கொண்டிருந்தோம்.

அங்கமி பெண் ஜ்வாலாவிடம் ஏதோ சொன்னாள். ”நேரமாகிறது ”என்கிறாள் என்றாள் ஜ்வாலா .” இந்தவழியாக கான்ஹாங் மலைச்சரிவுக்குச் செல்லமுடியும். நோ மேன்ஸ் லேண்ட் வழியாகவே பூட்டான் வரை எண்பது கிலோமீட்டர்”

” துமி ஜராய்கா” என்றாள் அங்கமிச்சிறுமி.

”நாம் போனால் இவர்களைப்பிடிக்க மாட்டார்களா?”

”இவர்களைப்பற்றி தெரியாது யாருக்கும்” என்றாள் ஜ்வாலா. பெரிய ராணுவத் தோள்பையை ஒரு பெண் என்னிடம் தந்தாள். உணவும் நீரும் அதில் இருக்கக் கூடும். நான் அதை மாட்டினேன். அவர்களிடம் விடைபெற்றேன். சாதாரணமாக ”பை”என்று சொல்லி கிளம்பிய ஜ்வாலா சட்டென்று கண்ணிருடன் மெல்ல விம்மியபடி அவர்களில் ஒருத்தியை ஆரத்தழுவிக் கொண்டாள். மூன்றாவது பெண் இருவரையும் சேர்த்து அனைத்தாள். கண்ணிருடன் முணுமுணுவென்று

பேசினர். மீண்டும் தழுவினர்.

”போகலாம்”என்றேன்

ஜ்வாலா ” அமி ஜராய்கா ”என்று அவர்களிடம் விடை பெற்றாள். கைகள் கடைசி விரல்நுனிவரை தோட்டு உரசி பிரிந்தன. ஒருத்தி கையசைத்தபின் முகத்தைமூடிக் கொண்டாள். இன்னொருத்தி அவளை அணைத்தாள். ஜ்வாலா கண்ணிருடன் திரும்பாமல் முன்னால் ஓட நான் அவளை தொடர்ந்து ஓடினேன்.

16

மலைக்கு அப்பால் காடு வழிகளற்று பச்சை இலைச்செறிவாக தரையின் இருளாக காற்றின் ஓங்கார ஒலியாக நிறைந்திருந்தது. சூரியக்கதிர்கள் உள்ளே வராத காடு. வேய் மூங்கில் புதர்கள் அடந்த சேற்று நிலம். இந்த நிலத்தில் மூங்கில்களின் வகைமாதிரிகள் முடிவற்றவை. இளம்பச்சை நிறமானவை. கரும்பு போன்றவை. துல்லியமான ஒளி ஊடுருவும் குழல்கள்…ஒடித்து அபப்டியே தின்னக்கூடிய இளந்தளிர் மூங்கில்கள். மணிப்புரி மொழியில் ஒவ்வொன்றுக்கும் சொற்கள் உண்டு

அவள் வளைந்து வளைந்து புதர்களைத் தாண்டிச்சென்றாள். நீண்டநேரம் எதுவும் பேசவில்லை. வெறி கொண்டது போன்ற வேகம். பின் ஒருமரத்தடியில் மூச்சிரைக்க நின்றாள். நான் அவளருகே சென்று மூச்சுவாங்கியபடி பேசாமல் நின்றேன். இருவரும் எங்கள் முன் விரிந்த காட்டை நோக்கியபடி நின்றோம்.

அவளை நெருங்கி அவளுடைய வெளுத்த முகத்தைப் பார்த்தேன். கழுத்தின் பச்சை நரம்பு ஒரு மெல்லிய முடிச்சுடன் இறுகி நின்றது. சிவந்த இதழ்கள் மெல்ல திறந்து வெண்பற்கள் தெரிந்தன. கண்களில் நீலக்கறக்ளின் மினுமினுப்பு. அவளுடைய தோள்கள் மூச்சில் எழுந்தமைந்துகொண்டிருந்தன

அவள் இடுப்பில் கையை வைத்து மெல்ல வளைத்தேன். இடது கையால் அவள் அவள் விரல்களை பற்றிக்கொண்டேன். அவள் விரல்கள் குளிர்ந்து உயிரற்றவை போல் இருந்தன. அவள் மூச்சு பறவையின் அடிவயிறுபோல கழுத்தில் அதிரவதைக் கண்டேன். மேலுதட்டில் மெல்லிய வியர்வையின் பனிப்பைக் கண்டேன். கைவிரல்களைக் கோர்த்துக் கொண்டேன். குனிந்து அவள் கண்களைப்பார்த்தேன். அவள் விழிகள் சஞ்சலம் கொண்டு தழைந்தன. சட்டென்று நீர்தளும்ப

அவள் தலைகுனிந்தாள்.

நான் அவளை ஆவேசத்துடன் அள்ளி என் உடலுடன் இறுக்கிக்கொண்டு அவள் உதடுகளில் முத்தமிட்டேன். முத்தத்தை கண்டடைந்த மூதாதையின் தவிப்பை  மீண்டும் அடைந்தேன். ஒருவரை ஒருவர் உண்டு ஒன்றாகிவிடமுடியாத உடல்களின் பெரும் தவிப்பை துளிதுளியாக ஒத்திப்போடுவதுதானோ முத்தம்!

நேர விழிப்பு கொண்டுமீண்டும்  கிளம்பிய போது இருவரும் சற்று இறுக்கம் தளர்ந்திருந்தோம். நான் அவளிடம் ”உன்னை என்ன செய்தார்கள்” என்றேன்

”ப்ளிஸ்...இனி அதெல்லாம் வேண்டாமே” என்றாள், தலைகுனிந்து பக்கவாட்டில் பார்வையைதிருப்பியபடி.

நான் பெருமூச்சுவிட்டேன். அவளிடம் பேச ஒன்றுமில்லாதது போன்ற தவிப்பு ஒருகணம் ஏற்பட்டது. பின்பு மீண்டும் என் உடல் வெறுமையை உணர்ந்தது. தனித்து அதனால் இருக்கமுடியாதது போல.  அவளை இழுத்து என்னுடன் இணைத்துக்கொண்டேன்.

அவள் என்னுடன் ஒட்டிக்கொண்டாள்.  என் உடலின் தவிப்புகளை அவள் உடல் பெற்றுக்கொண்டது. என் கைகள் அவளுடைய சிறிய பின்பக்கத்தை மெலிந்த தோள்களை தழுவி இறுக்கி நெகிழ்ந்து விரிந்து சென்றன.  என் உடலில் நான் அவள் உடலுடன் இணையும் தவிப்பை மட்டுமே உனர்ந்தேன். அவள் இதழ்களை என் இதழ்களால் கவ்விக்கொண்டேன். அவள் மூச்சை என் மூச்சினால் உள்ளே இழுத்து எனக்குள் நிறைத்துக்கொண்டேன்.

அவளுடைய சிறிய மார்பகங்களின் நுனியைப் பற்றிய என் கைகளை சட்டென்று விலக்கியபடி அவள் பின்னால் நகர்ந்தாள். அவள் உடல் எதிர்ப்பு கொண்டு இறுகி என் கைகளில் வளைந்தது. அதுவரை இருந்த உணர்ச்சியை ஒரே கணத்தில் உக்கிரமான காமமாக ஆக்கியது அந்த அசைவு அவளை நான் என் முழுவலிமையாலும் தூக்கி என் உடலுடன் இணைத்துக்கொண்டேன்

அவள் இறுக்கம் மெல்ல நெகிழ்ந்து  அவள் தசைகள் மென்மெழுகு போல உருகுவதை உணர்ந்தபோது நான் அவள் உடலை முழுக்க என் வசமாக ஆக்கிக்கொண்டிருந்தேன்.  உடல்கள் மட்டுமே இருக்கும் காலவெளி ஒன்று இருப்பதை அறிந்தேன். உடல்கள் மட்டுமே பேசிக்கொள்ளும் மொழி ஒன்று எனக்குத்தெரியும் என்பதை அறிந்தேன். நிலம் எங்களை மடிவிரித்து ஏந்திக் கொண்டது.

மிகச்சிறிய ஒரு பாதை. மிக மென்மையான ஒரு நீரூற்று. மிக ரகசியமான ஒரு சத்தம். மிக வேகமான ஒரு குதிரை.. கண்ணாடி இலைகள் விரித்த செடியென ஒரு நீரூற்று.  மிகமிகமிக எடையிலாத ஒரு மேகம். ஒளிமிக்க கணமொன்று தன்னை காலமாக பரப்பிக்கொண்டது..

வானம் என் மேல் பரந்து கிடந்தது. ஒளிமிக்க திரவம் ஒன்றை  ஒற்றி ஒற்றி எடுத்த பிளாட்டின் தாள் போல. அந்த திரவம் அதில் கனத்துத் ததும்பி நின்றது. தொலைவில் எங்கோ ஒளிர்ந்து ஒளிர்ந்து சொட்டிக்கொண்டிருந்தது. குறுக்காக ஒரு பறவை ஒளியை சிறகுகளால் துழாவியபடி கடந்துசென்றது. அப்பால் எங்கோ இன்னொரு பறவை கிராக் என்றது.

அருகே அவள் கிடந்தாள். நான் என் கையை அவள் மேல் போட்டேன். அவள் உடல் மெல்லிய சூடுடன் இருந்தது. ஒரு குருவியின் அடிவயிற்று

துடிப்பு போல அதற்குள் உயிர் துடித்தது

”ஜ்வாலா”

”ம்ம்” என்றாள். பின் ஒருக்களித்து கையை ஊன்றி என்னைப்பார்த்தாள். அவள் கண்களில் வெட்கமோ சிரிப்போ இல்லை.  போதை கொண்டவள் போல வெறித்து விழித்திருந்தன அவை.

”அவர்கள் தேடிவருவார்கள். நாயர் அப்படி விட்டுவிடக்கூடியவன் அல்ல....இதற்குள் அவன் எங்கள் முகாமுக்கு செய்தி அனுப்பியிருப்பான்”

”ம்ம்”

”போவோம்”

அவள் எழுந்து தன் கூந்தலைசுழற்றிக் கட்டிக்கொண்டாள். இரு நகங்கள் போல சிவந்த நுனிகள் கொண்ட மார்பகங்கள் அசைந்தன. திரும்பி என்னைப்பார்த்து போகலாம் என்று தலையசைத்தாள்

நான் அவளையே பார்த்துக்கொண்டிருந்தேன். அவள் இதழ்களில் மெல்லிய புன்னகை விரிந்தது. என் மேல் கவிந்து என் இதழ்களில் சூடாக முத்தமிட்டாள்கருணையை சதையெனக் கொண்டு அமைந்த மென்முலைகள் என்மேல் அழுந்தின. அவள்மூச்சில் பச்சைத்தழை ஒன்றின் வாசனை இருந்தது.

பின்பு எழுந்து தன் உடைகளை அணிந்து கொண்டாள். நான் வெறுமே படுத்திருந்தேன். அவள் என்னை நோக்கிக் கைநீட்டினாள். நான் அந்த மெல்லிய கரத்தைப் பற்றி எழுந்தேன். கனம் தாளாமல் அவள் சிரித்தாள்

”போவோம்” என்றாள்

”எங்கே?”

.

அவள் நீலமலையைக் காட்டி ‘ கான்ஹாங் சிங்”என்றாள்.

”சிங் என்றால் மலைதானே?””

″ஆமா″ என்றாள் புன்னகையுடன்.

”கான் ஹாங் – நிங்தௌ சிங்!”என்றேன்

அவள் வியப்புடன் என்னைப்பார்த்தபின் வெடித்துச்சிரித்தாள்.

”ஏன் சரிதானே?”

”சரிதான்… ” அவள் முகம் மலர்ந்து சிரிப்பதைக் காண காடே ஆயிரம் வெயில்குழாய்களுடன் ஒளி கொண்டது. ” துமி — மி – நிங்

தௌ.”என்றாள்

நீ என் அரசன்! நான் அவளை பாய்ந்து பிடித்தேன்.”ஆறுமாசத்தில் நான் மணிப்புரி கற்றுக் கொள்கிறேன் பார்”

”அங்கமி மொழி?”

“இதுவேறு அது வேறா?”

“கிட்டத்தட்ட ஒன்றுதான்”

”அப்புறமென்ன?”

ஒருவர் உடலை ஒருவர் உணர்ந்தபடி ஒருவர் சொற்களை ஒருவர் கேட்டபடி ஒருவர் நெஞ்சை ஒருவர் சொற்களால் தொட்டு உரசியபடி அந்த மலைக்காடு வழியாக இரு வண்ணத்துப்பூச்சிகள் போலச் சென்றோம்.

கான் ஹாங் மலையின் முடி எங்கள் மேல் எழுந்து எழுந்து வந்தது. அதன் நீள நிழல் அப்பால் சமவெளியில் பச்சைநிரமாக விரிந்து கிடப்பதைக் கண்டோம். சிகர நிழல்களை ஆடைகளாக அணிந்துகொண்டு நின்றன பிற சிகரங்கள்.

மலைச்சரிவில் ஏறி ஏறிச் சென்ரோம். அவள் எனக்கு கைகொடுத்து பாறைகளில் ஏற்றிவிட்டாள். அவள் அக்காட்டிலேயே பிறந்தவள்

போலிருந்தாள். மெல்லிய வெண்கலக் கால்களுடன் தாவும் மான்போல.

சிவப்புநிறத்தில் ஷிராய் லில்லி படர்ந்த சிறிய மலைச்சரிவைக் கண்டோம். நான் ஓடிப்போய் மதூரக மலர்களை கைகளை விரித்து தழுவிக் கொண்டேன். முகர்ந்தேன். தண்ணீர் கண்ட பாலைவனப் பயணி போல. அவளும் சிரித்தபடி ஓடிவந்து என்னருகே அமர்ந்தாள்.

பெரிய கண்கள் விழித்த சிறகுகளுடன் நீலமும் சிவப்பும் கலந்த வண்ணத்துப்பூச்சிகள் எங்களைச் சுற்றி சிறகடித்தன. மெல்லிய ஒளியுடன் முகில்கள் அடர்ந்த வானம் கவிழ்ந்திருந்தது. மலை அனைத்துமறிந்த தியானத்தில் நிற்க அதன்மீது மேகநிழல்கள் நகர்ந்தன

”போகலாம்” என்றாள்

”மதூரகம்!”

”நாம் போவது கான் ஹாங்கின் ஷிராய் லில்லி சரிவுக்கு. அங்கே எங்கே பார்த்தாலும் மதூரகம்தான்... வேறு பூவே இல்லை.... அங்கே மனிதர்கள் போவதேயில்லை...நாம் மட்டுமே அதைப்பார்க்கப்போகிறோம்’

”நோ மேன்ஸ் லேண்ட்” என்றேன். ”சொல்ல சொல்ல எப்படி இனிமையாக இருக்கிறது தெரியுமா? நோ மேன்ஸ் லேண்ட்”

”கமான்!”

பூக்களினூடாக ஓடி மறு சரிவைத் தாண்டினோம்.

”எவ்வளவு தூரம்! நாம் போகும்தோறும் அது விலகிச்செல்கிறதா?”

”நாம் அதிகதூரம் நடக்கவில்லை....”

”அங்கே செல்லும்போது இருட்டிவிடுமே”

”இன்று அரைநிலவு உண்டு....மேகம் இல்லை. நல்ல ஒளி இருக்கும்”அவள் என் கைகளைப்பற்றினாள் ” நிலவில் ஷிராய் லில்லி சரிவில் ஓடுவோம்”

நான் அவளை அப்படியே அள்ளி முத்தமிட்டேன். நினைத்த இடத்தில் எல்லாம் நின்று நின்று தழுவி முத்தமிட்டபடியேதான் சென்றோம். முத்தம் மூலம் அவள் இருப்பை நான் உணரவில்லை, என் இருப்பை நான் உணர்ந்து கொண்டிருந்தேன்.

அவள் என் கைகளைப் பற்றினாள். எச்சரிக்கையுடன்.
”ரேடியோ”என்றாள் ரகசியமாக.

நானும் ஒரு ரேடியோவின் ரகசிய கீய்ங் ஒலியைக் கேட்டேன். என் உடலில் ஆயிரம் பூனைக்காதுகள் கவனம் கொண்டு திரும்பின.

மெல்ல பதுங்கி எதிர் திசையை நோக்கி சென்றோம். ஆனால் புதருக்குள் இரு அங்கமி வீரர்களைக் கண்டோம்.

”அவர்கள் தேஜாவையும் சரிதாவையும் பிடித்துவிட்டார்கள் ”அவள் கிசுகிசுத்தாள். உதட்டை இறுகக் கடித்திருந்தாள். முகம் ரத்தமாக இருந்தது. கண்ணீர் உருண்டு சொட்டியது.

”வா” நான் அவள் கையைப்பற்றி விலகிச் சென்றேன்.

சட்டென்று மூங்கில் புதருக்குள் இருந்து குண்டு முழங்கியது. என்னருகே மரப்பட்டை பிளந்தது. ” தானு ஜிடாரகா! ” என்ற கட்டைக்குரல் ஒலித்தது. நான்குபக்கமும் விசில்கள் ஒலித்தன. மனிதக்குரல்கள் கேட்டன. ஆணைகள், கூச்சல்கள்.

நான் என் முழுப்பிரக்ஞையையும் கால்களில் வைத்து வெறி பிடித்தது போல ஓடினேன். துப்பாக்கிக் குண்டுகள் வெடித்து வெடித்து காட்டை அதிரடித்தன. என்னருகே அவள் ஒரு நிழல் போல ஓசையில்லாமல் வந்துகொண்டிருந்தாள். அப்பால் மலையின் சரிவின் பாறைச்சுவர்கள் ‘கலாங் கலாங்”என்று அவ்வொலிகளை எதிரொலித்தன.

ஒரு மண்சரிவில் குதித்து இரு பாறை இடுக்குகலில் உயரமான புற்களின் நடுவே பதுங்கினோம். என்னருகே இருந்த மட்கியமரத்தில் இருந்த பச்சைத்தவளை சேற்றில் குதித்தது. சிறிய கொசுக்கள் கலைந்தெழுந்து என் முகத்தைமூடின.

”துப்பாக்கி ஒலி கேட்டால் இந்தியர்கள் வருவார்கள்….”என்றாள் அவள் கிசுகிசுப்பாக.

மலை தன் மௌனம் கலைத்து உறுமுவது போலிருந்தது. உயர்ந்த செதிகளுடன் மாபெரும் டைனோசர் போல அது தோன்றியது. குரூரமான சிறிய கண்கள் விழித்து என்னை பார்த்தன.

எங்களைச் சுற்றி அவர்கள் தேடினர். அவர்களின் கனத்த பூட்ஸ¤களுடன் சேறும் இணைய் அவை சளக் சளக் என சேற்றுப்பரப்பில் பதிந்தன. பூட்ஸுகள் இழுபட்டு எழும்போது சேறு சப்புகொட்டிக் கொண்டது அவர்கள் அர்த்தமில்லாமல் புதர்களுக்குள் சுட்டனர். சேற்றில் கலைந்த புதர்களை தடம் பார்த்து தேடிதேடி சென்றனர். இதயத்துடிப்பே பேரொலியாகக் கேட்க மூச்சை கைகளால் அடக்க்கியபடி அமர்ந்திருந்தோம்

அவர்கள் மறுபக்கம் பாறையை அடைந்து அதில் தொற்றி ஏறி விலகியதும் எழுந்து ஓடினோம். ஈரத்தால் பச்சைப்பாசி படந்து வழுக்கிய குட்டைப்பாறைகளில் பதுங்கி தாவி முன்னகர்ந்து மலைச்சரிவை ஏறிக்கடந்தோம்.

மலை ஒரு ரகசியத்துடன் உறைந்து கிடந்தது. நான் அதன் கீழ்விளிம்பையே உற்று பார்த்தேன். மலைக்கு அப்பால் புதர்களினூடாக இந்திய ராணுவத்தின் பச்சைச்சீருடை அணிந்த வீரர்களைக் கண்டேன். ரை•பிள்களின் பயனெட் நுனிகள் வெயிலில் ஒளிர்ந்தன. ஒரு பளீர் என் கண்களை பிளேடுபோல வெட்டிச்சென்றது

அவளை பிடித்தபடி மலையின் மூன்றாவது பக்கம் நோக்கி ஓடினேன்.

”இந்த மலையிடுக்குவழியாகப் போனால் காங்ஹாங் மலைக்கு

அப்பால் போகலாம்”என்றாள் ஜ்வாலா ”நோ மேன்ஸ் லேண்ட் அங்கேதான் இருக்கிறது. அதற்குள் நுழைந்தால் தப்பிவிடுவோம்…”

கீழே இந்திய ராணுவம் எ.எல்.எ•ப் ஆட்களைப்பார்த்துவிட்டது. எம்203/ஏ1 கிரனேட் லாஞ்சரின் அதிரலைக் கேட்டேன். குண்டு சென்று விழுந்து வெடித்த புகை காட்டுக்கு மேல் எழுந்தது. குரல்கள் விசித்திரமான பறவைக்கூச்சல் போல எழுந்தன. மயிலகவல் போல ஒருவன் அலறிவிழுந்தான். தொடர்ந்து கிரனெடுகள் வெடிப்பதும் ரை•பிள்கள் துடிப்பாக சுடுவதும் கேட்டது.

மலைச்சரிவில் இருந்து மேலேறி பாறைமீதிருந்து பார்த்தபோது கடுமையான போர் நடப்பது தெரிந்தது. சாம்பல்நிறமான பெரிய செம்மரி ஆடுகள் போல பச்சைசரிவில் கிரனைடுகளின் புகை தவழக்கண்டேன். காடு நாலாபக்கமும் குண்டொலியால் அத்ர்ந்தது.

” மூன்று மணிநேரம்… அதற்குள் நாம் நோ மேன்ஸ் லேண்டுக்குப் போய்விடலாம். அங்கே இரு ராணுவங்களும் நுழையாது. எங்கள் ஆட்களை இந்திய ஆர்மி தடுத்துவிடும்” ஜ்வாலா ஓடியபடியே சொன்னாள்.

மூச்சுவாங்க உடலெங்கும் அனல் வியர்வையுடன் கலந்து எரிய நாங்கள் மலையின் விலாப்பகுதி உச்சியை அடைந்தோம். நான் குப்புரபப்டுத்து மலைச்சரிவைப் பார்த்தேன். என்னருகே வாயால் மூச்சுவிட்டபடி அவள் பார்த்தாள். இந்திய ராணுவம் அங்கமி ஆட்களை துரத்திவிட்டு எங்களை நோக்கி முன்னேறுவதைக் கண்டோம்.

நான் சரிவில் ஓட ஆரம்பித்தேன். இருமுறை விழுந்து எழுந்து ஜ்வாலா என்னுடன் ஓடினாள்.

பின்பக்கம் மைக் குரல் ஒலித்தது " லெ•ப்டினெண்ட் நெல்லையப்பன். இது இண்டியன் ஆர்மி . வெஸ்டர்ன் கமாண்ட் சிக்ஸ்த் கம்பெனி மேஜர் பேசுகிறேன். நீங்கள் தப்ப முடியாது. இருவரும் சரண்டையுங்கள்"

"வா"என்றேன். அவளால் ஓடமுடியவில்லை. வாய் திறந்து மார்புகள் அதிர நின்று ஏங்கினாள்.

"வா"

"என்னால் ஓட முடியவில்லை நெல்..."

"இந்த மலைச்சரிவுக்கு அப்பால்தான்..வா"

"லெ•ப்டினெண்ட் நெல்லையப்பன். நீங்கள் செய்வது கடுமையான குற்றம்....சரண்டையுங்கள். சட்டபூர்வமாக உங்களை விசாரிப்போம்..."

"நெல்... நெல்..."அவள் முச்சு வாங்கினாள். "நம்மால் அங்கே போக முடியாது. நீங்கள் சரண் அடையுங்கள். உங்கள் நாட்டில் நீதிமன்றம் என்று ஒன்று இருக்கிறது..." அப்படியே அமர்ந்தாள்" இனி என்னால் ஓடமுடியாது...நெல்..."

"உளறாதே.... வாழ்ந்தால் சேர்ந்து வாழ்வோம் செத்தால் சேர்ந்து சாவோம்... வா" என்று அவளை இழுத்தேன். அவள் துவண்டு எழுந்தாள் "ப்ளிஸ் ஜ்வாலா...ப்ளிஸ்... இதோ வந்துவிட்டது...பக்கம்தான்"

அவள் எழுந்ததும் எங்கலை ஒரு கிரானெட் கடந்து சென்று விழுந்து புகை கக்கி வெடித்தது. அவள் அலறியபடி என்னைக் கட்டிக் கொண்டாள். இருவரும்  எழுந்து வெறி கொண்டு ஓடினோம்.

அப்பால் சிறிய மலைமீது இந்திய ராணுவத்தினரைக் கண்டேன். கிரானைட் லாஞ்சர்கல் ரை•பிள்கள். தீப்பொறிகள் மின்னின. குண்டுகள் எங்களை தாண்டிச்சென்றன. பாறைகளின் மீது பொறிபறக்க மோதி சிதறின.

நாங்கள் கால்கள் மட்டுமே உயிருடன் இயங்க ஓடினோம்.

ஒரு கணத்தில் நான் நம்பிக்கை இழந்தேன். அவ்வளவுதான். அவ்வளவுதான். கடைசி கணங்கள். நோ மேன்ஸ் லேண்ட் ...அது எப்படி இருக்கும்? நோ மேன்ஸ் லேண்ட்..... அது எவராலும் எட்டமுடியாத இடம் . ஆகவேதான் அது நோ மேன்ஸ் லேண்ட்... ஆனால் நாங்கள் ஓடும்போதே கொல்லப்படவேண்டும் .எங்கள் கால்கள் அதை நோக்கி எம்பிய நிலையிலேயே நாங்கள் செத்துவிழ வேண்டும்.அது போதும்.

ஜ்வாலா விழுந்து உருண்டாள். அவள் உடலெல்லாம் சேறு அப்பியது. நான் அவளை இழுத்து பாறை மறைவுக்கு சென்றேன். கன்னங்களைத் தட்டி ”ஜ்வாலா ! ஜ்வாலா!”என்றேன்.

அவள் கண்களை விழித்தாள் ‘நெல்!”என்று என்னை கட்டிக் கொண்டாள்”நாம் உயிருடன்தான் இருக்கிறோமா?”

”ஒன்றும் ஆகவில்லை. இனி கொஞ்ச தூரம் தான்”

”இல்லை...இனி என்னால் முடியாது...ப்ளீஸ்...” அவள் அழுதாள்

”ஜ்வாலா கொஞ்சம் ஓடு..இதோ”

”இல்லை நெல். நம்மால் அங்கே போக முடியாது...”

நான் அவள் கண்ணீர் வழிந்த முகத்தைப்பார்த்தேன். வெகு அருகே மீண்டும் மைக் குரல் ” லெ•ப்டினெண்ட் நெல்லையப்பன். இது உங்கள் கம்பெனி கமாண்டர் பேசுகிறேன் .சரண்டையுங்கள்....நீங்கள் மியான்மார் போக நாங்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம்.”

நான் பெருமூச்சுடன் திரும்பிய கணம் உறைந்தேன். எங்கள் கால்களுக்கு கீழே ஷிராய் லில்லி பள்ளத்தாக்கு தெரிந்தது. செக்கச்சிவந்த மலர்களினாலான மலைச்சரிவு. காற்றில் அது மெல்லிய கம்பளம் போல அலையடித்தது.

”ஜ்வாலா..அங்கே பார் ..ஜ்வாலா”

அவள் திரும்பிப் பார்த்தாள். கண்கள் விரிந்தன ” ஷிராய் லில்லி !”

”அதுதான் நோ மேன்ஸ் லேண்ட்...அங்கே பார்” ஒரு பாறைமீது இந்திய எல்லையின் அறிவிப்பு இருந்தது. இந்திய ராணுவச்சின்னம்.

”வா!” என்று அவளுடன் எழுந்து ஓடினேன்.

கணங்கள் காலடிகள் மூச்சுகள் எண்ணங்கள்...

இந்திய எல்லையை நாங்கள் தாண்டியபோது ஒரு விடுதலை உணர்வை அடைந்தேன். எம்16 ரை•பிள் ரேஞ்சை தாண்டிச்செல்ல வேண்டுமென எண்ணி மேலும் ஓடினோம். செம்மை குமுறி விரிந்த ஷிராய் லில்லி பூக்களினூடாக.... உயிருள்ள சதைக்குள் புதையும் இரு அம்புநுனிகள் போல.......

இந்திய எல்லையில் ராணுவம் கூடிவிட்டதை கண்டேன். கிரானைட் லாஞ்சர்கள் பாறைமீது நிறுத்தபப்ட்டன.

மறுபக்கம் ஒரு குண்டு வெடித்தது. மியான்மார் ராணுவம். பர்மிய மொழியில் ஏதோ அறிவிப்பு ஒலித்தது. மீண்டும் வெடியொலி. இம்முறை கிரானெட் வந்து இந்திய எல்லையருகே விழுந்து வெடித்தது.

”ஸ்டாப் ! டோன்ட் மூவ்!”என்ற ஒலியை மியான்மார் எல்லைக்கு அப்பாலிருந்து கேட்டேன்.

”டோண்ட் மூவ் லெ•ப்டினெண்ட் ”என்றார் மேஜர்.

நான் கைகளை தூக்கினேன். ஜ்வாலா என்னை கட்டிப்பிடித்தாள்.

மதூரகமலர்கள் என்னைச்சுற்றி கூத்தாடின. மலை செந்நிறப் பட்டாடை அணிந்து தென்றலில் நிற்பது போலிருந்தது. பலநூறு பட்டாம்பூச்சிகள். பல நூறு தேன் சிட்டுகள் . சிறகு ஒளிரும் பறவைகள்.

” அப்படியே எங்கள் எல்லைக்கு வாருங்கள்…”என்றார் மேஜர்

”நீங்கள் குறிவைக்கப்பட்டுவிட்டீர்கள்… மெல்ல மியான்மார் எல்லை நோக்கி நகருங்கள்”என்றது பர்மிய குரல். இப்போதுதொலைவில் பர்மிய எல்லையில் பாறைமீது மியான்மார் சிப்பாய்களைக் கண்டேன்.

”மூவ் டுவேர்ட்ஸ் அஸ்” என்றார் மேஜர்

”கம் ஆன்”என்றது பர்மிய எல்லை.

நான் இருபக்கமும் பார்த்தேன். ஆயுதங்கள் தேனீக்கள் ஒன்றாவது போல கூடின. கணம் கணமாக காலம் கனத்தது.

சட்டென்று நான் ஒன்றை உணர்ந்தேன். அவர்கள் எங்களைச் சுடமாட்டார்கள். நாங்கள் அவர்களைச் சேர்ந்தவர்களல்ல, இந்த நிலத்தைச் சேர்ந்தவர்கள் என்று அவர்கள் அறிவார்கள். அவர்கள் குண்டுகள் எங்களை தொடாது. அதை அத்தனை உறுதியாக உணர்ந்தேன். என் பதற்றம் இல்லாமலாயிற்று. உள்ளூர உவகை எழுந்தது

”ஜ்வாலா…அவர்கள் நம்மை சுட மாட்டார்கள். சுட முடியாது….நாம் வேறு மனிதர்கள். நாம் இந்த மண்ணைச் சேர்ந்தவர்கள். வி ஆர் த பீப்பிள்

ஆ•ப் நோ மேன்ஸ் லேண்ட்” என்றேன். அவளை அணைத்தபடி நிதானமாக காட்டுக்குள் மூன்றாம் திசையில் நடந்தேன்.

இருபக்கமும் அமைதி நிலவியது. காற்று மலர்ச்செடிகளைக் கோதிச்செல்லும் ஒலிமட்டுமே கேட்டது.

அவர்கள் சுடமாட்டார்கள். சுட முடியாது. அவர்களால் தங்களுக்குள் மட்டுமே சுட்டுக்கொள்ள முடியும். மனிதர்கள் எங்களைச் சுடமுடியாது. நாங்கள் வேறு…எங்கள் மண் வேறு…

ஒரு தனி குண்டைக் கேட்டேன். பின்பு அத்தனை துப்பாக்கிகளும் சேர்ந்து வெடித்த பேரிரைச்சல்.

ஆனால் குண்டுகள் எங்களைத் தொடவில்லை. அங்கே பறந்த எந்த வண்னத்துப்பூச்சியையும் தேன்சிட்டையும் குண்டுகள் தொடவில்லை. அந்த குண்டுகளுக்கும் புகைக்கும் பேரொலிகளுக்கும் தொடர்பே இல்லாமல் வேறு ஒரு உலகில் அமைதியே நிலமாக மாறி விரிந்து கிடந்தது கான்ஹாங் சமவெளி.

”இதுதானா? ”என்று நான் கேட்டேன்.

”ஆமாம். இதுதான்… ” அவள் என்னைத் தழுவிக் கொண்டாள். ”இதுதான் நோ மேன்ஸ் லேண்ட்”

இருவரும் வெகுதூரம் நடந்தோம். மனிதர்களின் கால் படாத கன்னிநிலத்தில்.

நிலம் இருண்டு மலர்கள் மறைந்தன. கான் ஹாங் கல்முடிக்கு அப்பாலிருந்து முழு நிலவு எழுந்துவந்தது. இளஞ்சிவப்பான நிலவு. தொட்டுவிடலாம் போல மிக அருகே வானில் நின்றது. ஒளிரும் மேகச்சாமரங்கள் சூழ

”நிலவா?”என்றேன்”இன்றைக்கு பௌர்ணமியா என்ன?”

”சரியான மக்கு”என்று ஜ்வாலா என் காதைப்பிடித்தாள்.” இந்த நிலத்தில் என்றுமே பௌர்ணமிதான். இதுகூடத்தெரியாதா?”

நான் அண்ணாந்து நிலவைப்பார்த்தேன். அப்பகுதியின் அதிபன் அது என்பதுபோல செந்நிறமான குளுமையுடன் துல்லியமான வானில் நின்றது தேய்வறியா நிலவு.

மதுக்கமலர்வெளியில் எப்படி நிலவு அணைய முடியும்.?

**முற்றும்**